# ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்



## அந்தப் பறவைகளிடம் சொல்லுங்கள்

கண்ணதாசன் பதிப்பகம்

கண்ணதாசன் பதிப்பக வெளியீடு எண்: 124

முதற் பதிப்பு அக்டோபர், 1995
இரண்டாம் பதிப்பு ஜூலை, 2006

© James Hadley Chase

E-mail: kannadhasan@vsnl.net
Our website : www.kannadhasanpathippagam.com

பதிப்பாசிரியர் - **காந்தி கண்ணதாசன்**

**எச்சரிக்கை**

காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எதையும் முன் அனுமதியின்றிப் பயன்படுத்தக் கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும். - காந்தி கண்ணதாசன், பி.ஏ.பி.எல்.

**Copyright Warning:** No part of this book may be reproduced or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from Gandhi Kannadhasan B.A., B.L., Chennai.

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

Published in arrangement with Jaico Publishing House,
# 121, Mahatma Gandhi Road, Fort, Bombay - 400 023.

**விலை : 50.00**

**ANTHAP PARAVAIGALIDAM SOLLUNGAL** - Tamil
Translated from the English Original **TELL IT TO THE BIRDS**

- Written by — **James Hadley Chase**
- Translated by — **Kavingar PUVIARASU**
- Second Edition — July, 2006
- Publishing Editor — **GANDHI KANNADHASAN**
- Published by — **KANNADHASAN PATHIPPAGAM**
  23, Kannadhasan Salai,
  Thiyagaraya Nagar, Chennai - 017.
  Ph: 2433 2682, 2433 8712
- Our Branches
  - ★ No.1, Annai Complex, III Street, Vasantha Nagar, **Madurai - 625 003.** Ph. 0452 - 2373793
  - ★ No. 37, Bharathy Street, **Pondicherry - 605 001.** Ph: 0413-4200143
  - ★ No. 1212, Range Gowder Street, **Coimbatore - 641 001.** Ph: 0422-2479774
- Our Bankers : State Bank of India, T. Nagar, Chennai-17.
- Printed at : **United Bind Graphics,** Ph: 2466 1807

**மின்னூலாக்கம் : செல்லா**

## மூன்றாவதாக...

முறைப்படியான உரிமை பெற்று, தமிழில், கண்ணதாசன் பதிப்பகம் வெளியிடும் மூன்றாவது சேஸ் நாவல் இது.

வழக்கமான சேஸின் பரபரப்பான கைவண்ணத்தில் படுவேகமாகப் பறக்கிறது கதை.

காட்சிகள் நம் கண் முன்னால் வண்ணப் படங்களாய் விரிகின்றன - உயிர்த்துடிப்புடன்.

விஞ்ஞான வளர்ச்சியின் சிகரங்களைத் தொட்டு, அதன் விளைவாக ஏற்பட்ட தொழில் வளர்ச்சியும், சுகபோகப் பொருள்களின் மிகுதியும், அளவு கடந்த வாழ்க்கை வேகமுமாய் மாறிப்போன அமெரிக்க சமுதாயத்தை, பணவெறி எப்படி ஆட்டிப் படைக்கிறது. அது மனிதர்களை எவ்வளவு படுபாதாளத்திற்குத் தள்ளி விடுகிறது, அவர்கள் எப்படி, பணத்திற்காக எதையும் செய்யத் தயாராகி விடுகிறார்கள் என்பதைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த நாவல் பண வெறியின் முன்னால், பண்பாடும், ஒழுக்கமும் அன்பும் எப்படி சீர்குலைந்து சிதைந்து போய் விடுகின்றன என்பதை இது விளக்குகிறது. கணவனையே கொலை செய்யத் துணியும் ஒரு மனைவி, அவனுடைய இன்ஸ்யூரன்ஸ் பணத்தை அபகரிக்கக் காத்திருக்கும் காதலன், புத்தி கெட்டுப் போய் மாட்டிக் கொள்ளும் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்ட் என்ற மூன்று கேடு கெட்ட பாத்திரங்களைச் சுற்றியே இந்த நாவல் பின்னப்பட்டிருக்கிறது.

அதிபுத்திசாலித்தனமான திட்டமிடலையும், அந்த நிறைவேற்றலையும், அப்புறம் படிப்படியாய் அது தகர்ந்து போவதையும், அற்புதமான முறையில், சுவையாகச் சொல்கிறார் சேஸ், இந்த மர்ம நாவலில்...

கவிஞர் புவியரசு

பரபரப்பாக விற்பனையாகிக்
கொண்டிருக்கும் மற்ற சேஸ் நாவல்கள்...

வினாடிக்கு வினாடி திகிலூட்டும் அமெரிக்க - ரஷ்ய - சீன உளவுப் பிரிவுகளின் சாகசங்கள்—

ஒரு பாரிஸ் அழகியைச் சுற்றி நிகழும் எதிர்பாராத திருப்பங்கள்—

திடுக்கிடும் கதை அமைப்பு— பாரிஸ் நகரில் தொடங்கி மான்டி கார்லோ, ஹாங்காங் என்று சர்வதேச ரீதியில் பறக்கும் பரபரப்பான நாவல்—

## வானவில்லைத் தேடியவன்

**விலை : 50.00**

நான்கு கைதேர்ந்த கிரிமினல்கள்—
ஒரு அஞ்சாநெஞ்ச சாகசக் காரி—

பத்து லட்சம் டாலர் பணம் கொண்டு போகும் வேனைக் கொள்ளையடிக்கப் போகும் அதிசயத் திட்டம்—

அதை நிறை வேற்றும் சாகசம்...
தொடர்ந்து அடுக்கடுக்காய் நிகழும் சம்பவங்கள்—

கணத்திற்குக் கணம் திகிலூட்டும் மர்ம நாவல்
கிளைமாக்ஸ் காட்சி பிரமிக்க வைக்கிறது

## சொர்க்கம் என் பையில்

**விலை : 50.00**

முதல் பாகம்

# 1

இரண்டு கார்கள்கூட சேர்ந்தாற் போல போக முடியாத குறுகலான பாதை. இரண்டு பக்கமும் சாலையின் விளிம்புகள் உடைந்து பழுதடைந்திருக்கின்றன. வெகுதூரத்திற்கு வீடுகளே இல்லாத, மனித நடமாட்டமில்லாத கட்டாந்தரை.

அந்தப் பாதையில், ஒரு வீட்டைத் தேடிக் கொண்டு காரில் சென்று கொண்டிருந்த இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்ட் ஆன்சன், கடைசியில் அந்த வீட்டைக் கண்டு பிடித்தான். தூரத்திலிருந்து பார்த்தபோது வீடே கண்களுக்குத் தெரியவில்லை. உயரமான புதர்களும், செடி கொடிகளும் காடாக வளர்ந்து அந்த வீட்டையே மறைத்துக் கொண்டிருந்தன.

வீட்டிற்கு முன்னால், தூரத்தில் ஒரு பெரிய கேட் காணப்பட்டது. காரை விட்டிறங்கி கேட்டைத் திறந்து உள்ளே பார்த்தான் ஆன்சன். வீடு மாடி வீடுதான். ஆனால் அழுக்குப் பிடித்துக் காணப்பட்டது. வெளி கேட்டிற்கும், வீட்டிற்கும் நடுவில் ஒரு அழகான பூந்தோட்டம் அவனை அதிசயக்க வைத்தது. அந்தக் கட்டாந்தரையான பிரதேசத்தின் நடுவில் புதர்மண்டிக் கிடக்கும் வீட்டு வாசலில் அப்படி ஒரு அழகான தோட்டத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

சின்னத் தோட்டம்தான். ஆனால், அழகான பச்சைப் புல் வெளியும், பூத்துக் குலுங்கும் வண்ணமலர்களும், ரோஜாச் செடிகளும், சிறிய குளமும், நீரூற்றும் அவனை பிரமிக்க வைத்தன.

அதற்கு நேர் மாறாக இருந்தது வீடு. பச்சை சாயம் பூசப்பட்டிருந்த அந்த வீடு, வெயில், மழை, காற்றால் நிறம் மங்கிப் போய், சிதிலமடைந்து, பராமரிப்பு இல்லாமல் நின்று கொண்டிருந்தது. ஜன்னல்களில் ஒரே அழுக்கும், தூசும். வீட்டிற்குப் பக்கவாட்டில், ஓடு வேய்ந்த ஒரு கார்ஷெட்

காணப்பட்டது. இரண்டு கார்கள் நிற்கலாம். அதனுடைய ஜன்னல்கள் உடைந்திருந்தன. கூரையில் பல ஓடுகளைக் காணோம்.

ஆன்சன், வீட்டு வாசற்கதவைப் பார்த்தான். கதவைத் தட்டுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த பித்தளை வளையம் அழுக்கேறிக் கருத்திருந்தது. ஆன்சன், சற்றுப் பின்னால் நகர்ந்து நின்று கேட்டில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தான். அதில், 'மான் ரிபோஸ்' என்று எழுதப்பட்டிருந்தது. ஆன்சன், தன் தோல் பையைத் திறந்து, ஒரு கடிதத்தை வெளியில் எடுத்துப்பார்த்துக் கொண்டான். அதை மறுபடியும் படித்தான்:

'மான் ரிபோஸ்'<br>
வடக்கு ப்ரு டவுன்.

பெறுவோர்:

நேஷனல் பிடலிட்டி இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷன்<br>
பிரென்ட் நகர்.

மதிப்பிற்குரியீர்,

இந்த வாரத்தில் எதாவது ஒரு நாள் பிற்பகல், 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் என்னை சந்திக்க உங்கள் பிரதிநிதியை அனுப்பி வைக்கவும்.

1000 டாலர் மதிப்புள்ள நகைகள் எங்களிடம் உள்ளன. திருட்டு, இழப்பு ஏற்படுவதிலிருந்து பாதுகாக்க அவற்றை இன்ஸ்யூரன்ஸ் செய்து விடவேண்டும் என்று என் கணவர் விரும்புகிறார்.

தங்கள் உண்மையுள்ள<br>
மெக் பர்லோ.

அந்த வீட்டிலிருந்து வந்த கடிதம் அது. அதைப் பையில் போட்டுக் கொண்டு, காரில் ஏறி உள்ளே ஓட்டிச் சென்றான். ஒரு ஓரத்தில் காரை நிறுத்தி விட்டு, வீட்டுக் கதவை நோக்கி நடந்தான். யாரும் எட்டிப் பார்ப்பதாகக்கூடத் தெரியவில்லை. ஆளரவமே காணோம்.

வானத்தில், கனத்துக் கருத்த மேகங்கள் குமுறிக் கொண்டிருந்தன. பெரிய மழை வரும் போலிருந்தது. மேகங்களுக்கிடையிலிருந்து வெளிப்பட்ட ஒளிக் கற்றை அந்தப் பூந்தோட்டத்தின் மேல், வெளிச்சம் வீசி, பிரமிக்க வைத்தது.

சீக்கிரம் திரும்பி விடவேண்டும். ஒரு மணிநேரத்தில் பலத்த மழை பெய்யக்கூடும். வழியெல்லாம் சேறாகிவிடும் என்று நினைத்தபடி ஆன்சன், வளையத்தைப் பிடித்துக் கதவின் மேல் தட்டினான். இரண்டுமுறை அடித்தபிறகு உள்ளே காலடியோசை கேட்டது.

கதவு திறக்கப்பட்டது

அந்தக் கணத்தை அவன் சாகும்வரை மறக்கவில்லை !

திருமதி மெக் பர்லோவைக் கண்ட முதல் சந்திப்பு அது.

பதினான்காவது வயதில் அவனுக்கு முதன் முதலாகப் பெண் அனுபவம் ஏற்பட்டது. அவனுடைய பெற்றோர்கள் வெளியூர் போயிருந்தபோது, அவனைப் பார்த்துக் கொள்ள ஒரு பெண்ணை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவளுக்கு அவனைவிட இருபது வயது அதிகம். அவன் தனிமையில் படுக்கையில் படுத்தபடி நாவல் படித்துக் கொண்டிருந்தபோது, அந்தப் பெண் வந்து அவனைக் கெடுத்தாள்.

அன்று முதல் அவனுடைய பசி அடங்காமல் எரிந்துகொண்டே இருந்தது. அவன் மூளை எப்போதும் அதிலேயே உழன்று கொண்டிருந்தது. அவன் வேட்டை முடிவடையவே இல்லை. நீண்ட காலத்திற்குப் பின்பே அவன் வேசிகளின் தொடர்புகளிலிருந்து ஓரளவு விடுபட்டான் அதற்குப் பிறகு அழகான பெண்களை விரட்டிக் கொண்டேதான் இருந்தான். அதனால், அவனுக்கு ஏகப்பட்ட செலவு ஆகிக் கொண்டிருந்தது. வருவாய்க்கு மீறிய செலவில் அவன் திணறியபோது, கடன் வாங்க ஆரம்பித்தான். அதற்குப் பிறகுதான் சிக்கல் ஆரம்பமாயிற்று. கடனை அடைக்க முடியவில்லை.

அவன் இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்டாக வேலை பார்த்த நேஷனல் பிடலிட்டி இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் அவனுக்கு மூன்று ஊர்களை ஒதுக்கியிருந்தது. பிரென்ட், லாம்ப் ஸ் வில்லி, ப்ரு டவுன். நல்ல வளமான பிரதேசம்தான் அது. அந்தப் பகுதி விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் இரண்டு மூன்று கார்கள் வைத்திருந்தார்கள். தங்கள் கார்களையும், பயிரையும், சொத்துக்களையும் அவர்கள் இன்ஸ்யூரன்ஸ் செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். அதனால், ஆன்சன் ஓரளவு தாக்குப் பிடித்து வந்தான்.

பிரென்ட் நகரை விட்டு ப்ரு டவுனுக்குப் புறப்படுவதற்கு முன்பு, கடன் கொடுத்த ஜோ டங்கன், ஆன்சனுக்கு போன் செய்தான்.

"பாரப்பா, நீ எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்பது நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

"கவலைப்படாதீர்கள். சீக்கிரம் கொடுத்து விடுகிறேன்," என்று சமாதானம் சொன்னான் ஆன்சன்.

"கிட்டத்தட்ட ஆயிரம் டாலர் கொடுக்க வேண்டும். வருகிற சனிக்கிழமை கொடுக்காவிட்டால், செய்லர் வருவான், உன்னிடம் பேச."

செய்லர், ஜோவின் கையாள். கடன் வசூலிப்பவன். பழைய குத்துச் சண்டை வீரன். மகா முரடன். சொன்ன தேதியில் பணம் கொடுக்காவிட்டால், நீங்காத அடையாளத்தை ஏற்படுத்தி விடுவான் அவன்!

ஆன்சன் மிகவும் கவலைப்பட்டான். நண்பர்களிடம் கேட்கலாமா, டிவி. யை விற்றுவிடலாமா, காரை அடமானம் வைக்கலாமா என்று பலவாறு யோசித்தான். ஜோவுக்கு மட்டுமல்ல, சாம் பெர்ன்ஸ்டீன் என்ற வட்டிக் கடைக்காரருக்கும் எட்டாயிரம் டாலர் கடன்பட்டிருந்தான். ஆனால், அதற்காக இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. வருஷக் கடைசியில்தான் கொடுக்க வேண்டிவரும். அந்தப் பணத்தை

வாங்கிக் குதிரைப் பந்தயத்தில் அடியோடு இழந்துவிட்டதை நினைத்து வருத்தப்பட்டான் ஆன்சன்.

இன்று செவ்வாய்க் கிழமை. இன்னும் ஐந்து நாட்களில் எப்படியாவது ஆயிரம் டாலர் புரட்டி ஜோவுக்குக் கொடுத்துவிட்டால் நீண்ட காலத்திற்குக் கவலைப்பட வேண்டியதில்லை. அது முடியாத காரியமல்ல. பெர்ன்ஸ்டீனின் எட்டாயிரம் கடன்தான் சிரமம். ஆனால், அதற்கு நிறையக் காலம் இருக்கிறது.

இந்த எண்ணங்களுடன் கதவைத் தட்டியவன், அது திறக்கப்பட்டதும், மெக் பர்லோவைப் பார்த்ததும் தடுமாறிப் போனான். அவளது நீலக் கண்கள் அவனை விழுங்கிவிட்டன. அவன் ரத்தம் சூடேறியது. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அப்படித்தான் என்றாலும், இவள் அபூர்வமானவள் என்று தோன்றியது.

மெக், நல்ல உயரம். அவனை விட உயரம். நல்ல திடகாத்திரமான உடம்பு. அகலமான தோள்கள். கவர்ச்சியான மார்பகங்கள். சின்ன இடை. பளிச்சென்று ஆரஞ்சு நிற ஸ்வெட்டரில் இருந்தாள், அவளது பொன்னிறக் கூந்தலை பின்பக்கமாக வாரி ஒரு ரிப்பன் போட்டுக் கட்டியிருந்தாள். அவள் அழகிதான். ஆன்சனுக்கு இன்னும் கூடுதலான கவர்ச்சியுடன் அவள் தோற்றமளித்தாள்.

நீண்ட நேரம் இருவரும் பிரமிப்புடன் பாத்தபடி நின்றார்கள். பிறகு அவள் தன் முத்துப் பல் வரிசை தெரிய சிரித்தாள்.

"வணக்கம்," என்றாள் அவள்.

"நீங்கள்தானே திருமதி மெக் பர்லோ? நான் ஜான் ஆன்சன். நேஷனல் இன்ஸ்யூரன்சிலிருந்து வருகிறேன். உங்கள் கடிதம்...?"

"ஆமாம். நான்தான் எழுதினேன். உள்ளே வாருங்கள்!"

அவன் இதயம் துடித்தது. அவள் பின்னால் ஹாலுக்குள் சென்றான். அது அரையிருளில் மூழ்கியிருந்தது. கணப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அறை கதகதப்பாக இருந்தது. ஒரு பெரிய சோபா ஒரு பக்கத்தில் கிடந்தது. கோழிமுட்டை வடிவில் ஒரு மேசை. அதன் மேல் சிறிய டைப்ரைட்டர், ஏராளமான காகிதங்கள், கார்பன் காகிதங்கள், ஒரு வெப்ஸ்டர் அகராதி.

ஆனால், அழுக்கும், தூசும் எங்கும் நிறைந்திருந்தன. வெளியிலிருந்து பார்த்தது போலத்தான், உள்ளேயும் சுத்தமில்லாமல் இருந்தது. ஆன்சன் ஜன்னலருகில் சென்று வெளியே பார்த்தான்.

"என்ன அழகான தோட்டம்! நீங்கள் இதற்காகப் பெருமைப் பட்டுக் கொள்ளலாம்."

அவள் சிரித்தாள். "பெருமைப் படுவதெல்லாம் என் கணவர்தான். அவருக்கு வேறு சிந்தனையே இல்லை."

ஆன்சன் உள்ளே திரும்பி அவளைப் பார்த்தான். அந்த உடல்! அதை அவனால் புறக்கணிக்க முடியவில்லை.

"உங்கள் கணவருக்கு பூந்தோட்டக்கலை ஒரு தொழிலா?"

"அப்படியில்லை. அப்படி ஆக அவர் ஆசைப்படுகிறார். இப்போது ப்ரூ டவுனில் உள்ள ஃபிரேம்லியின் ஸ்டோரில், தோட்டக் கலைப் பிரிவில் வேலை பார்க்கிறார் – உட்காருங்கள் மிஸ்டர் ஆன்சன்."

அவள் சோபாவைக் காட்டினாள். அவன் அதில் சென்று அமர்ந்தான். அவளும், சற்றுத் தள்ளி அதில் அமர்ந்தாள்.

"என் கணவர், நகைகளை இன்ஸ்யூர் செய்ய வேண்டுமென்று சொன்னார்... நகைகள் அவ்வளவு மதிப்புள்ளவை அல்ல. ஆனால், அவர் வற்புறுத்துகிறார். வருஷ பிரியம் எவ்வளவு கட்டவேண்டும்?"

"ஆயிரம் டாலர் கட்ட முடியுமா?"

"நகைகள் நல்ல மதிப்புள்ளவை என்றுதான் என் கணவர் சொன்னார். எனக்கு சந்தேகமாக இருந்தது- சரி. கட்டலாம்."

ஆன்சனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றியது.

"நகைகளை நான் பார்க்கலாமா?"

"ஓ, தாராளமாக- இருங்கள், கொண்டு வருகிறேன்."

அவள் எழுந்து, அழகாக அசைந்து அசைந்து உள்ளே சென்றாள். ஆன்சன் கணப்பருகில் நகர்ந்து அமர்ந்து கொண்டான். கதகதப்பாக இருந்தது.

சில வினாடிகளில் அவள் ஒரு சிறிய அழுக்குப் பெட்டியுடன் திரும்பி வந்தாள். அதை வாங்கிப் பார்த்தான். பழைய காலத்து சிறிய நகைகள். ஏதோ ஏலத்தில் எடுத்தவை போலத் தோன்றின. ஆன்சன் திகைத்தான். மிக மலிவானவை அவை.

"இவ்வளவுதானா?"

அவள் தலையசைத்தாள்.

"இவை மிகவும் மலிவானவை. ஐம்பது டாலர் மதிப்புக் கூட இல்லாதவை"

அவள் சிரித்தாள். அவன் அருகில் வந்து அமர்ந்தாள். பெட்டியை அவன் கையிலிருந்து வாங்கிக் கொண்டாள்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். உங்களுக்கெல்லாம் பழைய நகைகளின் மதிப்பு தெரியாது என்றுதான் என் கணவர் சொன்னார். மன்னிக்க வேண்டும். உங்கள் நேரத்தை வீணாக்கி விட்டேன். கோபப்படாதீர்கள்," என்றாள் அவள்.

அவள் பூசியிருந்து சென்டின் வாசனை மெல்லத்தவழ்ந்து அவனைச் சூழ்ந்தது. அது அவனுக்குப் பிடித்திருந்தது.

"அதனால் என்ன. பரவாயில்லை. மற்ற விஷயங்கள் எப்படி? வீட்டை இன்ஸ்யூர் செய்யவில்லையா?"

"இது என் கணவரின் அம்மாவின் சொத்து. அவள் இறந்தபோது இவருக்கு வந்தது. இது இன்ஸ்யூர் செய்யப்பட்டதுதான். மன்னிக்கவேண்டும். உங்களுக்கு வீண் சிரமம்..."

"பரவாயில்லை," என்று மறுபடியும் சொல்லி சமாளித்தான் ஆன்சன். அருகில் அமர்ந்திருந்த அவளது, உடல், அந்த நறுமணம், அந்த தனிமைச் சூழல் அவனை என்னவோ செய்தது.

"இவ்வளவு தூரம் வந்து விட்டதால், எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய முடியும்..."

"என்ன சொல்லுங்கள்!"

"நான் ஒரு கதை எழுதிக் கொண்டிருக்கிறேன். அது இன்ஸ்யூரன்ஸ் சம்பந்தமானது," என்று சொல்லி பின்னால் சாய்ந்து கொண்டாள். அவள் கழுத்தின் மீது கணப்பின் சிவப்பு வெளிச்சம் விழுந்தது... "எனக்கு ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அது சரிதானா என்று நீங்கள் சொன்னால் உதவியாக இருக்கும்," என்றாள்.

அவன் மேசைமேலிருந்த டைப்ரைட்டரையும், காகிதங்களையும் பார்த்தான்.

"நீங்கள் கதை எழுதுவீர்களா?"

"நேரம் கிடைத்தபோது எழுதுவேன். இதுவரை ஒன்றும் விலை போகவில்லை... அவர் சம்பாத்தியம் குறைவு.. இப்படி எதாவது எழுதி சம்பாதித்தால், கொஞ்சம் துணிமணிகள் வாங்கலாம்...".

அவள் சிரித்தாள்... பிறகு எழுந்தாள். "எனக்கு உதவி செய்வீர்கள் அல்லவா? குடிக்க எதாவது கொண்டு வருகிறேன்... விஸ்கிதான் இருக்கும்..." என்றாள்.

அவன் நன்றி சொன்னான். அவள் உள்ளே போய்விட்டு சில நிமிடங்கள் கழித்து, விஸ்கி பாட்டல், தண்ணீர், ஐஸ்

கட்டிகளுடன் திரும்பி வந்தாள். உடனே இரண்டு டம்ளர்களில் ஊற்றினாள். ஒன்றை ஆன்சனிடம் தந்து விட்டு, இன்னொன்றை எடுத்துக் கொண்டு, கணப்பருகில் சென்று தரையில் அமர்ந்தாள்.

அந்த அறை மெல்ல மெல்ல இருண்டு கொண்டு வந்தது. அவள் விளக்கைப் போடவும். இல்லை. வெளியில் மழை ஆரம்பமாகி விட்டது. மழைத்துளிகள் ஜன்னல்கள் மீது விழும் ஓசை கேட்டது. ஆன்சன் அவளையே வெறித்தபடி குடிக்க ஆரம்பித்தான்.

"நான் எழுதிக் கொண்டிருக்கும் கதை ஒரு பெண்ணைப் பற்றியது. அவளுக்குப் பெரிய பண நெருக்கடி. அவளுக்கு ஒரு காதலன். அவன் விமான நிலையத்தில் பயணச்சீட்டுக் கொடுக்கும் வேலை. அந்தப் பெண் இரண்டு லட்சம் டாலருக்கு ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் செய்து கொள்கிறாள், அவளும், அவள் காதலனும், கடலில் ஏற்படும் ஒரு விமான விபத்திற்காகக் காத்திருக்கிறார்கள். ஆறுமாதங்களுக்குப் பிறகு அப்படியொரு விபத்து ஏற்படுகிறது. செய்தி முதலில் விமான நிலையத்திற்குத்தான் வருகிறது. உடனே அவள் காதலன், அவளுடைய பெயரை விமானப் பயணிகள் பட்டியலில் சேர்த்துவிடுகிறான். பயணச் சீட்டு, இரசீது, பெயர்ப்பதிவு முதலிய நுணுக்கங்களை அவன் முன் கூட்டி திட்டமிட்டபடி பதிவு செய்துவிடுகிறான். உடனே அவளைத் தலை மறைவாகும்படிச் சொல்லிவிடுகிறான். அப்புறம் அவளுடைய சகோதரி இன்ஸ்யூரன்ஸ் பணம் கேட்பதாக ஏற்பாடு செய்கிறான். 'என் சகோதரி விபத்தில் இறந்துவிட்டாள்' என்று ஆதாரங்கள் காட்டிப் பணம் பெறுவதாக அவன் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிடுவதாகக் கதை... இது சரிப்பட்டு வருமா? அவள் தப்பித்துவிட முடியுமா? அவளே அவளுடைய சகோதரி போல நடிக்க முடியுமா?"

பனிரண்டு ஆண்டுகளாக இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்டாக வேலை பார்க்கும் ஆன்சனுக்கு அதன் சகலவிதமான தந்திரங்களும் தெரியும். எப்படியெல்லாம் ஏமாற்றப்

பார்ப்பார்கள் என்பது பற்றி, வாரா வாரம் தலைமை அலுவலகத்திலிருந்து ஒரு சுற்றறிக்கை, வரும் அதை அனுப்புவர். மட்டாக்ஸ் 'கிளைம்ஸ் டிபார்ட்மென்டின்' தலைவர் அவர். லேசில் அவரிடம் பணம் வாங்கிவிட முடியாது. சகல மோசடி வழிகளும் அவருக்கு அத்துபடி.

கடந்த மூன்று மாதங்களாக ஏற்பட்ட பண நெருக்கடியில் ஆன்சனுக்கே அப்படிப்பட்ட யோசனை அடிக்கடி வந்து கொண்டிருந்தது. ஏதாவது தந்திரம் செய்து இன்ஸ்யூரன்ஸ் கம்பனியிலிருந்து பணம் சுருட்டலாமா என்று பல முறை யோசித்தான். ஆனால், அதற்கு இன்னொரு நம்பகமான ஆள் வேண்டுமே. அப்புறம் கேட்புப் பிரிவுத் தலைவர் மட்டாக்ஸ் வேறு கண் கொத்திப் பாம்பு போல் இருக்கிறார். அவரை ஏமாற்றுவது சுலபமல்ல. அவருடைய அதீத தீர்க்கதரிசன சக்தி பிரபலமானது. ஆபத்தான விஷயம் என்று தன் எண்ணத்தைத் தள்ளிப் போட்டு வந்தான்.

"நல்ல யோசனைதான் கதைக்கு சரியாக இருக்கும். ஆனால், நடைமுறைக்கு ஒத்துவராது," என்றான் ஆன்சன்.

"ஏன் அப்படி? " என்று அவள் கேட்டாள்.

"தொகை பெரிது. பதினைந்தாயிரத்துக்கு மேலே போனாலே குடைந்து எடுத்துவிடுவார்கள். கிளைம்ஸ் பிரிவுத் தலைவர் பெரியஆள். இதுவரை சுமார் ஏழெட்டு ஆயிரம் மோசடிகளை அவர் கண்டு பிடித்திருக்கிறார். இருபத்தி நான்கு வருட அனுபவம் அவருக்கு. மோசடியை அவர் எப்படியும் மோப்பம் பிடித்துவிடுவார். சம்பந்தப்பட்ட பெண் யார்? அவள் ஏன் அவ்வளவு பெரிய தொகைக்கு ஆயுள் காப்பீடு எடுக்க வேண்டும்? அதனால் லாபம் அடைப் போவது யார்? அவள் தங்கை யார்? காதலன் யார்? அவர்களின் பூர்வீகம் என்ன? என்பதையெல்லாம் தோண்டி எடுத்துக் கொண்டு வந்து விடுவார். அவரிடம் இருபது திறமையான துப்பறிவாளர்கள் இருக்கிறார்கள். இரண்டு பேரைக் கிளப்பி விட்டால் போதும். எல்லா இரகசியங்களையும் வெளிப்படுத்தி விடுவார்கள்.

அப்புறம், சதிகாரர்களைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது! மட்டாக்ஸ் உள்ளவரை அது நடக்காது," என்றான் ஆன்சன்.

மெக் முகம் சுண்டிப்போயிற்று.

"அப்படியா! அந்த மாதிரி கற்பனை சரிப்பட்டு வரும் என்று நினைத்தேன்," என்று சொல்லிவிட்டு விஸ்கியைக் குடித்தாள். ஒரு கம்பியை எடுத்து, கணப்பு நெருப்பைக் கிளறிவிட்டாள். அது நன்றாகப் பற்றி எரிந்தது. "அப்படியானால், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை ஏமாற்றுவது மிகவும் கடினம். இல்லையா? " என்று கேட்டாள்.

"ஆமாம்- ஒருவேளை-"

எரியும் நெருப்பையே வெறித்தபடி அவள், 'ஒரு வேளை-?' என்று கேட்டாள். செய்யலாம்.... அதற்கு இரண்டுபேர் வேண்டும். ஒரு தனி நபரால் முடியாது."

அவள் முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள்.

"இதைப் பற்றி நீங்கள்கூட யோசித்திருப்பீர்கள் போல் தோன்றுகிறதே! எதாவது நல்ல யோசனை இருந்தால் சொல்லுங்களேன். நான் கதையை எழுதி விற்று விடுகிறேன். வரும் தொகையில் ஆளுக்குப் பாதி வைத்துக் கொள்ளலாம்."

அவன் குடித்து முடித்தான். டம்ளரை மேசை மேல் வைத்தான். எழுந்து நின்றான்.

"ஏதாவது யோசனை தோன்றினால், தொடர்பு கொள்கிறேன்."

அவளும் எழுந்து நின்றாள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆன்சனின் கண்கள் அவள் உடலில் மேய்ந்தன.

"ஏதாவது யோசனை தோன்றினால், நீங்கள் இங்கே வாருங்கள். வருவீர்கள் அல்லவா? பிரெண்ட் நகரிலிருந்து இது தூரம் ஒன்றும் இல்லையே. நாம் சாவகாசமாகப் பேசலாம்," என்றாள் அவள்.

அவன் சற்றுத் தயங்கி நின்றான், "நான் அடிக்கடி வருவது உங்கள் கணவருக்குப் பிடிக்குமா?" என்று கேட்டான்.

உண்மைதான். அவர் யாரோடும் கலகலப்பாகப் பழகுகிறவர் அல்ல. திங்கள், வியாழக் கிழமைகளில் அவர் லாம்ப்ஸ் வில்லியில் தங்கிவிடுவார். தோட்டக் கலை பற்றி, அந்த இரண்டு நாட்களில் இரவு வகுப்புகள் எடுக்கிறார். இரண்டு இரவுகள் தம் நண்பர் வீட்டிலேயே தங்கிவிடுவார்," என்றாள்.

"அப்படியா? நான்_"

"நீங்கள் அந்த நாட்களில், இங்கே வரலாம். இரண்டு இரவுகள் நான் தனியாகத்தான் இருப்பேன். அவசியம் வாருங்கள் மறந்து விட வேண்டாம்."

அவள் கதவைத் திறந்து வழியனுப்பச் சென்றாள். அவன் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். அவள் வெளிக் கதவைத் திறந்தாள்.

"உங்கள் கணவர் ஆயுள் காப்பீடு செய்திருக்கிறாரா?" என்று கேட்டான் ஆன்சன்.

"இல்லை. அவருக்கு அதில் நம்பிக்கை இல்லை."

மறுபடியும், இருவரும் அர்த்தபுஷ்டியோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நீங்கள் அவரை நம்ப வைக்க முடியாது. பல பேர் முயற்சி செய்து பார்த்துவிட்டார்கள். யாராலும் முடியவில்லை."

ஆன்சன் வாசற்படியில் காலடி வைத்தான். மழை பெய்து கொண்டிருந்தது. "உபசரிப்பிற்கு நன்றி திருமதி. பர்லோ. ஏதாவது நல்ல யோசனை தோன்றினால் வருகிறேன்," என்றான்.

தொந்தரவு தந்துவிட்டேன். மன்னிக்கவும்," என்று சொல்லி, ஒரு புன்முறுவலை வழங்கிவிட்டு கதவைச் சாத்தினாள்.

முகத்தில் மழையடிக்க, ஆன்சன் தன் காரை நோக்கி நடந்தான்.

ஆன்சன் புறப்பட்ட பிறகு, ஜன்னல் திரையை விலக்கி, அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் மெக். அவன் காரில் ஏறிச் சென்று மறையும் வரை, அங்கேயே அசையாமல் நின்று கொண்டிருந்தாள் அவள்.

பிறகு, சட்டெனத் திரும்பி, ஹாலுக்குள் சென்று, தொலை பேசியை எடுத்துக் கொண்டு, சில எண்களைச் சுழற்றினாள். தொடர்பு கிடைத்தது. ஒரு ஆண்குரல் பேசியது.

"என்ன? யாரது?"

"மெக் பேசுகிறேன். மீன் கடிக்கிறது."

"சத்தம் போடாதே. தூண்டிலைப் போடு! "

சட்டெனத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

**2** ஆன்சனின் வழக்கமான வேலைகளில், இரண்டு நாள் ப்ரூடவுனில் தங்க வேண்டியதும் அடங்கும். அன்று இரவு அவன் மார்ல் பரோ ஓட்டலில் தங்கிக் கொண்டான்.

ஒரு காலத்தில் அவன் உள்ளூர் வேசிகளைத் தேடி அலைந்ததுண்டு. பட்ட அனுபவங்களின் காரணமாக, ஒரு ஸ்டோரில் வேலை பார்க்கும் ஃபே லாலி என்ற பெண்ணுடன் மட்டும் அவன் அவ்வப்போது உறவு கொள்வது வழக்கம்.

திருப்தியான இரவு உணவுக்குப் பின், அறுபது டாலருக்கு அவள் அவன் அறைக்கு வந்துவிடுவாள் அது ஓட்டல் காரர்களுக்கும் தெரியும். சிக்கலும் இல்லாமல் காலம் அப்படியே கழிந்து கொண்டிருந்தது.

மெக்கை சந்தித்த பிறகு, அவன் தன் விடுதி அறையில் அவளையும் லாலியையும் ஒப்பிடும் போது, லாலி எவ்வளவு மலிவானவள் என்று நினைத்துக் கொண்டான். தன் கணவன் வீட்டிற்கு வராத இரண்டு இரவுகளில் அவள் வரச் சொன்னதையும் அவன் நினைத்துக் கொண்டான். அவள் அர்த்தத்துடன்தான் வரச் சொல்லியிருக்கிறாள்!

அந்த நினைப்பே அவனுக்குக் கிளர்ச்சியைத் தந்தது. இதயத் துடிப்பு அதிகரித்தது. அவன் முகசவரத்தை முடித்துக் கொண்டு, குளியலறைக்குப் போய் முகம் கழுவி, ஷேவிங் லோஷனை முகத்தின் தடவிக் கொண்டிருந்தபோது, படுக்கை அறையில் யாரோ நடப்பதுபோல் ஓசை கேட்டது.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். லாலி அவனுடைய பர்சை சோதித்துக் கொண்டிருந்தாள்! கதவு திறக்கும் அரவம் கேட்டதும் சட்டென அதை வைத்துவிட்டாள்!

"ஹலோ ஸ்வீட்டி! பயந்து விட்டீர்களா?" என்று கேட்டாள் லாலி சிரித்தப்படியே.

அவளைப் பார்த்ததும் அவனுக்கு எரிச்சல் வந்தது.

"நானா பயந்தேன்? நீதான் பயந்துவிட்டாய்", என்று அறைக்குள் நுழைந்தான்.

அவளுடைய புகையிலைக் கறை படிந்த மஞ்சள் பற்களைப் பார்க்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

"டார்லிங்! உங்களிடம் ஒரு உதவி கேட்கப் போகிறேன்," என்றாள் லாலி, படுக்கையில் உருண்டபடியே.

அவன் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"நான் கொஞ்சம் சிரமத்தில் இருக்கிறேன். எனக்கு உடனே நூறு டாலர் அவசரமாக வேண்டும். நாளை காலை கொடுக்காவிட்டால், வீட்டுக்காரர் என் அறையை விட்டுத் துரத்தி விடுவார். வாடகை பாக்கி."

"அதற்கு நான் என்ன செய்ய? போ! தெருவில் போய் நட! கிராக்கி கிடைக்கும். நூறு டாலருக்கு மேலேயே கிடைக்கும் என்னைத் தொந்தரவு செய்யாதே! போ!."

அவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"இந்த மாதிரி வார்த்தைகளை நான் எதிர்பார்க்கவில்லை. நான் உங்கள் கேர்ள் பிரண்ட் இல்லையா?" என்றாள்.

அவளை அடித்துத் தூக்கி வெளியில் எறிய வேண்டும் என்று அவன் நினைத்தான். அதற்கான தைரியம் வரவில்லை. அவள் சத்தம் போட்டு ரகளை செய்தால் அசிங்கமாகிவிடும்.

பேசாமல் நகர்ந்து சென்று, பர்சை எடுத்தான். ஆறு பத்து டாலர் நோட்டுகளை உருவினான்.

"லாலி! எனக்கு உடல்நிலை சரியில்லை. இந்தா! இதை எடுத்துக் கொண்டு போய் விடு! நான் தூங்க வேண்டும்," என்றான்.

"நூறு டாலர் கொடுக்க முடியாதா? வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்."

நோட்டுகளை அவள் மடியில் வீசினான்.

"புறப்படு! அவ்வளவுதான். அடுத்த வாரம் வரும்போது பார்ப்போம்!" என்றான்.

அவள் அவற்றை சட்டென எடுத்துத் தன் கைப் பையில் திணித்துக் கொண்டு, எழுந்தாள்.

அவளை இனி எப்போதும் சந்திப்பதில்லை என்று மனதில் நினைத்துக் கொண்டான் ஆன்சன்.

அவள் அறையை விட்டு வெளியேறினாள்.

மெக்கை நினைத்தபடியே படுக்கையில் கிடந்தான் ஆன்சன். அவனை என்னவோ செய்துவிட்டாள் அவள்.

மறுநாள் பகலில் அவனுக்கு வேலை அதிகம் இருக்கவில்லை. இரண்டு மூன்று தொலைபேசித் தொடர்புகளோடு வேலை முடிந்து விட்டது. மாலை ஐந்து மணிக்கு பிரென்ட்டுக்குப் புறப்பட்டான். ப்ரூ டவுன் வழியாகத்தான் செல்ல வேண்டும். மெக்கின் வீட்டிற்குச் செல்லும் கிளைப்பாதை அருகில் கார் செல்லும்போது, அவளைப் போய்ப் பார்க்கலாமா என்று தோன்றியது.

காரை ஓரத்தில் நிறுத்திவிட்டு சற்று யோசித்தான். அன்று இரவு அவள் கணவன் இருப்பான். அவசரப்பட்டுப் போய்க் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்று காரை பிரென்ட்டுக்கு விட்டான். திங்கட் கிழமைக்குள், ஏதாவது ஒரு யோசனை சொல்லுகிற அளவுக்கு, சிந்தித்துவிட்டுப் போவதுதான் நல்லதென்று முடிவு செய்து கொண்டான்.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் சார்?" என்று கேட்டாள் ஆன்சனின் டைப்பிஸ்ட் அன்னா கார்வின்.

வேறு சிந்தனையில் மூழ்கியிருந்த ஆன்சன் அவள் பக்கம் திரும்பினான். அவள் விரல்கள் டைப்ரைட்டரின் மேல் நடனமாடிக் கொண்டிருந்தன. இடம் ஆன்சனின் தனி அலுவலக அறை.

அவள், அவனிடம் இரண்டு வருடங்களாக வேலை பார்த்து வருகிறாள். உற்சாகமான இளம்பெண். கொஞ்சம் தடித்த உடம்பு. எல்லாவிதமான புதுமையான உடைகளையும் கவர்ச்சியாக அணிந்து கொள்வதில் அவள் திறமைசாலி.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை மோசடி செய்வது சம்பந்தமான ஒரு 'ஐடியா' ஆன்சனின் மனதில் உருவாகிக் கொண்டிருந்தபோது தான் அவள் அப்படிக் கேட்டு, அவனது சிந்தனையைத் துண்டித்தாள்.

"இரண்டு தடவை உங்களிடம் பேசினேன். நீங்கள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. யாரையோ கொலை செய்யத் திட்டமிடுவது போலத் தோன்றியது," என்றாள் அன்னா, சிரித்தபடி!

ஆன்சனுக்கு 'திக்' கென்றது!

"பார், அன்னா! நான் மிகவும் பிசியாக இருக்கிறேன். கொஞ்சம் சும்மா இரு! தொந்தரவு செய்யாதே!"

அவள் புத்திசாலிப் பெண். சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு படபட வென்று பொரிய ஆரம்பித்தாள்.

ஆன்சன் நாற்காலியை விட்டு எழுந்து ஜன்னல் அருகில் கீழே பார்த்தான். காலை நேரம். அந்தப் பிரதான சாலையில் வாகனங்கள் பறந்து கொண்டிருந்தன.

அது சனிக்கிழமை காலை. பகல் உணவுக்குப் பிறகு தன் நண்பனுடன் 'கால்ப்' விளையாடப் போவது, வாராந்திரப் பழக்கம். ஆனால், அவனுக்கு இப்போது 'கால்ப்' விளையாடும் மனம் இல்லை. மனமெல்லாம் மெக் நிறைந்திருந்தாள் வேலையில் ஈடுபட முடியவில்லை. பல கடிதங்கள் பதிலுக்காகக் காத்திருந்தும் அவற்றை அவன் தொடவே இல்லை.

'— யாரையோ கொலை செய்ய- என்ற அன்னாவின் வார்த்தைகள் அவன் காதுகளில் எதிரொலித்தன.

ஆம்! அவன் அதைத்தான் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்!

லாபத்திற்காக ஒரு கொலை! மெக் பர்லோவின் கதைக்காகத்தான்—

உண்மையாகவே அப்படித் திட்டமிட்டால்? அன்னா எப்படித் தன் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டாள்? என் மனம் கண்ணாடி போலவா இருக்கிறது!

மறுபடியும் அவன் தன் மேசையருகில் வந்தான்

"சரி, வா!" என்றான்.

அவள் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, எதிரில் வந்து நின்றாள்.

அவன் ஒரு கடிதத்திற்கான பதிலை சொல்ல ஆரம்பித்தான்...

பிரென்ட் ரயில் நிலையம் அருகில் அல்பானி ஆர்ம்ஸ் என்ற அபார்ட்மெண்ட் கட்டடத்தில் நான்காவது மாடியில் ஆன்சன் குடியிருந்தான்.

இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்ட் வேலைக்கு அந்தப் புறாக்கூடுதான் வசதிப்பட்டது. கட்டடத்தின் கீழ்தளத்திற்கும் அடியில், ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் கார் நிறுத்தத் தனியிடம் ஒதுக்கப்பட்டிருந்தது ஒரு வசதி. அந்த அபார்ட்மென்ட் கட்டடம் பிரதானசாலையிலிருந்து மிகவும் உள்ளே தள்ளியிருந்தது.

ஆன்சன் 'கால்ப்' விளையாட்டில் நல்ல ஆட்டக்காரனல்ல. குடி அதிகம். அன்று விளையாடி விட்டு, நன்றாகக் குடித்து விட்டு இரவு தன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்..

வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. காரை, கட்டடத்தின் அடியில் ஓட்டித் திருப்பும்போது, நிறைய இடங்கள் காலியாக இருப்பதைக் கண்டான். வாரக் கடைசி. வார விடுமுறையை அனுபவிக்க நிறையப்பேர் ஊரை விட்டுக் கிளம்பி விட்டார்கள்.

தொலைக்காட்சிப் பெட்டிகளின் அலறல், குழந்தைகளின் அழுகை, தம்பதிகளின் வாய்ச் சண்டை, எதுவும் இல்லாமல் கட்டடம் அமைதியாகக் காணப்பட்டது.

காரை, உரிய இடத்தில் நிறுத்திவிட்டு, கார் விளக்குகளை அணைத்து விட்டு, இறங்கிக் கதவைச் சாத்திய போது, யாரோ அங்கே இருப்பதுபோல் உணர்ந்தான். விசாலமான, வெறிச்சோடிய அந்த இருட்டான பகுதியில் அவன் கண்கள் துழாவின.

உயரமான ஒரு மனிதனின், இருளிலிருந்து வெளியே வந்தான். எதிர் பாராமல், ஒருவன் சட்டெனத் தோன்றியது அவனுக்குப் பயத்தைத் தந்தது.

மாடிக்குப் போகும் படிகள் பக்கமாக அவன் அரையிருளில் நின்று கொண்டிருந்தான்.

ஆன்சன், படிகள் பக்கமாக மெல்ல நகர்ந்தான்.

"வா, தம்பி, வா! நீண்ட நேரமாக உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்."

அவன் குரல் அடித் தொண்டையிலிருந்து வந்தது. அடையாளம் தெரியவில்லை.

ஆன்சனுக்கு 'திக்' கென்றது. இதயத் துடிப்பு நின்று விட்டதுபோல் தோன்றியது. பயம்...

நெருங்கிப் பார்த்தபோது அடையாளம் தெரிந்தது.

செய்லர் ஹோகன்! ஜோவுக்காக வட்டி, பணம் வசூலிக்கும் முரடன்! சனிக்கிழமை பணம் கொடுப்பதாக சொல்லியிருந்ததை அவன் மறந்தே விட்டான்! அதுதான் செய்லர் வந்திருக்கிறான்.

சொன்ன தேதியில் பணம் கொடுக்காததற்காக ஒரு ஆளை செய்லர் நிரந்தர ஊனமாக்கிவிட்டது ஆன்சனுக்கு நினைவிற்கு வந்தது. அந்த ஆள் இப்போது சக்கர நாற்காலியில்தான் நகர முடிகிறது! செய்லர் போலீசில் இதுவரை அகப்படவே இல்லை.

செய்லர் மெல்ல ஆன்சனை நோக்கி நகர்ந்தான்.

ஆன்சன் சட்டென நின்றான். பிறகு பின்னால் நகர ஆரம்பித்தான். சற்று நகர்ந்ததும் ஆன்சன் நின்று விட்டான். பின்னால் சுவர். கைகளை பான்ட் பாக்கட்டுகளில் நுழைந்தபடி, வாயில் சிகரட் ஊசலாட செய்லர் நெருங்கி வருவதைக்கண்ட ஆன்சனுக்கு இதயமே நின்றுவிட்டது.

செய்லர் நின்றான். "பணம் வசூலிக்க வந்தேன். எடு!"

ஆன்சன் மூச்சுத் திணறினான்.

"திங்கட்கிழமை தந்து விடுகிறேன். ஜோவிடம் சொல்லி விடேன்" கெஞ்சினான் ஆன்சன். ஈரமான காங்கிரீட் சுவர் முதுகில் சில்லிட்டது. நகர முடியவில்லை. சக்கர நாற்காலி அவன் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது!

"திங்கட்கிழமை... நிச்சயமாக..."

செய்லர் முன்னால் ஓரடி எடுத்து வைத்தான்.

"வேண்டாம்... வேண்டாம்... செய்லர் தயவு செய்து வேண்டாம்..."

ஆன்சன் அலறினான். செய்லர் சிரித்தான்.

"தம்பி, நீ வம்பில் மாட்டிக் கொண்டுவிட்டாய். நான் ஜோவுக்கு மட்டுமல்ல, நீ எட்டாயிரம் கடன் வாங்கின பெர்ன்ஸ்டீனுக்கும் நான்தான் வசூல் செய்கிறேன். ஒரு வாய்ப்பு. கடைசி வாய்ப்புத் தருகிறேன். திங்கட்கிழமை தவறினால் நான் எதாவது செய்ய வேண்டி வரும்... அப்புறம் அந்த பெர்ன்ஸ்டீனின் கடன்... சீக்கிரம் சரி செய்! இல்லாவிட்டால் செத்துப் போவாய்..."

செய்லர் சிரித்துக்கொண்டேதான் பேசினான்.

"சரி, சரி " என்று அலறினான் ஆன்சன்.

"சரி. திங்கட்கிழமை சந்திப்போம்."

இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. எப்படியாவது சமாளித்து விட வேண்டும்... அல்லது. திங்கள் இரவு மெக்கின் வீட்டில் தங்கி விட வேண்டும்... எல்லாம் சரியாகிவிடும்... என்று ஆன்சன் நினைத்தான்...

ஒன்றும் சரியாகி விடவில்லை செய்லருக்கு!

கண்ணிமைக்கும் நேரத்தில் முன்னால் பாய்ந்து ஓங்கி ஒரு குத்துவிட்டான் செய்லர்!

பயங்கரமான அந்தக் குத்தில், சகிக்க முடியாத வலியில், எகிறிக் கீழே விழுந்து சுருண்டு முனகினான் ஆன்சன்.

எண்ணெய் சிந்திக் கருத்து அழுக்கேறிய தரையில் கிடந்த ஆன்சனைக் குனிந்து பார்த்தான் செய்லர்.

"திங்கட்கிழமை தம்பி! மறந்துவிடாதே.. திங்கட்கிழமை" என்று சொல்லிவிட்டு, இருளில் மறைந்தான்!

ஆன்சன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு தாள முடியாத வலியில் முனகிக் கொண்டிருந்தான்..

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை 11 மணி. ஆன்சன் இன்னும் படுக்கையிலேயே படுத்துக் கிடந்தான்.

செய்லர் அடித்த அடி இன்னும் வலித்தது. அடித்த இடம் கன்றிப்போய் கருத்திருந்தது. இரவு வெகு சிரமப்பட்டுத் தள்ளாடி லிப்டை அடைந்து, தன் அறைக்கு வந்து சேர்வதற்குள் அவன் படாதபாடு பட்டு விட்டான். தூக்க மாத்திரைகள் மூன்றை விழுங்கிய பிறகுதான் நிம்மதியாகத் தூங்க முடிந்தது.

அறைக்குள் சுரீர் என்று வெயில் அடித்தது. சிரமப்பட்டு எழுந்தான். பாத்ரூம் போகவே கஷ்டமாக இருந்தது. அடுத்த முறை பணமில்லாமல் செய்லரை சந்தித்தால் என்ன ஆகுமோ என்று பயமாக இருந்தது.

வரும் திங்கட்கிழமை ஆயிரம் டாலர் வேண்டும். ஜூன் மாதம் வருவதற்குள் எட்டாயிரம் திரட்டிவிட வேண்டும். அவ்வளவு பணத்தை எந்த வழியில் திரட்டுவது என்று தெரியவில்லை.

வலிக்கும் வயிற்றில் கை வைத்துத் தடவிப் பார்த்தான். குத்து மிக மோசமாக விழுந்திருந்தது. அவனுக்கு சக்கர நாற்காலி நினைவிற்கு வந்தது. எலிப்பொறியில் சிக்கிக் கொண்டது போலத் தோன்றியது.

பல மணி நேரம் படுத்தபடி எவ்வளவு யோசித்தும் பணச் சிக்கலைத் தீர்க்க ஒரு வழியும் புலப்படவில்லை. மீண்டும் மெக் பர்லோவின் நினைவு வந்தது.

அவள் ஏதோ திட்டமிட்டிருக்கிறாள் என்று தோன்றியது. அவள் கேட்டது கதைக்கான 'கரு'தானா? அந்த நகைகள் வெறும்

குப்பை. அதை இன்ஸ்யூர் செய்யவா அவள் தன்னை அழைத்தாள்? எதற்காக, திங்கள், வியாழக் கிழமைகளில் கணவர் இருக்கமாட்டார் என்று சொன்னாள்? அவள் மூலம் ஏதாவது வழி பிறக்கலாம். இப்போதைக்கு அவள் மூலம் தான் ஏதாவது உதவி கிடைக்கலாம்.

அவன், அவள் கேட்டதற்காக, ஒரு திட்டம் பற்றி யோசிக்க ஆரம்பித்தான். அப்படியே உறக்கம் வந்து குவிந்தது. திங்கட்கிழமை காலை வரை விழிப்பே வரவில்லை.

பீரு டவுனில் உள்ள பிராம்லீஸ் ஸ்டோர் முன்னால் நின்று கொண்டிருந்த கார்களின் இடையில் தன் காரை நிறுத்திவிட்டு, இறங்கி, நடைபாதையில் ஸ்டோரை நோக்கி மெல்ல நடந்தான் ஆன்சன்.

அடிபட்ட இடம் இன்னும் நடக்கும்போது வலித்தது. மெல்ல நடந்து, ஸ்டோரின் ஸ்பிரிங் கதவுகளைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஆன்சன். சுற்று முற்றம் பார்த்துவிட்டு, லிப்டில் ஏறி, தோட்டக் கலைப் பிரிவு உள்ள தளத்திற்குச் சென்றான்.

எங்கும் அழகான வண்ண மலர்கள் பூத்தொட்டிகளில் பூத்துக் குலுங்கின. நடுவில் அழகான நீருற்று ஒன்று தண்ணீரை விசிறியடித்துக் கொண்டிருந்தது. மலர்களை அழகாக பார்வைக்கு வைத்திருந்தார்கள். நான்கு இளம் பெண்கள் பச்சை சீருடை அணிந்து அங்குமிங்கும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பர்லோ ஒரு மேசைக்குப் பின்னால் அமர்ந்திருந்தார். அவர் காதில் ஒரு பென்சில் செருகப்பட்டிருந்தது. அந்தப் பணிப்பெண்கள், வாடிக்கையாளரின் ஆர்டர்களை எழுதிக் கொண்டு வந்து அவரிடம் தந்து கொண்டிருந்தார்கள்.

பர்லோ, சற்றும் எதிர்பாராத தோற்றம் அளித்ததை ஆன்சன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பெண்ணிடம் அவர் பர்லோதானா என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான்! பர்லோ, எழுந்து ஒரு தம்பதியரிடம் ரோஜாச் செடி பற்றிப் பேசுவதை, எட்ட இருந்து கவனித்த படி நின்றான் ஆன்சன்.

அவனுக்க வியப்பாக இருந்தது. அவ்வளவு கவர்ச்சியான மெக், எப்படி இவரை மணக்க சம்மதித்தாள்! குள்ளமான மெலிந்த உருவம். குழி விழுந்த கண்கள். ஒரு கோடு போட்டாற் போன்ற வாய், மூக்கு அளவுக்க அதிகமாக நீண்டு கூர்மையாக இருந்தது. அவருடைய விரல்கள் நீளமாக மெலிந்து காணப்பட்டன. கலைஞனின் விரல்கள். ஒரு பெண்ணைக் கவர அவரிடம் எதுவுமே காணப்படவில்லை.

மலர்களின் நறுமணம் எங்கும் மிதந்து கொண்டிருந்தது. ஆன்சன் மனம் சற்று நிம்மதியடைந்தது. பர்லோ எந்த விதத்திலும் தனக்குப் போட்டியாக வர முடியாது என்று அவன் நினைத்துக் கொண்டான். வயிற்றில் ஏற்பட்ட வலி கூடக் குறைந்து விட்டதுபோல் தோன்றியது.

இன்னும் நேரமிருக்கிறது. மணி பிற்பகல் மூன்று நாற்பதுதான் ஆகிறது. ஏழுமணிக்கு மெக்கை சந்தித்தால் போதும். மாடியை விட்டு இறங்கி வந்து, காரை நோக்கி நடக்கும் போது, நடைபாதையில் இருந்த பொதுத் தொலைபேசி கண்ணில்பட்டது. போய், போனை எடுத்து எண்களைச் சுழற்றினான்.

அவள் குரல் கேட்டது.

"வணக்கம் மிஸஸ் பர்லோ. ஜான் ஆன்சன் பேசுகிறேன்."

கொஞ்சம் மௌனம். பிறகு, "யார்?" என்று கேட்டாள்!

அவனுக்க என்னவோ செய்தது. தன் பெயரைக் கூட அவள் நினைவில் வைத்துக் கொள்ளவில்லையா!

விரலிலிருந்து ரத்தம் சொட்டியது! கையிலிருந்த சிறிய கத்தியை வைத்துவிட்டு, விரலை சப்பியபடி, ஆர்டர் கொடுத்தவளின் பின் பக்கத்தையே வெறித்துக் கொண்டு நின்றார் பர்லோ!

3 ஆன்சன் அந்தப் பழுதடைந்த சாலையில் காரை ஓட்டிச் சென்றான். பர்லோ வீட்டை நெருங்கிய போது, அதன் வெளிகேட்டுகள் திறந்து வைத்திருப்பதைக் கண்டான். உள்ளே கார்ஷெட் கதவுகளும் திறந்து கிடந்தன!

அவள் தயாராக இருக்கிறாளோ? காரை உள்ளே ஓட்டிச் சென்று, ஷெட்டுக்குள் காரை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று அதன் கதவுகளை மூடிவிட்டு, வெளி கேட்டுகளையும் மூடிவிட்டு வீட்டுக் கதவை நோக்கிச் சென்றான்.

வீட்டிற்குள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவள் வருவது ஜன்னலின் நிழலாட்டத்தில் தெரிந்தது. சில வினாடிகளில் கதவைத் திறந்தாள். ஒரு கணம் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சரியான நேரத்திற்கு வந்துவிட்டீர்களே! உள்ளே வாருங்கள்."

அவள் உள்ளே திரும்பி நடந்தாள். ஆன்சன் அவள் பின்னால் ஹாலுக்குச் சென்றான். தன் மேல் கோட்டை அவன் கழற்றினான். மீண்டும் இருவரும் மௌனமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

நெருப்பு நிறத்தில் உடையணிந்திருந்தாள். அந்த உடையில், முன்பு பார்த்ததைவிடக் கவர்ச்சியாகத் தோன்றினாள்.

"சாப்பிடலாம். எனக்கு ஒரே பசி. காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை. சாப்பிட்டுவிட்டுப் பேசலாம். வேலை அதிகம். சாப்பிடக்கூட நேரம் கிடைக்கவில்லை," என்றாள்.

"கதை எப்படிப் போகிறது?"

"சுமாராகப் போகிறது," என்று சொல்லிவிட்டு, டைப்ரைட்டரை ஒரு ஓரமாக ஒதுக்கி வைத்தாள். காகிதங்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தாள் பிறகு இரண்டு பிளேட்டுகளில் உணவைக் கொண்டு வைத்தாள். குடிப்பதற்கு விஸ்கியையும் கொண்டு வந்தாள்.

"எனக்கு சமைக்கத் தெரியாது. பிக்னிக் போகிற மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள்."

மதுவை ஊற்றிக் கொடுத்தாள்.

"கடைசியாக உங்களுக்கு ஒரு ஐடியா கிடைத்துவிட்டது என்று சொல்லுங்கள் நான் மிகவும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எப்படியாவது ஒரு வழி தெரிய வேண்டும்!"

ஆன்சன் உடனே பதில் சொல்லவில்லை. மௌனமாகக் குடித்துக் கொண்டிருந்தான். பிறகு, மெதுவாக சாப்பிட ஆரம்பித்தான்.

"நாம் அதைப் பற்றிப் பேசலாம் திருமதி பர்லோ.... உங்களுக்குத் திருமணமாகி எவ்வளவு காலம் ஆகிறது?"

அவள் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள்.

"ஒரு வருஷம்தான் ஆகிறது. இந்த மாதக் கடைசியில் முதல் திருமண நாள். எதற்காகக் கேட்டீர்கள்?"

"மனிதர்களின் பின்னணியைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம்தான். வேறொன்றும் இல்லை. இன்று பிற்பகல் உங்கள் கணவர் வேலை பார்க்கும் ஸ்டோருக்குப் போயிருந்தேன். உங்கள் கணவர் மிகவும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார்."

"அவர் எப்போதும் பரபரப்பாகத்தான் இருப்பார். அவர் ஒரு தேனீ."

உண்மை சொல்கிறாளா? கேலி செய்கிறாளா? ஆன்சன் உஷாரானான்.

"நிறையப்பேரை நான் சந்திக்கிறேன். பலவிதமான மனிதர்களுடன் தொடர்பு கொள்கிறேன். அது என் தொழில், உங்கள் கணவரைப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி அவரை மணந்து கொண்டீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை."

அதிகம் பேசி விட்டோமோ என்று அவளை உற்றுப் பார்த்தான். அவள் சொன்ன பதிலில், அவனது ரத்தம் மூளைக்குப் பாய்ந்தது!

"அந்த மனிதரை எப்படித்தான் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டேனோ!... என் மூளையைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்."

அப்புறம் சற்று நேரம் அவள் பேசவில்லை, அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அப்புறம் தலை நிமிர்ந்து அவனை உற்றுப் பார்த்தாள்.

"நீங்கள் சரியாகச் சாப்பிடவில்லையே... ஏன்... நன்றாக இல்லையா?"

அவன் முள்ளையும், கத்தியையும் தட்டில் வைத்தான்.

"எனக்கு இரண்டு நாளாக உடம்பு சரியில்லை. அதுதான்"

"சரி. நான் சாப்பிடுவதை ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? போய்க் கணப்பருகில் உட்காந்து கொள்ளுங்கள். சீக்கிரம் வந்து விடுகிறேன்."

அவன் மதுக் குவளைக் கையில் எடுத்துக் கொண்டு, சோபாவில் சென்று அமர்ந்தான். எரிந்து கொண்டிருக்கும் தீ நாக்குகளையே பார்த்தபடி மதுவைக் குடித்துக் கொண்டிருந்தான்.

தன் கணவனைப் பற்றி அவள் சொன்ன வாக்கியம் அவனுக்கு பச்சைக் கொடி காட்டுவதுபோல் தோன்றியது.

"என் கணவரைப் பற்றிச் சொன்னதில் அதிர்ச்சியடைந்து விட்டீர்களோ? கேட்டதால் சொன்னேன். என்ன செய்ய! அவருக்குப் பூந்தோட்டம் தவிர வேறு எந்த ஞாபகமும் இல்லை. ஒரு பெரிய மலர்ப் பண்ணை வைத்து வியாபாரம் செய்ய வேண்டுமென்பது அவர் கனவு. அவரால் அது முடியவே முடியாது. அதற்கான பணத்தைத் திரட்ட அவரால் முடியாது. சொந்த வியாபாரம் தொடங்க மூவாயிரம் டாலராவது வேண்டும்."

அங்கிருந்தபடியே பேசினாள்.

"அவருக்கு இன்னும் பெரிய தொகை வேண்டுமென்று நினைத்தேன்," என்றான் ஆன்சன்.

"உங்களுக்கு அவரைப் பற்றித் தெரியாது. அவர் சின்னதாகவே சிந்தித்துப் பழக்கப்பட்டவர். ஒரு ஏக்கர் நிலம். ஒரு சிறிய மலர்த்தோட்டம். அவ்வளவுதான் அவர் இலட்சியம்."

"ஏன் அவரைத் திருமணம் செய்து கொண்டீர்கள்?"

ஒரு நீண்ட மௌனம். அவள் பிளேட்டில் உணவைக் கத்தியால் வெட்டும் சப்தம் தெளிவாகக் கேட்டது.

"ஏன்..: பணம்! பணத்திற்காகத்தான். அவரிடம் பணம் இருப்பதாக நினைத்தேன்... தவறு செய்துவிட்டேன். தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன். விதவையாகிவிட்டால் தேவலாம் போல இப்போது தோன்றுகிறது!"

ஆன்சன் உடல் லேசாக நடுங்கியது. கணப்பருகே நெருங்கி உட்கார்ந்து கொண்டான்.

நாற்காலி பின்னுக்கு நகர்த்தப்படும் ஓசை.

சில வினாடிகள் கழித்து அவள் அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"என் மேல் உங்களுக்கு ஒரு அக்கறை ஏற்பட்டு விட்டது. இல்லையா?.. அது ஏன்?"

ஆன்சனின் கைகள் மதுக் குவளையை இறுகப் பற்றின- ஒரு தடுமாற்றம்... "ஏன்... ஏனென்றால்... நான் சந்தித்த பெண்களிலேயே நீங்கள் மிகவும் அழகானவர்".

அவள் சிரித்தாள்.

"எனக்குத் திருமணமான நாளிலிருந்து, இதுவரை யாரும் என்னிடம் இப்படிச் சொன்னதில்லை."

"சரி. இப்போது நான் சொல்லிவிட்டேன்."

பதிலுக்கு நானும் சொல்லிவிடுகிறேன். நீங்கள் மிகவும் நல்லவர்".

ஆன்சன் பெருமூச்சுவிட்டான்.

"நான் முதன் முதலாகப் பார்த்தபோதே பிரமித்தேன். அதற்குப் பிறகு இதுவரை மறக்கவே முடியவில்லை."

"சில விஷயங்கள் எல்லாம் எதிர்பாராமல் நடந்துவிடுகின்றன. இல்லையா?" என்று சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டாள்! புகையைக் கணப்பை நோக்கி ஊதினாள்-

"இரண்டு பேர் சந்திக்கும்போது- சில சமயம் உடலில் இரசாயன மாற்றங்கள் சட்டென ஏற்பட்டு விடுகின்றன... அப்புறம் அவ்வளவுதான்.." என்றாள்!

பிறகு தன் நீலக் கண்களால் அவனை உற்றுப் பார்த்தாள். அந்தக் கண்கள் அழைத்தன!

"நேரம் போய்க் கொண்டிருக்கிறது ஜான். வாருங்கள்!"

அவன் மதுக்குவளையைக் கீழே வைத்தான்.

அவள் தன் சிகரட்டை, கணப்பை நோக்கிச் சுண்டினாள்.

"வாங்க!"

கணப்பில் இன்னொரு மரத்துண்டு போடப்பட்டது. அது திகுதிகுவென்று சுடர்விட்டு எரிந்தது. அறை அந்த வெளிச்சத்தில் பிரகாசமாக இருந்தது.

மெக் சோபாவை விட்டுத் தரையில் சரிந்தாள். முழங்கலிட்டு அமர்ந்தாள்.

"குடிக்க ஏதாவது தரட்டுமா?" என்றாள்.

"வேண்டாம். வா!" என்றான் அவன்.

அவள் அசையவில்லை. அவள் இரும்புக் கம்பியை எடுத்துக் கணப்பு நெருப்பைக் கிளறிவிட்டுக் கொண்டிருந்தாள். எரியும் நெருப்பில், அவள் உருவம் கூரையில் பல நிழல்களாகத் தோற்றம் அளித்தன. அவை அசைந்தன.

"மணி ஒன்பதாகிறது. இரவு தங்கப் போகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம்."

அவள் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, கணப்பருகே நெருங்கி அமர்ந்தாள். நெருப்பில் அவள் முகம் சிவந்தது.

"உங்களுக்குத் தோன்றிய அந்த யோசனையைச் சொல்லுங்கள்," என்றாள் நெருப்பை வெறித்தபடியே.

ஆன்சன் மேலே அசையும் அவளது நிழல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நிறைவாக இருந்தது. சற்று முன் ஒரு ஆவேசச் சூறாவளியில் அவன் அனுபவித்த பல பெண்கள் அவன் நினைவில் வெறும் நிழல்களாகக் கரைந்து போனார்கள். ஆம். அவர்கள் மங்கிய நிழல்கள். வெறும் நிழல்கள்.

"ஜான்! சொல்லுங்கள்!"

"சொல்கிறேன். குடிக்கக் கொஞ்சம் கொடு!"

அவள் எழுந்து இருவருக்கும் மதுவைக் கலக்கினாள். ஒன்றை அவனிடம் கொடுத்துவிட்டு, அவன் அருகில், தரையில் அமர்ந்து கொண்டாள்.

"சொல்லுங்கள்..."

"எனக்குக் கதை சொல்லத் தெரியாது. ஆனால் என்ன செய்தால் என்ன ஆகும் என்று தெரியும்... ஒரு யோசனை என்ற அளவில் சொல்கிறேன்... ஒரு இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்ட் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு ஏகப்பட்ட பணமுடை. ஒரு நாள், ஒரு பெண்ணை சந்திக்கிறான். தொழில் முறையில். அவள் எதையோ இன்ஸ்யூரன்ஸ் செய்ய விரும்புகிறாள்... அவளுக்கும் அவனுக்கும் காதல் ஏற்படுகிறது.. அவர்கள் இருவரும் சேர்ந்து, அவள் கணவனை இன்ஸ்யூரன்ஸ் செய்ய சம்மதிக்க வைத்துவிடுகிறார்கள்... பிறகு கணவனைத் தீர்த்துக் கட்ட ஒரு திட்டம் தீட்டுகிறார்கள்... அவன் இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்டாக இருப்பதால், அகப்படாமல் ஒரு திட்டம் தீட்டுகிறான்.. பணமும் கிடைத்து விடுகிறது... இது கதை. ஏப்படிப்பட்ட திட்டம் என்பதை நுணுக்கமாக யோசிக்க வேண்டும். எப்படி?"

அவள் பதில் பேசாமல் கம்பியால் நெருப்பைக் கிளறிவிட்டாள்.

"நீங்கள் முதலில் என்னை சந்தித்தபோது, இன்ஸ்யூரன்ஸ் கம்பனியை ஏமாற்ற முடியாது என்று சொன்னீர்கள்."

"உண்மைதான். முடியாதது மட்டுமல்ல. மிகவும் ஆபத்தானதும்கூட. ஆனால், இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்டுக்கு அதன் வழிமுறைகள் தெரியும். கதையில் அவன் முக்கிய பாத்திரமாக இருந்தால், சமாளித்து விடமுடியும். இல்லாவிட்டால் மாட்டிக் கொள்வார்கள்."

"அது நம்பக் கூடியதாக இருக்குமா? அவள் கணவனை இன்ஸ்யூரன்ஸ் செய்ய சம்மதிக்க வைக்க முடியுமா? உதாரணமாக என் கணவர் என்றே வைத்துக் கொள்வோம்.

இன்ஸ்யூரன்ஸ் என்றாலே பிடிக்காதவர் என்றால், எப்படி சம்மதிக்க வைப்பது? கதை நம்பும்படியாக இருக்குமா?"

"கதையை நாம் எப்படித் திட்டமிட்டு அமைக்கிறோம் என்பதைப் பொறுத்தது அது. ஒரு பேச்சுக்காக, நீதான் அந்தப் பெண். நான்தான் காதலன். அப்புறம் உன் கணவர் ஒரு முக்கிய பாத்திரம் என்று வைத்துக் கொள்வோம்... நான் இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்ட்—"

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்... பிறகு கணப்பின் பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டு..." சரி... அப்படியே வைத்துக் கொள்வோம்..." என்றாள்...!

"சரி. அப்படியானால்.... என்னால் உன் கணவரை இன்ஸ்யூரன்ஸ் செய்ய சம்மதிக்க வைத்துவிடுவேன். ஒரு அணுகல் முறை இருக்கிறது... எப்படிப் பட்டவரையும் சிக்க வைத்துவிடலாம்... என்னால் முடியும்."

"எந்த முறையில் அணுகுவீர்கள்?"

"அவர் தேவையை அறிந்து செயல்பட வேண்டும். அவருக்குப் பணம் தேவை. மலர்ப் பண்ணை வைக்க. இன்ஸ்யூரன்ஸ் செய்து கொண்டால், அந்தப் பாலிசியை வைத்து வங்கியில் கடன் வாங்கலாம் என்று நம்ப வைப்பேன். உண்மையாகவே கொஞ்சம் கடன் கிடைக்கும்."

"நீங்கள் மிகவும் புத்திசாலி. எனக்கு இது தோன்றவே இல்லை". அவள் திரும்பி, சௌகரியமாக அமர்ந்து கொண்டாள்.

"இது ஆரம்பம் மட்டுமே. ஐயாயிரம் டாலருக்கு இன்ஸ்யூரன்ஸ் செய்துவிடமுடியும். அதற்கு மேலும் கூட முடியும். ஆனால், அவர் இறப்பதால் கிடைக்கும் தொகை மிகவும் அற்பம். இல்லையா?"

அவள் நெருப்பை வெறித்தபடி தலையசைத்தாள்.

"ஆமாம். ஐந்தாயிரம் எதற்காகும்? ஐம்பதாயிரமாவது இருந்தால் நல்லது. இல்லையா?" என்று கேட்டாள்.

"ஐம்பதாயிரத்திற்கு இன்ஸ்யூரன்ஸ் செய்யலாம். ஆனால் அவருக்கத் தெரியாமல். அவர் ஐந்தாயிரத்திற்கு என்று நினைக்கும்படியாகச் செய்து விட முடியும்!"

மறுபடியும் அறையில் நீண்ட மௌனம்.

"அப்புறம் என்ன ஆகும்?" என்று அமைதியைக் கலைத்தாள் மெக்.

ஆபத்தான கட்டத்தைத் தான் நெருங்கிக் கொண்டிருப்பதை ஆன்சன் உணர்ந்தான்... இனி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.. அவசரப்பட்டு வேகமாகப் போகிறோமோ என்று தோன்றியது.

"சரி. கதையை சொந்த ஆட்களோடு சம்பந்தப்படுத்த வேண்டாம். ஒரு பேச்சுக்கு உன் கணவரை ஒரு பாத்திரமாக இழுத்தேன்... இனி கதைக்கு வருவோம். இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்டான காதலனுக்கும் அவளுக்கும் பணம் அவசரத் தேவை. ஏதோ நெருக்கடி, இருவருக்கும். கணவனைத் தீர்த்துக்கட்ட இருவரும் முடிவு செய்கிறார்கள். அந்த மரணத்தை ஒரு விபத்தாகச் செய்யத் திட்டமிடுகிறார்கள்.. அவருடைய மனைவி மீது சந்தேகமே வராதபடி..."

"எல்லாம் முன் கூட்டியே யோசித்து வைத்திருக்கிறீர்களா ஜான்! சொல்லுங்கள்.. அப்புறம்?"

"ஒரு சனிக்கிழமையன்று அவள் கடைவீதிக்குப் போய் விடுகிறாள்.. கணவன் தனியே தன் பூந்தோட்டத்தில், வீட்டில், ஏதோ செய்து கொண்டிருக்கிறான். அங்கே ஒரு சிறிய குளம் இருக்கிறது. அதில் அவன் தவறி விழுந்து, தலையில் அடிபட்டு மயங்கி, மூழ்கிச் சாகிறான். மனைவி திரும்பி வந்து, அதிர்ச்சியடைந்து அலறுகிறாள்- நடிக்கிறாள்- எல்லாம் காதலன் கைவரிசை"

இப்போது அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளவில்லை. வேறு வேறு திசையில் பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள். அவள் உடல் லேசாக நடுங்கியது.

"அந்த இன்ஸ்யூரன்ஸ் அதிகாரி... மட்டாக்ஸ்... என்ன செய்வார் இதில்?"

கதை சட்டென எதார்த்தத்திற்குத் தாவி விட்டது. அவன் மறுபடியும் குடித்தான். அவள் சம்மதித்து நெருங்கி வருவது தெரிந்து விட்டது. அவளை உறுதியாக நம்ப வைக்க வேண்டும்.

"ஆமாம். மட்டாக்சை மறந்துவிடக்கூடாது. ஆபத்தான ஆள். நம்ப வைக்க வேண்டும். சந்தேகம் வராமல் செய்ய வேண்டும். நான் செய்துவிடுவேன். அவரை நம்ப வைத்து விடுவேன்."

கதை, நிஜத்திற்குத் தாவிவிட்டது!

அவள் மறுபடியும் நெருப்பைக் கிளறிவிட்டாள்.

அவன் எழுந்தான். "என் ஐடியா எப்படி? சரியாக வருமா?" என்று கேட்டான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"ஜான்! திட்டம் அருமையாக இருக்கிறது. இந்த சபிக்கப்பட்ட வாழ்க்கை எனக்கு வெறுத்துவிட்டது. ஐம்பதாயிரம்! என்னால் நம்ப முடியவில்லை. அந்தப் பணம் எனக்கு சுதந்திரத்தைத் தேடிக் கொடுக்கும்."

ஆன்சனுக்கு என்னவோ போல இருந்தது. பல மாதங்களாக அவள் இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றியது.

"பணம் கிடைக்கும். தொகை உனக்கு வந்து சேரும். ஆனால், எனக்கும் நெருக்கடி இருக்கிறது. அவசரம், " என்றான் ஆன்சன்.

"மாடியறைக்குப் போகலாம் வாருங்கள்!" என்று எழுந்தாள் மெக்! அவளது பார்வை அவன் தடுமாற்றத்தைத் துடைத்து விட்டது!

கீழே எங்கேயோ ஒரு கடிகாரம் ஐந்து மணியடித்தது.

திறந்த ஜன்னல் வழியாக அதிகாலையின் சாம்பல் வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. அந்த அரையிருளிலும் அந்தப் படுக்கை அறையின் பரிதாபமான வறுமை தெரிந்தது. ஆன்சன் அதைக் கவனித்தான்.

பக்கத்தில் மெக் சுருண்டு கிடந்தாள். அவள் முன்பைவிட அழகாக அவனுக்குத் தோன்றினாள்.

" மெக்.."

அவள் மெல்ல நெளிந்தாள். முனகினாள். தன்கைகளைத் தூக்கி அவன் மார்பின்மேல் போட்டாள்.

"இன்னும் தூக்கமா? "

மெல்ல விழிகளைத் திறந்தாள். அவனைப் பார்த்தாள். ஒரு புன் முறுவல்.

"இல்லை.. ஒரு கிறக்கம் " என்றாள்.

"எனக்கும்தான்", என்று அவளைத் தழுவிக் கொண்டு பேசினான் ஆன்சன். "நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ விரும்பியது கதையா.. இல்லை உண்மையா?"

"உண்மை.. நாம் தொடர வேண்டும். அதைச் செய்துவிட வேண்டும். என்னால் இந்த வாழ்க்கையை சகித்துக் கொள்ள முடியவில்லை."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நிறைய யோசிக்க வேண்டும். வெறும் யோசனை மட்டுமே இப்போது ஆரம்பமாயிருக்கிறது.."

அவள் எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள்.

"காபி தயாரித்துக் கொண்டு வருகிறேன். அப்புறம் பேசலாம். மறுபடியும் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம்.. அதாவது இவ்வளவு சாவகாசமாகப் பேச முடியாமல் போகலாம்."

உண்மைதான். இனி அவளை அடிக்கடி சந்திக்கக் கூடாது. எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். இந்தத் தொடர்பிருப்பது பிற்காலத்தில் மட்டாக்குக்குத் தெரிந்துவிடக் கூடாது.

அவன் காத்திருந்தான். அவள் கீழே நடமாடும் ஓசை கேட்டது. பிறகு அவள் காபியுடன் வந்தாள். அதை அருகிலி ருந்த சிறிய மேசைமேல் வைத்தாள்.

அவள் இளம் பச்சை நிறத்தில் நைலான் உடை அணிந்திருந்தாள், உடல் தெரியும் படியாக

ஆனால், ஆன்சன் தன் ஆசையை அடக்கிக் கொண்டான்.

காபியை ஊற்றிக் கொடுத்தாள். " உங்கள் திட்டப்படி செய்தால் எல்லாம் சரியாக வரும் அல்லவா?" என்றாள். தனக்கும் காபியை ஊற்றிக் கொண்டாள்.

அவ்ள் அந்த விஷயத்தை அவ்வளவு சாதாரணமாகப் பேசியது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஆனால், அவ்வளவு பெரிய கொலைகாரி போலவும் தோன்றவில்லை. அவனுக்குக் குழப்பமாக இருந்தது. ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. அது பெரிய ஆபத்தான காரியம் என்பதை அவளுக்கு உணர்த்த விரும்பினான் அவன்.

"உறுதியாகச் சொல்ல முடியாது. நிறைய யோசிக்க வேண்டும். தெளிவாகத் திட்ட மிட வேண்டும். கொஞ்சம் காலம் பிடிக்கும். அதற்கு முன்னால், நீ அதைச் செய்ய விரும்புகிறாயா என்பது எனக்கு உறுதியாகத் தெரிய வேண்டும். அதை முதலில் சொல்!"

அவள் இருப்புக் கொள்ளாமல் நெளிந்தாள்.

"நிச்சயமாக, அதைச் செய்துவிட விரும்புகிறேன்."

"மறுபடியும் நன்றாக யோசித்து பதில் சொல். நாம் செய்யப் போவது கொலை."

அவள் அசையவில்லை.

"என்ன காதில் விழுந்ததா? நாம் செய்யப்போவது கொலை."

"தெரியும்! பயமாக இருக்கிறதா?" என்று அழுத்தமாகக் கேட்டாள் மெக்!

அவன் மூச்சை இழுத்துக் கொண்டான்.

"ஆமாம்... எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. உனக்குப் பயமாக இல்லையா?"

"எனக்குப் பரிதாப உணர்ச்சியே அவர்மீது தோன்றவில்லை. ஒரு வருஷம் நரக வாழ்வு வாழ்ந்துவிட்டேன். அவர் செத்துப் போய் விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பல மாதங்களாக நினைத்துக் கொண்டிருந்தேன்."

"விவாகரத்து பெற்றிருக்கலாம்."

"அப்புறம் நான் எங்கே போவது? என்ன செய்வது? இப்போது ஏதோ ஒரு வீடாவது இருக்கிறது தங்க... முதல் இரவோடு எங்கள் பந்தம் முறிந்துவிட்டது. அவர் மறுநாள் முதல் இந்த படுக்கையில் தூங்கவில்லை. அவர் வேறு அறையில் தனியாகத்தான் உறங்குகிறார். எங்களுக்குள் கணவன் மனைவி உறவு வெளியுலகிற்கு மட்டுமே. அவர் மிகவும் மோசம்- அவர்- வேண்டாம்! அதைப் பற்றி இப்போது வேண்டாம். சில மனிதர்கள் அப்படி. செத்துத் தொலைந்தால் நிம்மதி."

அவள் வெறுப்பு நன்றாகப் புலப்பட்டது. காரணம் ஓரளவு தெளிவாகிவிட்டது. இனிக் காரியத்தில் இறங்கலாம். இவள் கடைசிவரை தாக்குப் பிடிப்பாள். அவளை நம்பலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

"அவர் இப்படிப்பட்டவர் என்று எனக்குத் தெரியாது. அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்... என்றாலும் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு சிறு தவறு செய்துவிட்டால் போதும் நார் நாராகக் கிழித்துவிடுவார்கள்."

"ஏன் தவறு செய்கிறோம்?"

"கொலை என்பது அப்படித்தான். எவ்வளவு கவனமாகத் திட்டமிட்டாலும், ஏதாவது ஒரு சிறுகுறை, தவறு நேர்ந்துவிடும். ஒரு தவறு போதும். எல்லாமே வெளிப்பட்டுவிடும்."

"நீங்கள் தவறு செய்ய மாட்டீர்கள். உங்கள் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது ஜான். நீங்கள் மிகவும் புத்திசாலி."

"உன்னிடம் ஏதாவது பணம் இருக்குமா? இதை ஆரம்பிக்க மூவாயிரம் டாலர் தேவைப்படுகிறது."

"மூவாயிரமா! என்னிடம் வெறும் இருபது டாலர்கூடக் கிடையாது. அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவேன்."

அவன் எதிர்பார்த்ததுதான்.

"சரி. அதைவிடு! நான் சமாளித்துக் கொள்கிறேன்."

"அவ்வளவு பெரிய தொகை எதற்கு?"

அவன் தன் வயிற்றைக் காட்டினான். செய்லர் அடித்த அடி! அவள் திடுக்கிட்டுவிட்டாள்!

"என்ன ஆயிற்று? ஐயோ வலி அதிகமாக இருக்குமே!" என்றாள்.

அவன் நடந்த கதையை ஒளிக்காமல் சொன்னான்.

"நான் சிரமத்தில் இருக்கிறேன். எனக்கு உடனே பணம் வேண்டியிருக்கிறது. பல மாதங்களாக ஏதாவது வழி கிடைக்காதா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது நீ கிடைத்திருக்கிறாய். ஒருவரின் சாவில்தான் நாம் தப்பிக்க வேண்டியிருக்கிறது"

"நீங்கள் கடன்காரனுக்கு ஆயிரம்தானே தரவேண்டும். மூவாயிரம் எதற்கு?"

"உன் கணவரின் இன்ஸ்யூரன்ஸ் பாலிசிக்கு முதல் தவணையை நான் கட்ட வேண்டும். அது கட்டி, எல்லாம்

பதிவான பிறகுதான், அவரை எப்படித் தீர்த்துக் கட்டுவது என்று யோசிக்க வேண்டும். அதனால் மூவாயிரம் தேவைப்படுகிறது," என்று சொல்லிப் பின்னால் சாய்ந்து கொண்டு வெளியே பார்த்தான். அழுக்குப் பிடித்த ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. சூரியனின் உதயம் தெரிந்தது. "இல்லாவிட்டால் எங்காவது திருட வேண்டியதுதான்," என்று கூறி அவளைப் பார்த்தான். "ஒரு தவறு இன்னொரு தவறுக்குத் தூண்டிவிடும். கொலை என்று ஆரம்பித்துவிட்டால் கடைசிவரை போக வேண்டி வரும். நடுவில் பின் வாங்க வழி இருக்காது."

"திருடுவதா? அதற்கு என்ன அர்த்தம்?"

அவன் அவள் தொடையின் மீது கையை வைத்தான்.

"ஆமாம். அப்படித்தான். மூவாயிரத்திற்கு வேறு என்ன செய்ய? ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்துவிடலாம்."

சற்று அமைதியாக இருந்தான். பிறகு, "வியாபார ரீதியாக உன் கணவர் எப்படிப்பட்ட ஆள்?" என்று கேட்டான்.

"அவருக்கு ஒரே நினைப்பு- எப்போதும் செக்ஸ் தான்- அடுத்ததாகப் பூக்கள்-"

"கையெழுத்துப் போடவேண்டி வரும்போது, எல்லாவற்றையும் அவர் படித்துப் பார்ப்பாரா? சிலர் வரிவரியாகப் படித்த பிறகுதான் கையெழுத்துப் போடுவது வழக்கம்.. இவர் எப்படி? இது மிகவும் முக்கியமான விஷயம்."

"அவர் இன்ஸ்யூரன்சுக்கு ஒப்புக் கொள்ளவும் மாட்டார். கையெழுத்தும் போட மாட்டார்."

"இருக்கட்டும். அவர் முன்னால் பாலிசி விண்ணப்பக் காகிதங்களை வைத்தால், எல்லாக் காகிதங்களும் சோதித்துப் பார்ப்பாரா?"

"பார்க்க மாட்டார். அதெல்லாம் அவரால் முடியாது."

ஆன்சன் காபியைக் குடித்து முடித்துவிட்டுக் கப்பை மேசைமேல் வைத்தான்.

"இது தெரிந்தால் போதும். ஆரம்பத்திற்கு இது போதும்," என்று சொல்லி அவளை அருகில் இழுத்துக் கொண்டான். " இதைச் செய்தே ஆக வேண்டும் என்று உறுதியாக நினைக்கிறாயா மெக்? இறங்கிவிட்டால் அப்புறம் பின் வாங்க வழியே இல்லை," என்றான்.

அவள், அவன் தலையைத் தன் விரல்களால் கோதிவிட்டாள். "ஏன் இந்தச் சந்தேகம்? நான் உறுதியாக உங்களுடன் இருப்பேன். பணமும் நீங்களும் எனக்குக் கிடைக்கும் போது, நான் எந்த ஆபத்துக்கும் தயார்," என்றாள்.

ஆன்சன் ஒரு முட்டாளாகி அவளை நம்பிவிட்டான்!

முட்டை கருகும் வாசனை வந்தது.

ஆன்சன் முன் அறையில் இருந்தான். சுவரில் பிரேம்போட்டு மாட்டப்பட்டிருந்த ஏதோ சான்றிதழ் அவன் கண்ணில் பட்டது. "அது என்ன?" என்று கேட்டான்.

மெக் காபி குடித்துக் கொண்டிருந்தவள், தலை நிமிர்ந்து அதைப் பார்த்துவிட்டு, "அது அவருக்குக் கிடைத்த சர்ட்டிபிகேட். துப்பாக்கி சுடுவதில் பரிசு பெற்றபோது கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு அதில் மிகவும் பெருமை," என்றாள்!

ஆன்சன் அருகில் சென்று படித்தான். ப்ரூ டவுனில் நடைபெற்ற .38 துப்பாக்கி சுடும்போட்டியில் முதல் பரிசு பெற்றமைக்கான சான்றிதழ் அது! சென்ற மார்ச் மாதம் நடந்த போட்டி அது.

மெக் கரிந்துபோன முட்டைகளைக் கொடுத்தாள். அவன் அந்த சான்றிதழையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன ஜான்?"

"அப்படியானால், அவருக்கு சுடத்தெரியும்."

"அவர் சுட்டதை நான் பார்த்ததே இல்லை. முன்பு அந்தப் பழக்கம் இருந்திருக்கலாம்."

"வீட்டில் துப்பாக்கி இருக்க வேண்டுமே?"

"இருக்கு."

"நான் பார்க்க வேண்டும்."

"எதற்கு?"

"பார்க்கவேண்டும்"

அவள் எழுந்து சென்று, மேசையைத் திறந்து, ஒரு சிறிய மரப்பெட்டியை எடுத்து வந்தாள். ஆன்சன் அதைத் திறந்தான். உள்ளே 38 போலீஸ் ஸ்பெஷல் கைத்துப்பாக்கி ஒன்று இருந்தது. அதிகப்படியாக ஒரு கிளிப்பும், ஒரு பெட்டி தோட்டாக்களும் இருந்தன.

அவன் துப்பாக்கியைக் கையில் எடுத்து சோதித்துப் பார்த்தான்.

"இதை அவர் எடுப்பதே இல்லையா?"

"இல்லை."

"ஒரு நாள் இரவுக்கு மட்டும் இதை எடுத்துப்போகலாமா?"

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எதற்கு?"

"இரவலாகத்தான். ஒரே நாளுக்கு."

"சரி. எடுத்துப் போகலாம். ஆனால் எதற்கு என்று சொல்ல வேண்டும்."

"யோசித்துப் பார்! மூவாயிரம் டாலர் வேண்டுமே!"

ஆன்சன் துப்பாக்கியைத் தன் கோட்டுப்பையில் போட்டுக் கொண்டான்.

அவள் திகைப்புடன் அவனையே வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

மரப்பெட்டியிலிருந்து ஆறு தோட்டாக்களையும் ஆன்சன் எடுத்துக் கொண்டான்.

பிறகு அவளருகில் வந்து அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

4 அன்று பிற்பகல் பிரெண்ட் நெடுஞ்சாலையில் தனித்திருந்த கால்டெக்ஸ் பெட்ரோல் பங்குக்கு ஆன்சன் போனான். பணியாள் பெட்ரோல் போட்டுவிட்டு காரைத்துடைத்துக் கொண்டிருந்தான்.

நோட்டம் பார்க்க ஆன்சன் அலுவலகத்திற்குள் இருந்த கழிவறைக்குப் போவதுபோல் உள்ளே சென்றான். அந்த அறையில் ஒரு பெரிய சோபா, மேசை, நாற்காலி, பழைய காலத்து இரும்புப் பெட்டி எல்லாம் இருந்தன. முன் பக்கம் இரண்டு பெரிய கண்ணாடி ஜன்னல்கள், சாலையைப் பார்த்தபடி. எல்லாவற்றையும் கவனித்து விட்டு வெளியே வந்தான்.

"இரவு முழுவதும் திறந்திருக்குமா?" என்று கேட்டான்.

"ஆமாம். இன்னும் மூன்று மணிநேரம் என் டூட்டி. அதற்குப் பிறகு இரவுக்கு வேறு ஆள் வந்து விடுவார்," என்றான் அந்த ஆள்.

சில மாதங்களுக்க முன்பு, அதன் மானேஜரிடம், பங்கை இன்சூரன்ஸ் செய்யும்படிக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். சாதாரணமாக மூன்று அல்லது நான்காயிரம் தொகை அங்கே இருக்கும் என்ற விபரம் அப்போதுதான் தெரிந்தது. மெக்கின் வீட்டில் துப்பாக்கி கிடைத்தபோது,

உடனே அதுதான் ஞாபகம் வந்தது! சுலபமான இடமாகவும் தோன்றியது.

இதையெல்லாம் அவன் யோசிக்கும்போது எந்தவிதமான பதற்றமும் ஏற்படவில்லை என்பது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை, கோட்டுப் பையில் கனத்த துப்பாக்கிதான் அந்த தைரியத்தைக் கொடுத்ததோ!

தன் அறைக்குத் திரும்பிய ஆன்சன் படுக்கையில் அமர்ந்தபடி பர்லோவின் துப்பாக்கியை எடுத்து ஆராய்ந்தான். இரண்டு வருடம் ராணுவத்தில் பணியாற்றியிருந்ததில், துப்பாக்கிகளைப் பற்றிய விவரங்கள் அவனுக்குத் தெரிந்திருந்தன.

ஆறு குண்டுகளையும் அதில் நிரப்பிவிட்டு, அதைத் தன் சூட்கேசில் வைத்தான். பிறகு கீழே இறங்கி வந்து பாருக்குப் போனான். சற்று நேரம் குடித்துக் கொண்டிருந்தான். பிறகு, ரெஸ்டாரன்டுக்கு சாப்பிடப் போனான். சாப்பிடும்போது ஒரு பாட்டல் வைனுக்கு ஆர்டர் கொடுத்தான். பொதுவாக அவன் வைன் சாப்பிடும் பழக்கம் இல்லாதவன். இருந்தாலும் ஒரு கார்க் தேவைப்பட்டது. அதற்காக ஒரு பாட்டல் வைன் வாங்க வேண்டி வந்தது!

வயிற்றில் பசி இல்லை. ஏதோ சாப்பிட்டபடி நேரம் போக்கினான்.

ஒன்பது மணிக்கு, ரெஸ்டாரன்டின் பார் ரூமுக்குள் நுழைந்தான். அங்கே ஒரு நீக்ரோ பணியாள், நாற்காலியில் அமர்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தான். காலடியோசை கேட்டுக் கண்விழித்த அவன், ஆன்சனைப் பார்த்துவிட்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்தான்.

ஆன்சன் கை கழுவினான். அங்கே பல கோட்டுகளும் தொப்பிகளும் மாட்டப் பட்டிருந்தன. அதில் ஒரு பழைய கோட்டையும், ஒரு ஸ்விஸ் தொப்பியையும் எடுத்துக் கொண்டான். கோட்டு, பச்சை, பிரௌன் நிறக் கோடுகள் போட்டதாக, கந்தலாக இருந்தது.

நீக்ரோ தூங்குவதைக் கவனித்துவிட்டு, அவன் விழித்துக் கொள்ளாதபடி, சட்டென வெளியேறினான். கோட்டையும் தொப்பியையும் எடுத்துக் கொண்டு, தன் காருக்கு விரைந்தான். கோட்டையும், தொப்பியையும் டிக்கியில் போட்டு மூடிவிட்டு, மீண்டும் தன் ஓட்டல் அறைக்குத் திரும்பினான்.

படுக்கையில் படுத்துக் கொண்டு ஒரு சிகரட்டைப் பற்ற வைத்தான். செய்யப் போவதைப் பற்றி தீவிரமாக யோசித்தான். இரவு பத்து மணிக்கு அவன் எழுந்தான். மெக் இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள் என்று நினைத்தான். பிறகு துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். தன் புருவத்தைக் கறுப்பாக்கிக் கொண்டான். ஓட்டல் பின்பக்க வழியாக யார் கண்ணிலும் படாமல் வெளியேறினான்.

**ஹ**ாரி, இரவு ஷிப்டில் பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கிற ஆள். இரண்டு வருட காலமாக அதே வேலை. தொல்லையில்லாமல் இருந்தது. அவனுக்கு அது பிடித்தும் இருந்தது. இரவு நேரத்தில் அதிகம் வாகனங்கள் வராததால், எப்போதும் அவன் கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருப்பது வழக்கம்.

நள்ளிரவு ஒரு மணி. விடிவதற்குள் மூன்று கார்கள் வந்தாலே அதிகம். அதனால், அலட்டிக் கொள்ளாமல் நாவலி ல் மூழ்கிப் போயிருந்தான் அவன்.

பின்னிரவு. மணி நான்கு. லேசாகத் தூக்கம் கண்களைச் சுழற்ற, எழுந்து போய் காபி தயாரித்தான். அதை எடுத்துக் கொண்டு வந்து, பழையபடி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நாவலைப் பிரித்தான். அது சுவாரஸ்யமான ஜேம்ஸ்பாண்ட் நாவல்.

அப்போது சத்தமில்லாமல் கதவு திறக்கப்பட்டது. அவன் சட்டெனத் தன் காபி கப்பை மேசைமேல் வைத்தான். நாவல் நழுவிக் கீழே விழுந்தது.

ஒரு முகமூடி மனிதன், எதிரில் நின்று கொண்டிருந்தான்! ஒரு ஸ்விஸ் தொப்பி அணிந்த ஆள். அவன் கையில் ஒரு துப்பாக்கி! ஹாரி, திடுக்கிட்டான்.

"உன் வீர தீரத்தைக் காட்ட முயற்சி செய்யாதே! நான் உன்னைக் கொல்லமாட்டேன். இரும்புப் பெட்டியைத்திற! சீக்கிரம்!"

"சரி" என்று எழுந்தான் ஹாரி. அவன் உடல் நடுங்கியது. முகமூடி உள்ளே வந்தான். துப்பாக்கி ஹாரியையே குறிபார்த்தது.

"சீக்கிரம்!"

ஹாரி, சாவி எடுப்பவன் போல, மேசை இழுப்பறையைத் திறந்தான். அதில் .45 கைத்துப்பாக்கி இருந்தது! கொஞ்சம் யோசித்தான் அவன். அவனது தயக்கத்தை ஆன்சன் கவனித்துவிட்டான்.

அவன் ஒரு துப்பாக்கி எடுக்கப் போகிறான் என்பது புரிந்து விட்டது.

"அசையாதே! அப்படியே நில்! இரண்டு கைகளையும் மேலே தூக்கு!"

அந்தக் குரல் அதட்டியது. ஹாரி பயந்து போனான்! சொன்னபடி கைகளைத் தூக்கிக் கொண்டான். ஆன்சன் அவனை நகரச் சொல்லிவிட்டு, இழுப்பறையில் கிடந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, கழிப்பறைக்குப் போகும் கதவைத் திறந்து கொண்டு பின் வாங்கினான். எடுத்த துப்பாக்கியைத் தன் காலடியில் வைத்துவிட்டு நிமிர்ந்தான். அங்கு, உள்ளே நின்றபடி அதட்டினான்.

"சீக்கிரம் திற! எதாவது செய்தால் கொன்று விடுவேன்!" ஹாரி, சாவியை எடுத்து இரும்புப் பெட்டியைத் திறந்தான். ஆன்சன் ஒரு முறை வெளியில் பார்த்துக் கொண்டான். "நகரு! ஓரமாகப் போய், சுவரைப் பார்த்தபடி நில்!" அவன் அப்படியே செய்தான்.

ஆன்சன், உள்ளே சென்று, மண்டியிட்டு, பணத்தை எடுத்தான். எல்லாவற்றையும் வாரி, கோட்டுப்பைக்குள் போட்டுக் கொண்டான்.

அப்போது, இருளின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது!

எதிர் பாராத இடையூறு! ஆன்சன் திடுக்கிட்டான்! இந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் யார் போவார்கள்? ரோந்து போலீசாக இருக்குமோ? அவனுக்கு 'திக்' கென்றது!

அவன் அவசர அவசரமாக எழுந்தான். இரும்புப் பெட்டியை மூடினான். சட்டெனப் பின் வாங்கி டாய்லட் அறைக்குள் நகர்ந்து கொண்டான்.

"நாற்காலியில் பேசாமல் உட்கார்!"

அவன் சென்று அமர்ந்து கொண்டான்

மோட்டார் சைக்கிள் ஓசை அதிகரித்தது. வெளி ஜன்னலில் வெளிச்சம் தெரிந்து மறைந்தது. ஓசை நின்றது.

ஆன்சன் கழிவறைக் கதவை பாதி மூடிவிட்டுப் பின்னால் துப்பாக்கியுடன் பதுங்கி நின்றான்.

ஹாரி, அதையுணர்ந்து, முன்னாலிருந்த காகிதத்தில் "கொள்ளை! துப்பாக்கி மனிதன் டாய்லட்டில்!" என்று கிறுக்கி வைத்துக் கொண்டான்!

அறைக் கதவைத் திறந்துகொண்டு டிராபிக் சார்ஜன்ட் "ஹலோ, ஹாரி!" என்று சொல்லியபடி உள்ளே நுழைந்தார்.

ஆன்சன் கதவை இன்னும் சற்று மூடிக் கொண்டு இடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பொறியில் மாட்டிக் கொண்டோமோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது. விவகாரம் ஏதாவது ஏற்பட்டுவிட்டால் கழிவறை ஜன்னல் வழியாக வெளியே குதித்துத் தப்ப முடியுமா என்று பார்த்தான். அது உயரத்தில் இருந்தது. சின்னதாகவும் இருந்தது.

"காபி கிடைக்குமா?" என்றார் சார்ஜன்ட்

"இப்போதுதான் வைத்தேன்," என்றான் ஹாரி.

சார்ஜன்ட் தன் கையுறைகளை உருவி மேசைமேல் போட்டார். ஆன்சன் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரும் அவனுக்கு முதுகு காட்டியபடி இருந்ததால், ஹாரி தன் குறிப்பை சார்ஜன்டுக்கு சுட்டிக் காட்டியது, அவனுக்குத் தெரியவில்லை.

சார்ஜன்ட் அவ்வளவு புத்திசாலியல்ல. சட்டென்று புரிந்து கொள்ளாமல், "என்ன இது? நான் படித்துப் பார்க்க வேண்டுமா?" என்று உரக்கக் கேட்டார்!

ஆன்சனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஆனால் அவன் இப்போது பதற்றமடையவில்லை. கழிவறைக் கதவை ஓசைப்படாமல் திறந்தான்.

ஹாரி முகம் வெளுத்துப்போய் அமர்ந்திருந்தான். சார்ஜன்ட் குறிப்பைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, சட்டென திரும்பி ஆன்சனைப் பார்த்துத் திகைத்தார்!

"நில்!" என்று உரக்கக் கத்திவிட்டு, சார்ஜன்டைக் குறிபார்த்தான் ஆன்சன்.

"இரண்டு பேரும் கைகளைத் தூக்குங்கள்! பின்னால் நகருங்கள்!"

ஹாரி நகர்ந்தான், கைகளை உயர்த்தியபடி சார்ஜன்ட் அசையவில்லை!

"நீ தப்ப முடியாது முட்டாளே! கொண்டா துப்பாக்கியை!" என்றார் சார்ஜன்ட், தன் கட்டைக் குரலில்!

ஆன்சன், நிலைமை படுமோசமடைந்து விட்டதை சட்டென உணர்ந்து கொண்டான்.

சார்ஜன்ட் தன் பெரிய கையை நீட்டினார், துப்பாக்கியைக் கொடுக்கச் சொல்லி!

"கொண்டா.. கொடுத்து விடு!"

ஆன்சன் திகைத்தான். சார்ஜன்ட் முன்னால் மெல்ல நகர ஆரம்பித்தார். வழியில்லை..

ஆன்சனின் கை விரல் குதிரையை இழுத்தது!

'படீர்' என்று துப்பாக்கி வெடித்தது!

சார்ஜன்ட் குண்டடி பட்டுத் தடுமாறிப் பின்னால் சாய்ந்தார்—

ஆன்சன் ஒரு கணம் கதிகலங்கிப் போய் நின்றான்... மறுகணம் பாய்ந்தான்.. ஹாரி போனை நெருங்கினான்.. ஆன்சன் பாய்ந்து அவனை அடித்துத் தள்ளிவிட்டு, போனை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு, வெளியில் பாய்ந்தான்—

இருளில் சற்று தூரத்தில்தான் அவர் கார் நிறுத்தப்பட்டிருந்தது—

மறுநாள் காலை. ஆன்சன் காலைச் சிற்றுண்டி முடித்துவிட்டு, கடன்காரன் ஜோவின் பெயருக்கு 1045 டாலருக்கு ஒரு செக் எழுதி, ஒரு குறிப்புடன் உறையில் போட்டுவிட்டு வெளியில் வந்து மெக்கிற்குப் போன் செய்தான்.

கொஞ்சம் தாமதத்திற்குப் பிறகு, தொடர்பு கிடைத்தது.

"இன்று பிற்பகல் அங்கே வருகிறேன், இரவல் வாங்கியப் பொருளைக் கொடுக்க. இருப்பாயல்லவா?"

"ஓ, நீங்களா? தூங்கிக் கொண்டிருந்தேன். எழுப்பிவிட்டீர்கள்!"

அடியற்ற மரம் போல் துப்பாக்கிக் குண்டுபட்டு, சார்ஜன்ட் சாயும் காட்சி ஆன்சனின் கண் முன்னால் வந்து போயிற்று.

"வீட்டில்தானே இருப்பாய்?"

"ஆமாம்– இருப்பேன்"

"சரி. மூன்று மணிக்கு," என்று போனை வைத்தான் ஆன்சன். ஆயிரம் டாலரைக் கட்டி, உடனே பிரெண்ட் நகரிலுள்ள தன் கணக்குக்கு மாற்றும்படிச் சொல்லிவிட்டு, ஜோவின் முகவரிக்கு எழுதிய உறையை அஞ்சலில் சேர்த்தான்.

அப்புறம் ஐந்து பேருக்கு போன் செய்தான், தொழில் சம்பந்தமாக. ஆயிரம் டாலர் மதிப்புள்ள ஒரு பாலிசியை விவசாயி ஒருவருக்கு விற்றான். பகல் உணவு வரை அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான்.

பகல் உணவின் போது ப்ரூ டவுன் கெஸட் நாளிதழ் வாங்கிப் பார்த்தான். பெட்ரோல் பங்க் கொள்ளையைப் பற்றிய செய்தி பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சார்ஜன்டின் பெயர் டான் சான்குஸ்ட் என்று போட்டிருந்தார்கள். ஒரு மனைவியும், பனிரண்டு வயது பையன் ஒருவனும் இருப்பதாகவும் தெரிந்தது. ஹாரியின் படமும் பிரசுரமாயிருந்தது.

எல்லாவற்றையும் படித்தபடி ஆன்சன் சாப்பிட்டான். நல்ல பசி. வெயிட்டரும் அந்தக் கொள்ளையைப் பற்றியே பேசினான். வெளியில் எங்கும் அதே பேச்சாக இருந்தது.

ஆன்சன் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அவன் மனம், முன்னாள் இரவு சம்பவங்களிலேயே உழன்று கொண்டிருந்தது. கோடு போட்ட கோட்டு, ஸ்விஸ் தொப்பி பற்றியெல்லாம் ஹாரி சொன்ன விளக்கத்தைப் படித்தபோது தனக்கு எந்த ஆபத்தும் இல்லையென்று நிம்மதியடைந்தான். சார்ஜன்டின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அந்தக் கோட்டையும், தொப்பியையும், நேற்று இரவே காட்டில் குழிதோண்டிப் புதைத்துவிட்டுத்தான் ஓட்டலுக்குத் திரும்பியிருந்தான். கொள்ளையில் கிடைத்த தொகை 3670 டாலர். எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே!

அவ்வளவு நடந்த பிறகும் தான் அமைதியாக இருப்பது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

பர்லோ வீட்டை அடைந்தபோது, மெக் வந்து கதவைத் திறந்தாள்.

"ஹலோ! மறுபடியும் வந்துவிட்டேன்," என்றான் சிரித்தபடியே.

அவள் நகர்ந்து அவனுக்கு வழிவிட்டுவிட்டு, கதவைச் சாத்தினாள். அவள் முகம் வெளிறிப் போயிருந்தது.

"ரேடியோவில் சொன்னார்கள். சார்ஜன்ட் இறந்துவிட்டார்," என்றாள் வேறு பக்கம் பார்த்தபடி.

ஆன்சன் பதில் பேசவில்லை. கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டு கணப்பருகில் சென்று கைகளை சூடாக்கிக் கொண்டான். அவள் அவனையே பார்த்தபடி நின்றாள்.

"நான் சொன்னது காதில் விழவில்லையா? அந்த சார்ஜன்ட் இறந்து விட்டார்."

ஆன்சன் திரும்பிப் பார்த்தான். அவன் பதற்றமடையவில்லை. "அந்த முட்டாளுக்கு அது வேண்டியதுதான்" என்று நினைத்துக் கொண்டான்.

"சரி. அதற்கு என்ன இப்போது?" என்று கேட்டான்.

"நீங்கள் தானே அவரைச்சுட்டது?"

அவன் பதில் சொல்லவில்லை. அறையைச் சுற்றிலும் தன் பார்வையைச் செலுத்தினான். மேசைமேல் காலை உணவு தட்டுகள் எடுக்கப்படாமல் அப்படியே கிடந்தன. மேசை விரிப்பில் ஜாம், ரொட்டித் துணுக்குகள், காபிக் கறை. கழுவப்படாத கப்புகள்... என்ன பெண் இவள்! அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

ஆன்சன் தன் பிரிப்கேசைத் திறந்து துப்பாக்கியை எடுத்தான். கைக்குட்டையை எடுத்து அதை சுத்தமாகத்

துடைத்தான். பிறகு அதை, பழைய மரப்பெட்டியில் வைத்து மூடினான். அதைப் பழைய இடத்திலேயே வைத்துவிட்டான். துப்பாக்கித் தோட்டாக்களையும் வெளியில் எடுத்துத் துடைத்து வைத்ததை அவள் கவனித்தாள்.

"ஆறு தோட்டாக்கள் கொண்டு போனீர்களே! ஐந்துதானே இருக்கின்றன?"

"தெரிந்ததுதானே! உன் கணவர் எண்ணியா பார்க்கப் போகிறார்?"

"சார்ஜன்டை நீங்கள் கொன்றுவிட்டீர்கள்!"

அவன் சட்டென அவள் மணிக்கட்டை இறுகப் பிடித்தான், முரட்டுத்தனமாக! அவளை அசைத்தான்!

"பார்! உளறிக் கொண்டிருக்காதே! இது ஆரம்பம் மட்டுமே." என்றான். அவள் திமிறினாள். "நீதான் இதற்கெல்லாம் பச்சைக் கொடி காட்டினாய். நான் பல முறை எச்சரித்தேன். நீயும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதை மறந்து விடாதே," என்று அருகில் இழுத்தான்.

அவள் பேசாமல் இணங்கிவிட்டாள். அவன் அவளை முத்தமிட்டான். பிறகு அவளை சோபாவில் தள்ளினான்.

"வேண்டாம்- வேண்டாம் ஜான்! இப்போது வேண்டாம்!" என்றாள் உரக்க.

அவன் முகத்தில் தோன்றிய கோபக் கனலைக் கண்டு பேசாமல் கண்களை மூடிக் கொண்டாள்–

"உன்னைப் பற்றி விபரமாகச் சொல் மெக்!" என்று கேட்டான் ஆன்சன் இருபது நிமிடம் கழித்து.

இருவரும் கணப்பருகில் அமர்ந்திருந்தார்கள். 'ஒளிக்காமல் பதில் சொல்ல வேண்டும். இப்படியெல்லாம் பின்னால் கேட்பார்கள். பிசகு நேர்ந்துவிட்டால் மரணதண்டனைதான்...

விஷப்புகை அறையில்! நான் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். சொல்!".

"என்னை நீங்கள் பயமுறுத்துகிறீர்கள்!"

"பயப்படுவது நல்லது. மட்டாக்சுக்கு பயப்படுவதைவிட எனக்குப் பயப்படுவது நல்லது. இன்ஸ்யூரன்ஸ் பணம் கேட்கும்போது, எல்லா விளக்குகளும் உன்மேல்தான் திருப்பப்படும். குடைந்தெடுத்து விடுவார்கள். உன் கடந்த கால வாழ்க்கையில் வெளியில் தெரியக் கூடாதது ஏதாவது இருந்தால் இப்போதே சொல்லிவிடு!"

அவள் முகத்தைவேறு பக்கம் திரும்பிக் கொண்டு, "இல்லை. அப்படி எதுவும் இல்லை," என்றாள்.

"குற்றம் செய்ததாகப் பதிவு ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா?"

"இல்லை!" என்றாள் கோபமாக.

"போலீசுக்கும் உனக்கும் தகராறு எதுவும் கிடையாதே?"

"கார் வேகமாக ஓட்டியதில் பிரச்சனை ஏற்பட்டது. வேறு ஒன்றும் இல்லை."

"திருமணத்திற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"ஒரு ஓட்டலில் ரிஷப்ஷனிஸ்டாக வேலை பார்த்தேன்."

"எந்த ஓட்டல்? "

"லாஸ் ஏஞ்சலஸ் நகரில் 'கன்னாட் ஆர்ம்ஸ்' ஓட்டலில்."

"அது எந்த மாதிரி ஓட்டல்? மணிக் கணக்கிற்கு வாடகை அறைகள் தரும் ஓட்டலா?"

"நிச்சயமாக இல்லை!"

"அதற்கு முன்னால்?"

அவள் கொஞ்சம் தயங்கினாள். "ஒரு நைட்கிளப்பில் வேலை பார்த்தேன்."

அவன் சட்டென விழிப்படைந்தான்.

"அங்கே என்ன வேலை?"

"வழக்கமான வேலை. தனியாக வரும் ஆண்களுக்குக் 'கம்பனி' கொடுப்பது. குடிக்கத் தூண்டுவது."

"சரியாகச் சொல். 'கம்பனி' கொடுப்பது ஒட்டலோடு மட்டுமா, தனி அறை வரைக்குமா?"

"இல்லை! அந்த மாதிரி எல்லாம் கிடையாது!"

அவளை அவன் உற்றுப் பார்த்தான். அவள் கோபமாக இருப்பது நன்றாகத் தெரிந்தது.

"உண்மையாகவா?"

"சொன்னேனல்லவா?... இப்படியெல்லாம் பின்னால் கேட்பார்களா?"

"கேட்கமாட்டார்கள். இரண்டு துப்பறிவாளர்களை அனுப்பி வைப்பார்கள். அவர்கள், உனக்குத் தெரியாமல் உன் பூர்வீகத்தையெல்லாம் தோண்டி எடுத்து வெளியில் போட்டுவிடுவார்கள். அதற்குப் பிறகுதான் மட்டாக்ஸ் இதில் இறங்குவார். உன்னைப் பற்றிய பழைய தகவல்கள் கோளாறாக இருந்துவிட்டால்.... அவ்வளவுதான்... அவர் லேசில் விட மாட்டார்..."

அவள் முகத்தில் கவலையின் நிழல் படர்ந்தது.

"இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்திருந்தால், நான் இதற்கு சம்மதித்திருக்கமாட்டேன்," என்று சொல்லிக் கவலையுடன் பின்னால் சாய்ந்து கொண்டாள்.

"அதனால் என்ன? இப்போதுகூடப் பின் வாங்கிவிடலாம். ஐம்பதாயிரம் டாலர் சும்மா கிடைத்துவிடாது. நீ உண்மை பேசும் வரை ஒரு தொல்லையும் இல்லை.. நைட் கிளப் வேலைக்கு முன்னால், என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"என் அம்மாவுடன் இருந்தேன்."

"உனக்குத் திருமணமாகி ஒரு வருஷம்தான் ஆகிறது. நான் உண்மை தெரிந்து கொள்வது மிக முக்கியம். உனக்கு வேறு யாராவது காதலன் இருக்கிறானா?"

"நீங்கள்தான்"

"என்னைக் கேட்கவில்லை. வேறு யாராவது? நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனால்தான் கேட்டேன்."

"இல்லை, யாரும் இல்லை."

"நிச்சயமாகவா? மட்டாக்ஸ் எதையாவது கண்டு பிடித்து விட்டால் தொலைந்தாய்..."

"இல்லை. யாரும் இல்லை."

"உன் குடும்ப வாழ்க்கை பற்றி வேறு யாருக்கு உண்மை தெரியும்? நீங்கள் சண்டை போட்டுக் கொள்வதை யாராவது பார்த்திருக்கிறார்களா?"

"இல்லை. யாருக்கும் தெரியாது. யாரும் இங்கே வருவதில்லை"

ஆன்சன் அமைதியாக, சற்றுநேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சரி. நீ சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால் சிக்கல் எதுவும் வராது- நீ சொன்னது உண்மைதானே?"

"ஆமாம். எத்தனை தடவை சொல்வது!"

அவன் அமைதியாக சிகரட் பாக்கட்டை எடுத்து, ஒன்றை உருவிப் பற்ற வைத்துக் கொண்டான். ஒன்றை அவளுக்கும் கொடுத்தான்.

"அப்படியானால் சரி. இனி, அடுத்த கட்டம், நாளை இரவு உன் கணவர் வீட்டில்தானே இருப்பார்?" என்று கேட்டான்.

"ஆமாம். திங்கள், வியாழக் கிழமைகள் தவிர மற்ற நாட்களில் வீட்டில் தான் இருப்பார்."

"நான் நாளை இரவு எட்டு மணி சுமாருக்க இங்கே வருகிறேன். நீ வந்து கதவைத் திற. அவர் ஒரு வேளை வாசற்படியிலேயே என்னை விரட்டிவிடலாம். உள்ளே வந்து பேசி அவரை நம்ப வைக்க வேண்டும்."

"அது கஷ்டம்— அவரை சம்மதிக்க வைக்க முடியாது."

ஆன்சன் எழுந்து நின்றான்.

"நீ வந்து கதவைத் திறந்து உள்ளே விடு. பாக்கியை நான் பார்த்துக் கொள்கிறேன். நாளைக்கு சந்திப்போம்."

அவளும் எழுந்தாள்.

"ஜான்— நீங்கள்தானே சார்ஜன்டை சுட்டது?"

ஆன்சன் பிரிப்கேசை எடுத்துக் கொண்டான்.

"இனி இப்படிக் கேள்விகள் கேட்காதே! அவருக்கு முதல் பிரிமியம் கட்ட என்னிடம் பணம் இருக்கிறது. அதுமட்டும் உனக்குத் தெரிந்திருந்தால் போதும்."

அவன் அவளை முத்தமிடக் கூட முயற்சிசெய்யவில்லை. சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

அவன் கார் கிளம்பும் ஓசை கேட்டதும், அவள் போனை எடுத்து ஒரு எண்ணைச் சுழற்றினாள். பதில் இல்லை. மணியடித்துக் கொண்டே இருந்தது—

மறுநாள் இரவு. நல்ல நிலா வெளிச்சம். எல்லாம் நல்லபடியாக நடந்துகொண்டிருப்பதாக ஆன்சன் நினைத்துக் கொண்டான்.

பர்லோ வீட்டை அவன் அடைந்ததும், மெக் கதவைத் திறந்து உள்ளே வரவிட்டாள்.

அவன் வருவதைக் கண்டதும், கணப்பருகில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பர்லோ துள்ளி எழுந்தார். அதை ஆன்சன் கவனித்தான்.

ஆன்சன் நலமாக ஆரம்பித்தான். ஆனால், அதற்குள் பர்லோ, "எனக்கு ஆயுள் காப்பீட்டில் நம்பிக்கை இல்லை. நேரத்தை வீணாக்க வேண்டாம். நீங்கள் போனால் நல்லது," என்றார் வெறுப்புடன்.

ஆன்சன் மலர்ந்த முகத்துடன் அவரைப் பார்த்தான்.

"நான் ரொம்ப தூரத்திலிருந்து வருகிறேன், மிஸ்டர் பர்லோ. நான் சொல்வதைக் கேளுங்கள் – முடிவு உங்களுடையது" என்றான்.

"எதையும் கேட்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, மெக் பக்கம் திரும்பி, "எதற்காக இவரை உள்ளே வர விட்டாய்?" என்று கோபமாகக் கேட்டார்!

பிறகு சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை படிக்க ஆரம்பித்து விட்டார்!

ஆன்சனும், மெக்கும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'நான் சொல்லவில்லையா?' என்ற அர்த்தத்தில் அவனை மெக் பார்த்தாள்.

ஆன்சனுக்கு அது ஒரு சவாலாக இருந்தது. அவன் அந்த் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிரபலமான ஏஜன்ட். அவனால் கம்பனிக்கு நல்ல ஆதாயம்.

"உங்களுக்குத் தொந்தரவு தந்ததற்கு மன்னிக்கவும். ஒரு வேளை எனக்குக் கிடைத்த தகவல் தவறாக இருக்கலாம். உங்களை அவசியம் சந்திக்க வேண்டும் என்று ஒருவர் சொன்னதால்தான் வந்தேன்," என்றான்.

பர்லோ பத்திரிகையிலிருந்து தலையை உயர்த்தி அவனைப் பார்த்தார்.

"சொன்னார்களா? யார் சொன்னது?" என்று கேட்டார்.

"மிஸ்டர் ஹாம்மர்ஸ்டீன். அவரை இன்ஸ்யூர் செய்தேன். அவர்தான் உங்களைப் பார்க்கச் சொன்னார்."

பர்லோ திகைத்தார்! ஸ்டோரின் ஜெனரல் மானேஜரா தன்னைப் பார்க்கச் சொன்னார்!

"அவரே என் பெயரைச் சொன்னாரா?"

ஆமாம், உங்களைப் பற்றி நிறையச் சொன்னார்"

கொஞ்சம் யோசித்தார் பர்லோ. பிறகு, கோபமில்லாமல், "வந்ததற்காக நன்றி. எனக்கு வேண்டாம்", என்றார்!

"சரி. மிக்க நன்றி. உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி இனி உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்", என்று புறப்பட முயன்றான் ஆன்சன்.

பர்லோ எழுந்தார் அவர் சங்கடப் படுவதுபோலத் தோன்றியது. "நான் முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன். தவறாகக் கருத வேண்டாம்..."

ஆள் இறங்கி வருவதை ஆன்சன் உணர்ந்து கொண்டான்.

"அதனாலென்ன? பரவாயில்லை... ஒரு ஆள் இதே மாதிரி என்னிடமே வந்து இன்ஸ்யூரன்ஸ் எடுத்துக் கொள்ளும்படிப் படாதபாடு படுத்துவிட்டான்", என்றான்.

பர்லோ சிரித்தார்! ஆன்சன் கதவை நோக்கி நகர்ந்தான். அவர் அவனை அனுப்ப வந்தார். ஆன்சன், மெக்கை நோக்கி கண்ணைச் சிமிட்டினான்.

இருவரும் வெளியில் வந்தார்கள்.

"உங்கள் பூந்தோட்டம் பிரமாதம். பகலில் பார்த்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். என் கார் வெளிச்சத்தில்தான் கொஞ்சம் பார்த்தேன். அசந்துவிட்டேன்," என்று தூண்டில் போட்டான் ஆன்சன்!

"உங்களுக்கும் பூந்தோட்டம் பிடிக்குமா?" என்று கேட்டார் பர்லோ.

"எனக்கு அதில் ஒரே பைத்தியம். ஆனால், என் துரதிர்ஷ்டம் நான் அபார்ட்மென்டில் குடியிருக்க நேர்ந்துவிட்டது. என்ன செய்வது? என் அப்பா ஒரு பெரிய ரோஜாத் தோட்டமே வைத்திருந்தார். ஆனால், இது, அதை விடப் பிரமாதம்," என்று வலையை இறுக்கினான் ஆன்சன்.

"அப்படியா? இதை நீங்கள் பார்க்க வேண்டுமா? இருங்கள் இப்போதே காட்டுகிறேன்," என்று, சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஒரு பெட்டியின் கதவைத் திறந்து ஸ்விச்சைப் போட்டார், குபீரென ஒளிவெள்ளம் பூந்தோட்டத்தின் மேல் பாய்ந்தது! மின்விளக்குகள் எல்லாம் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. தோட்டம் ஒரு கனவுச் சோலைபோலக் காட்சியளித்தது.

மலர்கள் பூத்துக் குலுங்கின. மலர்களே ஒளியைக் கசிய விடுவதுபோலத் தோன்றியது.

தோட்டத்தின் நடுவில் உள்ள குளத்திலிருந்து, நீல நிற நீருற்று பூப்பூவாய்ச் சிலிர்த்துச் சிதறியது.

"அடேயப்பா! இது ஒரு சின்ன சொர்க்கம்!" என்று வாயாரப் பாராட்டினான் ஆன்சன்.

"எல்லாம் நானே செய்தது. எல்லாமே... மலர்ச்செடி கொடிகள்- நீருற்று- குளம் - விளக்குகள்- எல்லாமே!" என்று பெருமிதத்தோடு கூறினார் பர்லோ.

"இந்த மாதிரி உருவாக்க வேண்டுமானால் ஐந்து வருஷமாவது பிடிக்குமே!" என்றான் ஆன்சன்.

"என் வாழ்வையே இதற்காக நான் செலவிடத் தயாராக இருக்கிறேன்- ஆனால் என்ன பயன்! என்னை ஒரு ஸ்டோர்க் கிளார்க்காகத்தானே வைத்திருக்கிறது!" என்றார் பர்லோ பரிதாபமாக.

இதுவே சரியான தருணம் என்று ஆன்சன் நினைத்தான். இந்தக் கணத்திற்காகவே அவன் காத்திருந்தான்.

"இவ்வளவு திறமையை வைத்துக் கொண்டு, நீங்கள் ஏன் அந்தச் சின்னவேலையில் சிரமப்படவேண்டும் மிஸ்டர் பர்லோ? தோட்டக் கலை நிபுணராகப் பணியாற்றி நிறைய சம்பாதிக்கலாமே?"

"எனக்கு அதெல்லாம் தெரியாதா? பணம் இல்லாமல் என்ன செய்யமுடியும்? முதலீடு வேண்டாமா? இதில் திருமணம் வேறு செய்து கொண்டுவிட்டேன்.. என்ன செய்ய?"

"இந்தத் தோட்டம் போதுமே. இதைப் பார்த்தால் எந்த வங்கியும் கடன் கொடுக்குமே? நீங்கள் பேசிப் பார்க்கவில்லையா?"

"என் வங்கியே மறுத்துவிட்டது. பாதுகாப்புக்காக வைக்க என்னிடம் எதுவும் இல்லை!.. இல்லை.. என்னால் கடன் புரட்ட முடியவில்லை... வீட்டைக்கூட முன்பே அடமானம் வைத்துவிட்டதால் ஒன்றும் முடியவில்லை".

அவர் குரலில் தாங்கமுடியாத சோகம் தொனித்தது.

ஆன்சன் சற்று நகர்ந்து சென்று, குளத்தை உற்றுப் பார்த்தான். மின் விளக்கொளியில் அதில் தங்க மீன்கள் நீந்துவதைக் கண்டான்.. சில வினாடிகளில் பர்லோ அங்கு வந்தார்.

"அபாரம்.. என்ன அழகு!" என்றான் ஆன்சன்.

"நான் பார்த்துவிட்டேன். எத்தனையோ பேரைக் கேட்டும் பார்த்துவிட்டேன்.. ஒன்றும் முடியவில்லை."

"இந்த மாதிரி ஒரு தோட்டம் அமைக்க எத்தனையோ பேர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.. தொழில் தொடங்க எவ்வளவு தேவைப்படும்?"

பர்லோவின் முகத்தில் சட்டென நம்பிக்கை ஒளிவீசியது!

பர்லோ, ஆன்சனின் தோளில் கையை வைத்தார்!

"இங்கே எதற்கு? உள்ளே போய்ப் பேசலாமே!" என்று அழைத்தார்.

ஆன்சன் மறுபடியும் ஹாலுக்குள் வந்தபோது, மெக் அங்கே இருந்தாள். வியப்புடன் அவனைப் பார்த்தாள். அவன் வெற்றிக்கு அறிகுறியாகக் கண்ணைச் சிமிட்டினான்.

ஆன்சன் தன் அலுவலக அறையில் அமர்ந்திருந்தான். அன்னா டைப் அடித்துக் கொண்டிருந்தாள்.

"அன்னா! நீ புறப்படு! நேரமாகவில்லையா? நான் பார்த்துக் கொள்கிறேன். உன் பாய்பிரண்டை சினிமாவுக்கு அழைத்துப் போகவேண்டும் என்று சொன்னாயே?"

அன்னா கலகலவென்று சிரித்தாள்.

"இல்லை சார்! அவர்தான் என்னை அழைத்துப் போகிறார்."

"அப்படியா? சரி. புறப்படு! நேரமாகவில்லையா?"

அவள் நன்றி சொல்லிப் புறப்பட்டுப் போனாள்.

ஆன்சன் ஆயுள் காப்பீட்டு விண்ணப்பங்களை எடுத்து வந்து டைப்ரைட்டரில் செருகினான்.

முந்தைய தினம் பர்லோவை சரிக்கட்டி சம்மதிக்க வைத்து விட்டதை நினைத்து சிரித்துக் கொண்டான். 5000 டாலருக்க ஆயுள் காப்பீடு எடுத்துக் கொண்டால், முன் பிரியமாக 150 டாலர் பணமாகக் கட்டினால் போதும். ஐந்து சதவிகிதம் கழிவும் உண்டு. சிரமப்பட்டு ஒரு வருடம் பொறுத்துக் கொண்டால், வங்கியில், ஒரு நிலம் வாங்கும் அளவுக்குக் கடன் வாங்கித் தருவதாக உறுதி சொல்லியிருந்தான்!

வருங்காலக் கனவில் அவர் ஒப்புக் கொண்டுவிட்டார்! டாக்டர் ஸ்டீவன்ஸ் சான்றிதழ் தந்துவிடுவார்.

காகிதங்களைச் சரிபார்த்து, விண்ணப்பத்தில் 5000 டாலருக்கு பர்லோ பெயருக்கு ஆயுள் காப்பீடு செய்யத் தேவையான தகவல்களை ஆன்சன் டைப் செய்தான்.

பிறகு, அடியில் உள்ள பிரதிகளில் 50,000 டாலருக்கு என்று டைப் அடித்தான்! அவர் எல்லாப் பிரதிகளையும் பார்க்கமாட்டார் என்று நம்பினான். அப்படிப் பார்த்துவிட்டால், டைப் தவறு என்று சொல்லிக் கொள்ளலாம்! பர்லோவுக்கு ஏதாவது ஏற்பட்டுவிட்டால் தொகை மனைவிக்குச் சேர வேண்டும் என்றும் டைப் அடித்தான்.

இப்போது ஐம்பதாயிரம் டாலர் தனக்காகக் காத்திருப்பதாக எண்ணி மகிழ்ந்தான்.

உடனே மெக்கிற்கு போன் செய்தான். அவள் எடுத்துப் பேசினாள்.

"எல்லா ஏற்பாடும் செய்துவிட்டேன். நம்ப வைத்துவிட்டேன் பார்த்தாயா?"

"ஆமாம்.. அவர் கையெழுத்துப் போட்ட பின் என்ன செய்வீர்கள்?"

"கையெழுத்துப் போடட்டும். அப்புறம் சொல்கிறேன்.. மெக்.. நாளை மறுநாள் வருவேன்.." என்றான்.

காலை. ஆறுமணிக்கு மேல் இருக்கும். பர்லோ சட்டென விழித்துக் கொண்டார். தலையணை நனைந்திருந்தது. தனிப்படுக்கை. என்றாலும் ஒரு இனிய பூஞ்சோலைக் கனவு அவருக்கு ஆறுதலாக இருந்தது.

அன்று வியாழக் கிழமை!

இன்று தோட்டக் கலை வகுப்பு இருக்கிறது. இன்று இரவு 'ஜேசன்ஸ் கிளென்' போக வேண்டும். இளம் பெண்களும், பையன்களும் காரில் வந்து, இரவுப் பொழுதை உல்லாசமாகக் கழிக்கும் தனி இடம் அது.. அதை நினைத்தபோது அவருக்கு

வியர்த்தது... வீட்டுக்குத் தெரியாமல் அங்கே வந்து கும்மாளமடிக்கும் பயல்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

காரில் அவர்கள் செய்யும் அட்டகாசங்கள், சிரிப்பொலிகள்- அவர் காதில் எதிரொலித்தது.

போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு எழுந்தார். எழுந்து போய்க் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தார். முகம் வெளிரிப்போயிருந்தது. பிறகு தன் பைஜாமாவிலிருந்து ஒரு சிறிய சாவியை எடுத்து கப்போர்டைத் திறந்தார். உள்ளே 38 துப்பாக்கி ஒன்று இருந்தது. அதனருகில் குளிக்கும் போது போட்டுக் கொள்ளும் வெள்ளைத்தொப்பியொன்று இருந்தது. தொப்பியை எடுத்தார். தலையில் போட்டு அழுத்தி விட்டுக் கொண்டார். இரண்டு ரப்பர் துண்டுகளை எடுத்தார். வாய்க்குள் போட்டு இரண்டு கன்னங்களிலும் அடக்கிக் கொண்டார். அவர் முகம் இப்போது முற்றிலும் மாறிவிட்டிருந்தது. தலை, வழுக்கைத் தலைபோல் தோன்றியது. முகம் உருண்டையாக மாறிவிட்டது. மறுபடியும் கண்ணாடியில் பார்த்துக் கொண்டார். ஆள், முற்றிலும் மாறி, வேறு ஆள் போலத் தோன்றியது! உடனே தன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, கண்ணாடியில் குறிபார்த்தபடி ரசித்துக் கொண்டார்!

மறுபடியும், எல்லாவற்றையும், ஷெல்பில் வைத்துப் பூட்டினார். பழைய முகம் திரும்பிவிட்டது. விசிலடித்தபடி பாத்ரூமுக்குள் நுழைந்தார்.

இருபது நிமிடம் கழிந்தபிறகு அறைக்குத் திரும்பி, உடையணிந்து கொண்டு, பழைய கப்போர்டைத் திறந்து, துப்பாக்கி, இரு ரப்பர் துண்டுகள், குளியல் தொப்பி ஆகியவற்றை எடுத்துக் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டு, மெக்கின் படுக்கை அறைக் கதவருகில் வந்து நின்றார். கதவில் காதை வைத்துக் கேட்டார்! பிறகு கீழே இறங்கிச் சென்றார்.

இதெல்லாம் தெரியாமல் மெக் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

வசதி இல்லாத இளம் காதலர்களுக்கு வசதியான இடம் 'ஜேசன்ஸ் கிளென்'. ஊரை விட்டு ஏகாந்தமான தனி இடத்தில் இருந்தது. காதலர்கள் தங்கள் கார்களில் வந்து, சுற்றுப்பக்க மரத்தடிகளில், புதர்களில், புல்வெளிகளில் அல்லது கார்களில் - இருளில் கூடிக் களித்து விட்டுப் போவார்கள்.

வியாழக் கிழமை இரவு. மழை தூறிக் கொண்டிருந்தது. ஒரு மரத்தடியில் இரண்டு கார்கள் மட்டுமே நின்று கொண்டிருந்தன. ஒன்று ஸ்போர்ட்ஸ் கார். இன்னொன்று பழைய பியூக்.

அடர்ந்த புதர் ஒன்றிலிருந்து பர்லோ அந்த இரண்டையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஒன்றிற்கொன்று ஐம்பது கஜம் தள்ளி நின்று கொண்டிருந்தன.

சட்டென்று ஒரு பெண்ணின் குரல்.

"ஜெப்: நீ என்ன செய்யறே? வேண்டாம்- தயவு செய்து வேண்டாம்!"

குரல் பியூக் காரிலிருந்து வந்தது.

பர்லோ, குளியல் தொப்பியை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டார். வழுக்கைத் தலைபோலத் தோன்றியது. ஒரு கருப்பு நண்டைப் போலத் தரையில் பதுங்கிப் பதுங்கி காருக்கருகில் சென்றார்.

அப்போது, ஸ்போர்ட்ஸ் காரிலிருந்து ஒரு குரல் கேட்டது "டேய்! அவள் அப்படித்தான் சொல்வாள். விட்டுவிடாதே!"

நண்பனின் உபதேசம்!

பர்லோவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. துப்பாக்கியை எடுத்துக் கொண்டார். "அசிங்கம் பிடித்த நாய்களே- பாடம் கற்றுக் கொடுக்கிறேன். பொறுங்கள்," என்று முணுமுணுத்தபடியே எழுந்து நடந்தார். சட்டெனக் கால்கள் வழுக்கின. தொப்பென சேற்றில் விழுந்தார். அப்போது அந்தப் பெண்ணின் அலறல் கேட்டது.

பர்லோ எழுந்து, துப்பாக்கி ஏந்தியபடி பியூக்கை நோக்கி விரைந்தார்!

ஆன்சன் பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தொலைபேசி அலறியது.

அன்னா போனை எடுத்தாள்.

ஆன்சன் அங்கிருந்து பார்த்தபோது, அன்னாவின் முகம் மாறுவது தெரிந்தது.

"ஆமாம்.. ஆமாம்.. இருக்கிறார். இருங்கள்.."

அன்னா, ஆன்சனிடம்," மட்டாக்ஸ்" என்றாள்!

ஆன்சனின் இதயம் நின்றுவிடும்போலிருந்தது! மட்டாக்ஸ் என்றால் ஆபத்து!

சட்டென போனை எடுத்தான். "ஆன்சன் பேசுகிறேன் சார்."

"நீ உடனே வா! நாளைக்கு உனக்கு என்ன வேலை?"

"வருகிறேன் சார்! விசேஷம் ஏதாவது?"

"வாய்யா.. நாளைக்கு வா!'

ரிசீவரை வைத்துவிட்டுக் குழம்பினான் ஆன்சன். என்னவாக இருக்கும்? அவன் முகம் பேயறைந்ததுபோல வெளுத்துவிட்டது.

அவன் மாற்றத்தைக் கண்டு அன்னாவே அதிர்ந்து போனாள்.

பர்லோவின் பாலிசி, 50,000 டாலருக்குக் கையெழுத்தாகி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி மூன்று நாட்கள் ஆகிவிட்டன.

இவ்வளவு சீக்கிரமாக மட்டாக்ஸ் ஏன் அழைக்கிறார்? கைகள் வியர்த்தன. அவற்றை பேன்ட் பாக்கட்டுக்குள் செருகிக் கொண்டான்.

"அவர் எதற்காக அழைத்தார்?" என்று அன்னா கேட்டாள்.

ஆன்சன் தன் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"தெரியவில்லை.. நான் எதற்குக் கவலைப்பட வேண்டும்," என்றான் சுதாரித்துக் கொண்டு.

ஆன்சன் ஏதோ வேலை பார்ப்பதுபோல் அதையும் இதையும் எடுத்துப் பார்த்தான். லேசான நடுக்கம். பர்லோ சாவதற்கு முன்னாலேயே மட்டாக்சுக்கு சந்தேகம் வந்துவிட்டதா?

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

பர்லோ சாவை நான் கடத்தினால் ஆபத்து. சட்டுப்புட்டென்று காரியத்தை முடித்துவிட வேண்டும்.. தாமதம் செய்யக் கூடாது.. மட்டாக்ஸை மறந்துவிடக் கூடாது..

# 5

மட்டாக்ஸின் செகரட்டரி ஷா டைப் அடித்துக் கொண்டிருந்தாள். ஆன்சன் உள்ளே நுழைந்ததும் சிரித்தபடி, "ஹலோ ஜான்! வாங்க! எப்படி இருக்கிறது வெளி உலகம்?" என்றாள். அவள் மிகவும் அன்பானவள். எல்லாருக்கும் உதவும் குணம் அவளுக்கு.

"நன்றாகவே இருக்கிறது. அவர் எதற்காக என்னை அழைத்தார்?" என்று கேட்டான், மட்டாக்ஸின் அறைக்கதவை சுட்டிக் காட்டி.

"ஒரு கார் விபத்து. கார் நொறுங்கிவிட்டது. பணம் கேட்கிறார்கள். கொடுக்கலாமா என்று உங்களைக் கலந்துபேசத்தான் வரச் சொல்லியிருக்கிறார்," என்றாள்.

ஆன்சன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். பயம் கலைந்தது.

"அந்தக் குடிகாரன் வோடெக்ஸ் கார் விபத்துதானே. பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்."

"அது சரிதான்," என்று சொல்லிவிட்டு, இன்டர்காமில், "ஆன்சன் வந்திருக்கிறார்," என்றாள். "வரச் சொல்!" என்றது கனத்த குரல்.

ஆன்சன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

ஒரு பெரிய மேசைக்குப் பின்னால், சிங்கம் போல மட்டாக்ஸ் அமர்ந்திருந்தார். அவர் டை தளர்த்தி விடப் பட்டிருந்தது. மேசை மேலிருந்த சாம்பல் கிண்ணத்திலி ருந்து சிகரட் புகை வந்து கொண்டிருந்தது. அந்த அறையில் நாற்காலிகள் தாறுமாறாகக் கிடந்தன. தலையைக் கோதிக் கோதி தலை மயிர் சிங்கத்தின் பிடரி மயிர்போலக் கலைந்து கிடந்தது. ஒரு பெரிய குத்துச் சண்டைப் பயில்வானைப் போல அவர் அமர்ந்திருந்தார்.

"வாப்பா! உட்கார். அந்தக் குடிகார நாய் வோடெக்ஸ், காரை மோதிவிட்டுப் பணம் கேட்கிறான்" என்று சொல்லிப் பின்னால் சாய்ந்து கொண்டார்.

இருபது நிமிடங்கள் அவர் சிங்கம் போல கர்ஜித்துக் கொண்டிருந்தார். ஆன்சன் பலவீனமான குரலில் பணிவாகப் பேசிக் கொண்டிருந்தான்.

கடைசியில், அவர் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு, "சரி. கொடுத்துத் தொலைக்கலாம். நாற்பதாயிரம் அப்பா! என்னை நீங்கள் தீர்த்துக் கட்டிவிடுவீர்கள். சே! " என்று சலித்துக் கொண்டார்.

"நான் என்ன செய்யட்டும் சார். பாலிசி எடுக்க வைப்பது என் வேலை. பணமும் நான்தானே வாங்கிக் கொடுக்க வேண்டி இருக்கிறது. வோடெக்ஸ் குடிகாரன் இல்லை என்றுதான் டாக்டர் ஸ்டீவன்ஸ் சான்றிதழ் கொடுத்தார். ஏதோ

எதிர்பாராமல் நேர்ந்து விட்டதுபோல் தோன்றுகிறது. நான் செய்வது பிடிக்கவில்லையென்றால் சொல்லுங்கள், மிஸ்டர் பர்ரோசிடம் பேசி விடுகிறேன்" என்றான் ஆன்சன்.

பர்ரோஸ், நேஷனல் இன்ஸ்யூரன்சின் தலைவர்!

"சரியப்பா! சரி! ஏன் ஆத்திரப்படுகிறாய்? நாற்பதாயிரம் அப்பா! கொஞ்சமா நஞ்சமா? குடிகார நாய்! சரி, தொழில் எப்படிப் போகிறது?"

"பரவாயில்லை சார். இந்த மாசம் கொஞ்சம் மோசம்."

"நன்றாகத்தான் இருக்கிறது உன்னைப் பற்றிய ரிப்போர்ட்—அப்புறம் அதென்ன பர்லோ என்கிற ஆள் ஐம்பதாயிரத்திற்கு பாலிசி எடுத்திருக்கிறான்? என்ன அவன் அவ்வளவு பெரிய ஆளா? யார் அவன்?"

"அந்த ஊரிலியே பெரிய தோட்டக் கலை நிபுணர். பெரிய ஆள்தான். அபாரமான தோட்டம் ஒன்று வைத்திருக்கிறார்."

"அது சரி. இவ்வளவு பெரிய தொகைக்கு ஏன் பாலிசி எடுக்க வேண்டும்?"

"இரண்டு வருஷம் கழித்து, நம்மிடம் கடன் வாங்கி, பெரிய அளவில் வியாபாரம் செய்யப் போகிறாராம்."

"நல்ல திட்டம்தான் ஆன்சன். நடுவில் செத்துத் தொலைத்தால் என்ன செய்வது? ஐம்பதாயிரம் கொட்டிக் கொடுக்க வேண்டுமே!"

"நல்ல திடகாத்திரமான ஆள். டாக்டர்—"

"நீயும் உன் டாக்டரும்! ஒரு குடிகாரனுக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தார் பாரு!"

மறுபடியும் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

"கடன் வாங்க, பாலிசி எடுத்திருக்கிறானா?"

"ஆமாம்! அப்படித்தான் சொன்னார்."

"தோட்டம் போடவா?"

"ஆமாம்"

"எவ்வளவு தொகை கேட்கப் போகிறானாம்?"

"தெரியவில்லை. நான் விசாரிக்கவில்லை."

"வாரிசு மனைவியா? என்ன வயசு அவளுக்கு?"

"இருபத்தேழு."

"எப்படி இருக்கிறாள்?"

"உருவத்தைக் கேட்கிறீர்களா? அழகாகத்தான் இருக்கிறாள். நான் அதிகம் பேசவில்லை. சந்தோஷமாகத் தான் குடும்பம் நடத்துகிறார்கள்."

"சரி பார்ப்போம்! நீ போகலாம்."

விட்டால்போதுமென்று வெளியேறினான் ஆன்சன்.

அவன் வெளியே போனதும் மட்டாக்ஸ், இன்டர்காமில் ஷாவைக் கூப்பிட்டார்.

"சார்! என்ன வேண்டும்?" என்றாள் அவள்.

"ஹெர்மாஸ் அங்கே இருக்கிறானா பார்!"

"கூப்பிடுகிறேன் சார்."

மூன்று நிமிடங்கள் கழித்து துப்பறிவாளன் ஹெர்மாஸ் அறைக்குள் வந்தான். நல்ல உயரமான, பலசாலியான ஆள். முப்பது வயதிருக்கும். முகம் கரடு முரடாக இருந்தது. மட்டாக்ஸின் முன்னாள் செயலாளர் ஹெலனின் கணவன் அவன்.

ஆன்சன் பர்லோவுக்கு எடுத்துள்ள பாலிசியை அவன் முன்னால் தள்ளி வைத்தார் மட்டாக்ஸ்.

அதைப் பார்த்த ஹெர்மாஸ், "ஆன்சன் புத்தி சாலித்தனமாகத்தான் வேலை பார்க்கிறார்," என்றான்.

"இல்லை. அப்படி நான் நினைக்கவில்லை. ஒரு ஸ்டோர் கிளார்க் ஐம்பதாயிரத்திற்கு இன்ஸ்யூர் செய்துகொள்வதா? என்னால் நம்ப முடியவில்லை. ப்ரூ டவுனுக்குப் போய் நன்றாக விசாரித்துப்பார். எனக்கு என்னவோ வாடை அடிக்கிறது. எதற்காக இவ்வளவு பெரிய தொகைக்கு? முதல் பிரிமியத்தை எல்லாரும் செக்காகக் கொடுக்க, இவன் ஏன் பணமாகக் கொடுக்கிறான்? போ! போய்க் கண்டு பிடி! அவன் மனைவியை முக்கியமாகக் கவனி.. " என்றார்!

ஆன்சன் சான்பிரான்சிஸ்கோவுக்குப் போய் விட்டுத் திரும்பியிருந்தான். படுக்கப் போகும் நேரம். அழைப்பு மணி அலறியது. கதவைத் திறந்தான்.

கருப்பு முக்காடிட்ட ஒரு பெண்!

சட்டென அவள் உள்ளே பாய்ந்தாள்! 'கதவைச் சாத்துங்கள்!' என்றாள் அவசரமாக!

"மெக்!"

அவள் தன் முக்காட்டை விலக்கினாள்.

"இந்த நேரத்தில் நீ ஏன் வந்தாய்?"

"வேறு வழியில்லை. பகல் முழுதும் போனில் தொடர்பு கொள்ள முயன்றேன். நீங்கள் கிடைக்கவில்லை."

"யாராவது பார்த்தால் என்ன ஆவது?"

"யாரும் பார்க்கவில்லை. என்னை சந்தித்ததில் உங்களுக்கு மகிழ்ச்சியில்லையா?"

அவள் அவனை நெருங்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

*அவன் கொஞ்சம் அமைதியடைந்தான்.*

*"நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் மெக். என்ன ஆயிற்று?"*

*"ஒன்றும் இல்லை. எப்போது என் கணவர் விஷயத்தை முடிக்கப் போகிறீர்கள்?"*

*"இப்படியெல்லாம் அவசரப்பட்டால் முடியாது. எல்லாம் கெட்டுப் போய்விடும். ஆபத்தில் மாட்டிக் கொள்வோம். ஏதாவது ஒரு வழி தோதாக அகப்படும். அப்போதுதான் செய்ய வேண்டும்."*

*"எவ்வளவு காலம்?"*

*"அவசரப் படாதே! ஐம்பதாயிரம்! மறந்துவிடாதே! பொறுமையாக இரு!"*

*"காலம் தாழ்த்தாதீர்கள் ஆன்சன். நான் புறப்படுகிறேன்."*

*"போகிறாயா? எதற்காக இவ்வளவு தூரம் வந்தாய்? ஏன் உடனே புறப்படுகிறாய்? இரு! இருந்துவிட்டுப் போ!"*

*"இல்லை போகவேண்டும். இன்றிரவு அவரது தோட்டக்கலை வகுப்பிற்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன். நான் உடனே போக வேண்டும்."*

*அவன் அவளைத் தழுவினான். அவள் அவனை விலக்கிவிட்டு வெளியே இருளில் விரைந்து, மறைந்தாள்.*

*அவள் காலடிச் சத்தம் மட்டும் கேட்டது.*

*ஆன்சனின் அறை உள்ள கட்டடத்திற்கு சற்று தூரத்தில் இருளில் ஒரு பியூக் கார் நின்று கொண்டிருந்தது.*

செய்லர் காரில் உட்கார்ந்தபடி சிகரட் பிடித்துக் கொண்டிருந்தான். தெருவையே பார்த்துக் கொண்டிருந்தன அவன் கண்கள்.

மெக், ஆன்சன் அறையை விட்டு வேகமாக அங்கேதான் வந்தாள். சட்டெனக் கதவைத் திறந்து அவன் அருகில் உட்கார்ந்து கொண்டாள்!

செய்லர் காரைக் கிளப்பினான்.

கார் விரைந்து கொண்டிருந்தது இருளில்.

"என்ன சொன்னான்?"

"நான்கைந்து மாதங்கள் ஆகுமாம்".

"மாசக் கணக்கா! உனக்கென்ன பைத்தியமா? வாரமா? மாதமா?"

"மாதங்கள். உடனே செய்தால் சந்தேகம் வந்துவிடுமாம்."

"அதெல்லாம் முடியாது. அவ்வளவு காலம் காத்திருக்க முடியாது. இந்த மாசக் கடைசியில் எனக்குப் பணம் வேண்டும்!"

"நான் பேசிப் பார்த்துவிட்டேன்– என்னால் இதற்குமேல் வற்புறுத்த முடியவில்லை– நீ பேசிப்பார்!"

செய்லர் திரும்பி அவளை முறைத்தான்!

"ஓகே பேபி! நான் பார்த்துக் கொள்கிறேன்"

அவன் கால்கள் பெடலை அழுத்தமாக மிதித்தன– கார் இருளைக் கிழித்துக் கொண்டு பாய்ந்தது!

பர்லோவின் வீட்டை அடையும் வரை இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

மெக் காரை விட்டிறங்கி வெளிக் கேட்டைத் திறந்தாள். செய்லர் காரை உள்ளே ஓட்டிச் சென்று ஷெட்டில் நிறுத்திவிட்டு, அதன் கதவைச் சாத்தினான். மெக் வீட்டுக்

கதவைத் திறந்தாள். இருவரும் உள்ளே சென்றார்கள். ஜன்னல் திரைகளை மூடிவிட்டு விளக்கைப் போட்டாள் மெக்.

செய்லர் கணப்பருகில் சென்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். அவன் நல்ல உடல் வலுவுள்ள முன்னாள் குத்துச் சண்டை வீரன். உருண்டு திரண்ட தோள்கள். அடிவாங்கி அடிவாங்கி மூக்கு மட்டும் சப்பையாக இருந்தது. தலை மயிரைக் குறுகலாக வெட்டிக் கொண்டிருந்தான். புருவத்தின் மீது ஒரு பெரிய வடு. அவனிடம் காணப்பட்டது, ஒரு மிருகத்தனமான கவர்ச்சி. அவன் அழகில், வலிமையில் வீழ்ந்து கிடந்தாள் மெக்.

அவள் உள்ளே இருந்து விஸ்கி எடுத்து வந்தாள். ஒரு டம்ளர் நிறைய ஊற்றி அவனிடம் கொடுத்தாள்.

"இத பார் மெக். அவனை இந்த மாதக் கடைசிக்குள் முடிக்கச் சொல்! எனக்குப் பணம் அவசரம். இல்லாவிட்டால் நாம் பிரிந்துவிடவேண்டும்," என்றான் செய்லர்.

" முடியாது செய்லர். அவனை உங்களுக்குத் தெரியாது. எனக்குப் பயமாக இருக்கிறது. என்னால் அவனை வற்புறுத்த முடியாது. உன் பேச்சைக் கேட்டு அந்த ஆளை இதில் இழுத்திருக்கவே கூடாது."

"வாயை மூடு! நான் சொன்னபடி செய்! இல்லாவிட்டால்..."

"அவனைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கிறது. பெட்ரோல் பங்க் கொள்ளையில் போலீசைக் கொன்றது அவன்தான்."

செய்லர் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"ஆன்சனா? கொலை செய்தானா? உளறாதே!"

"அவன்தான் செய்தான். எனக்கு நன்றாகத் தெரியும். அதுவும் பர்லோவின் துப்பாக்கியால்."

செய்லர் தன் தாடையைத் தடவிவிட்டுக் கொண்டான்.

"அதுதான் ஜோவின் கடனை உடனே தீர்த்துவிட்டானா? பணம் எங்கேயிருந்து வந்தது என்று யோசித்தோம். இப்போது புரிகிறது. கொலையே செய்துவிட்டானா!"

"ஆமாம். இதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது. பயங்கரமான ஆள். நாம் முன்பே சொன்னேனில்லையா? அந்த ஆளின் கண்களைப் பார்க்கப் பயமாக இருக்கிறது. அந்த ஆளை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கவே கூடாது."

"எல்லாம் சரியாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். பர்லோவை இன்ஸ்யூர் செய்வது என்பது உன்னோட யோச்னைதானே. இவன் இல்லாமல் எப்படி இன்ஸ்யூர் செய்ய முடியும்? அதனால்தான் அவனது எட்டாயிரம் கடனையும் வற்புறுத்தினேன். சரி- இன்னும் கொஞ்சம் ஊற்று", என்று காலி டம்ளரை அவளிடம் தந்துவிட்டு சோபாவில் உட்கார்ந்தான்.

அவள் டம்ளரை நிரப்பிக் கொடுத்தாள்.

"இன்னும் துப்பாக்கி அவனிடம்தான் இருக்கிறதா?"

"இல்லை. மறுநாளே திருப்பிக் கொடுத்துவிட்டான்."

அவன் விஸ்கியைக் குடித்தான்.

"சரி. எப்படியாவது உடனே செய்யும்படி அவனை வற்புறுத்த வேண்டும். ஜோ என்னைப் பங்காளியாகச் சேர்க்க ஒப்புக் கொண்டான். நான் உடனே பணம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு ஆளை சேர்த்துக் கொள்வான்... இருபத்தைந்தாயிரம் உடனே கொடுக்க வேண்டும்."

"முடியாது செய்லர். காத்திருக்கத்தான் வேண்டும்."

செய்லர் நெருப்பையே உற்றுப் பார்த்தபடி யோசனை செய்தான். மெக் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நானே பர்லோவை தீர்த்துக் கட்டிவிட்டால் என்ன? இன்ஸ்யூரன்ஸ் செய்தாகிவிட்டதல்லவா?"

முடியாது! நீங்கள் செய்ய வேண்டாம். நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நீங்கள் இதைவிட்டு விலகியிருப்பதே நல்லது. அதுதான் பாதுகாப்பானது. உங்கள் மேல் ஒரு சந்தேகமும் வராது. ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால், அவனே மாட்டிக் கொள்ளட்டும்."

"உடனே ஏதாவது செய்தாக வேண்டுமே. ஐந்து மாதம் என்னால் பொறுத்திருக்க முடியாது."

"யோசித்துப் பார்க்கிறேன்."

செய்லர் எழுந்தான். "உடனடியாக எப்படியாவது பணத்துக்கு ஏற்பாடு செய். இல்லாவிட்டால் நான் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான். எனக்கு உன்னுடைய ஐடியா எல்லாம் பிடிக்கவில்லை. நாம் பிரிந்துவிடுவதே நல்லது."

அவள் பதறிப்போனாள்!"நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்... அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! என்று கெஞ்சினாள்.

"எதையாவது உடனே செய்! சீக்கிரம்!"

"புறப்பட்டுவிட்டீர்களா செய்லர். நாம் சந்தித்து நீண்ட நாட்களாகிவிட்டன. இருங்கள். இன்று கணவர் வரமாட்டார்."

"எனக்கு வேலை இருக்கிறது. ஆன்சனிடம் பேசி உடனே சொன்னதைச் செய்!" என்று நகர்ந்தான்.

அவள் விரைந்து அவனைப் பிடித்தாள். அவன் அவளை உதறிவிட்டான்.

"கையை எடு! உடலை உபயோகிப்பதற்கு பதிலாக மூளையை உபயோகப் படுத்து. இந்த மாதக் கடைசியில் எனக்குப் பணம் வேண்டும். அவ்வளவுதான். இல்லாவிட்டால் என்னை மறந்து விடு! என்று சொல்லிவிட்டு, சட்டென வெளியேறினான்! போகும் போது வெளிக் கதவை படீர் என்று சாத்திவிட்டுப் போனான்!

மெக் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள். கார் சென்ற ஓசை மெல்லத் தேய்ந்து மறையும் வரை அப்படியே நின்று கொண்டிருந்தாள்... பிறகு விஸ்கியை எடுத்து டம்ளரில் ஊற்றிக் குடித்தாள்... காலி டம்ளரை எரியும் நெருப்பில் வீசினாள். பிறகு முழங்காலில் முகம் புதைத்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள்...

அவளுக்குப் பழைய நினைவுகள் வந்தன... மூன்று வருடங்களுக்கு முன் அவள் அவனைச் சந்தித்தாள். என்னவெல்லாம் நடந்துவிட்டது அதற்குப் பின்னால்.

அப்போது ஹாலிவுட் ரெஸ்டாரன்ட் ஒன்றில் வேலை பார்த்து வந்தாள். ஒரு நாள் செய்லர், தன் மானேஜருடன் அங்கே வந்திருந்தான். அப்போது செய்லர் குத்துச் சண்டை வீரன். தோற்றுப்போய் வந்திருக்கிறான். அவன் முகமெல்லாம் ரத்த காயம். எக்கச்சக்கமாகக் குடிக்க ஆரம்பித்தான். அப்போது அவனுக்கும், மானேஜருக்கும் பலத்த வாய்ச் சண்டை... அவன் மேல் பரிதாபப்பட்டதுதான் அவள் செய்த பெரிய தவறு.

அன்றிரவு அவனைத் தன் அறைக்கு அழைத்துப் போனாள். அப்படிப் பிறந்தது அவர்கள் நெருக்கம். அவன் எங்கும் போகாமல் அவள் அறையில் குடித்துக் கொண்டே காலத்தைக் கழித்தான். சாப்பாடு முதலிய எல்லாச் செலவுகளும் அவள் தலையில் விழுந்தது... கடைசியில் அவன் அவளை மிரட்டிப் பணம் பிடுங்க ஆரம்பித்தான்.

கடைசியில் அவன் மாமா வேலை பார்க்க ஆரம்பித்தான். அவளுக்கு வேலை போயிற்று. அவள் தெருவுக்குப் போனாள். அவள் தெருவில் அலைந்து ஆள்பிடித்து சம்பாதித்த காசை, அவன் சூதாடித் தொலைத்தான், குடித்துத் தீர்த்தான். அப்புறம் அவன் வேறு பெண்களை விரட்ட ஆரம்பித்தான்.

அந்த நெருக்கடிக் காலத்தில் ஒருநாள். ஒருவரிடமிருந்து பணம் திருடினாள்... மாட்டிக் கொண்டாள்... மூன்று மாதச்

றை. திரும்பி வந்தபோது செய்லரைக் காணவில்லை. அவள் லாஸ் ஏஞ்சலசை விட்டு சான் பிரான்சிஸ்கோ வந்தாள். பணமுடை. எப்படியோ ப்ரு டவுன் வரை வந்தாள். ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு கஷ்டப் பட்டாள். கொடிய குளிர். கம்பளித் துணிகள் இல்லை. அப்படிப்பட்ட ஒரு நாளில்தான் பர்லோவை சந்தித்தாள்.

வயதானவன் என்றாலும் அவனை வளைத்துப் போடவேண்டி இருந்தது. அந்தப் பழக்கம் தொடர்ந்தது. அவருக்கு யாரும் துணையில்லை... அடிக்கடி அவளை ரெஸ்டாரன்டுக்கு அழைத்துப் போய்ப் பேசுவார். அவள் உடல் நலம் கெட்டபோது அவர் உதவினார். கடைசியில் ஒரு நாள் பர்லோ கேட்டார்... "ஏன் தனியாகக் கஷ்டப் படுகிறாய்? என்னோடு வந்துவிடு!" என்றார்.

அவளுக்கப் பாதுகாப்பு தேவைப்பட்டது. அதனால் சம்மதித்தாள். திருமணம் செய்து கொண்டு அவர் வீட்டிற்கே போய் விட்டாள்... அப்புறம்தான் அவருடைய சுயருபம் தெரிந்தது. அவர் ஒரு 'பர்வர்ட்!' மனநோயாளி! அவளுடைய முதல் இரவிலேயே அவள் அவரை வெறுத்து ஒதுங்கிவிட்டாள். அன்று முதல் தனித்தனிப் படுக்கை ஆயிற்று!

அப்போது ஒருநாள் கடைவீதியில் செய்லரை அவள் சந்தித்தாள். பழைய கோபமெல்லாம் போய் அவனை வீட்டிற்கு அழைத்துப் போனாள். அப்புறம்தான் பர்லோவை இன்ஸ்யூர் செய்ய வைத்து, அவரைக் கொலை செய்துவிட்டுப் பணம் வசூலிக்கும் திட்டம் உருவாயிற்று... செய்லர்தான், ஆன்சனை அவளிடம் வரவழைக்க யோசனை சொன்னவன்.

கடைசியில் மறுபடியும் செய்லரின் பிடியில் அவள் வசமாக மாட்டிக் கொண்டுவிட்டாள்... ஆனால், அவன் இல்லாமலும் அவளால் வாழ முடியாது என்ற நிலை.

6 பர்லோ தன் படுக்கையறைக் கதவருகில் நின்றுகொண்டு இருந்தார். மணி இரவு ஒன்பதரைக்கு மேல் ஆகி விட்டது. அது ஒரு ஞாயிற்றுக் கிழமை இரவு.

கீழே, மெக் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும் ஓசை கேட்டது. சீக்கிரம் படுக்கப் போவதாகச் சொல்லிவிட்டு மாடிக்கு வந்திருந்தார் பர்லோ.

பர்லோ, குளியல் தொப்பியையும், ரப்பர் துண்டுகளையும், 38 கைத்துப்பாக்கியையும் எடுத்துத் தன் ஓவர் கோட்டுப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டார்.

சத்தமில்லாமல் கதவைத் திறந்து கொண்டு, மாடிப்படி இறங்கிக் கீழே வந்தார். காரை எடுத்தால் மெக்கிற்குத் தெரிந்துவிடும் என்று கால் நடையாகவே புறப்பட்டார். இருளில் அவர் நடந்து போனது 'கிளென்ஹில்' என்ற சிறிய குன்றின் உச்சிக்கு.

அங்கிருந்து பார்த்தால் கீழே, முழு ப்ரூ டவுனும் தெரியும். இரவு நேரத்தில் காதலர்கள் காரில் சந்திக்கும் மற்றொரு தனி இடம் அது. அங்கே ரெஸ்டாரன்ட் எதுவும் கிடையாது. விசாலமான தனி இடம் அது.

அதை அடைந்ததும், வழக்கம்போலப் புதரில் மறைந்து கொண்டு பதுங்கிப் பதுங்கி, நண்டு போல் நகர்ந்தார்.

ஒரே ஒரு கார் மட்டும் மரத்தடியில் அங்கே நின்று கொண்டிருந்தது. சற்று நேரத்தில் பல கார்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சேர்ந்துவிடும்.

அந்தத் தனிக் காரிலிருந்து நடன இசை வழிந்து கொண்டிருந்தது... காரில் இரண்டு காதலர்கள்... பர்லோ தொப்பியை எடுத்துத் தலையில் போட்டு நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டார். ரப்பர் துண்டுகளைக் கடைவாயில் அடைத்துக் கொண்டார். துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டார். பிறகு, காரை நோக்கி நகர்ந்தார்.

அவர் நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. இந்தத் தடவை, வெறும் பார்த்து ரசிக்கும் ஆளாக இருக்கப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

மறுநாள் காலை தன் அலுவலகத்தில் ஆன்சன் அவசரமாகப் ப்ரூ டவுனுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது, தொலைபேசி அலறியது. அன்னா போனை எடுத்தாள்.

"ஆமாம். இருக்கிறார். யார் பேசுவது?... சார்! மிஸஸ் தாம்சன், உங்களோடு பேச வேண்டுமாம்," என்றாள் ஆன்சனிடம்.

பொறுமையிழந்தவனாய் ஆன்சன் தன் மேசை மேலிருந்த போனை எடுத்தான்- "யெஸ். ஜான் ஆன்சன் பேசுகிறேன்."

"ஜான்! நான் தான்!"

ஆன்சனுக்கு 'திக்' கென்றது! மெக் பேசுகிறாள். ஆன்சன் அன்னாவின் பக்கம் பார்த்தான். அவள் டைப் அடிக்க ஆரம்பித்துவிட்டாள்.

"என்ன மிஸஸ் தாம்சன்?"

"ஜான் உடனே உங்களைப் பார்க்க வேண்டும். ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்டது!"

ஆன்சனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"உடனே சந்திக்க வேண்டும். இன்றிரவு வரவேண்டும்," என்றாள் அவள் நடுங்கும் குரலில்!.

"பாருங்கள் அம்மா. எனக்கு அவசர வேலை இருக்கிறது. நான் சந்திக்க முயற்சி செய்கிறேன்-" என்று போனை வைத்து விட்டு,' அன்னா, நான் நாளை காலையில்தான் அலுவலகம் வருவேன். பார்த்துக் கொள்,"என்று சொல்லி, வெளியேறினான்.

காரை எடுத்துக் கொண்டு சென்று ஒரு மருந்துக் கடை அருகில் நிறுத்தி, இறங்கினான் கடையில் ஷேவிங்லோஷன் வாங்கினான். அப்போது, "ஹலோ ஜானி... ரொம்ப நாளா உங்களைக் காணோமே" என்ற குரல் கேட்டது.

லாலி அருகில் நின்று கொண்டிருந்தாள். பழைய காதலி ஒரு காலத்தில் அவனுக்குக் கவர்ச்சிக் கன்னியாக இருந்தவள். இப்போது வெறுத்துவிட்டது.

"லாலி. நான் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"இன்று இரவு சந்திக்கலாமா?" என்றாள் லாலி.

"முடியாது போலிருக்கிறது. நான் சீக்கிரம் உனக்கு போன் செய்கிறேன்..."

அவன் நகர்ந்தான். "வாரா வாரம் சந்தித்தோம். என்னை மறந்துவிட்டீர்களா?" என்றாள் லாலி ஏமாற்றத்துடன்.

" பொறுத்துக் கொள் லாலி. வேலை அதிகம்." என்று நகர்ந்தான். சட்டென்று காரை நோக்கி விரைந்தான். காரை ஸ்டார்ட் செய்யும்போது திரும்பிப் பார்த்தான். அவள் ஏமாற்றத்துடன் கடையில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

ஆன்சன் நேராக ஒரு ரெஸ்டாரன்டுக்குப் போனான். காலைச் சிற்றுண்டிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருந்தபோது வழக்கமாகப் பெட்ரோல் பிடிக்கும் பங்க் கிளார்க் டேவிஸ் உள்ளே வந்தார். ஆன்சனைக் கண்டதும் அவன் எதிரில் வந்து அமர்ந்தார்.

டேவிஸ் நடுத்தர வயதுக்காரர் எல்லாரிடமும் கலகலப்பாகப் பேசக் கூடியவர்.

" இந்த ஊருக்கு என்ன வந்ததென்று தெரியவில்லை ஜான். பத்து நாளில் இரண்டு கொலைகள்! போலீஸ் சரியில்லை. இதையெல்லாம் உடனடியாக நிறுத்த வேண்டும்," என்றார்.

ஆன்சன் புதிருடன் அவரைப் பார்த்தான்.

"இரண்டு கொலைகளா? விளங்கவில்லையே!" என்றான்.

"பத்திரிகை பார்க்கவில்லையா ஜான்?"

"இல்லையே. என்ன விஷயம்? "

" செக்ஸ் கிரைம் அப்பா! நேற்றிரவு கிளென் ஹில்லில் இரண்டு இளம் காதலர்கள் தனிமையில் இருக்கும்போது, ஒரு ஆள், அந்த இளைஞனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு, அவளைக் கற்பழித்திருக்கிறான். என்னப்பா இது! போலீசுக்கு ஒரு தடயமும் கிடைக்கவில்லையாம்! பெட்ரோல் பங்க் கொள்ளை கொலையை அடுத்து இது. இன்ஸ்பெக்டர் ஜென்சன் திணறுகிறார்."

"பெட்ரோல் பங்க் விஷயமாக ஒன்றுமே தெரியவில்லையா?" என்றான் ஆன்சன்.

"இல்லை. என்னப்பா இது! எனக்கும் வயதுக்கு வந்த ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயமாக இருக்கிறது. ஒருத்தியைக் கற்பழித்தவன் அத்தோடு சும்மா இருப்பானா, சொல்!"

'ஆமாம்' என்றான் ஆன்சன். அவன் நினைவு அங்கே இல்லை. என்னவோ அசம்பாவிதம் நடந்தது என்றாளே மெக். அதற்கும் அவளுக்கும் என்ன தொடர்பு. ஏன் பதற்றப்பட்டுப் பேசினாள் என்று குழம்பினான் ஆன்சன்...

மெக் கதவைத் திறந்தாள். ஆன்சன் உடனே, "ஏன் ஆபீசுக்குப் போன் செய்தாய்? கூடாது என்று சொல்லவில்லையா?" என்று கேட்டான்.

"என்ன செய்வது! உடனே உங்களைப் பார்க்க வேண்டி இருந்தது," என்று உள்ளே நகர்ந்தாள் அவள்.

உள்ளே சென்று, கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டுக் கணப்பின் முன்னால் போய் அமர்ந்தான். அவளும் அருகில் வந்து அமர்ந்தாள்.

"என்ன விஷயம்?"

"ஜான்– நம் திட்டம் நடக்காதுபோல் தோன்றுகிறது. நாம் அதை அப்படியே விட்டுவிடுவோம்," என்றாள்.

"என்ன உளறுகிறாய்?"

"ஆமாம். நாங்கள் இந்த மாதக் கடைசியில் பிளாரிடா போகப் போகிறோம். அவர் நேற்றிரவு சொன்னார்."

"பிளாரிடாவுக்கா! என்ன சொல்கிறாய் நீ?"

யாரோ ஹெர்மன் என்பவர் அங்கே ஒரு பெரிய பூந்தோட்டம் அமைக்கிறாராம். இவரை அதில் பார்ட்னராக சேர்த்துக் கொள்ளப் போகிறாராம். அதனால், அங்கேயே போய்விடலாம் என்கிறார்."

ஆன்சன் சட்டெனத் தளர்ந்து போனான். சோபாவில் சாய்ந்து கொண்டு யோசித்தான். பிறகு இந்த மாதக் கடைசியிலா? " என்று கேட்டான்.

"ஆமாம். வேலை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டார். இன்ஸ்யூரன்சையும் ரத்து செய்துவிடப் போவதாகச் சொன்னார். அவருக்கு இனி முதலீடு தேவையில்லை என்கிறார்."

"நீயும் அவருடன் போய் விடுவாயா?"

"ஜான்– நான் வேறு என்ன செய்யமுடியும்?"

அவள் போய்விடுவாள் என்பது அவனுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவளை இழுத்து அணைத்தான். அவனை விலக்கி விட்டு எழுந்து அறையில் அங்கும் இங்கும் நடந்தாள்.

"இதற்குத்தான் போன் செய்தேன். நாங்கள் போவதற்குள் அதைச் செய்துவிட்டால்தான் நமக்குப் பணம் கிடைக்கும்," என்றாள் மெக்!

"யோசிக்கிறேன்... பார்ப்போம்! இன்னும் பதினெட்டு நாள்கள்தான் இருக்கின்றன."

மெக் அவனை வளைத்துவிட்டாள். அவள் சொன்னதெல்லாம் பொய் என்பதை அவன் அறியவில்லை.

மெக்! நான் இன்றிரவு இங்கே தங்கலாமா?" என்று ஆன்சன் கேட்டான்.

"தாராளமாக!" என்று சொல்லிவிட்டு, அவன் அருகே வந்து அமர்ந்து தழுவிக் கொண்டாள் மெக்!

**ப**டுக்கையில் படுத்தபடி உறக்கம் பிடிக்காமல் யோசித்துக் கொண்டிருந்தான் ஆன்சன். நேரம் இரவு மூன்று மணி. நிலா வெளிச்சம் படுக்கையில் விழுந்து கொண்டிருந்தது. மெக் ஆடையில்லாமல் பக்கத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

சட்டென ஆன்சனின் மனதில் ஒரு யோசனை மின்னல் வெட்டுப்போலப் பளிச்சிட்டது. டேவிஸின் பேச்சு ஞாபகத்திற்கு வந்தது. 'எனக்கும் வயது வந்த ஒரு மகள் இருக்கிறாள்- அவளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயமாக இருக்கிறது' என்று டேவிஸ் சொன்னது காதில் எதிரொலித்தது. 'ஒருத்தியைக் கற்பழித்தவன் அத்தோடு சும்மா இருப்பானா?'

ஆம். சும்மா இருக்க மாட்டான்!

சட்டென அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

" மெக்! " என்று அவளை எழுப்பினான்.

அவள் புரண்டு படுத்து நெளிந்தாள்.

"எழுந்திரு மெக்! உன்னோடு பேசவேண்டும்," என்று அவசரப்படுத்தினான் அவன்.

அவள் தூக்கம் கலையாமல் முனகினாள். அவன் மறுபடியும் அவளை உலுக்கினான்.

" என்ன இது? "

" எழுந்திரு. நேற்றைய பத்திரிகை இருக்கிறதா? "

" பேப்பராம்- கீழே இருக்கும். "

" எழுந்திரு! போய் பேப்பரை எடுத்து வா! கொஞ்சம் காபி தயார் செய்! எனக்கு ஒரு ஐடியா கிடைத்துவிட்டது! "

அவள் எழுந்தாள். ஒரு துணியை எடுத்து உடலில் சுற்றிக் கொண்டு, தள்ளாடியபடிக் கீழே இறங்கிப் போனாள்.

"சீக்கிரம்" என்று கத்தினான் ஆன்சன்.

அவன் விளக்கைப் போட்டுவிட்டுப் பொறுமையுடன் காத்திருந்தான். சற்று நேரம் கழித்து காபியும், பத்திரிகையுமாக அவள் வந்தாள்.

பத்திரிகையை வெடுக்கென எடுத்துப் படிக்க ஆரம்பித்தான் ஆன்சன். அவள் காபியைக் கப்பில் ஊற்றி அருகில் வைத்தாள்.

"என்ன விஷயம்? என்ன ஐடியா?"

அமைதியாக இரு என்று சைகை செய்துவிட்டு அவன் படித்துக் கொண்டிருந்தான். அவள் காபி குடித்தபடி படுக்கையில் அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்கள் கழிந்த பிறகு, அதன் பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, காபி கப்பைக் கையில் எடுத்தான்.

"எனக்கொரு யோசனை தோன்றியிருக்கிறது. இதைப்பார்' என்று பத்திரிகைத் தலைப்பைக் காட்டினான்.

அவள், "புரியவில்லையே" என்றாள்.

"இந்த ஜேசன்ஸ் கிளென் கொலையைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம். அந்தக் கொலைகாரன் உங்களைத் தாக்கப் போகிறான். பர்லோவைக் கொல்லப் போகிறான். உன்னைக் கற்பழிக்கப் போகிறான். மட்டாக்ஸ் இதில் மறுப்புச் சொல்லவே வழியில்லை"

மெக் திருதிருவென்று விழித்தாள்...

"என்ன சொல்கிறீர்கள்...?"

"பார்! இரவில் காதலர்கள், தம்பதிகள் தனியாகப் போக வேண்டாமென்று போலீஸ் எச்சரித்திருக்கிறது... கொலைகாரனைப் பற்றிக் கற்பழிக்கப்பட்ட பெண் அடையாளம் சொல்லியிருக்கிறாள்... படித்தாயா? கருப்புக் கோட்டு, தொப்பியணிந்தவன். அவள் போராடும்போது தொப்பி கீழே விழ வழுக்கைத் தலையென்று தெரிந்திருக்கிறது. அந்த ஆள் தான் பர்லோவைக் கொல்லப் போகிறான்... இதுதான் அருமையான வழி..."

அவளுக்கு விஷயம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது.

"இந்த மாதக் கடைசியில் முதல் திருமணநாள் வருகிறதல்லவா? அது எப்போது?"

"வரும் வெள்ளிக்கிழமை."

"அன்றைக்கு எப்படியாவது அவரை சரிக்கட்டி அங்கே அழைத்துப் போய்விடு. நான் அங்கே காத்திருக்கிறேன்!"

"அப்புறம்?"

"படித்துப் பார் நடந்ததை- அது மறுபடியும் நடக்கும்".

"நீங்கள் அவரை சுடப்போகிறீர்களா?"

"அதுமட்டுமல்ல, உன்னையும் தாக்கப்போகிறேன். சும்மா கிடைக்குமா ஐம்பதாயிரம். கொஞ்சம் காயமெல்லாம் பட்டுத்தான் ஆக வேண்டும். எந்த நிலையில் கிடந்தாய் என்பது மிகவும் முக்கியம். போலீஸ் நம்பவேண்டும். இன்ஸ்யூரன்ஸ் கம்பனி நம்ப வேண்டும். அப்புறம் நீ இதில் கண்டுள்ள அடையாளங்களைச் சொல்ல வேண்டும்.. எப்படி?"

"ஜான்.."

"வீணாக விவாதம் செய்யாதே! இது ஒன்றுதான் இப்போது எதிர்பாராமல் கிடைத்த ஒரே வழி. வேறு வழியில் நான் இறங்கினால் மட்டாக்ஸ் கண்டு பிடித்துவிடுவார். இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன. நன்றாகத் திட்டமிடலாம்."

"ஜான்... நான் சொல்வதைக் கேளுங்கள்... நல்ல யோசனைதான். மழை வந்துவிட்டால். அவர் வர மறுத்துவிடுவாரே!"

"மழை வாராது என்று நம்ப வேண்டியதுதான். அப்படி வந்து விட்டால் அது இந்த வீட்டில் வைத்து நடக்கும். யாரோ கதவைத் தட்ட, அவர் எழுந்து போய்க் கதவைத் திறக்க, துப்பாக்கிச் சத்தம் கேட்டு நீ போக, அவன் உன்னைத் தாக்க.. அப்படிக் கதை மாறிவிடும். அவ்வளவுதான்."

"உண்மையான கொலைகாரன் வரும் வெள்ளிக்கிழமைக்குள் பிடிபட்டுவிட்டால்?"

"ஆமாம். அப்படியும் நடந்துவிடலாம். யோசிக்க வேண்டிய விஷயம்தான். சரி பார்ப்போம். இப்போதைக்குத் திட்டமிடுவோம். பழைய யோசனைப்படி செய்வோம். நீ இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் மருத்துவ நிலையத்தில் மயக்கத்தில் இருப்பாய். விழித்தாலும் பேசாதே. என் வாடிக்கையாளரின் மனைவி என்கிற முறையில் நான் மலர்களை அனுப்பி வைப்பேன். அதைப் பார்த்து, பிறகு நீ அடையாளம் சொல்ல வேண்டும். நான், அவன் கைதாகிறானா என்று கவனித்துக் கொண்டே இருக்கிறேன். உனக்கு இளம்சிவப்பு

மலர்கள் வந்தால் அவன் கைதாகிவிட்டான் என்று அர்த்தம். கைதாகவில்லையென்றால் சிவப்புரோஜாக்களை அனுப்புகிறேன். மலர்கள் பார்த்த பிறகுதான். நீ வாயைத் திறக்க வேண்டும்."

"அவன் கைதாகிவிட்டால், என்ன அடையாளம் சொல்வது?"

"வேறு ஏதாவது குழப்படியாக அடையாளம் சொல்லி விடு. இருட்டில் சரியாகத் தெரியவில்லை என்று சொல்லிவிடு! இதை நன்றாகப் படித்துப் பார். அந்தப் பெண்ணைக் காட்டிற்குள் விரட்டிச் சென்று அடித்து, பிறகு கற்பழித்திருக்கிறான்.. நானும் அப்படியே செய்ய வேண்டும். நாடக மாட முடியாது மெக்! மட்டாக்ஸுக்கு சரியான டாக்டர் ரிப்போர்ட் வேண்டும். அவர் நம்ப வேண்டும். யோசித்துச் சொல். செய்யலாமா வேண்டாமா?"

மெக் எழுந்து சென்று ஜன்னலருகில் நின்றாள். இருளை வெறித்துப் பார்த்தாள். ஒரு நடுக்கம் உடலில் ஏற்பட்டது. செல்லரை நினைத்தாள். பணம் தயாரிக்காவிட்டால் அவனை இழந்துவிட வேண்டிவரும். அவனை மறுபடியும் பார்க்க முடியாது. அதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை! அவன் கொடுக்கும் இன்பத்தை யாராலும் கொடுக்க முடியாது!

ஜன்னல் கதவை மூடிவிட்டுத் திரும்பினாள்.

"சரி" என்றாள்.

"வரும் வியாழன் இரவு சந்திப்போம்" என்று அவன் புறப்பட எழுந்தான்.

ஆன்சனின் அலுவலகம் உள்ள கட்டடத்தின் இரவுக் காவல்காரன் ஜோன்ஸ். ஆன்சன் லிப்டில் கீழே இறங்கி வந்த போது, ஜோன்ஸ் தன் காவல் அறையிலிருந்து வெளிப்பட்டான்.

"வணக்கம் ஐயா. இன்று இரவு அறையில் வேலை செய்யப் போகிறீர்களா?"

"ஆமாம் ஜோன்ஸ். ஆனால், நீ கவலைப்படாதே. நான் வெளியில் போய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு பதினோரு மணிக்குத் திரும்பி விடுவேன். அறையில் விளக்கு எரிவதைப் பார்த்துத் திருடன் என்று நினைத்துவிடாதே."

"சரி. ஐயா."

ஆன்சனைப் பற்றி ஜோன்சுக்குத் தெரியும். எப்போதாவது இரவில் பெண்களைக் கூட்டி வருவான். ஜோன்ஸ் கண்டும் காணாமல் இருந்துவிடுவான். கிறிஸ்துமஸ் சமயத்தில் கணிசமாக அன்பளிப்புக் கொடுத்துவிடுவதால் எல்லாம் சரியாகி விடுகிறது.

புறப்படும்போது ஐந்து டாலர் நோட்டை அவன் கையில் திணித்துவிட்டுப் புறப்பட்டான் ஆன்சன்.

ரெஸ்டாரன்டுக்குப்போய் சாப்பிட்டுவிட்டு, அலுவலக அறைக்குத் திரும்பினான்.

ஆன்சன் டைப்ரைட்டரில் காகிதங்களைச் செருகினான். டேப்ரிகார்டரை ஆன் செய்து, மைக்கை டைப்ரைட்டர் அருகில் வைத்துவிட்டு, டைப் செய்ய ஆரம்பித்தான்! அந்த ஒலி பதிவாகிக் கொண்டிருந்தது. ஒரு மணிநேரம் அப்படித் தாறுமாறாக எதையோ அடித்து ஒலிப்பதிவு செய்து முடித்தான்!

அப்போது ஜோன்ஸ் தன் அறைப்பக்கமாக நடந்து போவது கேட்டது. இரவு மணி, பத்தைத் தாண்டியிருந்தது. அவனுக்குக் கேட்கும்படியாக பலமாக டைப் அடித்தான் ஆன்சன். அடுத்த மாடிக்கு அவன் லிப்டில் போகும் சப்தம் கேட்டதும் நிறுத்திவிட்டான்.

டேப்பை எடுத்து மேசை டிராயரில் வைத்துப் பூட்டிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

லாலி, சாச்சா கிளப்பின் பாரில் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அரை மணிநேரமாக விஸ்கியை நிதானமாகக் குடித்துக் கொண்டிருந்தாள். எவனையும் காணோம். அப்போது பெரில் உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்க்க லாலிக்கு சந்தோஷமாக இருந்தது. அவள் காதில் வைரக் காதாணி மின்னியது. அவள் லேவா தேவிக்காரன் ஜோவின் காதலி.

அவள் ஹலோ சொல்லி லாலியிடம் வந்து அமர்ந்து அரட்டை அடித்தாள் ஜோ அங்கே வருவார் என்று சொன்னாள்.

"என்ன ஜான் ஆன்சனுடன் உன்னை அடிக்கடி பார்க்க முடிவதில்லையே," என்றாள் பெரில்.

"அவன் ஒரு தரித்திரம். அவன் கூடப் போனால், என்ன கிடைக்கும்," என்றால் லாலி.

"அட, என்ன அப்படிச் சொல்கிறாய். அவன் இப்போது வசதியாகிவிட்டான். கடனை எல்லாம் அடைத்துவிட்டானாம். ஜோ சொன்னார். அவனிடம் காசு புரள்கிறது லாலி. ஒருவேளை வேறு எவளையாவது பிடித்துக் கொண்டானோ என்னவோ?" என்றாள் பெரில்.

சில நிமிடங்களில் கிளம்பிப் போய்விட்டாள், லாலியைக் கிளப்பிவிட்டுவிட்டு!

ஆன்சனின் கடன் விஷயம் அவளுக்குத் தெரியும். ஆயிரம் டாலர் கடனை எப்படி அடைத்தார்? அவரிடம் எப்போதும் பஞ்சப்பாட்டுதானே கேட்டிருக்கிறோம் என்று யோசித்தாள் லாலி.

எவ்வளவு நேரம் அங்கேயே காத்துக்கிடப்பது. எழுந்து இருண்ட தெருவுக்கு வந்தாள்.

ஒரு நடுத்தர வயது மனிதன் இருளிலிருந்து வெளிப்பட்டான்.

"ஹலோ, பேபி! நான் ஒரு குறும்புக்காரப் பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அது நீதானா?" என்றான்.

'ஆமாம். அது நான் தான்', என்று அவனை நெருங்கினாள் லாலி. அது பர்லோ!

தொலைபேசி அலறியது. செய்லர் விழித்துக் கொண்டான். திட்டிக் கொண்டே போனை எடுத்தான். அவன் பக்கத்தில் யாரோ ஒரு சிவப்புக் கூந்தல்காரி படுத்திருந்தாள்.

"யாரது?"

"ஜெர்ரி- நான் தான் மெக்!"

"ஏன் தூக்கத்தைக் கெடுக்கிறாய்? வீட்டிற்கு நெருப்புப் பிடித்துவிட்டதா?"

"ஆன்சன் அதை செய்ய முடிவு செய்துவிட்டான். உங்களை உடனே பார்க்க வேண்டும்."

"எப்போது செய்யப் போகிறான்?"

"வெள்ளிக் கிழமை. வியாழக்கிழமை இங்கே வரப்போகிறான், திட்டம் போட. அதற்கு முன்பு நாம் சந்திக்க வேண்டும்."

"சரி நாளைக்கு சந்திப்போம்."

"யாரு?" என்றாள் பக்கத்தில் படுத்திருந்தவள் விழித்துக் கொண்டு!

"எங்க அம்மா. சும்மா இரு!" என்று அதட்டினான் செய்லர்!

*மட்டாக்ஸ் கையில் ஒரு பாலிசியை வைத்துக் கொண்டு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தபோது, செயலாளர் ஷா உள்ளே நுழைந்தாள்.*

*"சார். நீங்கள் பிஸியாக இருந்தால் அப்புறம் வருகிறேன்," என்று நகர்ந்தாள் ஷா. 'இரு இரு' என்றார் மட்டாக்ஸ்.*

*"இதைப் பாருங்கள்! பர்லோ என்ற ஆளுடைய பாலிசி. தோட்டக் கலை நிபுணராம். விசாரிக்கச் சொன்னேன். ரிப்போர்ட் வந்திருக்கிறது. உங்களுக்குச் சுவையாக இருக்கும்," என்று காகிதங்களை நீட்டினாள் ஷா.*

*"ஆமாம். தோட்டக் கலை பர்லோ. நான்தான் விசாரிக்க அனுப்பினேன். நீ படித்துவிட்டாயா?"*

*"ஆமாம் சார்! அறிக்கை அவரைப் பற்றியல்ல. அவர் மனைவியைப் பற்றியது. அந்த பர்லோ வெற்று ஆள்.. ஆனால் அவள் 'ஓ லா-லா'!" என்றாள் ஷா.*

*"அதென்ன 'ஓ லா, லா'?"*

*"படித்துப் பாருங்கள் புரியும்!" என்று காகிதங்களை அவர் மேசைமேல் வைத்தாள் ஷா!*

**7** *வியாழக்கிழமை காலை, லாம்ஸ்வில்லி சென்று மின்சாதனங்கள்விற்கும் கடையில் டைம் ஸ்விட்ச் கடிகாரம் ஒன்று வாங்கினான்ஆன்சன். அதை எந்த மின் சாதனத்தோடு பொருத்தி விட்டாலும், குறிப்பிட்ட நேரத்தைத் திருப்பி வைத்துவிட்டால், அந்த நேரத்திற்கு அந்த மின் சாதனம் இயங்க ஆரம்பித்துவிடும்.*

*தினசரி காலையில் குறிப்பிட்ட நேரத்திற்குத் தண்ணீர் கொதிக்க வைக்க அதை வாங்குவதாகச் சொல்லி வாங்கி வந்தான்.*

பகல் உணவின் போது ப்ரூடவுன் கெஜட் பத்திரிகை வாங்கினான். பிறகு ஒரு பாருக்குப் போனான். அங்கே அந்தப் பத்திரிகையின் நிருபர் ஜெப் பிரிஸ்பீயும் இருந்தான். இருவரும் பேசிக் கொண்டே மதுவருந்தினார்கள்.

"இரண்டு கொலைகள் அடுத்தடுத்து நடந்துவிட்டதால் ஏகப்பட்ட வேலை. அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கிறேன்," என்றான் பிரிஸ்பீ.

"இதுவரை ஒன்றையுமே கண்டு பிடிக்கவில்லையா?" என்று ஆன்சன் கேட்டான்.

"இன்ஸ்பெக்டர் பாவம் அலைகிறார். சார்ஜன்டைக் கொலை செய்தவன் உள்ளூர்க்காரன் அல்லவென்றும், மற்ற கொலைகாரன் உள்ளூர்க்காரனாகத்தான் இருக்க வேண்டும் என்றும் அவர் உறுதியாகக் கூறுகிறார்."

"ஏன் அப்படி நினைக்கிறார்?"

"கிளென் ஹில் சமாச்சாரமெல்லாம் உள்ளூர்காரர் களுக்குத்தான் தெரியும். அந்த இடமே புதிய ஆட்களுக்குத் தெரியாது என்பது அவர் கருத்து".

"வழுக்கத்தலை ஆள்தானே செய்தது?"

"ஆமாம்."

"வழுக்கத் தலையர்களைத் தேடுவது சிரமமான காரியம்தான்."

"ஆமாம். ஒரு வேளை உன் தலை மாதிரி மஞ்சள் நிற முடி நிலா வெளிச்சத்தில் வழுக்கை போலத் தெரிந்திருக்கலாம். ஆமாம், அன்று இரவு நீ எங்கே இருந்தாய் ஆன்சன்?"

ஆன்சன் சிரித்தான். கண்களைச் சிமிட்டினான்.

"அதெல்லாம் ரகசியம் சொல்ல முடியுமா?" என்றான்.

"அந்த ஆளுக்கு ஐம்பது வயது இருக்கும் என்றும், குள்ளமான தடியான வழுக்கைத் தலையின் என்றும், கற்பழிக்கப்பட்ட பெண் தெளிவாகச் சொல்லிவிட்டதால், எப்படியும் கண்டு பிடித்துவிட முடியும்", என்று சொல்லிவிட்டு, மதுவைக் குடித்து முடித்துவிட்டு ஆன்சனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான் பிரிஸ்பீ.

அவன் போன பிறகு ஆன்சன் நிம்மதியாக அமர்ந்து யோசித்தான். பர்லோவை தீர்த்துக் கட்டுவதற்கு முன் கொலைகாரன் கிடைக்காமல் இருந்தால், எல்லாம் திட்டமிட்டபடி முடித்துவிடலாம் என்று நினைத்தான்.

அன்று மாலை ஏழரை மணிக்கு பர்லோவின் வீட்டிற்குச் சென்றான். காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு, அழைப்பு மணியை அடித்தான். உடனே மெக் கதவைத் திறந்தாள்.

அவள் பின்னால் ஹாலுக்குள் சென்றான். விளக்கு வெளிச்சத்தில் அவள் முகம் வெளுத்திருப்பதைக் கவனித்தான். கண்களைச் சுற்றிலும் கருவளையங்கள். நல்ல உறக்கமில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

"ஏன், என்ன ஆயிற்று? ஏன் இப்படி சோர்வாக இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"நீங்களா இப்படிக் கேட்கிறீர்கள்? என்னால் தூங்க முடியுமா? கொலை செய்யப் படப் போகிற ஆளை வைத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்க முடியுமா? உங்களால் அப்படி இருக்க முடியுமா?"

"வேறு வழியே கிடையாது. செய்துதானே ஆகவேண்டும்?"

அவள் தளர்ந்துபோய் சோபாவில் அமர்ந்து கைகளைப் பிசைந்துகொண்டிருந்தாள்.

"நாளைக்கு இரவு அது நடக்கப் போகிறது என்பதை என்னால் நம்பவே முடியவில்லை."

"எல்லாம் உன் தைரியத்தில்தான் இருக்கிறது," என்று அவள் அருகில் சென்று அமர்ந்தான்." நாளைக்கு எப்படியும் அவரை அங்கே அழைத்து வந்துவிடு. மழையும் இல்லை. நாளைக்கும் வராது," என்றான்.

மெக் இருப்புக் கொள்ளாமல் நெளிந்தாள்.

"சரி- அவரை நான் அங்கே அழைத்து வந்துவிடுகிறேன். நாங்கள் கோர்ட்ரோடில் டின்னர் சாப்பிடுகிறோம்- அதற்குப் பிறகு ஜேசன்ஸ் கிளென்னுக்கு அழைத்து வந்து விடுகிறேன்", என்றாள் மெக்.

"நான் நேற்று இரவு அந்த இடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். நெடுஞ்சாலையில், அந்த இடத்திற்கு அரை மைல் தூரத்திற்கு முன்னால் ஒரு பொதுத் தொலைபேசி இருக்கிறது. நான் அதற்கு அருகில் காரில் காத்திருப்பேன். நீ உறுதியாக வருகிறாயா என்பதை இரவு சாப்பிட்டபின் எனக்கு, அந்த இடத்திற்கு போன் செய்து சொல்லிவிடு. ஒரு வேளை அவர் வர மறுத்து ஏதாவது தகராறு செய்துவிட்டால், அந்த மாற்றம் எனக்குத் தெரிந்துவிட வேண்டும்," என்று சொல்லி, தொலைபேசி எண் குறிக்கப்பட்ட துண்டுக் காகிதத்தை அவளிடம் தந்தான். இதுதான் அந்தப் பொதுத் தொலைபேசியின் எண். நான் இரவு பத்துமணி முதல் அங்கே காத்திருப்பேன்," என்றான்.

அவள் தலையசைத்தபடி, அதை வாங்கிவைத்துக் கொண்டாள்.

"நீ கிளென்னுக்குப் போனதும் காரை விட்டு இறங்காதே. கண்ணாடி ஜன்னல் திறந்திருக்கட்டும்."

மெக்கின் உடல் நடுங்கியது.

"நான் சுட்டவுடனே, உன்னைத் தாக்க வேண்டியிருக்கிறது." என்று ஆதரவாக அவள்மீது கையை வைத்தான். அவன் கை பட்டவுடனே அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

"நான் பலமாக, முரட்டுத்தனமாக நடந்து கொள்வேன் மெக். வேறு வழியே இல்லை. தைரியமாக இரு. என்மேல் கோபடக்கூடாது. எல்லாரையும் நம்ப வைக்க வேண்டும். காயம் உண்மையாக இருக்க வேண்டும்."

அவள் முதுகுத் தண்டு வடம் சில்லிட்டது. செய்லரை நினைத்துக் கொண்டாள். பிறகு சரியென்று தலையசைத்தாள்.

"நெடுஞ்சாலையிலிருந்து கிளென் கால் மைல் தூரத்தில் இருக்கிறது. நான் உன்னை அடித்ததும், நீ அங்கே நடந்து வந்து, வழியில் போகும் ஏதாவது காரை நிறுத்தி விடு. மயங்கி விழுந்துவிடு. நான் மலர்கள் அனுப்பும் வரை வாயைத் திறக்காதே. அவர்கள் உன்னை மருத்துவ நிலையத்தில் சேர்த்து விடுவார்கள். இந்தக் காகிதத்தில் உன்னைத் தாக்கிய ஆளைப் பற்றிய விபரம் இருக்கிறது. இதைத்தான் சொல்ல வேண்டும்."

"சரி."

"அவ்வளவுதான். தயாராக இரு. மறக்காமல் போன் செய்."

அவள் மிரட்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இதெல்லாம் சரியாய் நடக்குமா? பணம் கிடைத்துவிடும் அல்லவா?" என்றாள்.

"பயப்படாதே! எல்லாம் சரியாய் நடக்கும். மட்டாக்ஸ் ஏதாவது கிளறுவார். தடுக்க முயற்சி செய்வார். பணம் கொடுக்காமல் போனால் கம்பனிக்குக் கெட்ட பெயர் ஏற்படும். நான் பத்திரிகை நிருபர்களிடம் பேசி விளம்பரம் செய்கிறேன். அப்புறம் அந்தத் துப்பாக்கியை மறந்து விட்டேன்" என்று சொல்லி, அதையும், ஆறு தோட்டாக்களையும் எடுத்துக் கொண்டான்.

அவள் பயந்துபோய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சரி. சீக்கிரம் புறப்படுங்கள், இன்று ஒன்பது மணிக்கு வருவதாகச் சொன்னார்," என்றாள்.

*"இன்று தங்கிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். அவர் ஏன் இன்று வருகிறார்?"*

*"தெரியவில்லை. இரவு வகுப்பை ரத்து செய்துவிட்டார். பிளாரிடா போவது சம்பந்தமாக ஏற்பாடு செய்ய வருகிறாரோ என்னவோ?"*

*ஆன்சனுக்கு ஒரு சந்தேகம் வந்தது.*

*"நீ விலகிப் போக முயற்சி செய்கிறாய், மெக்" என்றான் ஆன்சன்.*

*"அதெல்லாம் இல்லை. நீங்கள் இதையெல்லாம் அமைதியாகச் சொல்கிறீர்கள். ஆனால், எனக்க நடுக்கமாக இருக்கிறது."*

*"ஐம்பதாயிரம். மறந்துவிடாதே. உனக்காகத்தான் இதைச் செய்கிறேன்."*

*"சரி. புறப்படுங்கள். நேரமாயிற்று."*

*" போன் செய்ய மறந்துவிடாதே."*

*அவளைத் தழுவ முயன்றான். அவள் அவனை விலக்கிவிட்டு அவசரப்பட்டாள்.*

*அவன் துப்பாக்கியை தன் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.*

*கார் ஓசை தேய்ந்து மறையும் வரை அப்படியே நின்று கொண்டிருந்தான்.*

*அப்போது, செய்லர், சமையல் அறையிலிருந்து வெளியே வந்தான்.*

*அவள் சோர்ந்து போய் சோபாவில் அமர்ந்தாள்.*

*"அவனை ஏன் அப்படி விரட்டினாய். கொஞ்சம் அன்பாகப் பேசியிருக்கலாமே," என்றான் செய்லர்.*

"எனக்கு வெறுப்பாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது."

"அவன்தானே செய்யப் போகிறான். நீ ஏன் பயப்படுகிறாய்?"

அவள் சட்டென எழுந்து அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். அவள் உடல் நடுங்கியது.

வெள்ளிக்கிழமை மாலை. அன்னா டைப் அடிப்பதை நிறுத்தி விட்டுக் காகிதங்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தாள்.

"புறப்படுகிறேனே சார்," என்றாள்.

"புறப்படு! நேரமாகிவிட்டது. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது," என்றான் ஆன்சன்.

அவள் போய் விட்டாள்.

ஆன்சன் டைம் ஸ்விட்ச் கடிகாரத்தை எடுத்தான். அதனுடன் கொடுக்கப்பட்ட குறிப்புகளை கவனமாகப் படித்தான். அதலிருந்து இரண்டு ஒயர்களை எடுத்து, ஒன்றை டேப் ரிகார்டரிலும், மற்றொன்றை மேசை விளக்கிலும் பொருத்தினான். கடிகாரத்தில் ஐந்து நிமிடம் தள்ளி வைத்துவிட்டு, ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காத்திருந்தான்.

ஐந்து நிமிடங்கள் ஆனதும் சட்டென மேசை விளக்கு எரிந்தது. டேப் ரிகார்டரும் ஓட ஆரம்பித்தது. அதிலிருந்த டேப்பிலிருந்து, டைப் அடிக்கும் ஓசை வர ஆரம்பித்தது. அவன் வெளியே போய்க் கதவை சாத்திவிட்டுக் கேட்டான். ஓசை கேட்டது. பிறகு உள்ளே வந்தான். அந்த கடிகாரத்தைத் திருப்பி இரவு ஒன்பது முப்பது மணிக்கு வைத்தான். பிறகு, அலுவலக அறையைப் பூட்டிக் கொண்டு கீழே வந்தான்.

இரவுக் காவல்காரன் ஜோன்ஸ், தன் சிறிய அறையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

" ஜோன்ஸ்! நான் இன்றிரவு அதிக நேரம் வேலை செய்யப் போகிறேன். அறைக்குள் திருடன் நுழைந்துவிட்டதாக நினைத்துவிடாதே " என்றான் ஆன்சன் அவனிடம்.

"சரி. ஐயா. நான் தொந்தரவு செய்யமாட்டேன்," என்றான் ஜோன்ஸ்.

"நான் போய் சாப்பிட்டு வந்துவிடுகிறேன்," என்று சொல்லிப் புறப்பட்டான் ஆன்சன்.

நேராகத் தன் அறைக்குப் போனான். துப்பாக்கியை எடுத்து சுத்தப்படுத்தி ஆறு தோட்டாக்களை அதில் நிரப்பினான். மறுபடியும் திரும்பித் தன் அலுவலகக் கட்டடத்தை அடைந்தான்.

ஜோன்ஸ்! மேலே போகிறேன்," என்று லிப்டுக்குப் போனான். அலுவலக அறையை அடைந்தான். சற்று நேரத்திற்குப் பிறகு, லிப்டில் இறங்காமல் படிகள் வழியாகக் கீழே இறங்கி வந்து தன் காரில் ஏறி பிரெண்ட் ப்ரூ டவுன் நெடுஞ்சாலையை நோக்கிப் போனான்.

குறிப்பிட்ட பொதுத் தொலை பேசியருகே வந்ததும், பக்கத்துக் கிளைப்பாதையில் காரைத் திருப்பி, சற்று தூரம் சென்று நிறுத்தினான். கார் விளக்குகளை அணைத்தான். ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காத்திருந்தான்.

ஒன்பது நாற்பதற்கு காரை விட்டிறங்கி நெடுங்சாலைக்கு நடந்து வந்தான். தொலை பேசிப் பெட்டிக்குப் பின்னால், இருளில், தரையில் அமர்ந்து கொண்டு காத்திருந்தான்.

இரண்டு மூன்று கார்கள் சாலையில் வேகமாகப் போயின. நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. எதாவது தவறு நேர்ந்து விடுமோ என்ற பயம் மெல்லப் பற்றிக் கொண்டது.

அப்போது மணியடித்தது. அவன் எழுந்து சென்று கதவைத்திறந்து, ரிசீவரை எடுத்தான்.

திங்கள் முதல் திருமண ஆண்டு நிறைவை வெளியில் சென்று கொண்டாடலாம் என்று மெக் சொன்னதைக் கேட்டு பர்லோ திகைத்துப் போனார்!

காலை உணவின் போதுதான் அவள் அதைச் சொன்னாள். சாப்பிட்டு முடித்து ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அமைதியாகச் சொன்னாள்...

"நாம் இருவரும் வெளியில்போய் பல மாதங்கள் ஆகிவிட்டன. இங்கேயே அடைந்து கிடக்க என்னால் முடியவில்லை. இன்றைக்காவது போவோமே... வேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள்... நான் தனியாகப் போகிறேன்," என்றாள்.

" செலவாகுமே..." என்று இழுத்தார் பர்லோ.

"ஆனால் ஆகட்டும். இன்று சந்தோஷமாக இருக்க வேண்டும். நிறையக் குடிக்க வேண்டும். அப்புறம் வேறு விஷயங்களும் இருக்கின்றன," என்றாள் அவனைப் பார்த்தபடியே,

பிறகு சட்டென தன் மாடியறைக்குப் போய்விட்டாள்.

சாப்பிட்டு முடித்து எழுந்தார் பர்லோ அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பையனை சுட்டுக் கொன்ற பின் அவர் கைகளில் அலறிய பெண் நினைவிற்கு வந்தாள்... அது மிகவும் ரசமான அனுபவமாக அவருக்குத் தோன்றியது...! சரி, மெக் விரும்பினால் அழைத்துப் போவோம்... பழைய அனுபவக் கிளர்ச்சியை மறுபடியும் பெற நாளை இரவு வெளியில் போனால் போகிறது என்று நினைத்துக் கொண்டார்...

அவர் புறப்பட்டு அலுவலுக்குப் போனார். மாலை, நேரத்திலேயே வீடு திரும்பினார். இருவரும் வெளியில் புறப்பட்டார்கள். ஒரு ரெஸ்டாரன்டில் திருப்தியாக சாப்பிட்டார்கள். பர்லோ நிறையக் குடித்தார்... கடைசியாக... மெக்! எனக்குத் தூக்கம் வருகிறது. வீட்டிற்குப் போகலாமா?" என்று கேட்டார்!

அவள், " ஜேசன்ஸ் கிளென் பக்கம் போய் நீண்ட நேரம் இரவைக் கழிக்கலாம் " என்றாள்.

"அங்கே எதற்கு? எனக்குத் தூக்கம் வருகிறது. நீ சொன்னபடிதான் வெளியில் வந்து விருந்து சாப்பிட்டாயிற்றே," என்றார்.

"என்னால் இன்று இரவு அந்த வீட்டில் அடைந்து கிடக்க முடியாது. இன்று இரவு ஜேசன்ஸ் கிளென் செல்ல வேண்டும்."

"எதற்கு? அதெல்லாம் சின்னப் பையன்கள் திருட்டுத்தனமாகப் போகும் இடம். வேண்டாம்!"

" வேண்டும்! போக வேண்டும்! சந்தோஷமாக அங்கே இருக்க வேண்டும்."

"நீ நிறையக் குடித்திருக்கிறாய். வேண்டாம்."

"ஆமாம். குடித்திருக்கிறேன். அதனால்தான் போகவேண்டும் என்கிறேன்."

"என்னால் முடியாது. என்னால் முடியாது."

பர்லோவுக்கு அடுத்த நாள் இரவு நினைவிற்கு வந்தது. அதை நினைக்கும்போது உடல் சூடேறியது. வியர்த்தது.

"அந்த இடம் சரியான இடமல்ல," என்றார் மறுபடியும்.

"சரி. நீங்கள் வீட்டிற்குப் போய்த் தூங்குங்கள். நான் தனியாக அங்கே போகிறேன். எவனாவது எனக்குக் கிடைப்பான்" என்றாள் பளிச்சென்று.

"சரி நீ போ! நான் வீட்டிற்குப் போகிறேன்", என்றார் பர்லோ!

"அப்படியா! சரி. நான் காரை எடுத்துக் கொண்டு போகிறேன். நீங்கள் நடந்தே போங்கள்!" என்றாள் மெக் கோபத்துடன்.

பர்லோ தயங்கினார். யோசித்தார். கடைசியில் "சரி. உன் இஷ்டப்படியே போவோம் ", என்று சம்மதித்தார்!

"இருங்கள், வந்துவிட்டேன்", என்று மெக் அவசரமாக எழுந்து பெண்கள் அறைக்குப் போனாள்.

அவள் நெஞ்சு அடித்துக் கொண்டது. ஆன்சன் கொடுத்த துண்டுக் காகிதத்தை எடுத்துக் கொண்டு தொலைபேசி அறைக்குள் நுழைந்தாள். அந்த எண்ணைச் சுழற்றினாள்.

ஆன்சன், 'ஹலோ' என்றான்.

"பேசுங்கள்!" என்றது இடையில் ஒரு குரல். ரெஸ்டாரண்டின் மெயின் ஸ்விட்ச் போர்டிலிருந்து டெலிபோன் பெண் பேசுகிறாள்.

"ஹலோ!" என்றான் ஆன்சன்.

"ஹலோ!" இது மெக்கின் குரல்.

"என்ன?"

"நாங்கள் புறப்படுகிறோம்."

'சரி' என்று போனை வைத்தான் ஆன்சன்.

பிறகு அவன் காருக்குத் திரும்பினான். காரை எடுத்துக் கொண்டு, மண் சாலை வழியாக ஜேசன்ஸ் கிளென் பகுதிக்கு விரைந்தான். கொஞ்சம் பதற்றம் ஆரம்பமாயிற்று. வேறு இளம் காதலர்கள் அங்கே இருந்தால் சிரமம். சிக்கல் ஏற்படலாம்.

அந்த இடம் வந்தது. இருட்டான இடத்தில் காரை நிறுத்தி விளக்குகளை அணைத்தான். கார் இரு புதர்களுக்கு இடையில் பாதுகாப்பாக இருந்தது... பிறகு காரை விட்டு இறங்கினான்... சுற்று முற்றும் பார்த்தான்... கீழே தூரத்தில் ப்ரூடவுன் விளக்குகள் தெரிந்தன.

கொலை, கற்பழிப்பு பயம் காரணமாக அந்த இடம் வெறிச் சோடிக் கிடந்தது. ஆன்சன் ஒரு நல்ல இடமாகப்

பார்த்துப் புதர் மறைவில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டான்.

காத்திருந்தான்.

அலுவலக காவல்காரனின் பலமான சாட்சியம் பக்க பலம். தான் அன்றிரவு அலுவலக அறையில் இருந்ததாக அவன் உறுதியாகச் சொல்வான். அவன் சோர்ந்து போகும் போது, டேப் ரிகார்டரிலிருந்து டைப் ஒலி வந்து கொண்டிருக்கும். மேசை விளக்கும் எரிந்து கொண்டிருக்கும்.

அவன் மனம் அமைதியடைந்தது... பதற்றம் ஏற்படவில்லை.

கடைசியாகக் கார் வரும் ஓசையும், வெளிச்சமும் அவனை உஷார்ப்படுத்தியன. அவன் நிமிரிந்து உட்கார்ந்தான்.

கார் சற்று தூரத்தில் வந்து நின்றது.

பர்லோவின் பேச்சுக் குரல் கேட்டது.

"வந்துவிட்டோம்! இங்கே யாரையுமே காணோம்," என்றார் பர்லோ.

ஆன்சன் பதுங்கிப் பதுங்கிப் காரை நெருங்கினான்.

பர்லோ சுற்று முற்றம் பார்த்தார்... அவர் மூளை என்னவோ செய்தது. தனிமையான இடம். யாருமே இல்லை. மெக்கை தீர்த்துக் கட்டிவிட்டால் என்ன? என்று நினைக்கத் தொடங்கினார் அவர்!

ஆன்சன் பதுங்கியபடி காரை நெருங்கினான்.

காரின் முன் சீட் ஜன்னல் கண்ணாடிகள், இறக்கப்பட்டிருந்தன.

மங்கிய நிலா வெளிச்சத்தில் பர்லோவின் முகம் தெரிந்தது.

மெக் பர்லோவைப் பார்த்து, நீங்கள் இங்கே- இந்த இடத்தில் என்னோடு சந்தோஷமாக இருக்க விரும்ப வில்லையா?"- என்றாள்- பிறகு சட்டென அலறினாள்!

"வேண்டாம்! ஜான்! வேண்டாம்!" முகத்தை மூடிக் கொண்டு அவள் அலறினாள்-

கருத்த மேகம் நிலவை மறைத்தது- இருள் கவ்வியது-

துப்பாக்கி வெடியோசை காதைப் பிளந்தது-

மெக் அலறிக் கொண்டே- இருந்தாள்-

பர்லோ சுருண்டு முன்னால் சாய்ந்தார்-

ஆன்சன் துப்பாக்கியைக் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டு, காரின் கதவைத் திறந்து மெக்கை வெளியில் இழுத்தான்-

அவள் 'ஓ!' வென்று அலறினாள்-

அந்தகார இருட்டைக் கிழித்தது அவள் அலறல்—

இரண்டாம் பாகம்

# 8

துப்பறிவாளன் ஹெர்மாஸ் தன் அலுவலக அறைக்குள் நுழைந்து, கோட்டையும் தொப்பியையும் கழற்றி வைத்து விட்டு மேசை முன்னால் சென்று அமர்ந்தான்.

முன்தினமும் அவனும், அவன் மனைவி ஹெலனும் சென்றிருந்த விருந்தில் நிறைக் குடித்துவிட்டு வந்ததால், காலையிலும் லேசான தலை சுற்றல் இருந்தது. நெற்றியை அழுத்தித் தேய்த்துக் கொண்டான். அன்றையக் கடிதங்களை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

அப்போது இன்டர்காம் பஸ்ஸர் ஒலித்தது. பொத்தானை அழுத்திவிட்டு, "யாரது?" என்றான். "ஹெர்மாஸ்! மட்டாக்ஸ் பேசுகிறேன். உடனே வா!" என்றது குரல்.

அவருடைய அலுவலகத்திற்குள் நுழைந்தபோது, அவருடைய செயலாளர் ஷா வரவேற்றாள்,

"என்ன இன்னும் போதை தெளியவில்லையா?" என்றாள்.

"ஆமாம்... எதற்குத் தலைவர் கூப்பிட்டார்?"

"தெரியவில்லை. தினசரியைப் படித்துக் கொண்டிருந்தார். அதில் ஏதாவது வந்திருக்கிறதோ என்னவோ! உள்ளே போய்ப் பாருங்கள். கோபமாக இருப்பதுபோல் தெரிகிறது. பார்த்துப் போங்கள்!"

"இன்றைக்கு நேரம் சரியில்லை" என்று, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் ஹெர்மாஸ்.

அவனைப் பார்த்ததும், "இதைப்பார்!" என்று நாளிதழைத் தூக்கிவீசினார்.

ஹெர்மாஸ் நாற்காலியில் அமர்ந்தபடி நாளிதழைக்கையில் எடுத்தான்...

மீண்டும் கொலை வெறியன் தாக்குதல்!

கொலை! கற்பழிப்பு!

என்ற தலைப்பு உறுத்தியது. மடமடவென்று படித்து முடித்தான்.

பிறகு திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான்!

"சார்! அந்த பிலிப் பார்லோ- சமீபத்தில் இன்ஸ்யூரன்ஸ் செய்த ஆளல்லவா- அவர் தானே?" என்று கேட்டான்.

"ஆமாமையா! அந்த ஆளேதான். சண்டாளன் ஐம்பதாயிரத்திற்கு செய்திருக்கிறான்- இப்போது ஆள் காலி- என்னையா இது?" என்றார், மட்டாக்ஸ் எரிச்சலுடன்.

"தலையின் பின்னால் சுட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அந்தப் பக்கத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் கொலைவெறியன் செயலாகத்தான் இருக்கவேண்டும். அந்தப் பெண்ணும் மிக மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிகிறதே" என்றான் ஹெர்மாஸ்.

"பாரப்பா, ஹெர்மாஸ்! இது எனக்குப் பிடிக்கவில்லை. பத்து நாட்களுக்கு முன்னால்தான் இந்த ஆள் இன்ஸ்யூரர் செய்திருக்கிறான். எனக்கு என்னவோ சந்தேகம் தட்டுகிறது," என்றார் மட்டாக்ஸ்.

"இன்ஸ்யூரன்ஸ் பணத்திற்காக இந்தக் கொலை நடந்திருக்குமென்றா நினைக்கிறீர்கள்? அது எப்படி? அந்தப் பெண்ணும் பாதிக்கப்பட்டிருக்கிறாளே?"

"யோசித்துப்பார் ஒரு அற்பசம்பளக்காரன் எதற்காக ஐம்பதாயிரத்திற்கு ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் எடுக்க வேண்டும்? என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது."

"அவள் பயங்கரமாகக் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள். அடியும் பலமாமே. தாடை எலும்புகூட நகர்ந்து விட்டதாகப் போட்டிருக்கிறார்களே?' அவள் இதில் சம்பந்தப்பட்டிருக்க சாத்தியமில்லையே!"

"ஐம்பதாயிரம் கைக்கு வருமானால் நான்கூட அதற்கெல்லாம் தயாராகிவிடுவேன்! ஆரம்பத்திலேயே எனக்கு சந்தேகம் வந்தது. அவளைப் பற்றி விசாரித்து வைத்திருக்கிறேன். ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் கொஞ்சம் சுவாரஷ்யமான விஷயங்கள் இருக்கின்றன. அந்த மாதிரிப் பெண் எதற்கும் துணிவாள்."

"அப்படியா? அந்த அறிக்கையைக் கொடுங்கள். பார்க்கிறேன்."

"அதெல்லாம் உனக்குத் தேவையில்லை. நீ சீக்கிரம் செயல்பட வேண்டும். உடனே பிரென்ட் நகருக்குப் போ. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜென்சன் நமக்கு வேண்டியவர். அவரைப் பார் அவர்கூட இருந்து பணியாற்ற நான் சொன்னதாகச் சொல். உன்னை அவர் சந்தோஷமாக உடன் வைத்துக் கொள்வார். ஜென்சன் ஆஸ்பத்திரியில் உள்ள அந்தப் பெண்ணிடம் பேசும் போது நீ அருகில் இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். நீ அங்கே, கண்களையும், காதுகளையும் எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். நமது ஏஜென்ட் ஆன்சனைப் பார். இதை நாம் விடப் போவதில்லை, என்று சொல். மோசடி நடந்திருக்கலாம் என்று கம்பனி சந்தேகப் படுவதாகச் சொல். அவன் பத்திரிகையாளரிடம் எதையாவது உளறிக் கொட்டப் போகிறான். வாயை மூடிக் கொண்டிருக்கச் சொல்.. அந்த நிகழ்ச்சி நடந்த இடம்.. 'ஜேசன்ஸ் கிளென்'.. அதுதானே... அந்த இடத்தை நேரில் போய்ப் பார்... கவனம்..."என்று சொல்லிவிட்டு, சிகரட்டை சாம்பல் கிண்ணத்தில் வைத்து அழுத்தி விட்டு, இன்னொன்றைப் பற்ற வைத்தார்.

"அப்புறம், அவள் ஆஸ்பத்திரியில் இருக்கும் போதே. அவள் வீட்டைப் போய்ப் பார்த்துவிடு. சுற்றுவட்டாரத்தையும் பார் விசாரி. ஆனால், இந்த விஷயம் மட்டும் இன்ஸ்பெக்டருக்குத் தெரிய வேண்டாம்," என்றார்.

"என்ன அங்கே எதிர்பார்க்கிறீர்கள்?"

"தெரியவில்லை. ஆனால், அங்கே பார்ப்பதில் எதாவது தகவல் கிடைக்கலாம் என்று தோன்றுகிறது. போய்ப்பார்!"

"சரி, சார்! முதலில் இன்ஸ்பெக்டர் ஜென்சனை சந்தித்துவிடுகிறேன்."

"டாக்டரையும் சந்தித்துவிடு. சரியான ரிப்போர்ட்டைத் தெரிந்துகொள். உண்மையிலேயே அவள் கற்பழித்துத் தாக்கப்பட்டிருக்கிறாளா என்பதை உறுதி செய்து கொள்!"

"அப்படித்தானே பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள்?"

"பத்திரிகையில் வருவதையெல்லாம் நாம் நம்பிவிடுவதா? டாக்டரின் அறிக்கையைப் பார்!"

ஒன்பது மணி ஆவதற்கு முன்பே அன்னா அலுவலகத்திற்கு வந்து விட்டாள். அவளுக்கு முன்னால் ஆன்சன் அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்ன சார், நேரத்திலேயே வந்துவிட்டீர்களா? அல்லது நான்தான்-" என்று தன் கடிகாரத்தைப் பார்த்தாள் அன்னா.

"நான்தான் நேரத்திலேயே வந்துவிட்டேன் அன்னா பத்திரிகை பார்த்தாயா? பர்லோ கொலை செய்யப்பட்டு விட்டார்- நம்மிடம் பெரிய தொகைக்கு சமீபத்தில் பாலிசி எடுத்துக் கொண்டாரே அவர்?"

"ஆமாம். படித்தேன். பயங்கரம்! எனக்கு இரவில் வெளியில் போகவே பயமாக இருக்கிறது."

ஆன்சன், 'ப்ரூ டைம் கெஜட்' நாளிதழ் அலுவலகத்திற்கு போன் செய்தான். நிருபர் போனில் பேசினார். "அந்த கொலை செய்யப்பட்ட பர்லோ, ஐம்பதாயிரம் டாலருக்கு இன்ஸ்யூர்

செய்திருக்கிறார்... இந்தத் தகவல் உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று நினைக்கிறேன்," என்றான்!

நிருபர் பிரிஸ்பீக்கு ஒரே சந்தோஷம். "அப்படியா! ஐம்பதாயிரமா?.. நீங்கள்தான் இன்ஸ்யூர் செய்ததா?.. நல்லது.. பெரிய தொகைதான்.. மனைவிதான் பிழைத்துக் கொண்டாளே.. அவளுக்கு இது சந்தோஷமான விஷயம்தான்.. நன்றி.. நல்ல தகவல்", என்றார் நிருபர்.

"இதுவரை யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?"

"இல்லை. இன்ஸ்பெக்டர் வெகு தீவிர வேட்டையில் இறங்கியிருக்கிறார். இதுவரை ஒரு துப்பும் கிடைக்கவில்லை".

"அந்தப் பெண் திருமதி பர்லோ எப்படி இருக்கிறாள்?".

"ரொம்ப மோசம் சார். டாக்டர் எங்களை அருகிலேயே விட மறுக்கிறார்."

"ஏதாவது தகவல் கிடைத்தால் எனக்கு சொல்லுங்கள். நான் இன்ஸ்யூரன்ஸ் செய்தவன் ஆயிற்றே.."

"ஓ, தாராளமாக. பணம் கொடுக்க எவ்வளவு காலம் ஆகும்?"

"சீக்கிரம் கொடுத்து விடுவோம். தாமதம் செய்ய மாட்டோம்."

"கொடுக்கும்போது சொல்லுங்கள். முதல் தகவல் எங்கள் பத்திரிகையில் வரட்டும். நானும் அவ்வப்போது ஏதாவது புதுத் தகவல் கிடைத்தால் சொல்கிறேன்."

ஆன்சன் நன்றி சொல்லிப் போனை வைத்தான்.

"அவள் எப்படி இருக்கிறாள்?" என்று அன்னா கேட்டாள்.

"மிகவும் மோசமான நிலையில் இருக்கிறாள், அன்னா. பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது. பாவம். அந்தப் பெண்ணுக்கு

கொஞ்சம் மலர்களை அனுப்பி வைத்தால் நல்லது. ஏற்பாடு செய்துவிட்டேன். ஒரு டஜன் ரோஜாப்பூக்களை அனுப்பிவிடு. ஆஸ்பத்திரி தெரியுமல்லவா?"

இன்ஸ்பெக்டர் ஜென்சன் சுறுசுறுப்பான ஆள். நல்ல புத்திசாலி. எப்படியாவது உண்மையைக் கண்டு பிடித்துப் பாராட்டு வாங்கிவிட வேண்டுமென்று இரவு பகலாக அலைந்து கொண்டிருந்தார்.

அந்த வழக்கு சம்பந்தமான கோப்பை அவர் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஹெர்மாஸ் உள்ளே வந்தான்.

"ஹலோ— வாய்யா—" என்று வரவேற்றார் இன்ஸ்பெக்டர். முன்பு பல தடவை இருவரும் ஒன்றாக வேலை செய்தவர்கள்.

ஹெர்மாஸ், அலட்டிக் கொள்ளாமல் எதிரில் வந்து அமர்ந்தான்.

"மட்டாக்ஸ் அனுப்பினார். பர்லோ— ஐம்பதாயிரத்திற்கு இன்ஸ்யூர் செய்துவிட்டுக் கொலையுண்டிருக்கிறார். அதனால் எங்கள் தலைவருக்கு சந்தேகம். அதுவும் பத்துநாள் கூட ஆகவில்லை. அதுதான் சந்தேகத்திற்கான முக்கிய காரணம்" என்றான் ஹெர்மாஸ்.

"ஐம்பதாயிரமா! அடேயப்பா! பெரிய தொகைதான். ஆனால், அதற்கும் இந்தக் கொலைக்கும் எப்படி சம்பந்தம் இருக்க முடியும். ஐந்து நாட்களுக்கு முன்பும் இதே மாதிரி இங்கே நடந்திருக்கிறது. கற்பழிப்பும் கொலையும். நாங்கள் ஒரு 'செக்ஸ் கில்லரை' தேடிக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். இதில் வேறு மர்மம் எதுவும் கிடையாது. நான் ஒரு ஏற்பாடு செய்யப் போகிறேன். அதே கொலை நடந்த இடத்தில் ஒரு போலீசையும், ஒரு பெண்ணையும் இரவில் போய் இருக்க வைக்கப் போகிறேன்— பொறியில் நிச்சயம் கொலைகாரன் அகப்பட்டுக் கொள்வான்—" என்றார் இன்ஸ்பெக்டர் உற்சாகமாக.

"ஆனால், மட்டாக்ஸ், இதை சிக்கலான விஷயமாக நினைக்கிறார். அந்தப் பெண் தன் கணவனை சுட்டுக் கொன்றுவிட்டு, தன்னைத் தானே கற்பழித்துக் கொண்டிருக்கிறாள் என்கிறார் அவர்! தொகை பெரிது பாருங்கள்!" என்றான் ஹெர்மாஸ்.

"என்ன, வேடிக்கை செய்கிறீர்களா, அல்லது நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?" என்று நெளிந்தார் இன்ஸ்பெக்டர். "அவருக்கென்ன பைத்தியமா?" என்று கேட்டார் மறுபடியும்.

"எனக்குத் தெரியாது இன்ஸ்பெக்டர்- அது போகட்டும். அந்தப் பெண்ணுடன் எப்போது பேசப் போகிறீர்கள்?"

"டாக்டர் ஹென்றி, இன்று மாலை ஆறுமணி சுமாருக்குப் பேசலாம் என்கிறார். அப்போதுதான் அவளால் பேச முடியுமாம்."

"சரி. நானும் உங்களுடன் வருகிறேன். உங்களுக்கு இடையூறு செய்யாமல் உடனிருந்து கவனிக்கச் சொல்லி மட்டாக்ஸ் சொன்னார். ஐம்பதாயிரம் தொகை கொடுக்க வேண்டும் பாருங்கள்!"

"சரி. தாரளமாக நீங்கள் என்னுடன் வரலாம். எனக்கு உதவியும் செய்யலாம். நானும் உங்களுக்கு உதவுகிறேன். ஆனால்; மட்டாக்சுக்குக் கற்பனை அதிகம். அனாவசியமாகப் போட்டுக் குழப்பிக் கொள்கிறார் என்று நினைக்கிறேன்."

"நீங்கள் சொல்வதென்னமோ உண்மைதான். ஆனால் பல சமயங்களில் அவரது கற்பனைகள் நிஜங்களாகி விடுகின்றன. படு புத்திசாலியான ஆள் அவர்."

"எனக்கென்னவோ, இதில் சந்தேகப்பட எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பெண் இதில் ஏதாவது சம்பந்தப்பட்டிருப்பாள் என்று நீங்கள் உண்மையாக் நினைக்கிறீர்களா?"

"இப்போது ஒரு முடிவுக்கும் வர முடியாது. வரக்கூடாது. அவளுடன் பேசிப் பார்க்க வேண்டும். அப்புறம், டாக்டரிடமும் பேச வேண்டும்."

"எல்லாம் கால விரயம். அவள் தாடையில் விழுந்திருக்கிற அடியைப் பார்த்தால் உங்களுக்கு சந்தேகமே வராது. ஐயோ, என்ன அடி!. அடித்தாடையே கழன்று விட்டது."

"மட்டாக்சுக்குப் பணம் கொடுக்க இஷ்டமில்லை, அவ்வளவுதான் சுருக்கம். பணம் கொடுக்காமலிருக்க அவர் எந்தக் கதையையும் நம்புவார். என்ன கற்பனையும் செய்வார். அவர் வேலையே அதுதானே!"

"ஆமாம். சரிதான். சரி. மாலை ஆறுமணிக்கு சந்திப்போம். அவளுடன் பேசிப் பார்ப்போம்..."

**போ**லீஸ் ஸ்டேஷனைவிட்டு நேராக ஆன்சனின் அலுவலகத்திற்குக் காரைச் செலுத்தினான் ஹெர்மாஸ்.

ஆன்சனை அவன் முன்பு சந்தித்திருக்கிறான். என்றாலும் நெருக்கமில்லை. ஆனால் ஆன்சன் திறமைசாலியான ஏஜன்ட் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

ஆன்சன் அலுவல் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் மேசைக்குப் பின்னால் அமர்ந்திருந்தான்.

"என்ன ஞாபகம் இருக்கிறதா?" என்று கையை நீட்டினான் ஹெர்மாஸ்.

"தெரியாமல் என்ன, ஸ்டீவ் ஹெர்மாஸ். வாருங்கள்!" என்று, எழுந்து கையைக் குலுக்கிவிட்டு, "உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. கொலை விஷயமாக வந்தீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம். அது போகட்டும். வெளியில் எங்காவதுபோய், காபி சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே?" என்றான் ஹெர்மாஸ்.

உள்ளே நுழையும்போது, அவன் அன்னாவைப் பார்த்தான். தாங்கள் பேசுவது அவள் காதில் விழவேண்டாம் என்று நினைத்தே அவன் அப்படிச் சொன்னான்.

"ஓ, தாராளமாகப் போகலாம்... எதிரிலேயே ஒரு ரெஸ்டாரன்ட் இருக்கிறது,' அன்னா, நாங்கள் வெளியே போய்விட்டு ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்துவிடுகிறோம்-போன் வந்தால் அப்புறம் செய்யச் சொல்," என்று புறப்பட்டான்.

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். எதிர்ப்பக்கம் இருந்த ரெஸ்டாரன்டின் ஒரு ஒதுக்குப்புறமான மேசையில் அமர்ந்து கொண்டார்கள்.

சற்றுப் பொறுத்து, "மட்டாக்ஸ், யுத்தம் தொடுக்கப் போகிறாரா?" என்று ஆன்சன் கேட்டான்.

ஹெர்மாஸ் சிரித்தான். "மட்டாக்ஸ் என்ன நினைக்கிறார் தெரியுமா? 'அந்தப் பெண், தன் கணவனைக் கொலை செய்துவிட்டுத் தன்னையே சுற்பழித்துக் கொண்டாள்' என்கிறார் அவர்!"

ஆன்சனுக்கு 'திக்'கென்றது.

ஒரு சர்க்கரைக் கட்டியை எடுத்து காபிக்கோப்பையில் போட்டான். கரண்டியால் நிதானமாகக் கலக்கத் தொடங்கினான்.

"அவருக்கு என்ன பைத்தியமா? இன்ஸ்யூரன்ஸ் பணம் கொடுத்தே ஆக வேண்டும். கம்பனிக்கு இது அற்பக் காசு. பத்திரிகைகளுக்கு விஷயம் தெரியும். பணம் கொடுப்பதில் ஏதாவது இடையூறு செய்தால் நமக்கும், அவருக்கும் கெட்டபெயர்."

ஹெர்மாஸ் மூக்கைச் சொறிந்து கொண்டான். ஆன்சனையே உற்றுப் பார்த்தான்.

"பத்திரிகைகளுக்கு இன்ஸ்யூரன்ஸ் விஷயம் எப்படித் தெரியும்? நீங்கள் சொன்னீர்களா?" என்று கேட்டான்.

"சொன்னால் என்ன? இந்தக் கொலையும், கற்பழிப்பும் மிகவும் பரபரப்பான விஷயம். பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் வந்துள்ள விஷயம். இந்த வட்டாரத்தில் எல்லாருக்கும் என்னைத் தெரியும். நான் பர்லோவை இன்ஸ்யூர் செய்ததும் பலருக்குத் தெரிந்த விஷயம். அதனால் எப்படி மறைக்க முடியும்? மேலும் பணம் கொடுத்துவிட்டால், கம்பனிக்கு இந்த வட்டாரத்தில் நல்ல பெயர் ஏற்பட்டுவிடும். நானும் ஏராளமான ஆட்களை இன்ஸ்யூர் செய்யலாம்," என்றான் ஆன்சன்.

"நீங்கள் பத்திரிகையாளரிடம் பேசுவதை மட்டாக்ஸ் விரும்பவில்லை," என்றான் ஹெர்மாஸ்.

"ஏன்? பேசினால் என்ன?"

"ஏதோ ஒரு செட்-அப் இருப்பதாக அவர் சந்தேகப் படுகிறார். அது குழம்பிப்போய்விடும் என்கிறார்."

ஆன்சனின் முகம் தீவிரமடைந்தது. அவன் விரல்கள் காப்பியைக் கலக்க ஆரம்பித்தன.

"நீங்கள் அவருக்கு நேர் கீழ் வேலை செய்கிறீர்கள். நான் அப்படியில்லை. நான் கம்பனியின் ஏஜன்ட். ஒரு ஏஜன்ட எப்படிப் பணியாற்ற வேண்டுமோ அப்படி நான் பணியாற்றுகிறேன். என் கடமை பணம் வாங்கிக் கொடுப்பது. அப்போதுதான் என் மேல் மக்களுக்கும் மதிப்பும், நம்பிக்கையும் வரும். தொழில் வளரும்... மட்டாக்ஸ் மாதிரி நடந்து கொண்டால், என்னை விரட்டியடிப்பார்கள்... அவர் பல வருஷங்களுக்கு முன்பே ஓய்வு பெற வேண்டியவர். நாற்காலியைப் பிடித்துக் கொண்டு, எங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே வருகிறார். எங்களுக்கு அவர் வாய்ப்புக் கொடுப்பதே இல்லை." என்றான் ஆன்சன்.

"நீங்கள் பாலிசி கொண்டு வந்து கொடுத்த போதே அதை மட்டாக்ஸ் விரும்பவில்லை. அவர், அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிக்க ஒரு ஏஜன்சியை அணுகியிருக்கிறார். அவளைப் பற்றித் தகவல்கள் விசாரித்து, வைத்திருக்கிறார். 'அந்தமாதிரிப் பெண் எதையும் செய்வாள்' என்று என்னிடம் சொன்னார். அவள் எந்த

மாதிரிப் பெண் என்பது அவருக்குத்தான் தெரியும். அதை அவர் என்னிடம் சொல்லவில்லை," என்றான் ஹார்மாஸ்.

காபி கலக்குவதை சட்டென நிறுத்தினான் ஆன்சன். பிறகு, ஹார்மாஸை உற்றுப் பார்த்தான். அவனது சாம்பல் நிறக் கண்கள் இருண்டன.

"அவளைப் பற்றிய அறிக்கையில் என்ன இருக்கிறது?"

"எனக்குத் தெரியாது. எனக்கு அதை அவர் காட்டவில்லை."

"அவருக்குப் பைத்தியம். அந்தப் பெண் எவ்வளவு பயங்கரமாகத் தாக்கப்பட்டு, கற்பழிக்கப்பட்டிருக்கிறாள்! அவளைப் போய் சந்தேகிக்கிறாரே!"

"இன்ஸ்பெக்டர் ஜென்சனும் நீங்கள் நினைப்பது போலத்தான் நினைக்கிறார். ஆனால், பத்து வருஷமாக நான் மட்டாக்ஸிடம் வேலை பார்த்தவன். அவர் யூகம் தவறாவதே இல்லை."

"பணம் கொடுக்காமலிருப்பதற்கு அவர் செய்யும் தந்திரம் இது. இந்த மாதிரித் தடைகளால் அவர் கம்பெனிக்குத்தான் தீங்கு செய்கிறார். ஐம்பதாயிரம் ஒரு பெரிய தொகையா?"

"மட்டாக்ஸ் இந்த மாதிரி இரண்டாயிரம் விவகாரங்களை ஒரு வருஷத்தில் சந்திக்கிறார். மொத்தமாக அவர் கணக்குப் பார்ப்பார். அப்படிப் பார்த்தால் அதிகம்தானே?"

ஆன்சன் காபியைக் குடித்து முடித்தான்.

"சரி. இப்போது நான் என்ன செய்ய?"

"ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தால்போதும். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். பர்லோவின் வீடு எங்கே இருக்கிறது?"

ஆன்சன் திடுக்கிட்டான்! சிரமப்பட்டு தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டு ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தான். பிறகு, ஹெர்மாஸைப் பார்த்தான்.

"ஊருக்கு வெளியே தள்ளி இருக்கிறது, அந்த வீடு. கண்டு பிடிப்பது சிரமம்", என்றான்.

"என்னை அங்கே அழைத்துப் போகவேண்டும். நான் அந்த வீட்டைப் பார்க்க வேண்டும்."

"பார்க்க வேண்டுமா? எதற்கு? அங்கே என்ன இருக்கப் போகிறது?'

"மட்டாக்ஸின் உத்தரவு. அந்தப் பெண் குணமாகி வீடு திரும்புவதற்குள் நான் வீட்டைச் சோதனையிட்டு விடவேண்டும் என்பது. அவர் உத்தரவு."

"அப்படி செய்யக் கூடாதே. சட்ட விரோதமாயிற்றே!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர் சொன்னதைச் செய்துவிட வேண்டும். அவ்வளவுதான். புறப்படுங்கள்!"

ஆன்சன் கொஞ்சம் தயங்கினான். வேறு வழியில்லை என்பது தெரிந்தது. அதனால், ஹெர்மாஸைப் பின் தொடர்ந்து ரெஸ்டாரன்டை விட்டு வெளியே வந்தான்.

இருவரும், ஹெர்மாஸின் காரை நோக்கிப் போனார்கள்.

"அடேயப்பா! என்ன அழகான தோட்டம்!" என்று வியந்தான் ஹெர்மாஸ், பர்லோ வீட்டின் கேட்டருகில் நின்றபடி.

'ஆமாம்,' என்றான் ஆன்சன் உணர்ச்சியற்ற குரலில்.

"அந்த ஆள் பெரிய நிபுணர்தான். சந்தேகமே இல்லை. அடடா! ரோஜாப்பூக்களில்தான் எத்தனை விதம்! என்ன வடிவமைப்பு! என்னுடைய மனைவி இதைப் பார்த்தால் நகரவே மாட்டாள். அவளுக்கு ரோஜா வளர்ப்பில் கொள்ளை ஆசை."

காரை விட்டிறங்கி, கேட்டைத் திறந்துகொண்டு, இருவரும் உள்ளே போனார்கள். ஹெர்மாஸ் சுற்றிச் சுற்றி வந்து வியந்தான். டேலியாப் பூக்கள், புல்வெளி, நீருற்று, எல்லாவற்றையும் நிதானமாகப் பார்த்தான், சின்னக் குளத்தில்

நீந்திக் கொண்டிருக்கும் தங்க மீன்களைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தான். கடைசியாக வீட்டைப் பார்த்துத் திகைத்தான்.

"இதென்ன, ஆச்சரியம்! இவ்வளவு அழகான தோட்டத்தை அமைத்தவர் ஏன் வீட்டை இப்படி அசிங்கமாக வைத்திருக்கிறார்?" என்றான்.

ஆன்சன் பதில் பேசவில்லை.

ஹெர்மாஸ், நிதானமாக நடந்து வாசற்படியை அடைந்தான். பழுதடைந்து, சாயம் மங்கிப் போயுள்ள கதவு, முன் பகுதிகளைக் கூர்மையாகப் பார்த்தான். பிறகு, தன் கால் சட்டைப் பையிலிருந்து கூர்மையான எதையோ எடுத்து சாவித்துவாரத்தில் நுழைத்துத் திருகினான்! சட்டெனக் கதவு திறந்து கொண்டது!

"உள்ளே போவது தவறாயிற்றே– பாருங்கள் ஹெர்மாஸ்–" என்று இழுத்தான் ஆன்சன்.

ஆனால், அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் உள்ளே போய்விட்டான். வேறு வழியில்லாமல் ஆன்சனும் உள்ளே போக வேண்டியதாயிற்று.

"என்ன அழுக்கு, ஒழுங்கீனம்! அவள் வீட்டை சுத்தமாகவே வைத்துக் கொள்ள மாட்டாள் போலிருக்கிறது. மகா கேடு கெட்டவளாகத்தான் இருக்க வேண்டும்."

ஆன்சன் பதிலே பேசவில்லை.

ஹெர்மாஸ் அங்குமிங்கும் அலைந்தான். எதை எதையோ எடுத்து சோதித்தான். மேசை மேலிருந்த டைப்ரைட்டர், காகிதங்களையெல்லாம் நிதானமாகப் பார்த்தான்.

"ஓ, இவள் எழுத்தாளி போல இருக்கிறது. அல்லது பர்லோதான் எழுத்தாளரா?"

"எனக்குத் தெரியாது. அவர்களுடைய சொந்த விஷயத்தில் தலையிடுவது நமக்கு நல்லதல்ல," என்றான் ஆன்சன்.

ஆனால், ஹெர்மாஸ் கவலைப்படாமல், மேசைமேலிருந்த காகிதங்களை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்!

பிறகு, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தான். ஐந்து நிமிடம் படித்த பிறகு, அவன் முகம் மாறியது.

"நாம் இங்கே அதிக நேரம் தங்கி இருப்பது தவறு," என்றான் ஆன்சன்.

'பேசாதே' என்று அடையாளம் காட்டிக் கையை உயர்த்தினான் ஹெர்மாஸ்.

"சும்மா இருங்க! நான் சோதனையிட்டுக் கொண்டிருக்கிறேன். பிடிக்காவிட்டால், வெளியே காரில் போய் உட்கார்ந்து கொண்டு காத்திருங்கள். இல்லாவிட்டால் தோட்டத்தைச் சுற்றி வந்து ரசித்துக் கொண்டிருங்கள்." என்று மறுபடியும் படிக்க ஆரம்பித்தான். கடைசியில் அவற்றைக் கத்தையாய் எடுத்து மடித்துக் கோட்டுப் பையில் வைத்துக் கொண்டான்!.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்றான் ஆன்சன் அதிர்ந்து போய்!

ஹெர்மாஸ் கண்ணைச் சிமிட்டினான்.

"மட்டாக்ஸ் சாதாரண ஆளல்ல. வீட்டைச் சோதனை இடு என்று உத்தரவிட்டார். அதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்பது இப்போது புரிகிறது" என்று சொல்லி விட்டு, கோட்டுப் பையைத் தட்டிக் காட்டினான். பிறகு, "அவள் எழுதிய சிறுகதை இது. இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியை எப்படி ஏமாற்றுவது என்பதுதான் கதையின் சாரம்! எப்படி? கதையில் அவளுக்கு ஒரு கள்ளக் காதலன். அவன் விமான நிலையத்தில் டிக்கட் கொடுப்பவன். எப்படி? இது மட்டாக்சுக்கு ரொம்பப் பிடிக்கும்! காதாசிரியைக்கு இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியை ஏமாற்ற வேண்டும் என்ற யோசனை இருந்திருக்கிறது என்பது ரசமான விஷயம் இல்லையா? அவளது மனநிலை முக்கியமான அம்சம்!"

ஆன்சன் அதிர்ந்து போனான்!

"அதெப்படி. அது கற்பனைக் கதை. குற்றக் கதை எழுதுவோர் எல்லாம் குற்றவாளிகளா?" என்று ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தான்.

ஹெர்மாஸ் அவனை மேலே பேசாமல் தடுத்தான். எழுந்து போய் ஹால் முழுவதையும் கவனமாக சோதிக்க ஆரம்பித்தான். ஆன்சனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சுவரில் மாட்டியிருந்த சான்றிதழ் அவன் கண்ணில் பட்டுவிட்டது. ஹெர்மாஸ் அதைக் கவனமாகப் படித்தான். பிறகு, "ஓகோ, பர்லோ, துப்பாக்கி சுடுவதில் நிபுணரா? முதல் பரிசே வாங்கியிருக்கிறாரே?" என்றான்.

"அதனால் நமக்கு என்ன? நாம் புறப்படுவோம். யாராவது பார்த்துவிட்டால் வம்பு."

"பயப்படாதீர்கள். அலட்டிக் கொள்ளாமல் அப்படி உட்காருங்கள் ஆன்சன்!' என்று சொல்லிவிட்டு, மேலும் மேசை, கப்போர்டு ஆகியவற்றின் இழுப்பறைகளைத் திறந்து பார்க்க ஆரம்பித்தான்.

கடைசியில், அந்தத் துப்பாக்கிப் பெட்டி அவன் கையில் அகப்பட்டுவிட்டது!

ஹெர்மாஸ் பெட்டியை வெளியில் எடுத்தான்! திறந்தான்!

"துப்பாக்கிப் பெட்டி... உள்ளே துப்பாக்கி இல்லை! தோட்டாக்கள் இருக்கின்றன- சுத்தப்படுத்தும் பஞ்சு முதலியவை உள்ளன. ஆனால் துப்பாக்கி இல்லை- எங்கே போய்விட்டது?" என்றான் ஹெர்மாஸ்!

ஆன்சனுக்கு குப்பென்று வியர்த்தது!

"என்னையா கேட்கிறீர்கள்?" என்றான் ஆன்சன். ஹெர்மாஸ் பதில் சொல்லாமல் ஒரு புன்முறுவல் பூத்தான்!

"இல்லை ஆன்சன். நான் எனக்கு நானே பேசிக் கொள்கிறேன். நீங்கள் குழப்பமடைய வேண்டாம். வெளியில் போய், தோட்டத்தை சுற்றிப் பார்த்துக் கொண்டிருங்கள். எனக்கு இங்கே நிறைய ரசமான விஷயங்கள் இருக்கின்றன" என்றான் ஹெர்மாஸ்!

ஆன்சன் பேசாமல் போய் சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

"நான் இங்கேயே இருக்கிறேன். ஏதாவது உதவி, உங்களுக்குத் தேவைப்பட்டால்..."

ஹெர்மாஸ், ஆன்சன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாமல், அடுத்த அறைக்குள் நுழைந்தான்.

அடுத்த சில வினாடிகளில் அவன் மாடிப்படி ஏறிச் செல்லும் ஓசை கேட்டது!

9 ஒன்றரை மணி நேரத்திற்குப் பிறகு, ஹெர்மாஸும், ஆன்சனும், பர்லோ வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். கார் ப்ரூ டவுனை நோக்கி விரைந்தது.

வழியில் ஹெர்மாஸ் எதுவும் பேசவில்லை. ப்ரூ டவுனை நெருங்கிய பிறகு பேச ஆரம்பித்தான்.

"மட்டாக்ஸ் உங்களுக்குப் பெரிய இடைஞ்சலான ஆளாகத் தென்படுகிறார். ஆனால் அவர் சாதாரண ஆளல்ல. ஒரு தீர்க்க தரிசன சக்தியுடையவர். நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அவர் யூகம் தவறாகிவிடுவதே இல்லை. ஒரு சிக்கலான விவகாரம் நம் கையில் இருக்கிறது. ஒரு அற்ப சம்பளக்காரன், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு இன்ஸ்யூர் செய்த போதே அவருக்கு சந்தேகம் வந்திருக்கிறது. அவர் சந்தேகப்படிதானே நடந்திருக்கிறது? வீட்டைப் பார்த்தோமே! எதற்காக அவ்வளவு பெரிய தொகைக்கு அவர் இன்ஸ்யூர் செய்ய வேண்டும்?"

தெரியாது என்பதுபோலத் தோளை ஆசைத்தான் ஆன்சன். பிறகு, "சொந்தமாக மலர்த்தோட்டம் போடப் போவதாக என்னிடம் சொன்னார். இதெல்லாம் மட்டாக்ஸிடம் சொல்லியிருக்கிறேன். நான் பர்லோவை வற்புறுத்தி பாலிசி எடுக்க வைக்கவில்லை," என்றான், உணர்ச்சியற்ற குரலில்.

"ஏதோ பெரிய திட்டம் போட்டிருக்கிறார் என்றுமட்டும் தெரிகிறது. ஐம்பதாயிரம் அற்பத்தொகையல்ல," என்றான் ஹெர்மாஸ்.

"தோட்டத்தைப் பார்த்தீர்களே. அதை அபிவிருத்தி செய்யத் திட்டம் போட்டிருக்கலாம். அவரே முதல் பிரிமியத்தைப் பணமாகக் கட்ட முன் வரும்போது நான் மறுக்க முடியுமா என்ன?" என்றான் ஆன்சன்.

ஹெர்மாஸுக்கு வியப்பு!

"என்ன! பணமாகக் கொடுத்தாரா?"

"ஆமாம்."

"இந்த மாதிரி ஒரு வீட்டை வைத்திருப்பவன் கையில் அவ்வளவு தொகை இருக்குமா என்ன? அதிசயம்தான்!"

"நீங்கள் சாதாரண விஷயத்தைக்கூட பெரிய மர்மமாக ஆக்கிவிடுகிறீர்கள். அவர் என்னிடம் பணம் கொடுத்தார். அவரிடம் அவ்வளவு பணம் ஏது, எப்படி வந்தது என்று நான் கவலைப்படவேண்டுமா என்ன?"

ஹெர்மாஸ் ஆன்சனை உற்றுப் பார்த்தான். பிறகு யோசித்தான்.

"நீங்கள் சொல்வது சரிதான். சரி, விடுங்கள். அந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்லுங்கள். எந்த மாதிரியான பெண் அவள்?"

"எனக்குத் தெரியாது. ஒரு தடவைதான் அவளைப் பார்த்திருக்கிறேன்- அழகாக இருந்தாள்- இளம் வயது- நான் அதிகம் கவனிக்கவில்லை."

"இரண்டுபேரும் எப்படி, ஒழுங்காக, ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தினார்களா?"

"ஆமாம். அப்படித்தான் தெரிந்தது."

"உண்மையாகவா? எதைக் கொண்டு அப்படிச் சொல்கிறீர்கள்?"

ஆன்சனுக்கு 'திக்' கென்றது! ஜாக்கிரதை என்று உள்ளுணர்வு எச்சரித்தது. ஏதாவது உளறி மாட்டிக் கொள்ளக் கூடாது. ஹெர்மாஸ், மட்டாக்ஸின் தலைமைத் துப்பறிவாளர், என்று ஆன்சன் நிதானித்தான்.

"எனக்குத் தெரியாது. எனக்கு அப்படித் தோன்றியது. அவ்வளவுதான். பர்லோ அவளைப்பற்றிப் பேசியதிலிருந்து நான் யூகித்துக் கொண்டேன்"

"உங்களை முட்டாளாக்குகிற அளவுக்கு அவர் புத்திசாலி மாடியில் உள்ள அறைகளைப் பார்த்திருந்தால் தெரியும்!" என்று சொல்லி விட்டு, ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் ஹெர்மாஸ்.

"என்ன! என்னை முட்டாளாக்கினாரா? என்ன சொல்கிறீர்கள்?" என்று பதறினான் ஆன்சன்.

"அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழவே இல்லை. எல்லாம் வெளிவேஷம். இருவருக்கும் படுக்கை அறை தனித்தனியே. அந்த அழுக்கு விரிப்பு பல மாதங்களாக மாற்றக்கூட இல்லை. நம்ம ஆள் இருக்காரே, அதாவது இறந்துவிட்டாரே, பர்லோ, அவர் ஒரு 'பர்வர்ட்'. புத்திகெட்ட காமுகன். அந்த ஆள் தன் படுக்கை அறையில் வைத்திருக்கிற புத்தகங்களைப் பார்த்தால், தலை மயிர் குத்திட்டு நிற்கும்! ஆசாமி 'நார்மல்' ஆளே அல்ல! அவர்களுக்குள் உடலுறவே இல்லை. நூறு டாலர் பந்தயம் வேண்டுமானாலும் கட்டுகிறேன்",

"சரி. இருக்கலாம். நான் நினைத்தது தவறாக இருக்கலாம். அதனால் என்ன?"

"வீட்டைப் பார்க்கவில்லை? இப்படி எந்தப் பெண்ணாவது தன் வீட்டை வைத்திருப்பாளா? பன்றிக் குடிசை மாதிரி! கணவனை நேசிக்கும் எந்தப் பெண்ணும் வீட்டை இப்படி வைத்திருக்க மாட்டாள். அவள் ஒரு முயற்சிகூட செய்ததாகத் தெரியவில்லை."

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவளுக்கு வீட்டு அலங்கார விவகாரம் எல்லாம் தெரியாது என்று நினைக்கிறேன்."

"சரி. பார்ப்போம். மட்டாக்ஸிடம் உள்ள அவளைப் பற்றிய தகவல் குறிப்புகளைப் பார்த்தால் எல்லாம் தெரிந்துவிடும்."

ஹெர்மாஸ் மறுபடியும் ஒரு சிகரட்டைப் பற்றவைத்தான்.

"அது என்ன அறிக்கை என்று தெரியவில்லையே!"

"அவர் காட்டவில்லை. ஆனால், அதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்."

"அதைப் பார்க்க வேண்டும்."

"எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்படவேண்டாம். இன்ஸ்யூர் செய்வது உங்கள் வேலை. அதை நீங்கள் நன்றாகவே செய்கிறீர்கள். மற்ற விவகாரம் எல்லாம் எங்களுடையது."

ஐந்து நிமிடத்திற்குப் பிறகு, கார், ஓட்டல் மார்ல்பரோ முன்பு வந்து நின்றது.

ஆன்சன் வேலை இருக்கிறது என்று கழற்றிக் கொண்டான். விட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு.

மாலை ஆறு மணிக்கு சந்திப்பதாக விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஓட்டலுக்குள் ஹெர்மாஸ் வருவதை லாலி பார்த்தாள். உடனே தெருவைக் கடந்து, ஓட்டலுக்குள் நுழைந்தாள். ஹெர்மாஸ் சாவியை வாங்கிக் கொண்டு, தன் அறைக்குத் திரும்பும்போது, அவள், ரிசப்ஷன் கவுண்டருக்குச் சென்று, "ஹாய், டாம்!" என்று ரிசப்ஷனிஸ்டிடம் நெளிந்தாள்.

அவன், "ஹலோ! பேபி! உனக்கு என்ன வேண்டும்?" என்றான்.

"இப்போது மேலே போனாரே, யார் அந்த ரோமியோ?" என்று கேட்டுவிட்டு, ஒரு டாலர் நோட்டை, கைப்பையிலிருந்த எடுத்தாள்.

டாம், அந்த நோட்டைப் பார்த்தான். அவன் முகம் மலர்ந்தது.

"அவர் உனக்கு சம்பந்தமில்லாதவர் லாலி. அவர் பெயர் ஸ்டீவ் ஹெர்மாஸ். நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி துப்பறிவாளர்," என்றான் அவன்.

அவள் புருவங்கள் மேலே உயர்ந்தன.

"அப்படியானால் போலீசா?"

"அந்த மாதிரிதான். பர்லோ கொலையை விசாரிக்க வந்திருக்கிறார்."

"அவர் போலீசா?"

"அப்படியும் சொல்லலாம்."

தேங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு, ஓட்டலை விட்டு வெளியே விரைந்தாள், டாலர் நோட்டை அவன் கையில் திணித்து விட்டு.

டாக்டர் ஹென்றி, ப்ரூ டவுன் ஆஸ்பத்திரியின் சர்ஜன். இன்ஸ்பெக்டர் ஜென்சனையும், ஹெர்மாஸையும் அவர் வரவேற்றார். அலுவலக அறைக்கள் மூவரும் அமர்ந்தார்கள்.

ஜென்சன், ஹெர்மாஸை டாக்டருக்கு அறிமுகப் படுத்தினார். பிறகு, "இவரது இன்ஸ்யூரன்ஸ் கம்பனியில்தான் பர்லோ ஆயுள் காப்பீடு எடுத்திருந்தார்..."

ஹெர்மாஸ் உடனே குறுக்கிட்டான். "இருங்கள். இருங்கள். என்னைப் பற்றி டாக்டர் தவறாக எடுத்துக் கொள்ளப் போகிறார்... நான் இன்ஸ்பெக்டருடன் இதைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறேன். கம்பெனிக்காக நான் எல்லாவற்றையும் சரி பார்க்க வேண்டும். முக்கியமாக பர்லோ மரணம் பற்றி. அவர் ஐம்பதாயிரத்திற்கு ஆயுள் காப்பீடு எடுத்திருக்கிறார். பத்து நாள் ஆகிறது. அதற்குள் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கிறது. சூழ்நிலை விதிவிலக்காக இருக்கலாம். ஆனால், தொகை பெரிதாக இருப்பதாலும், உடனே கொலை நிகழ்ந்திருப்பதால், எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது எங்கள் கடமை. பணம் கேட்பது நியாயமான அடிப்படையில்தானா என்பதை நாங்கள் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது," என்றான் ஹெர்மாஸ்.

டாக்டர் உயரமான மனிதர். தலை வழுக்கையாக இருந்தது. அவர் புருவங்களை நெறித்துக் கொண்டார்.

"நீங்கள் சொல்வதற்கும், எனக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார்.

"பர்லோவின் மனைவி உண்மையாகவே தாக்கப்பட்டு கற்பழிக்கப் பட்டாரா என்பதை நாங்கள் உறுதிப் படுத்த வேண்டியிருக்கிறது. அதற்கான சான்றிதழையும் நீங்கள் தரவேண்டும்," என்றான் ஹெர்மாஸ்.

"தாராளமாகத் தருகிறேன். இவள் பயங்கரமாகத் தாக்கப்பட்டது உண்மை. கற்பழிக்கப்பட்டதும் உண்மை. அடி பலம். தாடை பெயர்ந்து விட்டது. நான் விளக்கமாக வேண்டுமானாலும் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். இவள் பாவம், பயங்கரமான அனுபவத்தில் அதிர்ச்சியடைந்திருக்கிறாள்," என்றார் டாக்டர்.

ஹெர்மாஸூம், இன்ஸ்பெக்டரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நன்றி, டாக்டர். அதுதான் எங்களுக்கு வேண்டும். அவளிடம் இப்போது பேசிப் பார்க்கலாமா?" என்றான் ஹெர்மாஸ்.

"பேசலாம். நான் உங்களை அழைத்துப் போகிறேன். சுருக்கமாக முடித்துக் கொள்ள வேண்டும். நிலைமை மிகவும் மோசம். அவளால் அதிகம் பேச முடியாது. மேலும், அதிர்ச்சியும் அடைந்திருக்கிறாள்," என்றார் டாக்டர்.

"அப்படியே செய்கிறோம். இப்போது எனக்குத் தெரிய வேண்டியது, கொலைகாரனின் அடையாளங்கள். பாக்கியைப் பிறகு பேசிக் கொள்கிறோம்," என்றார் இன்ஸ்பெக்டர்.

மூவரும் எழுந்தார்கள்.

டாக்டர் அவர்கள் இருவரையும் முதல் மாடிக்கு அழைத்துச் சென்றார்.

அவளது அறைக்குள் நுழைந்தார்கள். வழக்கமான மருத்துவ நிலைய அறை. வழக்கமான கருவிகள் காணப்பட்டன. படுக்கையில் அவள் படுத்திருந்தாள்.

இருவரையும் சற்றுத் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு டாக்டர் படுக்கை அருகில் சென்றார்.

"மிஸஸ் பர்லோ! இன்ஸ்பெக்டர் ஜென்சன் உன்னிடம் பேச விரும்புகிறார். உன்னை அதிகம் சிரமப் படுத்த வேண்டாம் என்று கேட்டிருக்கிறேன். பேசமுடியுமா?" என்று கேட்டார் அவர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில் ஹெர்மாஸூம், ஜென்சனும் அவளையே ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவளுடைய முகத்தின் இடது பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இடது கண் திறக்க முடியாமல் பாதியளவே திறந்திருந்தது. அது வீங்கியிருந்தது.

வாயோரம் தோல் கிழிந்திருந்தது. முகத்தில் பலமாக அடிக்கப்பட்டிருக்கிறாள் என்று தெரிந்தது.. அதில் போலித்தனம் எதுவும் இல்லை.. அடி பலம்.. அவ்வளவு கோரமாக அடிபட்டிருந்தும்கூட, அவள் அழகானவள், என்பதற்கான அடையாளங்கள் தெரிந்தன.. இல்லை.. 'அழகு' என்ற சொல் பொருத்தமில்லை.. கிளர்ச்சியூட்டும் அழகு என்று சொல்ல வேண்டும்.. கவர்ச்சி.. உடல் கவர்ச்சி..

"பரவாயில்லை.. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.. நான் அவருடன் பேசுகிறேன்", என்றாள் அவள்.

இன்ஸ்பெக்டர் முன்னால் நகர்ந்தார்.

"நீ சரியாக இல்லையம்மா. உன்னை இந்தச் சமயத்தில் தொந்தரவு செய்வதற்காக நான் வருந்துகிறேன். உன்னைத் தாக்கிய ஆளின் அடையாளம் தெரியவேண்டும். சொல்ல முடியுமா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

மெக் சற்று நேரம் கண்களை மூடி மௌனமாக இருந்தாள். பிறகு கண்களைத் திறந்தாள்.

மேசை மேல் இருந்த பூத்தொட்டியில் ரோஜா மலர்கள் கொத்தாக சொருகப்பட்டிருந்தன.

"ரோஜா மலர்கள் உனக்கு வந்து சேர்ந்தால், அவன் கைது செய்யப்படவில்லை என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று ஆன்சன் சொன்னது நினைவிற்கு வந்தது.

"அவன் குள்ளமாக, தடியாக இருந்தான். தலை சுத்தமாக வழுக்கை."

"ஓ! அதே ஆள்தான்," என்றார் ஜென்சன். "ஆமாம் அதே ஆள்தான். மிஸஸ் பர்லோ! அவன் தலை வழுக்கை என்பது எப்படித் தெரிந்தது?" என்றார், தொடர்ந்து.

அவள் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள். சிறிது மௌனம். பிறது, "கலவரம் நடந்தபோது, அவனுடைய தொப்பி கீழே விழுந்துவிட்டது. அப்போது தெரிந்தது," என்றாள்.

"என்ன உடை உடுத்தியிருந்தான் என்பதைக் கொஞ்சம் ஞாபகப் படுத்திச் சொல்ல முடியுமா?"

"கருப்புக் கோட்டு. கருப்புத் தொப்பி."

ஜென்சன் தலையசைத்தார். அவருக்குத் திருப்தி!

"ஓ.கே. அம்மா. ஓய்வெடுத்துக் கொள். உன்னை இப்போது தொந்தரவு செய்ய நான் விரும்ப வில்லை. நிம்மதியாகப் படுத்துக் கொள்!"

அப்போது, ஹெர்மாஸ் தான் நின்றிருந்த இடத்திலிருந்து சற்று முன்னால் நகர்ந்து சென்றான். "மிஸஸ் பர்லோ! நீங்கள் ஒரு விஷயத்தில் எங்களுக்கு உதவி செய்யலாம். எதற்காக நீங்களும், கணவரும் ஜேசன்ஸ் கிளென் இடத்திற்குச் சென்றீர்கள்?" என்று கேட்டான்.

அவளது நீலக் கண்கள் சட்டெனத் திறந்து கொண்டன. அவள் ஹெர்மாஸை உற்றுப் பார்த்தாள்.

"ஏனென்றால்... ஏனென்றால்... அவர்தான் அங்கே போக வேண்டும் என்றார். அன்று எங்கள் திருமண நாள். முதலாண்டு. அவர் அன்று மிகவும் பரவசப்பட்டவராக இருந்தார். அவர்தான் என்னை அங்கே அழைத்துச் சென்றார்," என்றாள். பிறகு, சட்டென முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டு தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

டாக்டர் ஹென்றி முன்னால் வந்தார். போதும் ஐயா. இவளைத் தொந்தரவு செய்யாதீர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும்", என்று, இன்ஸ்பெக்டரையும், ஹெர்மாஸையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்தார்.

கதவருகில் வந்ததும் ஹெர்மாஸ் திரும்பிப் பார்த்தான். அவள் அப்படியே முகத்தை மூடிய படி அசையாமல் படுக்கையில் கிடப்பது தெரிந்தது.

"அதே ஆள்தான். அவன் மறுபடியும் ஏதாவது இப்படி செய்வதற்குள் பிடித்துவிட்டால் நல்லது" என்றார் ஜென்சன்.

"கொலையுண்ட பிலிப் பர்லோவின் உடலையும் ஒரு முறை பார்த்தால் நல்லது. அதனால் அந்த மனுஷனுக்குத் தொந்தரவு ஒன்றும் இருக்காதே" என்று சொல்லி மெல்லச் சிரித்தான் ஹெர்மாஸ்.

"அந்த உடலை எதற்குப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டார் ஜென்சன்.

"இந்த அழகியை வசப்படுத்தித் திருமணம் செய்து கொண்ட அந்த சாமர்த்தியசாலியின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசைதான்!" என்றான் ஹெர்மாஸ்!

சவக் கிடங்குக் காவலன், ஒரு தடித்த நீக்ரோ. சட்டென மேல் துணியை விலக்கினான்.

"பாருங்கள் மிஸ்டர்– பார்க்கிற மாதிரி இல்லை" என்றான்.

இன்ஸ்பெக்டர் ஜென்சன் முன்பே பார்த்திருப்பதால் வாசற்படியிலேயே நின்று கொண்டார். ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, பொறுமையிழந்தவராய் புகைத்துக் கொண்டிருந்தார்.

ஹெர்மாஸ் பர்லோவின் சவத்தைப் பார்த்தான். சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, நீக்ரோவின் பக்கம் திரும்பி, தலையசைத்து விட்டு, ஜென்சன் பக்கம் திரும்பினான்.

"இந்த ஆளைக் கொன்ற துப்பாக்கித் தோட்டாவைப் பற்றிய பரிசோதனை அறிக்கை வந்து விட்டதா?" என்று கேட்டான்.

"இல்லை. இன்னும் வரவில்லை– ஏன்?"

"எப்போது அந்த அறிக்கை கிடைக்கும்?"

"இப்பொழுதே தயாராக இருக்கும் என்று நினைக்கிறேன்."

"எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது... சோதித்துப் பார்க்க வேண்டும். அந்த அறிக்கை தயாராகி விட்டதா பாருங்கள் இன்ஸ்பெக்டர்."

டாக்டரின் அறைக்குத் திரும்பியதும், இன்ஸ்பெக்டர், பரிசோதனைச் சாலைக்கு போன் செய்தார். பதிலுக்குக் காத்திருந்தார்.

'அவ்வளவு கவர்ச்சியான பெண்ணை என்ன மாயம் செய்து, பர்லோ திருமணம் செய்து கொண்டார்' என்ற சிந்தனையில் மூழ்கியிருந்தான் ஹெர்மாஸ். அதை ஜென்சனிடமும் தெரிவித்தான்.

பெண்களே அப்படித்தான். அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை கணித்துச் சொல்லவே முடியாது" என்றார். அதற்குள் போனில் மறுபக்கத்திலிருந்து செய்தி வந்தது. ஹெர்மாஸைப் பேசாமலிருக்கச் சொல்லிக் கையசைத்துவிட்டு, செய்தியைக் கேட்டார்.

"ஓ.கே. நன்றி. நான் வருகிறேன்," என்று சொல்லிப் போனை வைத்தார். ஹெர்மாஸை உற்றுப் பார்த்தார்.

"உங்களுக்கு எப்படி சந்தேகம் வந்தது? சுடப்பட்ட இரண்டு பேரும், வேறுவேறு துப்பாக்கிகளால் சுடப்பட்டிருக்கிறார்கள். இரண்டுமே .38 துப்பாக்கிகள் என்றாலும், வேறு வேறானவை... அதிசயமாகத்தான் இருக்கிறது!"

மாலை ஆறுமணிக்குப் பிறகு, ஆன்சன் சில போன்களை செய்துவிட்டு, காரை எடுத்துக் கொண்டு மார்ல்பரோ ஓட்டலுக்குப் போனான். காரை விட்டிறங்கி அதைப் பூட்டும்போது, இன்ஸ்பெக்டர் ஜென்சனும், ஹெர்மாஸும் இந்த நேரம் மெக்கைப் பார்த்துவிட்டிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான். அவள் தான் நினைத்தபடி சரியாகவே பேசியிருப்பாள் என்று நினைத்தான். பிறகு, அவளுக்குப் போன்

செய்து தெரிந்து கொள்ளலாம் என்ற நினைப்பு வந்தாலும், அது ஆபத்தானது என்ற எண்ணமும் கூடவே வந்தது.

அவளைப் பற்றி தகவல் அறிக்கை பற்றி ஹெர்மாஸ் சொன்னானே, அதில் என்னதான் இருக்கும்? தான் அப்பழுக்கில்லாதவள், போலீஸ் விவகாரம் எதுவும் இல்லாதவள் என்று தன்னிடம் சொன்னதெல்லாம் பொய்யாக இருக்குமோ? அவள் பூர்விகத்தில் பல காதலர்கள் இருந்திருப்பார்களோ? அதெல்லாம் மட்டாக்ஸுக்குத் தெரிந்திருக்குமோ? அவளை நினைக்கும் போது, அவள் பர்லோ மாதிரி ஒருவனைத் திருமணம் செய்து கொண்டிருப்பதால், நிச்சயம் இரகசியக் காதலர்கள் இருக்கக் கூடும் என்று அவனுக்குச் சந்தேகம் வந்தது. அவர்கள் அன்பாகக் குடும்பம் நடத்திவருவதாக ஹெர்மாஸிடமும், இன்ஸ்பெக்டரிடமும் வாய்தவறிச் சொன்னது தவறு என்று அவனுக்குத் தோன்றியது. அவர்கள் தனித்தனி அறைகளில் வாழ்ந்து வருவதை மறந்து அப்படி உளறியது எவ்வளவு பெரிய தவறு என்று அவன் நினைத்துக் கொண்டான்.

"ஹலோ! ஜானி"

குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் ஆன்சன்.

லாலி பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்! அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவளது கண்கள் ஒளி வீசின.

"ஹலோ!" என்று பதிலுக்குச் சுருக்கமாகச் சொன்னான் ஆன்சன்.

அவளிடம் பேசும் மனோநிலையில் அவன் இல்லை.

"மன்னிச்சுக்க. எனக்கு அவசர வேலை இருக்கிறது... இப்பொழுதே நேரமாகிவிட்டது," என்று எழப்போனான்.

அவன் தோளை சட்டெனப் பிடித்தாள். லாலி.

"அதெல்லாம் வேண்டாம். இந்தப் பேச்சை விடுங்கள். இன்றைக்கு இரவு நான் உங்கள்கூடத்தான் இருப்பேன். என்னை

எங்காவது அழைத்துப் போங்கள். உங்களுக்குத்தான் நிறையப் பணம் கிடைத்திருக்குமே. அதை எனக்காகச் செலவழித்தால் என்ன?" என்றாள்.

ஆன்சன் அவள் பிடியிலிருந்து கைகளை உதறி விடுவித்துக் கொண்டான்.

"போ! எங்கேயாவது போய், யாருடனாவது சுற்று" என்று சொல்லிவிட்டு, அவளைக் கடந்து விரைந்தான். தெருவைக் கடந்து, எதிரில் உள்ள ஹோட்டல் அறைக்குச் சென்றான்.

லாலி அசையாமல் நின்று, அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உருவம் மறைந்ததும் அவள் உதடுகளில் ஒரு இறுகிய புன்முறுவல் தோன்றியது. பிறகு, அவள் வெளியே சென்று, நடைபாதை வழியாக இன்னொரு 'பார்' இருக்குமிடத்தை நோக்கி நடந்தாள்.

மட்டாக்ஸ் மேசைமேல் குவிந்திருந்த கோப்புகளைத் தள்ளினார். அவை தரையில் சரிந்தன. அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு, தன் முன்னாலுள்ள கோப்பைப் பிரித்துப் பார்க்கத் துவங்கினார்.

ஷா உள்ளே தலையை நீட்டி, 'ஹெர்மாஸ் வந்திருக்கிறார் சார்!' என்று அறிவித்தாள்.

மட்டாக்ஸ் சில வினாடிகள் ஒன்றுமே பேசவில்லை. கையிலிருந்த பாலிசியைக் கீழே வைத்துவிட்டு ஷாவையே உற்றுப் பார்த்தார். அவர் பார்வையில் அவள் பட்டதாகவே தெரியவில்லை. ஏதோ வெற்றிடத்தைப் பார்ப்பது போலப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, சட்டென விழித்துக் கொண்டது போல, " ஹெர்மாஸா? வரச் சொல்.. வரச் சொல்!"

உள்ளே திரும்பிய ஷா, ஹெர்மாஸிடம், "ஞானி இப்போதுதான் தியானத்திலிருந்து, விடுபட்டு விழித்திருக்கிறார். போய்ப் பாருங்கள்," என்றாள்.

ஹெர்மாஸ் அவருடைய அறைக்குள் நுழைந்தான். அவருக்கு முன்னால் ஒரு நாற்காலியில் அமர்ந்தான். மணி, காலை ஒன்பதே கால். இரவெல்லாம் பயணம் செய்து வந்து சேர்ந்திருக்கிறான். தூக்கக் கலக்கம்.

மட்டாக்ஸ், நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்தி, நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

"என்ன நடந்தது?" என்றார்.

"நிறைய. ஆனால், எல்லாவற்றையும் சொல்ல இப்போது நேரமில்லை. உங்களிடம் சில விஷயங்கள் பற்றி ஆலோசனை செய்யவே அவசரமாக வந்தேன். பர்லோவும் அவர் மனைவியும், கணவன் மனைவியாக வாழவில்லை. தனித்தனி அறைகளில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்த மனிதன் ஒரு மனநோயாளி. சாடிஸ்ட். மகாமட்டமான காம வெறியன். அவன் அறையில் நான் பார்த்த புகைப்படங்கள் எனக்கு அதிர்ச்சி தந்தன. பர்லோவின் மனைவி மெக் தாக்கப்பட்டுக் கற்பழிக்கப்பட்டது உண்மைதான். டாக்டர் சான்றிதழ் என்னிடம் இருக்கிறது. மற்ற விஷயங்கள் இதில் இருக்கின்றன", என்று ஒரு காகிதத்தை மேசைமேல் போட்டான் ஹெர்மாஸ்.

"தாக்குதலில் போலித்தனம் எதுவும் இல்லை. உண்மையாகத்தான் நடந்திருக்கிறது. அந்த வீட்டிற்கும் சென்று பரிசோதனை செய்தேன். அவள் தன் வீட்டை, பன்றிக் குடிசை மாதிரி வைத்திருக்கிறாள். பர்லோவின் சடலத்தையும் பார்த்தேன். குள்ளமான அழகற்ற மனிதன். அவள் அவனை எப்படித்தான் திருமணம் செய்து கொண்டாளோ தெரியவில்லை," என்று தொடர்ந்தான் ஹெர்மாஸ்.

மட்டாக்ஸ் நாற்காலியில் சாய்ந்து கொண்டார். அவரது சிவந்த ரப்பர் முகத்தில் லேசான புன்முறுவல் தோன்றியது.

"சொல்– தொடர்ந்து சொல்–"

"அவள் சிறுகதை எழுதும் பழக்கம் உடையவள். மட்டம். ஒரு கதையில் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியை எப்படி ஏமாற்றுவது

என்பதைப் பற்றி எழுதியிருக்கிறாள்," என்று சொல்லிவிட்டு, ஒரு கத்தைக் காகிதங்களைத் தன் கோட்டுப் பையிலிருந்து எடுத்து மேசை மேல் வைத்தான். "நேரமிருக்கும்போது படித்துப் பாருங்கள். நல்ல திட்டம்தான் இந்தக் கதையில் இருக்கிறது", என்றான்.

மட்டாக்ஸ் தலையசைத்தார்.

"பர்லோ, துப்பாக்கி சுடுவதில் நிபுணன். சொந்தமாக ஒரு துப்பாக்கி இருந்திருக்க வேண்டும். ஒரு .38 துப்பாக்கி. அது பெட்டியில் இல்லை. ஆனால், அந்த ஆள் சுடப்பட்டதும் .38 துப்பாக்கியால்தான்! இன்னொரு கொலை பெட்ரோல் பங்கில் நடந்ததே... அதுவும் .38 துப்பாக்கியால்தான். ஆனால் தோட்டாக்கள் ஒத்துப் போகவில்லை. வேறு வேறு துப்பாக்கிகள் என்று தோன்றுகிறது. மெக் கொலைகாரனைப் பற்றிய அடையாளங்கள் சொன்னாள். அது பத்திரிகையில் வந்திருப்பதைப் போலவே இருக்கிறது.. அதாவது, இதற்கு முன்னால் இரண்டு காதலர்களைத் தாக்கியவனைப் போலவே இருக்கிறது."

மட்டாக்ஸ் உம் கொட்டிவிட்டு, மேசை இழுப்பறையைத் திறந்தார். ஒரு கோப்பை வெளியில் எடுத்தார். அதை ஹெர்மாஸிடம் நீட்டினார்.

"இதை எடுத்துக் கொண்டு போய் படித்துப் பார். பிறகு வா, பேசுவோம்.. நீ அங்கே அருமையான காரியம் செய்திருக்கிறாய்." என்றார்.

ஹெர்மாஸ் கோப்பை வாங்கிக் கொண்டான்.

"இன்னும் ஒரு விஷயம்," என்று சொல்லி மேலே எழுந்தான்." "நம் ஆள் ஆன்சன், அவசரப்பட்டுப் பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுத்திருக்கிறான். அந்தப் பெண்ணிற்குப் பணம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறான். நாம் அதைத் தடுத்து நிறுத்துவதானால் சரியான காரணம் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் கம்பெனிக்குக் கெட்ட

பெயர் உண்டாகிவிடும். அவள்மீது பொது மக்களின் அனுதாபம் நிறைய இருக்கிறது," என்றான்.

மட்டாக்ஸின் முகத்தில் ஒரு நரிச்சிரிப்பு தோன்றி மறைந்தது.

"அந்தக் கோப்பில் உள்ள விஷயங்களைப் படித்துப் பாரப்பா. அதில் உள்ள விஷயங்கள் வெளியானால், நம் கம்பெனிக்குக் கெட்ட பெயர் வராது. அவளுக்குத்தான் வரும். இது ஒரு போலி நாடகம் என்றுதான் இன்னும் நான் நம்புகிறேன். சீக்கிரம் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும். நீ தொடர்ந்து உன் வழியில் விசாரித்துக் கொண்டே இரு... இதுவரை நீ தந்த தகவல்கள் அருமையானவை!" என்று பாராட்டினார் மட்டாக்ஸ்!

ஜோ டுங்கன் ஆஜானுபாகுவான ஆள். பெரிய தொந்தி. அவனது மேசைமேல் ஆறு தொலைபேசிகள். வட்டி வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருந்தது.

தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தபோது எதிரில் அவனது பிரதம கையாள் செய்லர் நின்று கொண்டிருந்தான்.

"என்ன, பணம் எப்போது கொடுக்கப் போகிறாய்?" என்று செய்லரைக் கேட்டான் ஜோ.

செய்லர் அதைப் பற்றிக் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், எதிரிலிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு, ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தான்

"இதோ பார், செய்லர்! நீ இன்னும் ஐந்து நாட்களில் இருபத்தைந்தாயிரம் டாலர் கொடுக்காவிட்டால், என்னுடன் பங்குதாரனாக சேர்ந்து கொள்ள முடியாது. வேறு ஆட்கள் பணத்துடன் தயாராகக் காத்திருக்கிறார்கள். நான் மேலும் உனக்காகத் தாமதப்படுத்த முடியாது. ஐந்து நாள் கெடு. உன்னால்

முடியாமற் போனால், நீ வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்," என்றான் ஜோ.

பிறகு, ஒரு பெரிய சுருட்டை எடுத்து, அதன் ஒரு முனையைத் தன் காவியேறிய பற்களால் கடித்து குப்பைக் கூடையில் துப்பிவிட்டு, "பணம் எங்கிருந்து உனக்குக் கிடைக்கப் போகிறது?" என்று கேட்டான்.

செய்லர் சிரித்தான்.

"கிடைக்கும். கடன் வாங்கியாவது கொடுத்து விடுவேன்," என்றான்.

"உனக்கு யார் கடன் கொடுக்கப் போகிறார்கள்?"

"கொடுப்பார்கள். கடனாக அல்ல. அன்பளிப்பாக். உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இதைப் பாருங்கள்!" என்று, 'ப்ரூ டவுன் கெசட்' நாளிதழை ஜோவின் மேசைமேல் போட்டான்.

"என்ன அது?"

"படித்துப் பாருங்கள்! அவளை யார் கற்பழித்தால் எனக்கென்ன? அவள் கணவன் செத்துப் போனான். ஐம்பதாயிரத்திற்கு இன்ஸ்யூர் செய்திருக்கிறான். அவளுக்கு அது உடனே கிடைத்துவிடும். ஆளுக்குப் பாதி நாங்கள் பிரித்துக் கொள்ளப் போகிறோம். அதனால், கவலைப் பட வேண்டாம். பணம் வந்துவிடும்," என்று அலட்சியமாக எழுந்தான் செய்லர்.

சிகரட் பிடித்தபடியே அவன் வெளியேறினான். அவன் போனபிறகு ஜோ கால்களை நீட்டி, பின்னால் சாய்ந்து கொண்டு சற்று யோசித்தான். பிறகு, மேசைமேலிருந்த தொலைபேசியை எடுத்தான்.

**10** ஹெர்மாஸ் ப்ரூ டவுனுக்குத் திரும்பினான். புறப்படு முன் மட்டாக்ஸுடன் விரிவாகப்பேசிவிட்டே வந்தான். அவன் இப்போது தயாராகவும், தெளிவாகவும் இருந்தான்.

ஓட்டலில் பெட்டியை வைத்துவிட்டு, ப்ரூ டவுனுக்கு வெளியே, சில மைல் தூரத்தில் தனியே இருந்த உணவு விடுதிக்கு வந்தான்.

மாலை நேரம். மின்விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அந்த விடுதி அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இளைஞர்கள் குடித்துக் கொண்டும், சாப்பிட்டுக் கொண்டும் கலகலப்பாக இருந்தார்கள். ஒரு ஓரத்தில் இசைக்குழு இனிமையாக வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹெர்மாஸ் மதுப் பகுதிக்குச் சென்றான். அங்கே அதிகக் கூட்டமில்லை. பார் பணியாளன் தடியான நீக்ரோ. சிரித்த முகம். ரெஸ்டாரன்டில் ஒரு தனிமேசையை ஒதுக்க முடியுமா என்று ஹெர்மாஸ் கேட்டான்.

"ஓ. ஏற்பாடு செய்து தருகிறேன். இப்போது என்ன குடிக்கிறீர்கள்?" என்று கேட்டான் அவன்.

ஹெர்மாஸ் பார் மேசைமேல் கைகளை ஊன்றிக் கொண்டு, உயரமான ஸ்டூலில் அமர்ந்தபடி, 'ஸ்காச், ஐஸ்' என்று சொன்னான். "மாலைப் பத்திரிகை இருந்தால் கொடு" என்றும் கேட்டான்.

அந்த நீக்ரோ, மதுவும், மாலை நாளிதழும் தந்தான். ஹெர்மாஸ் நாளிதழைப் புரட்டினான். பர்லோ கொலையைப் பற்றித்தான் முதல் பக்கத்தில் செய்திகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

சில வினாடிகளில் அந்த நீக்ரோ வந்து, "பத்து நிமிடத்தில் டேபிள் ரெடியாகிவிடும் சார்" என்று சொல்லிவிட்டு ஹெர்மாஸ் அந்தக் கொலை வழக்கைப் படிப்பதைப் பார்த்து, "ரொம்ப பயங்கரம் சார். அது நடப்பதற்கு முன்னால், இருவரும் இங்கே வந்துவிட்டுத்தான் போனார்கள்," என்றான்.

ஹெர்மாஸ் நாளிதழை மேசை மேல் வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

"அப்படியா? அந்தக் குன்றின் உச்சிக்கு அவர்கள் ஏன் போனார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முதல் தடவை கொலை நடந்த பிறகு, தனியாக அந்த மாதிரி இடங்களுக்குப் போகாமல் இருக்க வேண்டாமா?" என்றான் ஹெர்மாஸ்.

"ஆமாம் சார். அப்படித்தான் சார் அவரும் சொன்னார். அங்கெல்லாம் இருட்டில் தனியே போக வேண்டாம் என்றுதான் தடுத்தார். ஆனால், அந்தப் பெண் கேட்கவே இல்லை! பத்து இருபது நிமிடம் அவர்கள் சண்டை போட்டுக் கொண்டார்கள். அவர் எவ்வளவோ சொன்னார்... என்ன செய்வது! அவள் பிடிவாதம் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள். என்ன ஆச்சு பார்த்தீர்களா?"

"என்ன! அவர் போக மறுத்தாரா?"

"ஆமாம் சார்! அவர்கள் குடிக்கத்தான் இங்கே வந்தார்கள். அப்போது இரவு ஒன்பதரை மணி இருக்கும். இருவருக்கும் காரசாரமான வாக்குவாதம். அவர் ஒரு தரம் 'நாசமாய்ப்போ!' என்று கூட சொல்லிவிட்டார். அவருக்கு அவ்வளவு கோபம். அந்தப் பெண் மிகவும் தொந்தரவு செய்துதான் அங்கே கூட்டிக் கொண்டு போனாள்- அ- போவதற்கு முன்னால், அவள் லேடீஸ் ரூமுக்குப் போனாள்... அவர் பாவம், பத்து நிமிடம் பொறுமையிழந்து காத்துக் கொண்டிருந்தார். அந்த இடத்திற்குப் போக அவருக்குப் பிடிக்கவே இல்லை. பாவம்! வேண்டா வெறுப்பாகப் போய், உயிரையே இழந்துவிட்டார்."

"அப்படியா! அந்தப் பெண் அவர் சொன்னதைக் கேட்டிருக்க வேண்டும்..." என்று சொல்லிவிட்டு, விஸ்கியைக் குடித்தான் ஹெர்மாஸ். அவன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது. அந்த நீக்ரோவுக்கு கணிசமாக 'டிப்ஸ்' கொடுத்துவிட்டு, ரெஸ்டாரன்ட் பகுதியை நோக்கி நகர்ந்தான் ஹெர்மாஸ்.

அங்கே 'லேடீஸ் ரூம்' அவன் கண்களில் பட்டது.

அங்கே நின்றிருந்த காவல்காரன் ஹெர்மாஸைப் பார்த்ததும் விறைப்பாக நின்றான்.

ஹெர்மாஸ் அவனை நெருங்கினான்.

"இங்கே தொலைபேசி இருக்கிறதா?" என்று கேட்டான். ஹெர்மாஸின் கையில் ஒரு ஐந்து டாலர் நோட்டு இருந்தது. நோட்டைப் பார்த்ததும், எலும்பைக் கண்ட நாயைப் போல காவலன் கண்கள் விரிந்தன.

"ஆமாம் சார்."

"நேரடியாகக் பேச முடியுமா, அல்லது மெயின் ஸ்விட்ச் போர்டு மூலமாகத்தான் வெளியில் பேசமுடியுமா?"

"ஸ்விட்ச் போர்டு மூலமாகத்தான், வெளியில் தொடர்பு கொள்ள முடியும்."

"ஆபரேட்டரிடம் பேச விரும்புகிறேன்," என்று சொல்லி விட்டு தன் விசிட்டிங் கார்டை அவனிடம் நீட்டினான். அவன் அதைப்பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தான். ஹெர்மாஸ் அவனுக்கு ஐந்து டாலர் நோட்டைக் கொடுத்தான். அவன் அதை சட்டென வாங்கி மறைத்துக் கொண்டான்.

"வாருங்கள் சார்! நான் அழைத்துப் போகிறேன்," என்று பவ்வியமாக முன்னால் நடந்தான் அந்த ஆள்.

ஒரு சிறிய அறைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அங்கே மஞ்சள் கூந்தல் தோள்களில் புரள, ஒரு இளம் பெண் டைப் அடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கைக் கெட்டும் தூரத்தில் ஸ்விட்ச்போர்ட் இருந்தது.

அவர்கள் உள்ளே நுழைந்ததும், அவள் டைப் அடிப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகம் அழகாக இருந்தது.

"இவர் ஒரு உதவி கேட்கிறார். உன்னால் உதவ முடியும்," என்று அவளிடம் சொல்லிவிட்டு, ஹெர்மாஸ் பக்கம் திரும்பி, "கேளுங்கள் சார்!", என்றான் காவலன். பிறகு, அவன் அந்த அறையை விட்டு வெளியே போய் விட்டான்.

ஹெர்மாஸ் அங்கிருந்த மேசையின் விளிம்பில் அமர்ந்தான். பிறகு தன் மணிபர்ஸை வெளியில் எடுத்தான். தாராளமாக செலவு செய்யலாம் என்று முடிவு செய்து கொண்டான். சரியான தகவலுக்கு எவ்வளவு கொடுத்தாலும், அந்தக் கணக்கை மட்டாக்ஸ் ஏற்றுக் கொள்வார் என்பது அவனுக்குத் தெரியும்.

அவன் என்ன செய்கிறான் என்பதை அவள் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் ஒரு ஐந்து டாலர் நோட்டைப் பர்ஸிலிருந்து உருவினான்.

"ஒரு தகவல் வேண்டும். ஒரு சின்னத் தகவல். இங்கே வெளியே போகும் 'கால்'களைப் பதிவு செய்து வைக்கும் பழக்கம் உண்டா?" என்று கேட்டான்.

"உண்டு. நீங்கள் என்ன துப்பறியும் ஆளா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம். போன செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி, இரவு சுமார் ஒன்பதரை மணிக்கு ஒரு பெண் வெளியே பேசியிருக்கிறாள், இந்த ரெஸ்டாரன்டிலிருந்து..."

அவள் சட்டென எழுந்து, ஸ்விட்ச்போர்டு அருகில் சென்று, ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்தாள். அதை உடனே பிரித்து செப்டம்பர் 30 ஆம்தேதிப் பதிவுகளை பார்த்தாள்.

"இருக்கு- ஒரு 'கால்' வெளியில் போயிருக்கிறது. அதை செய்தது ஒரு பெண். அந்தக் 'கால்' ஒன்பது நாற்பதற்கு வெளியில் போயிற்று. போன் செய்த நம்பர்- எல்ம்வுட் - 68009."

"அதற்கு முன்னும் பின்னும் வெளியில் போன 'கால்'களின் நம்பர்களைத் தரமுடியுமா?"

அவள் அவற்றை ஒரு துண்டுக் காகிதத்தில் குறித்துக் கொடுத்தாள். ஹெர்மாஸ் நன்றி சொல்லி ஐந்து டாலர் நோட்டை அவளுக்குக் கொடுத்தான்.

அவள் அழகாகச் சிரித்துவிட்டு, அந்த நோட்டை சட்டென வாங்கி மறைத்துக் கொண்டாள்.

அதற்குப் பிறகு ஹெர்மாஸ் வெளியில் போய், போலீஸ் தலைமை நிலையத்திற்கு போன் செய்தான். இன்ஸ்பெக்டர் ஜென்சன் இன்னும் வரவில்லை என்ற தகவல் கிடைத்தது.

"ஒரு உதவி வேண்டும். எல்ம்வுட் 68009 என்ற தொலைபேசி யாருக்குச் சொந்தமானது என்பதைத் தெரிந்து சொன்னால் நல்லது," என்றான் ஹெர்மாஸ்.

சில நிமிடங்களில் தகவல் கிடைத்தது.

"அந்த போன், ஒரு பொதுத் தொலைபேசி, நெடுஞ்சாலை 57-ல் - எ3 பகுதியில் உள்ளது" என்றான் அந்த கான்ஸ்டபிள்.

இரவு பத்து மணி சுமாருக்கு, ஹெர்மாஸ், இன்ஸ்பெக்டர் ஜென்சனைப் பார்க்கப் போனான். போலீஸ் ஸ்டேஷன் 'வழக்கமான வாசனை'களுடன் இருந்தது. ஜென்சன் மிகவும் களைத்துப் போனவராய் நாற்காலியில் அமர்ந்தபடி யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தார்.

ஹெர்மாஸ் வருவதைப் பார்த்ததும், " சரி.. சரி.. அப்படியே செய்... அப்புறமா கூப்பிடு!" என்று சொல்லிப் போனைக் கீழே வைத்தார். ஒரு கொட்டாவி விட்டபடி பின்னால் சாய்ந்தார்.

"என்ன வேண்டும் ஹெர்மாஸ்?"

"நான், எங்கள் தலைவர் மட்டாக்ஸைப் பார்த்துவிட்டு வருகிறேன். அவர் உங்களுக்குத் தம் அன்பைத் தெரிவிக்கச் சொன்னார். எப்படி இருக்கிறது உங்கள் வேலை?"

ஜென்சன் உடனே பதில் சொல்லாமல், தன் பிடரியைக் கைகளால் தேய்த்துவிட்டுக் கொண்டார். மிகவும் சிரமப்பட்டு அலைந்து களைத்திருப்பது நன்றாகத் தெரிந்தது.

"சில நாட்களுக்கு முன்பு, என்னுடைய ஆள் ஒருவன் கால்டெக்ஸ் பெட்ரோல் பங்க் கொள்ளையின்போது சுட்டுக் கொல்லப்பட்டான். அதே துப்பாக்கியால்தான் பர்லோவும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்! பரிசோதனைச் சாலை அறிக்கை வந்திருக்கிறது," என்றார் இன்ஸ்பெக்டர்.

ஹெர்மாஸ், நீளமாக மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டான்.

"சரி, அதனால், இப்போது என்ன மாற்றம் ஏற்படப் போகிறது?" என்று கேட்டான்.

"இந்த வட்டாரத்தில் உள்ள எல்லா வழக்கைத் தலை ஆட்களையும் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். கொலைக்குக் காரணமான துப்பாக்கியையும் தேடிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய எல்லா ஆட்களும் இதைத்தான் மும்முரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்," என்றார் இன்ஸ்பெக்டர். அவர் முகத்தில் லேசாகப் புன்முறுவல் படர்ந்தது.

"பெட்ரோல் பங்க் கொள்ளையில் பணம் எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது?"

"மூவாயிரத்து சொச்சம்."

"அவனுடைய அடையாளம் தெரிந்ததா?"

"ஆமாம்.. அவன் பர்லோவை சுட்ட ஆள் அல்ல. அவன் உயரமானவன்," என்று சொல்லிவிட்டு, ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். பிறகு தொடர்ந்தார். "கொஞ்சம் சிக்கல் இருக்கிறது. மர்ல்பரோ ஓட்டலிருந்து ஒரு ஓவர் கோட்டும் தொப்பியும் திருடப் பட்டதாகத் தகவல் வந்தது. தொப்பி ஸ்விஸ் மாடல். கயிறு, இறகு உள்ளது... கொள்ளையடித்தவனும் அதே மாதிரி தொப்பிதான்

அணிந்திருக்கிறான். யாரோ போகிற போக்கில் வெளியூர்க்காரன் செய்த வேலை என்றுதான் முன்பு நினைத்தேன். இப்போது வேறு யோசனை தோன்றுகிறது."

"அவனைப் பற்றிய அடையாளத்தை சொன்னது யார்?"

" பெட்ரோல் பங்க் கிளார்க்."

"ஒருவேளை பயத்தால் அவன் தவறாக அடையாளம் சொல்லியிருக்கலாம். அந்தக் கொள்ளைக்காரன், நம்முடைய செக்ஸ் கொலைகாரனாகவும் இருக்கலாம். இரண்டு சம்பவங்களிலும் ஒரே துப்பாக்கி பயன்படுத்தப் பட்டிருப்பதால் இப்படி நினைக்கத் தோன்றுகிறது."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது," என்றான் ஹெர்மாஸ்.

இன்ஸ்பெக்டர் புகையை ஊதியபடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

"கொலை நடந்த குன்றின் உச்சிக்கு, நாளை, என்னை, நீங்கள் அழைத்துப் போனால் நல்லது. எனக்கு ஒரு யோசனை தோன்றிக் கொண்டிருக்கிறது. உங்கள் நேரத்தை வீணடிப்பதாக நினைக்க வேண்டாம். அங்கே போனால், ஒரு விஷயம் தெளிவாகும் என்று தோன்றுகிறது," என்றான் ஹெர்மாஸ்.

இன்ஸ்பெக்டர் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"நானும்கூட அங்கே போய் வர வேண்டும் என்றுதான் நினைத்தேன். சரி. போய்வரலாம். நான் அழைத்துப் போகிறேன். என்ன விஷயமாகப் போக வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

ஹெர்மாஸ் பதில் பேசவில்லை. எழுந்து நின்றான்.

"நாளைக்குப் பார்க்கலாம், இன்ஸ்பெக்டர்," என்று புறப்பட்டான்.

ஜேசன்ஸ் கிளென்' குன்றிற்குச் செல்லும் மண் சாலையில் கார் சென்று கொண்டிருந்த போது, "நிறுத்துங்கள் சார்!" என்றான் ஹெர்மாஸ். இன்ஸ்பெக்டர் காரை நிறுத்தினார்.

"இந்தப் பகுதியை நீங்கள் சோதனையிடுவதற்கு முன் கொஞ்சம் கவனமாகப் பார்த்துவிட விரும்புகிறேன்," என்றான் ஹெர்மாஸ்.

இருவரும் இறங்கி நடந்தார்கள். சற்று தூரத்தில் ஒரு காரின் டயர் அடையாளம் தெரிந்தது. ஹெர்மாஸ் அதையே உற்றுப் பார்த்தான்.

"இந்த டயர் அடையாளத்தையும், மேலே இருக்கும் கார் அடையாளத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டால் பல விஷயங்கள் தெளிவாகிவிடும் என்று நினைக்கிறேன்.. இதைப் பாருங்கள்... இங்கே டயர் தேய்ந்ததன் அடையாளம் இது. கைரேகை மாதிரி இது. இதைப் பாருங்கள். மறுபடியும் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வீர்கள், அல்லவா?"

இன்ஸ்பெக்டர் அதைக் குனிந்து கூர்மையாகப் பார்த்தார். பிறகு தலையசைத்தார்.

" சரி.. அடையாளம் கண்டு கொள்ள முடியும். இது எதன் அடையாளம்?"

"பிறகு சொல்கிறேன். முதலில் குன்றின் உச்சிக்குப் போகலாம் வாருங்கள்" என்றான் ஹெர்மாஸ்.

இருவரும் காருக்குத் திரும்பினார்கள். இன்ஸ்பெக்டர் காரை, குன்றின் உச்சிக்குச் செலுத்தினார்.

குன்றின் உச்சியில் அரைமணி நேரத்திற்கு மேல் கூர்ந்து டயர் அடையாளங்களைப் பார்த்தார்கள்.

கடைசியில், இன்ஸ்பெக்டர்தான் அந்த டயர் அடையாளத்தைக் கண்டு பிடித்தார்.

"ஹெர்மாஸ்! இங்கே வாருங்கள்! இதோ! அதே டயர் அடையாளம்!" என்றார்.

ஹெர்மாஸ் அருகில் சென்று பார்த்தான். தேய்ந்த டயரின் அடையாளம் பளிச் சென்று தெரிந்தது.

"இதுவேதான் இப்போது என் துப்பறியும் திறமையைக் காட்டுகிறேன். பார்த்தீர்களா, கீழே பார்த்த டயர் அடையாளமுள்ள அதே கார், மேலே வந்து, இந்த மறைவான இடத்தில் நின்றிருக்கிறது. சௌகரியமான இடம் இது. புதர் மறைவு. ஒரு காரையே மறைத்துவிடும் புதர் இது பாருங்கள்!" என்றான் ஹெர்மாஸ்.

"நீங்களே பேசிக் கொண்டால் எப்படி? எனக்கும் விபரம் தெரிய வேண்டாமா? இது கொலைகாரன் வந்த காரின் அடையாளமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அது சரியானதாகத்தான் இருக்க வேண்டும். திருமதி பர்லோவை, 'மலைக்குன்றுக்கு ஏன் தனியாகப் போனீர்கள்?' என்று நான் கேட்டது ஞாபகம் இருக்கிறதா? அதற்கு அவள் என்ன பதில் சொன்னாள்? அன்று அவர் மிகவும் உற்சாகமான 'மூடில்' இருந்தார். அதனால்தான் 'அங்கே போனோம்,' என்று சொன்னாள் அல்லவா?"

"ஆமாம். அப்படித்தான் சொன்னாள்."

"ஆனால் நடந்தது அதுவல்ல. அவள் சொன்னது பொய்! நான் நேற்று கோர்ட் ரோடு, ரெஸ்டாரண்டின் சப்ளையரிடம் பேசினேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? செத்துப்போன பர்லோ அங்கே போகவே விரும்பவில்லையாம். இவள்தான் அங்கே போயே தீர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறாள். இருவருக்கும் இது சம்பந்தமாக வாய்ச் சண்டையே நடந்திருக்கிறது. இவள் ஒரே பிடிவாதமாக வற்புறுத்தியிருக்கிறாள்– அப்புறம் வேண்டா வெறுப்பாக அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். இவள் அதற்குப் பிறகு பாத்ரூமுக்குப்போய், அங்கிருந்து வெளியில் யாருக்கோ போன் செய்திருக்க வேண்டும் என்பது என் எண்ணம். அந்த நேரத்தில் வெளியில் போன 'கால்'களை சோதித்துப் பார்த்தேன்

'எல்ம்வுட் - 68009' என்ற நம்பருக்கு ஒரு போன் போயிருக்கிறது. அது எந்த இடம் என்ன தெரியுமா? நெடுஞ்சாலையில் நாம் வரும் வழியில் பார்த்த பொதுத் தொலைபேசி. அவள் தன் காதலனுக்குத் தகவல் கொடுத்திருக்கிறாள். அவன் வந்து அவள் கணவனைக் கொலை செய்திருக்கிறான். இருவரும் சேர்ந்து திட்டமிட்ட கொலை இது. அவளுடைய காதலன் காரில் வந்து இங்கே தான் பதுங்கியிருக்கிறான்," என்றான் ஹெர்மாஸ்.

இன்ஸ்பெக்டர் முகத்தில் பெரும் குழப்பம் தோன்றியது.

"நீங்கள் சொல்கிறபடி பார்த்தால், அவளுடைய காதலன் பர்லோவை சுட்டுக் கொன்றுவிட்டு, அவளை கடுமையாகத் தாக்கிவிட்டு, கற்பழித்துவிட்டான் இல்லையா? என்ன கண்டு பிடிப்பு இது!"

"ஆமாம், இன்ஸ்பெக்டர். அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். எங்கள் தலைவர் மட்டாக்ஸ் என்ன சொன்னார் தெரியுமா? 'ஐம்பதாயிரம் கிடைக்குமானால் நானும்கூட அதற்குத் தயார்' என்றார்!"

"அதுசரி. ஒரு ஆண் அப்படிச் சொல்லலாம். ஆனால் ஒரு பெண்..."

"இன்ஸ்பெக்டர்... நாங்கள் உங்களைவிட ஒரு எட்டு முன்னால் போய்க் கொண்டிருக்கிறோம். அவளைப் பற்றி விரிவாக ஆராய்ந்திருக்கிறோம். 'டிரேசிங் ஏஜன்சி' என்ற நிறுவனம் அவளைப் பற்றிய ஏராளமான தகவல்களை எங்களுக்குக் கொடுத்திருக்கிறது. அதில் அவளுடைய பூர்வோத்திரம் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே இவள் கௌரவமான குடும்பப் பெண்போல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாள். இவள் திருட்டுக் குற்றத்திற்காக ஜெயிலுக்குப் போனவள்! விபசாரம் செய்து பிழைத்து வந்தவள்! இந்த மாதிரிப் பெண், காசுக்காக எதையும் தாங்கிக் கொள்வாள். மட்டாக்ஸ் இவளைப் பற்றி சரியாகத்தான் சொன்னார். ஐம்பதாயிரம் பணத்திற்கு அந்த அடியை அவள் வாங்கிக்

கொள்ளக் கூடியவள் . என்பதுதான் எங்கள் அபிப்பிராயம். அவளுக்கு கொலையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதற்கும், அவள்மீது எல்லாருக்கும் ஒரு அனுதாபம் ஏற்படுவதற்கும் இந்த நாடகம், காயம், கற்பழிப்பு எல்லாம் திட்டமிட்டு செய்யப்பட்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது," என்றான் ஹெர்மாஸ்.

"அந்த செக்ஸ் கொலைகாரன் இவளுடைய காதலன் என்றா சொல்கிறீர்கள்?"

"இல்லை. இவளுடைய காதலன்தான் கால்டக்ஸ் பெட்ரோல் பங்க் கொள்ளை அடித்தவன். செக்ஸ் கில்லர் செய்ததுபோல எல்லாரும் நினைக்கட்டும் என்பதற்காக இதைச் செய்திருக்க வேண்டும். உங்கள் ரோந்துப் போலீசைக் கொன்றதும், பர்லோவைக் கொன்றதும் ஒரே துப்பாக்கி என்பது என் அபிப்பிராயம்."

"ஐம்பதாயிரம் டாலர் சம்பாதிக்க விரும்பும் இவள் காதலன் எதற்காக, மூவாயிரம் டாலருக்காக பெட்ரோல் பங்க் கொள்ளை நடத்த வேண்டும்?"

ஹெர்மாஸ் பதில் சொல்லவில்லை. சற்று யோசித்தான்.

"நீங்கள் கேட்பது சரிதான். நல்ல கேள்வி இது. நாம் திறந்த மனதோடு இதை அணுக வேண்டும். பர்லோவின் மனைவி முதலில் ஒரு பொய் சொல்லியிருக்கிறாள் என்பது உறுதியாகிவிட்டது. அதாவது, குன்றின் உச்சிக்கு அவர் வற்புறுத்தித்தான் போனதாகச் சொன்னதைக் குறிப்பிடுகிறேன். அவளிடம் மறுபடியும் பேசிப் பார்க்கவேண்டும்... ஒரு தடவை பொய் சொல்ல ஆரம்பித்தவள், தொடர்ந்து பொய் சொல்வாள் என்பது என் கருத்து," என்றான் ஹெர்மாஸ்.

மருத்துவ நிலையத்தில் மெக் தன் படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

அப்போது, இன்ஸ்பெக்டர் ஜென்சனும், ஹெர்மாஸும் உள்ளே வந்தார்கள். அவர்களுடன் ஒரு நர்சும் வந்தாள்.

மெக்கின் இடது கண் இன்னும் கடுமையான நிலையில்தான் காணப்பட்டது. அவளைப் பார்த்ததும், அவளுடைய உடல் கவர்ச்சிதான் ஹெர்மாஸுக்கு உறுத்தலாகத் தெரிந்தது.

"மிஸஸ் பர்லோ! உங்களை மறுபடியும் தொந்தரவு செய்வது எனக்கு சங்கடமாகத்தான் இருக்கிறது. இன்னும் இரண்டு நாளில் குணமாகி வீடு திரும்பி விடுவீர்கள் என்று கேள்விப்பட்டேன்," என்றார் இன்ஸ்பெக்டர்.

மெக் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"ஆமாம்," என்றாள் சுருக்கமாக.

அவள் பதற்றமடைந்திருப்பதுபோல, ஹெர்மாஸுக்குத் தோன்றியது. இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் நின்று கொண்டு, கூர்மையாக அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான் அவன். இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்...

"நீங்களும், உங்கள் கணவரும், சம்பவம் நடந்த அன்று கோர்ட் ரோடு ரெஸ்டாரன்டில் சாப்பிட்டு விட்டு ஜேசன்ஸ் கிளென் குன்றுக்குப் போனீர்கள் சரிதானே?"

அவள் தலையசைத்தாள். 'ஆமாம்', என்றாள்.

"அவருடன் அங்கே போக உங்களுக்கும் விருப்பம்தானே?"

"இல்லை. அது பாதுகாப்பான இடம் அல்ல. வேண்டாம் என்று சொன்னேன். அவர்கேட்கவில்லை. என் பயத்தைக் கண்டு அவர் சிரித்தார். கொஞ்சம் அதிக உற்சாகமாக அவர் இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது... நானும் கூடத்தான்..."

"அங்கே போக வேண்டும். என்று சொன்னது அவரா அல்லது நீங்களா?"

அவள் அவரை வெறித்துப் பார்த்தாள். "அவர்தான்", என்றாள் சில வினாடிகளுக்குப்பின்.

"நீங்கள் குன்றின் உச்சியை அடைந்தபோது, அங்கே யாரையாவது பார்த்தீர்களா? அல்லது கார் ஏதாவது கண்ணில் பட்டதா?"

"இல்லை. நான்... இல்லை... அங்கே யாரையும் பார்க்கவில்லை. நாங்கள் மட்டும்தான் இருந்தோம்."

"நீங்கள் அங்கே போய் எவ்வளவு நேரம் ஆனபிறகு கொலைகாரன் வந்தான்?"

"ஐந்து நிமிடம் இருக்கும்- கொஞ்சம் கூட இருக்கலாம்."

"என்ன நடந்தது? சரியாகச் சொல்லுங்கள்?"

"நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். திடீரென வெடிச் சத்தம் கேட்டது. அவர்.... என் கணவர் குப்புறச் சாய்ந்தார். உடனே அந்த ஆள், என் முகத்திற்கு முன்னால் துப்பாக்கியை நீட்டி, 'கீழே இறங்கு!' என்று என்னை மிரட்டினான். நான் பயந்து போய்க் காரை விட்டு இறங்கினேன். இறங்கியதும் ஓட ஆரம்பித்தேன். அந்த ஆள் குள்ளமாக தடியாக இருந்தான். ஆனால், மிக வேகமாகப் பாய்ந்து வந்து என்னைப் பிடித்துவிட்டான். நான் திமிறினேன். அவனை அடித்தேன். அதில் அவனது தொப்பி எகிறி விழுந்தது. அப்போதுதான், அந்த ஆளின் முழு வழுக்கைத் தலை தெரிந்தது."

"நிச்சயமாக அவன் வழுக்கைத் தலையன் தானா? ஒரு வேளை வெள்ளை முடி, இருட்டில் அப்படித் தெரிந்திருக்கலாம் அல்லவா? அன்றைக்கு நிலா வெளிச்சமும் இருந்தது. அதனால் அப்படித் தெரிந்திருக்கக் கூடும் அல்லவா?"

"இல்லை. அவன் தலையில் முடியே இல்லை."

"அவனை மறுபடியும் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?"

"ஓ- சொல்லமுடியும். நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும்."

"அப்புறம் என்ன நடந்தது?"

"நான் போராடினேன். அவன் என்னைப் பலமாக அடித்தான். தன் துப்பாக்கியால் என் முகத்தில் அடித்தான்- அப்புறம்... நான் மயங்கி விழுந்து விட்டேன்- நினைவு வந்த போது நான் ஆடை குலைந்து கிடப்பதை உணர்ந்தேன்- அவன்- அவன்.... என்னை... என்னை... என் முகம் வலித்தது... அவன் ஓடிவிட்டான் என்று தெரிந்தது- நான் காருக்குத் திரும்பினேன். என் கணவரைத் தொட்டேன்- அவர் உடல் சில்லிட்டிருந்தது. அவர் உயிர் போய்விட்டது என்பதை உணர்ந்தேன்- அவரை நகர்த்த முடியவில்லை. அவர் டிரைவிங் சீட்டில் இருந்தார். அதனால் காரை எடுக்க முடியவில்லை. நான் நடந்தே வந்தேன். நெடுஞ்சாலைக்கு வந்ததும் நான் விழுந்துவிட்டேன்... அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்கு நினைவில்லை. கண் விழித்தபோது, இந்த அறையில் இருப்பதை உணர்ந்தேன்."

இதுவரை, இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் இருந்து கேட்டுக் கொண்டிருந்த ஹெர்மாஸ் நகர்ந்து அவளுக்கு முன்னால் வந்தான். அந்தக் குறிப்புணர்ந்த இன்ஸ்பெக்டர் மெல்லப் பின்னால் நகர்ந்து கொண்டார்.

"மிஸஸ் பர்லோ! பத்து நாட்களுக்கு முன்னால் உங்கள் கணவர் ஐம்பதாயிரம் டாலருக்கு ஆயுள் இன்சூரன்ஸ் எடுத்திருக்கிறார். அதனால், நான் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. நான் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தவன். பெரிய தொகைக்கு இன்ஸ்யூர் செய்த பின், சட்டென மரணம் சம்பவித்தால் நாங்கள் விரிவாக விசாரிப்பது வழக்கம். இது உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று பேச்சை ஆரம்பித்தான் ஹெர்மாஸ்.

அவளுடைய முகத்தில் சந்தேகக் குறிதோன்றியது.

ஹெர்மாஸை அவள் வெறித்துப் பார்த்தாள்.

"எனக்குத் தெரியாது. என் கணவரை நான் இழந்து விட்டேன். அவ்வளவுதான்," என்றாள் அவள்.

"உங்களுக்கு அவர்மேல் மிகுந்த பிரியமா?"

"நிச்சயமாக.. ஏன்.. ஏன் அதைக் கேட்கிறீர்கள்?"

"நீங்களும், உங்கள் கணவரும், கணவன் மனைவியாக வாழ்வதில்லை என்பது உண்மை. இல்லையா?"

அவள் இன்ஸ்பெக்டரைப் பார்த்தாள். அவளுடைய கருநீலக் கண்கள் கண்ணாடிக் குண்டுகளாய் விறைத்தன.

"இந்த ஆளை போகச் சொல்லுங்கள் இன்ஸ்பெக்டர். உங்களுக்கு என்னைத் தெரியும். இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை," என்றாள் கோபத்துடன்.

"சரிதானம்மா! நீங்கள் என் கேள்விகளுக்கு பதில் சொல்லி யாக வேண்டும் என்று கட்டாயமில்லை. ஆனால், என் வேலை அது. நான் கேட்டுத்தான் ஆகவேண்டும்," என்று சொல்லி ஹெர்மாஸ் சற்று நிறுத்தினான். பிறகு, "உங்கள் கணவர் துப்பாக்கி சுடுவதில் பரிசு பெற்றவர். அவருடைய துப்பாக்கி, நீங்கள் குன்றின் உச்சிக்குப் போனபோது அவரிடம் இருந்ததா?" என்றான்.

மெக் திடுக்கிட்டாள்.

"இல்லை. அவரிடம் துப்பாக்கி இல்லை."

"அவர் வெளியே போகும்போது துப்பாக்கி எடுத்துப் போகும் பழக்கம் இல்லையா?"

அவள் தன் கண்களை மூடிக் கொண்டாள்.

"எனக்குத் தெரியாது," என்றாள்.

"வீட்டில் துப்பாக்கி இருக்கிறதா?" என்றான் ஹெர்மாஸ்.

அவள் சட்டெனக் கண்களைத் திறந்தாள்.

"நீங்கள் கேட்பது எனக்கு விளங்கவில்லை. இதற்கும் அவர் துப்பாக்கிக்கும் என்ன சம்பந்தம்?"

ஹெர்மாஸ் அலட்டிக் கொள்ளாமல், புன்முறுவல் பூத்தபடி பேசினான்.

"வீட்டில் துப்பாக்கி வைத்திருக்கிறாரா என்று கேட்டேன்."

அவள் சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

"அவர் அதை யாருக்கோ கொடுத்துவிட்டார் போல் தெரிகிறது. நீண்ட காலமாக அவர் சுடுவதே இல்லை."

இன்ஸ்பெக்டர் விழிப்படைந்தார்!

"யாருக்குக் கொடுத்தார்?" என்று கேட்டார்.

அவள் தயங்கினாள். தலையை அசைத்தாள்.

"எனக்குத் தெரியாது. கொடுத்துவிட்டேன் என்று மட்டும் சொன்னார். ஒரு வேளை விற்றிருக்கலாம்– எனக்கு அது பற்றித் தெரியாது."

"அது எப்போது?" என்று கேட்டான் ஹெர்மாஸ்.

"எனக்குத் தெரியாது... ஞாபகமில்லை..."

"மூன்று வாரத்திற்கு முன்பா? ஆறுமாதங்களுக்கு முன்பா? சுமாராக சொல்லலாம் அல்லவா?"

அவள் மறுபடியும் தயங்கினாள்.

"ஒன்பது மாதங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன். எங்கள் திருமணம் முடிந்த பிறகு என்று ஞாபகம்."

இன்ஸ்பெக்டர் ஏதோ சொல்ல வாயெடுத்தார், அதற்குள் ஹெர்மாஸ் குறுக்கிட்டு, "நன்றி மிஸஸ் பார்லோ. மறுபடியும் உங்களைத் தொல்லைப் படுத்த மாட்டோம். நீங்கள் சீக்கிரம் நலம் பெற வேண்டும்," என்றான்.

பிறகு, இன்ஸ்பெக்டரின் தோளின்மேல் கையை வைத்தான். அவர் அதைப் புரிந்துகொண்டு நகர்ந்தார்.

அவர்கள் போவதையே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நெஞ்சு 'திக்திக்' என அடித்துக் கொண்டது. அவளுக்குள் ஏதோ புரண்டது.

இன்ஸ்பெக்டரும், ஹெர்மாஸும் வெளியில் வந்தார்கள்.

"அவளை இதற்கு மேல் விரட்ட வேண்டாம். நாம் உடனே அவளுடைய காதலன் யார் என்பதைக் கண்டு பிடிப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் இப்போது என்னுடன் ஓட்டலுக்கு வாருங்கள். நான் அவளுடைய பூர்விகம் பற்றிய தகவல் அறிக்கையைக் காட்டுகிறேன்," என்றான் ஹெர்மாஸ்.

"என்னதான் மோசமான கடந்தகாலம் இருந்தாலும், அதனால் அவள் கொலை செய்யும் முயற்சியில் இறங்குவாள் என்று சொல்ல முடியாதே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஹெர்மாஸ் சிரித்தான்.

"மட்டாக்ஸ் யூகம்தான் சரியாகிக் கொண்டு வருகிறது", என்று சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டர் அருகில் காரில் ஏறி அமர்ந்தான்.

"அவளுக்கு ஒரு காதலன் இருந்தால், அவன், அவளுடைய வீட்டில் எந்த அறையை மிகவும் விரும்புவான் என்று நினைக்கிறீர்கள்?" என்று இன்ஸ்பெக்டரிடம் கேட்டான் ஹெர்மாஸ்.

"எனக்கு சொல்லத் தெரியவில்லை."

"அவள் வீட்டை வைத்திருக்கும் லட்சணத்தைப் பார்த்தீர்களே, ஒரே தூசும்தும்புமாய். அவள் காதலனின் கைரேகை நிச்சயம் ஒரு அறையில் இருக்க வேண்டும். உங்கள் கைரேகை ஆட்களை உடனே அனுப்பிப் பார்த்தால் நல்லது. அவள் மருத்துவ-நிலையத்திலிருந்து வீடு திரும்புவதற்குள் நம் சோதனைகளை எல்லாம் முடித்துக் கொள்ள வேண்டும்.

வெளியாருக்குத் தெரியாமல் செய்ய இதுதான் நல்ல நேரம். இவளுடைய பூர்விகம் போல, அவனுக்கும் ஒரு பூர்வ சரித்திரம் இருக்குமே. அதோடு, துப்பாக்கி வைக்கும் பெட்டியிலும் கைரேகை சோதனை செய்துவிட வேண்டும்."

இன்ஸ்பெக்டர் மௌனமாகக் காரை ஓட்டி வந்தார். ஓட்டலை அடைந்ததும், "நீங்கள் சொன்னது நல்லயோசனைதான். உடனே ஆட்களை அனுப்பிவிடுகிறேன்," என்றார்.

"இந்த ஊரில், துப்பாக்கி சுடும் பயிற்சிக் கழகத்தை நடத்துவது யார்? அந்த ஆளைப் பார்க்க வேண்டுமே" என்றான் ஹெர்மாஸ்.

"ஹாரி சேமூர். சைகாமூர் தெருவில் உள்ள துப்பாக்கிக் கிளப்பில் அவரைப் பார்க்கலாம். ஆமாம், அவர் எதற்கு?"

"கொஞ்சம் பேசிப் பார்க்க வேண்டும். கொஞ்சம் இருங்கள். அவளைப் பற்றிய தகவல் அறிக்கையைக் கொண்டு வந்து தருகிறேன்", என்று காரைவிட்டு இறங்கினான் ஹெர்மாஸ்.

ஹாரி சேமூர், பலசாலியான, கம்பீரமான மனிதர். சுமார் நாற்பது வயதுக்கு மேல் இருக்கும். ஹெர்மாஸைக் கை குலுக்கி வரவேற்றார்.

"பர்லோவின் கைத்துப்பாக்கி விஷயமாக உங்களிடம் பேச வந்தேன். ஒன்பது மாதங்களுக்கு முன்பு, அவர் அதை யாருக்கோ கொடுத்துவிட்டதாகக், கேள்விப் பட்டேன். யாருக்குக் கொடுத்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான் ஹெர்மாஸ்.

சேமூர்; சௌகரியமாகத் தன் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். அவர் முகத்தில் குழப்பம்.

"நீங்கள் சொல்வது தவறு என்று நினைக்கிறேன். அவர் தன் துப்பாக்கியை யாருக்கும் கொடுக்கவில்லை. போன வாரம்

கூட அவரிடம் இருந்ததை நான் பார்த்தேன். ஒன்றை நான் இரவல் வாங்கினேன்," என்றார் அவர்.

"அப்படியா? அப்படியானால் அவரிடம் வேறு துப்பாக்கி இருந்ததா?"

"ஆமாம். இரண்டு அருமையான துப்பாக்கிகளை அவர் வைத்திருந்தார். நான் தான் அவற்றை வாங்கிக் கொடுத்தேன். இரண்டும் ஒரே மாதிரியான துப்பாக்கிகள். .38 அளவு துப்பாக்கிகள்."

ஹெர்மாஸ், விரல்களால் தன் தலையைக் கோதியவாறு யோசித்தான்.

"ஒன்றை, நீங்கள் இரவல் வாங்கிக் கொண்டீர்களா?"

"ஆமாம். என்னுடைய நண்பர் ஒருவர், மயாமி நகரிலிருந்து வந்தவர், என் கூடத் தங்கியிருந்தார். அவர் துப்பாக்கி சுடுவதில் நிபுணர். அவருக்காக பர்லோவிடம் இரவல் வாங்கினேன். என்னிடம் .45 துப்பாக்கிதான் இருக்கிறது. ஆனால் என் நண்பர் 38ல் தான் வல்லவர். அதனால்தான் பர்லோவிடம் ஒன்றை இரவல் தரும்படிக் கேட்டு வாங்கினேன்."

"ஆனால், பர்லோ கொல்லப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, அதை அவரிடம் திருப்பியும் கொடுத்துவிட்டேன்," என்றார் சேமூர்.

ஹெர்மாஸ், நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டான். அந்த நாற்காலி கிறீச்சிட்டது. அவன் யோசித்தான்.

"மிஸ்டர் சேமூர்! உங்கள் போட்டி எங்கே நடந்தது?"

சேமூர் ஜன்னலுக்கு வெளியே சுட்டிக் காட்டினார்.

"அதோ, அந்த இடத்தில். அங்கேதான் நாங்கள் சுடும் பயிற்சி, போட்டி யெல்லாம் நடத்துவது."

ஹெர்மாஸ் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். குறிபார்த்து சுடும் பலகைகள் அங்கே தென்பட்டன.

"நாங்கள் இருவரும் பதினைந்து தோட்டாக்கள் சுட்டோம். ஆனால், நான்தான் 'ஜெயித்தேன்", என்றார் அவர், முகத்தில் மலர்ச்சியுடன்.

"சுடப்பட்ட தோட்டாக்களின் காலிப் பகுதியைத் தேடிக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான் ஹெர்மாஸ்.

"ஓ! தாராளமாக. நானும் நண்பரும் போட்டி நடத்திய பிறகு, சுடும் பயிற்சி எதுவும் இங்கே நடக்கவில்லை, காலி தோட்டாக்கள் அங்கேதான் கிடக்கும்."

"நல்லது. உங்கள் நண்பர் சுட்ட பலகை எது என்பதைக் காட்ட முடியுமா?"

"ஓ! காட்டுகிறேன்."

"கொஞ்சம் உங்கள் போனைப் பயன்படுத்திக் கொள்ளலாமா?"

"ஓ! பேசுங்கள்!"

ஹெர்மாஸ் மகிழ்ச்சியுடன், போனை எடுத்து போலீஸ் இன்ஸ்பெக்டருக்குப் போன் செய்தான்.

## 11

ஆன்சன், ப்ரூடவுனுக்கு இரண்டு போன்கால்கள் செய்ய வேண்டியிருந்தது. இரவு அங்கே போய் மார்ல் பரோ ஓட்டலில் தங்கிவிட்டு காலையில் பிரென்ட் நகருக்குத் திரும்பிவிடலாம் என்று திட்டமிட்டான்.

சந்தடி மிகுந்த நெடுஞ்சாலையில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, மெக்கிற்கு என்ன ஆயிற்று என்று யோசித்தான். சீக்கிரம் அவள் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிவிடுவாள். தான் கொடுத்திருந்த இன்ஸ்யூரன்ஸ் பாலிசி காகிதங்களை அழித்து விடுமாறு அவளிடம் சொல்லியிருந்தான்.

அவள் அதை நிச்சயமாக அழித்திருப்பாள். 50,000 டாலருக்கு எடுத்திருந்த பாலிசியை, தற்போது மெக்கிற்காக ஏற்பாடு செய்திருக்கும் வழக்கறிஞர் ஜேக் ஜேம்சன் என்பருக்கு அனுப்பியிருந்தான். பணம் வசூலிக்கும் காரியத்தை அவர் பார்த்துக் கொள்வார்.

அவனுடைய திட்டம் மிகச் சரியாக செயல்பட்டு வருவதாக ஆன்சன் நினைத்துக் கொண்டான். போலீசார், செக்ஸ் கொலைகாரனைத் தேடிக் கொண்டிருப்பார்கள் என்று ஆன்சன் நினைத்துக் கொண்டான். பத்திரிகைகளும் மெக்கின்மீது அனுதாபம் காட்டிக் கொண்டிருக்கின்றன. மட்டாக்ஸ் பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஒரே ஒரு விஷயம் மட்டும் அவனைக் கவலைப்பட வைத்தது. ஹெர்மாஸ் குறிப்பிட்ட, மெக்கைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்பு. அதில் என்னதான் இருக்கும்?

ப்ரூ டவுனை அடைந்ததும், போன் செய்த இருவரை சந்தித்துவிட்டு, ஓட்டலுக்கு வந்து சேர்ந்தான். அங்கே சாப்பிட்டு விட்டு வெளியே வரும்போது, எதிரில் ஹெர்மாஸ் வருவதைக் கண்டான்.

"வாருங்கள்! உங்களை சந்திக்க வேண்டும் என்று நினைத்தேன். கொஞ்சம் பேச வேண்டுமே," என்றான் ஹெர்மாஸ்.

ஆன்சன் அவனைக் கூர்ந்து பார்த்தான். அவனுடன் வரவேற்பு ஹாலுக்குச் சென்றான். இருவரும் ஒதுக்குப்புறமாக சோபாவில் அமர்ந்தார்கள்.

"என்ன விஷயம்?" என்று ஆன்சன் கேட்டுவிட்டு, வெயிட்டரிடம் காபி கொண்டு வரச் சொன்னான்.

"அதுதான், பர்லோ விவகாரம். மட்டாக்ஸ் சரியாகத்தான் சொன்னார். பெரிய புத்திசாலிதான் அவர். அவர் சொன்னது தப்பானதே இல்லை. இதில் சூது நடந்திருக்கிறது," என்றான் ஹெர்மாஸ்.

ஆன்சன் திடுக்கிட்டான். கோட்டுப் பையிலிருந்து சிகரட் பெட்டியை எடுத்து ஹெர்மாசிடம் நீட்டினான்.

இருவரும் பற்ற வைத்துக் கொண்டார்கள்.

"என்ன விஷயம் சொல்லுங்கள்."

ஆன்சனின் குரலில் தடுமாற்றமோ, நடுக்கமோ இல்லை.

வெயிட்டர் காபி கொண்டு வந்தான். அவன் கொடுத்துவிட்டுப் போன பிறகு, ஹெர்மாஸ், "இந்தப் பெண் இருக்கிறாளே, இவள் தன் கள்ளக் காதலனுடன் சேர்ந்து கொண்டு, திட்டமிட்டு தன் கணவனைத் தீர்த்துக் கட்டியிருக்கிறாள். செக்ஸ் கில்லர் செய்ததுபோலத் தோன்றும்படித் திட்டமிட்டிருக்கிறார்கள்," என்றான்!

எரியும் சிகரட் முனையை வெறித்துப் பார்த்தான் ஆன்சன். பதற்றமடையாதே, தடுமாறாதே என்று தனக்குத்தானே மனதில் சொல்லிக் கொண்டான். ஹெர்மாஸ் 'என்ன கண்டு பிடித்திருக்கிறான்? நான் எந்த இடத்தில் தவறு செய்திருக்கிறேன்? அப்படியொன்றும் செய்ததாக அவனுக்குத் தோன்றவில்லை.

"நான் இதை நம்பவேண்டும் என்கிறீர்களா? மட்டாக்ஸ் பணம் கொடுக்கக்கூடாது என்பதற்காக எதையாவது கற்பனை செய்து சொல்வதே வழக்கம்", என்றான் ஆன்சன்.

"இல்லை! நான் அவளது பூர்விகம் பற்றிய அறிக்கையைப் பார்த்தேன். நீங்கள் பார்த்ததில்லை. அவள் எதையும் செய்யக் கூடியவள். மட்டாக்ஸின் யூகம் எப்போதும் சரியாகவே இருக்கிறது".

ஆன்சனின் வாய் வரண்டுவிட்டது. சிகரட்டைக் கிண்ணத்தில் வைத்து நசுக்கினான்.

"என்ன இருக்கிறது அந்த அறிக்கையில்?" என்று கேட்டான்.

"அவள் ஜெயிலுக்குப் போனவள். விபசாரியாக வாழ்க்கை நடத்தி வந்தவள். டிரேசிங் ஏஜன்சி எல்லாம் விபரமாகக் கண்டு பிடித்து அறிக்கை தந்திருக்கிறது. விபசாரியாக இருந்த காலத்தில் எவனோ ஒருவனிடம் மயங்கி சம்பாதித்தையெல்லாம் அவனுக்கே கொடுத்திருக்கிறாள். அவன் யாரென்று தெரியவில்லை. அவன் அவளுடன்தான் வாழ்ந்து வந்திருக்கிறான். திருட்டுக் குற்றத்திற்காக மூன்று மாதம் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டு வெளியே வந்தபோது, அவளுடைய காதலன் காணாமல் போய்விட்டான். அப்புறம் பர்லோவை சந்தித்திருக்கிறாள்... மகா மட்டரகமான ஆள் பர்லோ. நடுத்தர வயது... இவளுடைய சாகசத்தில் விழுந்துவிட்டான். அப்புறம் கல்யாணம். அதற்கப்புறம் அந்தப் பழைய காதலனை அவள் சந்தித்திருக்க வேண்டும். அவர்கள் இரண்டு பேரும் திட்டமிட்டு பணத்திற்காக இதைச் செய்திருக்கிறார்கள் என்பது என் யூகம்."

ஆன்சனின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை.

"இதை உங்களால் நிருபிக்க முடியுமா?"

"முடியும்! என்னிடம் சில ஆதாரங்கள் அகப்பட்டிருக்கின்றன. வழக்கு மன்றம் போனால் என் ஆதாரங்கள் நிற்காது. ஆனால், மட்டாக்ஸ் விட மாட்டார். கடைசி வரை ஒரு கை பார்ப்பார். பணம் கொடுக்க மாட்டார்."

ஆன்சன் சோபாவில் பின்பக்கமாகச் சாய்ந்து கொண்டான்.

"அவள் என்னுடைய கிளையன்ட். நீங்கள் சொல்வது எனக்கு எவ்வளவு இடைஞ்சல் என்பது உங்களுக்குத் தெரியுமா? இது பிரபலமான விவகாரம். பத்திரிகைகளில் இதே பேச்சுத்தான். எல்லாரும் அவள்மேல் அனுதாபப்பட்டிருக்கிறார்கள். மட்டாக்ஸ் இப்போது நடுவில் புகுந்து, அவளுக்குக் கிடைக்கப் போகும் பணத்தைத் தடுத்தால் என் நிலைமை என்ன ஆவது? நான் எப்படித் தொடர்ந்து தொழில் செய்வது? நான் யாரையாவது அணுகிப் பேச முடியுமா? ஏதாவது எங்களுக்கு

நேர்ந்துவிட்டால், 'நீங்கள் பணம் கொடுக்கும் லட்சணம்தான் தெரிந்துவிட்டதே', என்று என்னை விரட்டியடிக்க மாட்டார்களா? சொல்லுங்கள்!"

"உண்மைதான். ஆனால், அதற்காகப் போலி ஆட்களுக்குப் பணம் கொடுத்துவிட முடியுமா?"

"போலியா இது! அவளுடைய பூர்விகம் மோசமானதாக இருப்பதால், அவளைக் கொலைகாரி என்று முடிவு செய்து விடுவதா? என்ன ஆதாரம் இருக்கிறது, அப்படிச் சொல்ல?"

"அவள் சொன்ன இரண்டு பொய்கள்! பர்லோ வற்புறுத்த அங்கே சென்றதாக அறிக்கைவிட்டிருக்கிறாள். அது பொய்! அவள்தான், தன் கணவனை வற்புறுத்தி அங்கே இழுத்துக் கொண்டு போயிருக்கிறாள். இதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அப்புறம் அவர்கள் இரண்டு பேரும் தனித்தனியேதான் படுத்து உறங்கி வந்திருக்கிறார்கள். பர்லோ அவள் சொன்னமாதிரி காதல் வசப்பட்ட ஆள் அல்ல. பர்வர்ட்! புத்திபேதலித்த காமுகன்! காமவெறியன்! குன்றின் உச்சிக்குத் தன் கணவனை அவள் வற்புறுத்தி அழைத்துப் போவதற்கு முன்பு அவள் தன் காதலனுக்கு போன் செய்திருக்கிறாள். அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது."

"எல்லாமே சந்தர்ப்ப சாட்சியங்களாகத்தான் இருக்கவேண்டும்" என்றான் ஆன்சன், ஹெர்மாசை உற்றுப் பார்த்தபடி.

"அது சரிதான் ஆன்சன். ஆனால், நடந்திருப்பதென்னவோ சதிவேலைதான். குன்றின் அடிவாரத்தை ஒட்டிச் செல்லும் பாதையில் உள்ள பொதுத் தொலைபேசி அருகே ஒரு கார் டயரின் அடையாளமும், குன்றின் மேல் புதர் மறைவில் நின்றிருந்த காரின் டயர் அடையாளமும் ஒத்திருக்கிறது. அவளுடைய பாய் பிரண்டைக் கண்டு பிடித்துவிடுவோம். அப்போது அவன் நிறைய சிக்கல்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும்."

ஆன்சனின் முகம் இறுகிப் போயிருந்தது. அவன் இதயத்தை சட்டெனக் குளிர் நடுக்குவதுபோல் தோன்றியது.

"அந்த அடையாளங்கள் வேறுவேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கலாம், அல்லவா? வேறு என்ன ஆதாரம்?" என்று கேட்டான் ஆன்சன்.

ஹெர்மாஸ் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"சொல்கிறேன். இது முக்கியமான அம்சம். பர்லோ துப்பாக்கி சுடுவதில் நிபுணர். அவரிடம் 38 கைத்துப்பாக்கிகள் இரண்டு இருந்திருக்கின்றன. இப்போது அவை இரண்டையும் காணோம். திருமதி பர்லோ என்ன சொன்னாள் தெரியுமா? பர்லோ தன் துப்பாக்கியை யாருக்கோ கொடுத்துவிட்டதாகச் சொன்னாள். ஒன்பது மாதங்களுக்கு முன்பே கொடுத்துவிட்டாராம். ஆனால், அது சரியில்லை. போனவாரம், துப்பாக்கி கிளப் செயலாளர் ஹாரி சேமூருக்கு ஒரு துப்பாக்கியை இரவல் கொடுத்துத் திருப்பியும் வாங்கியிருக்கிறார். அவரிடம் எப்போதும் துப்பாக்கிகள் இருந்திருக்கின்றன. அவை இப்போது எங்கே போய்விட்டன? இன்னொரு விஷயம்- பர்லோவை சுட்டுக் கொன்றது அவரது துப்பாக்கிதான்! அவரது துப்பாக்கிகளின் சுடப்பட்ட குண்டுகளை சோதித்து சரிபார்த்து விட முடியும். இன்னும் ஒரு முக்கியமான விஷயம். பர்லோவைக் கொன்ற ஆள்தான். பெட்ரோல் பங்கில் கான்ஸ்டபிளையும் சுட்டுக் கொன்றிருக்கிறான். இது ஊர்ஜிதமாகிவிட்டது. இப்போது என்ன சொல்கிறீர்கள்?"

"ரொம்ப சுறுசுறுப்பாக வேலை செய்திருக்கிறீர்கள் போல் தெரிகிறதே," என்று சொல்லிவிட்டு ஆன்சன், கீழே குனிந்து தன் பூட்சுகளின் கயிறை அவிழ்த்துக் கட்டினான். அவன் முகம் வெளுத்துவிட்டது. பர்லோவின் துப்பாக்கியைப் பயன் படுத்தியது பெரிய தவறு என்று நினைத்துக் கொண்டான். அப்போது அது செளகரியமாகத் தோன்றியது- எப்படி அந்த முட்டாள்தனத்தை செய்தோம் என்று நினைத்தான். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"இதைப் பற்றி இன்ஸ்பெக்டர் ஜென்சன் என்ன நினைக்கிறார்? முதல் பிரிமியம் கட்ட பர்லோவுக்கு அவ்வளவு பணம் எப்படிக் கிடைத்தது? அதை ஏன் அவர் பணமாகக் கொடுத்தார்?" என்றான் ஆன்சன்.

ஹெர்மாஸ் மூக்கைச் சொறிந்து கொண்டான்.

"சரியான கேள்விதான். ஆனால், அவளுக்கு ஒரு கள்ளக் காதலன் இருக்கிறான் என்பதும், இரண்டு பேரும் சேர்ந்துதான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதும் அசைக்க முடியாத உண்மையாக எனக்குத் தெரிகிறது."

"யார் அந்தக் காதலன் என்று நினைக்கிறீர்கள்?"

"தேடிக் கொண்டிருக்கிறோம். அவனைக் கண்டு பிடிப்பதில் பெரிய சிரமம் இருக்காது என்று தோன்றுகிறது," என்று சொல்லி காபியைக் குடித்து முடித்து, கோப்பையை முன்னாலிருந்த டீப்பாயின்மேல் வைத்தான் ஹெர்மாஸ். பிறகு,

"இப்போது நிலவரம் என்ன என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும் எனக்குக் கிடைத்த தகவல்களையும், தடயங்களையும், என் அனுமானங்களையும் மட்டாக்ஸுக்கு எழுதியனுப்பிவிட்டேன். அவருக்குத்தான் இந்த மாதிரி விஷயங்கள் பிடிக்குமே. திருமதி பர்லோவுக்கு இன்ஸ்யூரன்ஸ் பணம் கிடைக்காது என்றுதான் நான் நினைக்கிறேன். அநேகமாக அவளுக்கு மரண தண்டனை கிடைக்கலாம்", என்றான்.

ஆன்சன் எழுந்து நின்றான்.

"நீங்கள் அதையெல்லாம் நிருபிக்க வேண்டியிருக்கும். நீங்கள் நிருபிக்கும் வரை, நான் என்னுடைய கிளையன்டின் பக்கமாகத்தான் பேசுவேன். என் தொழிலுக்கு அதுதான் சரியானது– அப்புறம் சந்திப்போம்", என்று சொல்லிவிட்டு சட்டென்று அந்த இடத்தைவிட்டு வெளியேறினான் ஆன்சன்.

ஹெர்மாஸ், அவன் போவதையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் சட்டென புதிரான உணர்வுகள் கோடிட்டன. ஆச்சரியத்தோடு எதையோ நினைத்துக் கொண்டான். அவன். விழிகளில் ஒரு ஒளி தோன்றியது.

ஹெர்மாஸ் காலை உணவு சாப்பிட்டு முடித்துவிட்டு ஓட்டலின் வரவேற்பு ஹாலுக்கு வந்து, தினசரிப் பத்திரிகையை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, இன்ஸ்பெக்டர் ஜென்சன் அங்கே வந்தார்.

"கைரேகை விஷயமாக உங்கள் யூகம், உண்மையாகி விட்டது. இனி அவளுடைய காதலனைப் பிடிக்க வேண்டியதுதான். அவளுடைய படுக்கை அறையில் சில கைரேகைகள் கிடைத்தன. ஒரு வகை கைரேகை யாருடையது என்று தெரியவில்லை. இன்னொரு கைரேகை செய்லர் ஹோகன் என்ற ஆளுடையது. அவன் லைட்வெயிட் சாம்பியன். கலி போர்னிய வெற்றிவீரன். லாஸ் ஏஞ்சலஸ் நகரில் வாழ்ந்தவன். இங்கே, பிரென்ட் நகரில் ஜோ என்ற வட்டிக் கடைக்காரனிடம் கையாளாக இருக்கிறான். லாஸ்ஏஞ்சலஸில் பர்லோவின் மனைவி விபசாரியாக வாழ்ந்தாள் அல்லவா? அவளுடன் இவன்தான் வாழ்ந்திருக்கவேண்டும். மாமா வேலையும் பார்த்திருப்பான். அவள் காசில் வாழ்ந்தவன் இவனாகத்தான் இருக்க வேண்டும்", என்றார் இன்ஸ்பெக்டர்.

"துப்பாக்கி வைக்கும் பெட்டியில் அவனது கைரேகை ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்டான் ஹெர்மாஸ்.

"கிடைத்தது. ஆனால், அது செய்லருடையது அல்ல! வேறு யாரோ ஒரு ஆளுடையது. நான் இப்போது செய்லரை சந்திக்கப் போகிறேன். என்கூட வருகிறீர்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

ஹெர்மாஸ் உடனே புறப்பட எழுந்தான்.

செய்லர் ஹோகன் படு கோபமாக இருந்தான். பலமுறை அடிபட்டு, காயப்பட்டு, தழும்பேறிய அவன் முகம் படுகோரமாக மாறிப் போயிருந்தது.

"எனக்கு வேறு வேலையிருக்கிறது. சட்டென்று முடித்து விட்டுப் போங்கள். என்ன விஷயம்?" என்றான் அலட்சியமாக!

"செப்டம்பர் 21 ஆம் தேதி இரவு நீ எங்கே இருந்தாய்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ஜென்சன்.

செய்லரின் முகம் மலர்ந்தது!

"என்ன இது? நான் எங்கே இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? என்ன செய்து கொண்டிருக்க வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"எங்கே இருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்?" அதை முதலில் சொல்!' என்றார் இன்ஸ்பெக்டர் சற்றுக் கடுமையுடன்.

"எனக்கு ஞாபகம் இல்லையே. இரண்டு வாரம் முன்னால்_ தெரியவில்லையே_"

'யோசித்துப் பார்! நிதானமாக யோசித்துப் பார்த்துச் சொல். இல்லாவிட்டால் வம்பில் மாட்டிக் கொள்வாய். நன்றாக யோசி," என்று போலீஸ் தோரணையில் கடுமையாகச் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

"யோசிக்கிறேன்... அப்படியா விஷயம்... " என்றபடி தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய சிவப்பு டைரியை வெளியில் எடுத்தான். அதன் பக்கங்களைப் புரட்டினான்_ "செப்டம்பர் 21 ஆம் தேதி. இல்லையா?"

"அதான், சொன்னேனே.." என்றார் இன்ஸ்பெக்டர்.

"செப்டம்பர்.... ஆ.... இருக்கு.... நல்ல வேளை குறித்து வைத்திருக்கிறேன்_ இந்த மாதிரி முன்பு கூட குறித்து வைத்ததால் வம்பில் மாட்டாமல் தப்பியிருக்கிறேன். ரொம்ப உபயோகமான விஷயம் இதெல்லாம்_ ம் _ "

"சொல்லப்பா- சீக்கிரம் சொல்!"

"நான் லாம்ஸ்வில்லியில் இருந்தேன்- ஜோவுக்காக ஒரு வேலையாகப் போயிருந்தேன்... ஆமாம்... என்ன விஷயமாகக் கேட்கிறீர்கள்?"

"அதிகாலை மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் இடையில் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"அட கடவுளே... அந்த நேரத்தில் என்ன சார் செய்வார்கள்? நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்..."

"நிரூபிக்க முடியுமா?"

செய்லர் அவரைப் பக்கவாட்டில் தலைசாய்த்து ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

"அது ரொம்ப சுலபமான காரியமாயிற்றே சார். நான் எப்போதும் தனியாகத் தூங்குவதே இல்லை. எனக்கு இருட்டைக் கண்டால் பயம்! ஏதாவது ஒரு பெண் பக்கத்திலிருந்து என்னைப் பார்த்துக் கொண்டால்தான் எனக்குத் தூக்கமே வரும்," என்று சொல்லிப் பல்லைக் காட்டினான்... பிறகு, "அனேகமாக அவளுக்கு ஞாபகம் இருக்க வேண்டும். அவளைக் கேட்டுப் பாருங்களேன்... ம்... வந்து... அவள் பெயர்... கிட் லிட்மன்... காசினோ கிளப்பில் அவள் வேலை பார்க்கிறாள். அவளைக் கேளுங்கள்," என்றான்.

"செப்டம்பர் 30 ஆம்தேதி இரவு என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று மறுபடியும் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

செய்லர், ஹெர்மாசைப் பார்த்துக் கண் சிமிட்டினான். மறுபடியும் குனிந்து, தன் சின்ன டைரியைப் புரட்ட ஆரம்பித்தான்.

பிறகு,"நேரம்?" என்று தலை நிமிர்ந்து கேட்டான்.

"இரவு ஒன்பதுக்கும் பதினொன்றுக்கும் இடையில்"

"அது மிகவும் சுலபமாகச் சொல்லிவிட முடியும். என் நண்பர்களுடன், பில்லியார்ட்ஸ் ஆடிக் கொண்டிருந்தேன். 'சாம்-பாரில்' கேட்டால் சொல்வார்கள். போய்க்கேட்டுப் பாருங்கள். என்கூட அப்போது, ஜோ கெர்ஸ்வின், டெட் மெக்லின், பிராங்கி ஸ்டீவார்ட், ஜேக் ஹாம்மண்ட் முதலியவர்கள் இருந்தார்கள். அவர்களையும் கேட்டுப் பாருங்கள். சொல்வார்கள். எட்டு மணிக்கு ஆட ஆரம்பித்தோம். இரவு இரண்டு மணிக்குத்தான் முடிந்தது. அவ்வளவுதானே இன்ஸ்பெக்டர்? எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது. என் மேல் நீங்கள் எந்தப் பழியையும் போடமுடியாது. நான் விவகாரங்களில் மாட்டிக் கொள்ளவே மாட்டேன்" என்றான் செய்லர்.

"திருமதி பர்லோவை உனக்குத் தெரியுமா?"

சட்டென்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

செய்லர் சற்று யோசித்தான்.

"தெரியும் என்று சொல்ல முடியாது. என்ன விஷயம்?" என்றான்.

"பிலிப் பர்லோவைத் தெரியுமா?"

"யார் கொலை செய்யப்பட்ட ஆளா? இல்லை. என்ன இதெல்லாம்?"

"நீ எப்போதாவது பர்லோ வீட்டிற்கு நீ போயிருக்கிறாயா?"

செய்லரின் முகத்தில் இதுவரை இருந்த புன்முறுவல் சட்டென மறைந்தது. அவன் முகம் இருண்டது. இன்ஸ்பெக்டர் தன்னை உற்றுப் பார்ப்பது அவனுக்கு எப்படியோ இருந்தது.

"என்ன விஷயம்?"

"உன்னுடைய கை ரேகைகள் அங்கே எப்படி வந்தன?"

இன்ஸ்பெக்டரின் கேள்வியில் கடுமை கூடியது.

ஒரு கணம் செய்லர் திகைத்துப் போனான். பிறகு, சட்டெனச் சமாளித்துக் கொண்டான். முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டான்.

"போலீஸ் வேலையே இதுதானா? என் கைரேகை எடுக்க அங்கே போனீர்களா?"

"உன் கைரேகை அந்த வீட்டில் இருக்கிறது. அவ்வளவுதான்.. சரி. மறுபடியும் கேட்கிறேன். பதில் சொல்! உனக்கு மெக் பர்லோவைத் தெரியுமா?"

தெரியும் என்பதற்கு அறிகுறியாக அவன் தலையசைத்தான்.

"தெரியும்... சரி அதற்கென்ன? பர்லோ செத்துப் போய்விட்ட பிறகு எதற்குக் கேட்கிறீர்கள்? பர்லோவை அவர் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னால் எனக்கும் அவளுக்கும் பழக்கம் இருந்தது. உண்மைதான். அடிக்கடி சந்திப்போம். அவளுடைய கௌரவத்திற்குக் கேடு வரக்கூடாது என்பதற்காகத்தான் தெரியாது என்று சொன்னேன்... சரி... விஷயம் என்ன? வேறு ஏதாவது தகவல் வேண்டுமா?"

"உன் கைரேகை தவிர, வேறு ஒரு ஆளின் கைரேகையும் அவன் வீட்டில் இருக்கிறது. அது யாராக இருக்கும்?"

செய்லர், தன் அழுக்கு நகத்தால் பல்லை நோண்டினான்.

"எனக்கு ஆச்சரியமாக இருக்கறது. நான் மட்டும்தான் அவளுடன் பழகியவன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வேறு ஆள் யார்... தெரியவில்லை.. ஏன்.. அவளிடமே கேட்டுப் பாருங்களேன்.."

இன்ஸ்பெக்டர் ஹெர்மாஸைப் பார்த்தார். அவர் பார்வையில் தோல்வியின் அறிகுறி தென்பட்டது.

"உன்னுடைய கார் எங்கே இருக்கிறது?" என்று செய்லரைக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"வெளியில்.. நீலநிற பியூக் கார்."

இன்ஸ்பெக்டரும், ஹெர்மாஸும் எழுந்து வெளியில் வந்தார்கள்.

உள்ளே செய்லர் பலமாக சிரிக்க ஆரம்பித்தான்..

•

இன்ஸ்பெக்டர் செய்லரின் காரை சுற்றி வந்து சோதித்தார். அந்தக் காரின் டயர்கள், குன்றின் அடிவாரம், மேலே காணப்பட்ட டயர் அடையாளங்களோடு ஒத்துப் போகவில்லை. வெறுப்போடு ஹெர்மாஸை நிமிர்ந்து பார்த்தார் அவர்.

"பாருங்கள்.. இந்தக் கார் அங்கே போகவில்லை.. வேறு ஒரு ஆள் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறான். செய்லர் இதைச் செய்திருக்க முடியாது. அந்த நேரங்களில், அவன் சொன்ன இடங்களில் இருந்தானா என்பதை உடனே சோதித்துப் பார்த்துவிடலாம். எனக்கு இவனைத் தெரியும். லேசில் மாட்டிக் கொள்ள மாட்டான்."

"சரி. இன்னொரு ஆள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் இனித் தீவிர கவனம் செலுத்தலாம்", என்றான் ஹெர்மாஸ்.

"ஆமாம். அவளை இன்னும் கொஞ்சம் நெருக்கிப் பிடிக்க வேண்டும்."

"வேண்டாம். இப்போது வேண்டாம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. முதலில் அப்படிச் செய்யலாம். அவள் விஷயத்தில் தலையிடும்போதும், விசாரிக்கும்போதும் சரியான ஆதாரங்கள் நம்மிடம் இருக்கவேண்டும்", என்றான் ஹெர்மாஸ்.

ஆன்சன் தன் காரை 'ஷெல் சர்வீஸ் ஸ்டேஷனுக்கு' ஓட்டிச் சென்றான். அது பிரெண்ட் நகரின் நெடுஞ்சாலையில் இருந்தது.

ஸ்டேஷன் மானேஜர் ஜோக் ஹார்ன்பி வெளியில் வந்து கைகுலுக்கி வரவேற்றார்.

"ஜேக், என் கார் டயர்கள் மிகவும் பழுதடைந்து விட்டன. எனக்குப் பிடிக்கவில்லை. 'பயர்ஸ்டோன்' டயர்களைப் பொருத்துவிட முடியுமா?"

"ஓ, சந்தோஷமாகச் செய்து தருகிறேன், ஆன்சன்", என்று சொல்லி, காரை சுற்றி வந்து குனிந்து பார்த்தார். பிறகு "அதற்குள் ஏன் மாற்ற வேண்டும். இன்னும் ஒரு 8000 மைல் ஓடுமே?" என்றார்.

"எனக்கு இந்த டயர்கள் பிடிக்கவில்லை. என் நண்பனின் காரில் இந்த கம்பனி டயர்கள் வெடித்து விட்டன. அதனால் 'பயர்ஸ்டோன்' டயர்களை மாட்டி விட்டால் கவலைப்படாமல் இருக்கலாம்."

"நீங்கள் விரும்பினால் தாராளமாக மாற்றிவிடலாம். அதனால் என்ன? உங்கள் பழைய டயர்களையும் நானே ஒரு விலைபோட்டு எடுத்துக் கொள்கிறேன்."

"வேண்டாம். புது டயர்கள் மாட்டிவிட்டு, பழையதை என்னிடமே கொடுத்துவிடுங்கள். எவ்வளவு நேரம் ஆகும்?"

"ஒரு மணிநேரத்தில் முடித்துவிடுகிறேன். அதுவரை எங்காவது போக வேண்டியிருந்தால், ஒரு கார் இரவல் தருகிறேன்," என்றார் அவர்.

"இல்லை. நான் இங்கேயே காத்திருக்கிறேன்," என்றான் ஆன்சன்.

எட்வின் மெர்ரி வெதர், ப்ருடவுன் நேஷனல் பாங்கின் மானேஜர். ஆள் குள்ளமாக, தடியாக இருப்பார். பழைய காலத்து ஆள். சுத்தமாக உடையணிவார். ஆனால், பழைய கால மாதிரி உடைகளாக இருக்கும். அவருடைய நீலச்சட்டை, புள்ளி போட்ட கழுத்துப் பட்டை உறுத்தலாகத் தோன்றியது.

ஹெர்மாஸ் அவரை சந்தித்து அறிமுகம் செய்துகொண்டு கை குலுக்கினான். அவருடைய உருவத் தோற்றத்தைப் பார்த்தபோது சிங்களேர் லூயிசின் நாவலில் வரும் ஒரு பாத்திரம் அவன் நினைவிற்கு வந்தது.

"சார்! பிலிப் பர்லோ, உங்கள் வங்கியில் கணக்கு வைத்திருந்தவர். அவர் மரணத்தால் நாங்கள் ஐம்பதாயிரம் டாலர் அவர் மனைவிக்குக் கொடுக்க வேண்டி வருகிறது. அதனால், சில விஷயங்களை உங்களிடம் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது," என்றான் ஹெர்மாஸ், அவரிடம்.

"என்ன?" என்று புருவங்களை உயர்த்தினார் வங்கி மேலாளர்.

"தான் எடுக்கவிருந்த இன்ஸ்யூரன்ஸ் பாலிசி சம்பந்தமாக உங்களிடம் அவர் கலந்து பேசினாரா?"

"ஆமாம்– என்னிடம் பேசினார்."

"அவர் ஆயுள் காப்பீடு எடுத்ததே, வங்கியிலிருந்து கடன் வாங்கத்தான் என்று தகவல். அது உண்மையா?"

"ஆமாம். அப்படித்தான் சொன்னார்"

"எப்படி, எவ்வளவு கடன் வாங்கத் திட்டமிருந்தார் என்பதை உங்களிடம் சொன்னாரா?"

"மூவாயிரம் டாலர். நாங்களும் அதைக் கொடுக்கத்தயார் என்று சொன்னோம். அதாவது, அந்த பாலிசியின் பேரில்."

ஹெர்மாஸ் சட்டென உஷாரானான்.

"அதைவிட அதிகத் தொகை வாங்கத்திட்டமிட்டிருந்தாகக் கேள்விப்பட்டேனே?"

"ஐயாயிரத்திற்கு எடுத்த பாலிசிக்கு அதிகமாக நாங்கள் கடன் தர முடியாதே."

"என்ன? அவர் ஐம்பதாயிரத்திற்கல்லவா பாலிசி எடுத்திருக்கிறார்!"

வங்கி மேலாளர் திகைத்தார்.

"இல்லை. நிச்சயமாக இல்லை. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள்."

ஹெர்மாஸ் திகைத்துப் போனான். வங்கி மேலாளர் தன் கழுத்துப்பட்டையை சரி செய்து கொண்டு தொடர்ந்தார்.

"இல்லை. உங்களுக்குத் தெரியாது. பர்லோ, ஐயாயிரம் டாலருக்கு ஆயுள் காப்பீடு எடுத்திருப்பதாகவும், முதல் பிரிமியம் கட்டுவதில் ஐந்து சதவிகிதம் கம்பனி தள்ளுபடி செய்திருப்பதாகவும் வங்கிக் கணக்கில் உள்ள பணம் முழுவதையும் எடுப்பதாகவும் சொன்னார். முதல் பிரிமியத்தைப் பணமாகக் கட்டச் சொல்லி ஏஜன்ட் சொன்னதாகவும் தெரிவித்தார்."

ஹெர்மாஸின் முதுகெலும்பு குறுகுறுத்தது. இதில் ஏதோ நடந்திருக்கிறது என்று அவன் உள்ளுணர்வு சொல்லிற்று.

"ஐயா, நான் இன்ஸ்யூரன்ஸ் கம்பனிக்காரன். நாங்கள் முதல் பிரிமியத்தைப் பணமாக வாங்கும் பழக்கம் இல்லை. அப்படியே வாங்கினாலும் கூட நிச்சயமாகத் தள்ளுபடி செய்வதில்லை.. பர்லோ ஏன் அப்படி உங்களிடம் சொன்னாரோ தெரியவில்லையே," என்றான் ஹெர்மாஸ்.

"உங்கள் கம்பனியின் ஏஜன்ட்தான் அப்படிச் சொன்னதாக பர்லோ சொன்னார்.. யாரோ.. அதாவது.. மிஸ்டர் ஆன்சன்தான் அந்த ஏஜன்ட் என்று நினைக்கிறேன் இல்லையா?"

"ஆமாம். அவர்தான் இந்த வட்டாரத்திற்கு எங்கள் பிரதிநிதி. ஆனால், என்னவோ தவறு நேர்ந்திருக்கிறது. சரி. பர்லோ எவ்வளவு பணம் வங்கியிலிருந்து எடுத்தார்?"

"நூற்றைம்பது டாலர்கள்."

ஹெர்மாஸ் தன் பிடரியைத் தேய்த்துவிட்டுக் கொண்டான். அந்தத் தொகை ஐயாயிரம் டாலர் ஆயுள் காப்பீட்டுக்குத் தேவையான பிரிமியத் தொகை!

"என்னமோ, புதிராகத்தான் இருக்கிறது. ஆனால், பர்லோ, ஐம்பதாயிரத்திற்குத்தான் ஆயுள் காப்பீடு எடுத்திருக்கிறார். அதோடு முதல் பிரிமியத்திற்கான தொகையைப் பணமாக செலுத்தியிருக்கிறார். அதாவது ஆயிரம் டாலர்கள்."

"ஆச்சரியமாக இருக்கிறதே. அவ்வளவு தொகைக்கு அவர் என்ன செய்தார்? எப்போதும் பணமுடையில் இருப்பவராயிற்றே!"

ஹெர்மாஸ் சற்று யோசித்தான். பிறகு எழுந்து நின்றான்.

"நன்றி, உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக் கொண்டேன். வருகிறேன்," என்றான்.

மேலாளர், "தாராளமாக எப்போது வேண்டுமானாலும் வரலாம்," என்றார்.

ஹெர்மாஸ் ஓட்டல் ரிஷப்ஷன் பகுதியில் தன் அறைச்சாவியை வாங்கிக் கொண்டிருக்கும்போது, சாவியைக் கொடுத்தவன்," ஒரு பெண் உங்களை சந்திக்கக் காத்திருக்கிறாள். 'பார்' பகுதியில் இருக்கிறாள்," என்றான்.

"யார் அது?"

" பேர், ஃபே லாஸி. இங்கே சுற்றிக் கொண்டிருக்கும் பெண்களில் ஒருத்தி. ஒருமாதிரி. நீங்கள் விரும்பாவிட்டால் சந்திக்க வேண்டாம்."

"இல்லை. நான் சந்திக்கிறேன். யாரையும் சந்திக்க நான் மறுப்பதில்லை," என்று சொல்லிவிட்டு, 'பார்' பகுதிக்கு நகர்ந்தான் ஹெர்மாஸ்.

லாலியை அவன் அடையாளம் கண்டு கொண்டான். அவள் ஒரு மூலையில் தனியே அமர்ந்தபடி விஸ்கி குடித்துக் கொண்டிருந்தாள்.

ஹெர்மாஸ் அவள் எதிரில் சென்று அமர்ந்தான்.

அவள் அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

"உங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். சில நாட்களாகவே முயற்சி செய்தேன். முடியவில்லை," என்றாள்.

"அப்படியா?" என்று சொல்லிவிட்டு, வெயிட்டரை அழைத்தான்.

"நான் 'பிஸி'யாக இருந்தேன் என்னை உனக்குத் தெரிந்திருக்கும். நீ யார் என்று தெரியவில்லையே," என்றான்.

வெயிட்டர் அருகில் வந்து நின்றான். "ஸ்காச், சோடா, ஐஸ் கொண்டு வா", என்றான் ஹெர்மாஸ்.

"என் பெயர் ஃபே லாலி. நான் இங்கேதான் வாழ்ந்து வருகிறேன். நீங்கள் நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனிதானே?" என்றாள் மெல்லச் சிரித்தபடியே.

"ஆமாம்."

"உங்களுக்கு ஒரு தகவல் தெரிவிக்க வேண்டும்."

வெயிட்டர் மதுவைக் கொண்டு வந்த வைத்தான்.

"எனக்கு நிறையத் தகவல்கள் தேவைப்படுகின்றன." என்றான் ஹெர்மாஸ். வெயிட்டர் போன பிறகு, அவளுக்கு ஒரு சிகரெட்டை எடுத்துக் கொடுத்தான். இருவரும் பற்ற வைத்துக் கொண்டார்கள்.

"என்ன விஷயம். கொடுக்கல் வாங்கல் உண்டா?" என்றான் ஹெர்மாஸ்.

இல்லை என்பதற்கு அறிகுறியாக அவள் தலையசைத்தாள்.

"ஒரு பொறாமை, வெறுப்பு காரணமாக இதைச் சொல்ல விரும்புகிறேன். உண்மை அதுதான். நீங்கள் என்னிடம் அன்பாக நடந்து கொண்டால் நல்லது. நான் அழகாகத்தானே இருக்கிறேன்? என்னிடம் யார் முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. யாரானாலும் சரி. நான் திருப்பிக் கொடுக்கத் தயங்க மாட்டேன். என்னிடம் நல்ல முறையில் நடந்து கொள்கிறவர்க்கு நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். என்னை ஏதாவது செய்தால், கழுத்தை அறுக்கவும் தயங்க மாட்டேன்", என்றாள் லாலி உணர்ச்சி பொங்க.

"சரி. இதெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறாய்?"

"தெரியவில்லை... நீங்கள் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி போலீசா?"

"ஆமாம்,"

"உங்கள் ஏஜன்ட் எப்படிப்பட்ட ஆள் தெரியுமா?"

ஹெர்மாஸ் விஸ்கியை எடுத்துக் குடித்தான்.

"எந்த ஏஜன்ட்?"

"அந்தப் பொறுக்கி- ஜான் ஆன்சன்,"

ஹெர்மாஸ் டம்ளரை மேசைமேல் வைத்தான். தன் முகத்தில் எந்த உணர்வும் தோன்றாதபடி சமாளித்துக் கொண்டான்.

"அவரைப் பற்றி என்ன தகவல்?"

அவள் முகம் சட்டென பிரகாசமடைந்தது. அவள் கண்கள் பள பளத்தன. லாலி முன்னுக்கு நகர்ந்து, சொல்ல ஆரம்பித்தாள்-

# 12

அது ஹெர்மாஸின் யோசனைதான். சொன்னதும் இன்ஸ்பெக்டர் ஜென்சன் ஒப்புக் கொண்டார்.

"திருமதி பர்லோ நாளை வீடு திரும்புகிறாள். இதுதான் நம்முடைய கடைசி வாய்ப்பு. இன்னும் ஒரு தடவை அவள் வீட்டிற்குச் சென்று நன்றாகச் சோதித்துவிட வேண்டும். உங்கள் கைரேகை ஆட்கள் போய்விட்டு வந்துவிட்டார்கள். இனி நாம் இருவரும் போய்ப் பார்க்க வேண்டும்," என்றான் ஹெர்மாஸ்.

"அங்கே என்ன பார்க்கப் போகிறோம்? எதை எதிர் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் காரில் ஏறியபடியே.

ஹெர்மாஸ் அவர் அருகில் ஏறி அமர்ந்து கொண்டான்.

"துப்பாக்கிகள். அவை எங்காவது ஒளித்து வைக்கப் பட்டிருக்கவேண்டும். துப்பாக்கி விஷயம்தான் என்னை மிகவும் கவலைப்பட வைக்கிறது," என்றான் ஹெர்மாஸ்.

அவர்கள் பர்லோவின் வீட்டை அடையும்போது நேரம் நண்பகல். இரண்டு பேரும் காரை விட்டிறங்கி, தோட்டத்தைக் கூர்மையாகப் பார்த்தபடி சுற்றி வந்தார்கள்.

"பர்லோ, தோட்டக் கலையில் நிபுணர் என்பதில் சந்தேகமே இல்லை. இவ்வளவு திறமைசாலியான ஒரு ஆள், ஒரு கை தேர்ந்த கலைஞர், எப்படி மட்டரகமான பர்வட்டாகவும் இருந்திருக்கிறார் என்பதுதான் ஆச்சரியமான விஷயம்," என்றான் ஹெர்மாஸ்.

இன்ஸ்பெக்டர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தோட்டத்தை ஆராய்ந்தபடியே போய்க் கொண்டிருந்தார்.

இருவரும் வாசற்படி ஏறி, முன் கதவருகில் வந்தார்கள். சிரமமில்லாமல் ஹெர்மாஸ் கதவைத் திறந்தான். இருவருமே உள்ளே சென்றார்கள். ஹாலில் அழுக்கு, நாற்றம், காற்றோட்டமில்லாததன் இறுக்கம்.

"முதலில் பர்லோவின் படுக்கை அறையைப் பார்ப்போம்", என்று மாடிப்படி ஏறினான் ஹெர்மாஸ்.

படுக்கை அறையை அடைந்ததும், இருவரும் கூர்மையாக ஒவ்வொன்றையும் ஆராய ஆரம்பித்தார்கள்.

அங்கே கிடைத்த ஆபாசப் புகைப் படங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்தது இன்ஸ்பெக்டர்தான்.

ஹெர்மாஸ் கட்டிலை நகர்த்தி விட்டு, தளத்தின் பலகைகளை ஆராய்ந்தான். தன் பேனாக் கத்தியால் பலகைகளை நகர்த்திப் பார்த்தான். ஒரு துண்டுப் பலகை மேலே நகர்ந்தது. அதை மேலே எடுத்ததில் ஒரு சிறய அறை இருந்தது. உடனே தன் பென் டார்ச்சை எடுத்து அதற்குள் ஒளியை வீசினான். உள்ளே குனிந்து பார்த்தான்.

உள்ளே 38 கைத்துப்பாக்கி ஒன்று இருந்தது!

அத்துடன் ஒரு குளியல் தொப்பி, இரண்டு ரப்பர் துண்டுகளும் இருந்தன!

இன்ஸ்பெக்டர் அங்கே வந்தார். ஒரு பென்சிலை எடுத்து, துப்பாக்கியின் குழலில் செருகி அதை மேலே எடுத்தார்.

ஹெர்மாஸ் வியப்போடு, குளியல் தொப்பியை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வழுக்கைத் தலைக் கொலைகாரன்... பர்சேதான்!" முதலில் நடந்த கிளின்குன்றின் கொலையில் பயன் படுத்தப்பட்டது. இந்த துப்பாக்கிதான் என்று பந்தயம் கட்டுகிறேன்," என்றான் ஹெர்மாஸ்.

இன்ஸ்பெக்டர் மூக்கைச் சொறிந்து கொண்டார்.

"சரி. மற்ற இடங்களையும் பார்த்துவிடுவோம்," என்று எழுந்தார்.

அன்று பிற்பகல் முழுவதும், அந்த வீட்டை, இருவரும், அங்குல அங்குலமாக ஆராய்ந்து பார்த்தார்கள்.

இன்ஸ்பெக்டர், காவல் நிலையத்திற்கு போன்செய்து தொழில் நுட்ப ஆட்களை வரச் சொன்னார். கருவிகளுடன் இரண்டு கார்களில் அவர்கள் வந்து இறங்கினார்கள்.

இருவர், அந்தத் துப்பாக்கியை மட்டும் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டு, பிரென்ட் நகருக்குப் புறப்பட்டார்கள்.

சோதனை முடித்து, இன்ஸ்பெக்டரும், ஹெர்மாஸும் பிரென்டுக்குத் திரும்பியபோது, கிளின் குன்றில் நடந்த முதல் கொலை, பர்லோவின் துப்பாக்கியால் நடந்திருக்கிறது என்று உறுதி செய்து, நிபுணர்கள் கூறினார்கள்.

ஆன்சன் ஒரு விதமான படபடப்பில் இருந்தான்.

அவன் தன் அலுவலகத்தை விட்டு, வீட்டுக்குப் புறப்படும் நேரத்தில், ஹெர்மாஸ் உள்ளே நுழைந்தான். அப்போது மாலை மணி ஆறு.

ஹெர்மாஸின் முகத்தில் வெறுப்புக் குறிகள் தென்படுவதை ஆன்சன் கவனித்தான்.

ஹெர்மாஸ் தெளிவாகப் பேசினான். வங்கி மேலாளரை சந்தித்த விஷயத்தை சொன்னான். பேசும்போது ஆன்சனை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஹெர்மாஸ் பேசி முடித்ததும், ஆன்சன், "பர்லோ ஏன் அப்படிப் பேசினார் என்பது எனக்குத் தெரியாது. நான் ஐந்து சதவிகிதத் தள்ளபடி தருவதாகச் சொல்லவே இல்லை. ஏன் அப்படிச் சொல்கிறேன்? வங்கி மேலாளர் சொல்வது உண்மைதானா?" என்றான்.

"எனக்குத் தெரியாது. முதல் பிரிமியத்தைப் பணமாகச் செலுத்தும்படி நீங்கள் சொன்னதாக பர்லோ சொல்லியிருக்கிறார். ஐந்து சதம் தள்ளுபடி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். நூற்றி ஐம்பது டாலர்தான் வங்கியிலிருந்து அவர் எடுத்திருக்கிறார். வேறு பணம் அவர் கணக்கில் இல்லை.

அந்தத் தொகை முதல் பிரிமியத்திற்கு என்றும் சொல்லி யிருக்கிறார்," என்றான் ஹெர்மாஸ்.

ஆன்சன் கையிலிருந்த பென்சிலால், முன்னாலிருந்த காகிதத்தில் தாறுமாறாகக் கோடுகள் கிழித்துக் கொண்டிருந்தான்.

"பிரிமியம் தொகை ஆயிரத்தி இருநூற்று இருபத்தி இரண்டு. ஏதோ தவறு நடந்திருக்கிறது," என்றான் ஹெர்மாஸ் ஆன்சனைப் பார்க்காமலேயே.

"உண்மையில் பர்லோ ஐந்தாயிரத்திற்குத்தான் பாலிசி எடுக்கப் போவதாக வங்கி மேலாளரிடம் தெரிவித்திருக்கிறார். அதன் மீது மூவாயிரம் கடன் கேட்டிருக்கிறார்."

ஆன்சன் இருப்புக் கொள்ளாமல் நெளிந்தான். பிறகு நிதானமாக ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். பிறகு பேச ஆரம்பித்தான்.

"பர்லோதான் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்திருக்கிறார். என்னை அழைத்து அவர் பேசிய போது, பாலிசியைப் பார்க்கவில்லையா? அவர்தானே கையெழுத்துப் போட்டிருக்கிறார். ஒரு வேளை என்னை சந்திப்பதற்கு முன்னால், வங்கி மேலாளரிடம் அப்படிப் பேசியிருக்கலாம். அப்புறம் அதிகத் தொகைக்கு ஆயுள் காப்பீடு செய்ய முடிவு செய்திருக்கலாம். எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான்," என்றான் ஆன்சன்.

"திடீரென பத்து மடங்கு அதிகமாகவா பாலிசி எடுக்க முடிவு செய்வார்கள்? முதல் பிரிமியத்திற்குக் கட்டின தொகைக்கான பணம் எங்கிருந்து வந்தது?"

"எனக்கு தெரியாது. அவர் என்னிடம் பணம் கொடுத்தார். அவ்வளவுதான்."

"அவருடைய விண்ணப்ப பாரத்தை நான் பார்க்கலாமா? உங்களை சந்திப்பதற்கு முன்னால், அப்படிக் குறைந்த தொகை

பற்றி வங்கி மேலாளரிடம் பேசியதை நான் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்."

அப்படி ஹெர்மாஸ் சொன்னதும் ஆன்சன் திடுக்கிட்டு விட்டான். கையிலிருந்த சிகரட்டின் சாம்பல் அவன் மடிமீது விழுந்தது.

"நான் அதைக் கிழித்து எறிந்துவிட்டேன," என்றான் ஆன்சன்!

ஹெர்மாஸ் மௌனமாக ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ஆன்சனையே உற்றுப் பார்த்தான்.

"விண்ணப்பங்களை எல்லாம் அழித்துவிடுவது உங்கள் வழக்கமா?"

"பாலிசி ஒப்பந்தம் ஆகி உறுதிப்பட்டதும், நான் விண்ணப்பங்களை அழித்து விடுவது வழக்கம். பர்லோவின் பாலிசி எடுத்த பின், அதை வைத்திருப்பது தேவையில்லாதது,"

"அப்படியா...." என்று சொல்லி அமைதியானன் ஹெர்மாஸ். அவன் மூக்கின் வழியாக புகை வெளியேறிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் கழிந்த பிறகு, "ஒரு த்கவலுக்காகக் கேட்கிறேன்.... செப்டம்பர் 30 ஆம் தேதி இரவு நீங்கள் எங்கிருந்தீர்கள்?" என்று நிதானமாகக் கேட்டான்.

ஆன்சனுக்கு 'திக்' கென்றது!

பயம் மெல்லப் படர ஆரம்பித்தது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

ஹெர்மாஸ் மெல்லச் சிரித்தான்.

"உங்களுக்கு மட்டாக்ஸைப் பற்றித் தெரியாதா என்ன? அவருக்கு எல்லாம் ஆதாரபூர்வமாக, தெளிவாக இருக்க வேண்டும். பர்லோ சொல்லப்பட்ட இரவு, ஒவ்வொரு ஆளும் எங்கிருந்தார் என்பதை அவர் கண்டு பிடிக்கச் சொல்லி யிருக்கிறார். நான் அதைத் தெரிந்து சொல்லவேண்டியிருக்கிறது-

அப்புறம் நீங்கள் சொன்னபடி... இந்தப் பெண் எப்படிப் பட்டவளாக இருந்தாலும், அவளுக்குப் பணம் கொடுத்துவிட வேண்டியதுதான். இல்லாவிட்டால் இந்த வட்டாரத்தில் உங்கள் தொழில் நடக்காது. நானும் உங்களோடு சேர்ந்து கொண்டு, பணத்தைக் கொடுத்துவிடும்படி அவரிடம் சண்டை போடலாம் என்றிருக்கிறேன். இன்று இரவு அவர் வரப்போகிறார். நான் பேசிப் பார்க்கிறேன்."

ஆன்சன் அதிர்ந்து போனான்

"என்ன! மட்டாக்ஸ் இங்கே வரப்போகிறாரா?"

அவன் குரலில் பதற்றம் தெரிந்தது.

"ஆமாம். அவர் வருகிறார். இன்ஸ்பெக்டர் ஜான்சனிடம் கலந்து பேச வருகிறார். நான் முடிந்தவரைப் பணம் கொடுக்கும் படிச் சிபாரிசு செய்து பார்க்கிறேன். இன்று இரவு வீட்டில்தானே இருப்பீர்கள்?"

ஆன்சன் தலையசைத்தான்.

"ஒன்பது மணிக்கு அவரை சந்திக்கலாம். மட்டாக்ஸ் பணம் கொடுப்பதில் இறங்கிவரமாட்டார் என்றுதான் தோன்றுகிறது. இருந்தாலும் முயற்சி செய்யலாம்," என்றான் ஆன்சன்.

"பார்க்கலாம். நம் கம்பனித்தலைவர், கம்பனிக்குக் கெட்ட பெயர் வருவதை விரும்ப மாட்டார். அப்புறம் பத்திரிகைகள் வேறு பெரிது படுத்திவிட்டன. முடிந்தவரை நான் முயற்சி செய்கிறேன்," என்று சொல்லிவிட்டு ஹெர்மான்ஸ் மேலே எழுந்தான்.

"இந்தத் தெருவின் கோடியில் உள்ள ஒரு கடையில் 'பேப்பர்வெயிட்' ஒன்று வாங்கினேன். நல்லதுதானா" என்று சிறிய பிளாஸ்டிக் பையை மேசைமேல் கவிழ்த்தான். ஒரு 'பேப்பர் வெயிட்' மேசை மேல் உருண்டு நின்றது.

"என் மனைவிக்கு இந்த மாதிரிப் பொருள்களை விதம் விதமாக சேகரிக்கும் ஆசை. 'இது ஜப்பான் தயாரிப்பு - 1960' என்று சொன்னார்கள் பாருங்கள்!" என்றான் ஹெர்மாஸ்

கொஞ்சம் கூட யோசனையில்லாமல் அதைக் கையால் எடுத்துப் பார்த்தான் ஆன்சன்!

"எனக்குத் தெரியவில்லை. நன்றாகத்தான் இருக்கிறது. நல்லதுதான். உங்கள் மனைவி சந்தோஷப்படுவார்," என்று சொல்லி அதைத் திருப்பிக் கொடுத்தான்.

ஹெர்மாஸ் அதைக் கவனமாக வாங்கிப் பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொண்டான்.

"சரி. புறப்படுகிறேன். மட்டாக்ஸிடம் உங்கள் சார்பாகப் பேசிப் பார்த்துவிட்டு போன் செய்கிறேன். வரட்டுமா?" என்று புறப்பட்டான்.

ஹெர்மாஸ் போனதும், ஆன்சன் ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, எதிர்ப்பக்கத்துச் சுவரையே வெறித்தான். அவனுடைய கொலைத் திட்டம் உடைந்து தகருவதுபோல தோன்றியது. சூழல் மிகவும் சிக்கலடைந்து விட்டதாகத் தெரிந்தது. ஆபத்தான நிலை நெருங்குவது போலத் தோன்றியது.

மட்டாக்ஸ் லேசில் பணம் கொடுக்க சம்மதிக்க மாட்டார். அது கிடைக்காமல் போனாலும் சரி, தப்பித்தால் போதும் என்றிருந்தது அவனுக்கு. மிகவும் எச்சரிக்கையாக அடியெடுத்து வைக்காவிட்டால் ஆபத்து வரும் என்று தோன்றியது. எல்லாம் அவன் செய்த தவறு. தன் கடந்த கால வாழ்வைப் பற்றி அவள் சொன்னதெல்லாம் பொய். அதை நம்பியதால் வந்த வினை இது.

அப்படியே அரை மணி நேரத்திற்கு மேல் சிந்தனைக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தபோது, கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

"வரலாம்," என்றான் உரக்க.

கதவு திறக்கப்பட்டது.

கட்டடக் காவல்காரன் ஜோன்ஸ் அறைக்கள் நுழைந்தான்.

ஆன்சன் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான்.

"என்ன ஜோன்ஸ்? நான் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்ன வேணும்?" என்று கேட்டான்.

ஜோன்ஸ் தன் தடித்த உடலைச் சுமந்து கொண்டு உள்ளே நகர்ந்தான். கதவைச் சாத்தினான்! அவன் முகம் ஒரு மாதிரியாக இருந்ததை ஆன்சன் கவனித்தான். அவனுக்கு அது என்னவோ மாதிரி ஒரு கலக்கத்தைத் தந்தது

"உங்களிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும் மிஸ்டர் ஆன்சன்," என்றான் அவன், இறுக்கமான குரலில்.

"நான் அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பிறகு பேசலாமே."

முடியாது என்பதன் அறிகுறியாக ஜோன்ஸ் தலையசைத்தான்.

"முடியாது சார். இது ரொம்ப முக்கியம்– உங்களுக்கும் எனக்கும்."

ஆன்சன் நாற்காலியிலிருந்து எழுந்தான். ஜன்னல் அருகில் போய் நின்றான்.

"சொல்லு!– என்ன விஷயம்?"

"அந்த ஆள் ஹெர்மாஸ்– உங்களக்குத் தெரியும் இல்லவா?"

ஆன்சனின் கை விரல்கள் இறுகின.

"ஆமாம்– அவருக்கென்ன?"

"அவர் என்னிடம் விசாரணை நடத்தினார். உங்களைப் பற்றி," என்று சொல்லி நிறுத்தினான்.

ஆன்சனின் முகம் இருண்டது. எந்த உணர்வும் தோன்றாமலிருக்க முயன்றான். அவன், செப்டம்பர் 30 ஆம் தேதி இரவு தான் எங்கிருந்தது என்று விசாரித்திருப்பான். அதனால் என்ன? இந்த அறையில் இரவு முழுவதும் இருந்ததற்குத்தான் ஜோன்ஸ் சாட்சியம் சொல்வானே.

ஆன்சன் சற்று சமாளித்துக் கொண்டு சொன்னான்: "எல்லாம் எனக்குத் தெரியுமப்பா. அதான் அந்தக் கொலை வழக்கு சம்பந்தமாக விசாரித்திருப்பார். போலீஸ் அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். பர்லோவுடன் சம்பந்தப்பட்ட எல்லாரைப் பற்றியும் விசாரிக்கிறார்கள். நான் பர்லோவை இன்ஸ்யூர் செய்தவன். இதெல்லாம் வழக்கமான விசாரணை தானே? இதற்குப் போய் ஏன் கவலைப்படுகிறாய்?"

ஜோன்ஸ், தன் காதில் செருகியிருந்த பாதி சிகரட்டை எடுத்து, உதட்டில் பொருத்திக் கொண்டு அதைப் பற்ற வைத்தான்.

"அதற்காக நான் கவலைப்படவில்லை மிஸ்டர் ஆன்சன். அது உங்களுக்குக் கவலை தரக்கூடிய விஷயம் என்று நான் நினைத்தேன்! பாருங்கள், சார்! அன்று இரவு முழுதும் நீங்கள் இந்த அறையில் இருந்து வேலை பார்த்ததாகத்தான் நான் சொன்னேன். டைப் அடித்துக் கொண்டிருந்ததாகவும் சொல்லி விட்டேன்."

அவன் குரலில் ஒரு ஏளனம் தொனித்ததை ஆன்சன் கவனித்தான்! ஜோன்சின் முகத்தையே அவன் கூர்ந்து பார்த்தான்.

"ஆமாம். நீ சொன்னது சரிதான். அன்று இரவு இங்கே நான் தனியாகத்தானே இருந்தேன்?" என்றான் ஆன்சன்.

"ஆமா.... நான் அப்படித்தான் சொன்னேன். அவர் பிரைவேட் துப்பறிவாளர்தானே! ஆனால், போலீஸ் வந்து கேட்டால் அப்படி சொல்ல முடியுமா?" என்றான் ஜோன்ஸ்!

"அதைத்தானே சொல்ல வேண்டும்? ஏன்?"

"போலீசிடம் பொய் சொல்ல முடியுமா மிஸ்டர்? நான் வம்பில் மாட்டிக் கொள்ளக்கூடாது பாருங்கள்... அப்புறம் என்னை இழுத்தடிப்பார்கள்- மிரட்டுவார்கள்— அடிப்பார்கள்."

ஆன்சன் திடுக்கிட்டான். அவன் நெஞ்சு நடுங்கியது.

"என்ன சொல்கிறாய் ஜோன்ஸ்? பொய் சாட்சியா? என்ன அது?"

"அன்று இரவு நீங்கள்தான் இந்த அறையில் இல்லையே!"

ஆன்சன் ஆடிப்போய்விட்டான்! அப்படியே மேஜையின் விளிம்பைப் பிடித்துக் கொண்டான்! அவன் கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன! நிற்கமுடியாமல் நாற்காலியில் வந்து அமர்ந்தான்!

"ஏன் அப்படி நினைக்கிறாய் ஜோன்ஸ்?"

ஜோன்ஸ் சிகரட் துண்டைக் கீழே போட்டு மிதித்தான்.

"அன்றைக்கு ராத்திரி, எனக்கு சிகரட் தீர்ந்து போய் விட்டது. உங்களிடம் ஒன்றிரண்டு வாங்கலாம் என்று வந்தேன். அறையில் நீங்கள் இல்லை. ஆனால், டைப்ரைட்டர் சப்தம் டேப்பிலிருந்து வந்தது. என் வசமிருந்த சாவியால் கதவைத் திறந்து பார்த்தபோது தெரிந்து கொண்டேன். நீங்கள் என்னை ஏமாற்றவே அந்த ஏற்பாட்டை செய்து விட்டு வெளியே போயிருக்கிறீர்கள்."

ஆன்சன், குப்பென்று வியர்த்ததை உணர்ந்தான்.

இப்போது என்ன செய்வது?

தன் மேசைக்குள்ளிருக்கும் பர்லோவின் துப்பாக்கியை எடுத்து அவனை உடனே சுட்டுக் கொன்று விடவேண்டும் என்று ஆத்திரம் வந்தது. ஆனால், முடியுமா என்ன! அப்படியே சுட்டுக் கொன்றாலும், அவனது ராட்சச உடலை அந்த அறையிலிருந்து நகர்த்தவே முடியாது. யோசித்து ஏதாவது தந்திரம் செய்து இவனை சமாளிக்க வேண்டும்.

"உண்மைதான் ஜோன்ஸ். ஆனால், அந்தக் கொலைக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. ஆமாம்."

ஆன்சனையே முறைத்த படி நின்ற ஜோன்ஸ் அதை நம்புவதாகத் தோன்றவில்லை. அசையாமல் நின்று கொண்டிருந்தான் அவன்.

"அப்படித்தான் இருக்க வேண்டும் சார். உங்களுக்கும் அந்தக் கொலைக்கும் சம்பந்தம் இருக்காதுதான். ஆனால், போலீஸ் விசாரிப்பதற்கு முன்பு உங்களிடம் பேசிவிடுவது நல்லது என்று எனக்குத் தோன்றியது. ஆனால், நடந்ததை மறைத்துப் பொய் சொல்ல முடியாதே! உண்மைதானே சொல்ல வேண்டும்? அதனால், ஆபத்து ஒன்றும் வராதே?"

"இல்லை ஜோன்ஸ். நடந்ததைச் சொன்னால் எனக்கு ஆபத்து வரும்."

ஜோன்சின் முகத்தில் துக்க பாவனை தோன்றியது! நடிப்பு! இவன் என்ன நினைத்துக் கொண்டு இப்படி வந்து பேசுகிறான்?

"அப்படிச் சொல்ல எனக்கும் விருப்பமில்லைதான். நீங்கள் என்னிடம் அன்பாக நடந்து கொண்டவர். ஆமாம், என்ன விதமான ஆபத்து வரும் மிஸ்டர் ஆன்சன்?"

"என் வேலை போய்விடும். நான் கொலையுண்டவரின் மனைவியுடன் சுற்றிக் கொண்டிருந்தேன் என்று நினைத்தால் வேறு சந்தேகமெல்லாம் வந்துவிடும். நான் அன்று இரவு இங்கேயே இருந்தேன் என்று நிரூபணமானால்தான் பெரிய ஆபத்திலிருந்து தப்ப முடியும்."

ஆன்சனின் குரல் பலவீனமாக ஒலித்தது. அவன் கெஞ்சுவது போலப் பேசினான். வேறு வழி?

"அப்படியா? சார்! நீங்கள் எப்போதும் பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் அதிகம் தான். என்ன செய்வது. நான் அதை மறந்து விடுவதுதான் உங்களுக்கு நல்லது... நான் யோசித்துப் பார்க்கிறேன் சார்."

ஆன்சனுக்கு ஜோன்சின் நோக்கம் புரிந்து விட்டது. அவன் பணம் பறிக்கவே மிரட்ட வந்திருக்கிறான்.

ஜோன்ஸ்.... ஒரு நூறு டாலர் உன் செலவுக்குத் தருகிறேன். எனக்கும் அந்தக் கொலைக்கும் சம்பந்தமில்லை என்றாலும், கொலை விசாரணை ஆனதால், குழப்பம் உண்டாகும். என்ன சொல்கிறாய்? நூறு டாலர் தரவா?"

ஜோன்ஸ் தன் பருத்த உடலை சுவரில் சாய்த்துக் கொண்டான்.

"சார்.. எனக்கு அது கவலையாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது? சூழ்நிலை அப்படி அமைந்து விட்டது. பாருங்கள் சார்.. என் மனைவி நித்திய நோயாளி. பிழைக்க மாட்டாள் என்று டாக்டர் சொல்கிறார். இந்த ஊரே அவளுக்கு ஒத்துவரவில்லை. ஊர் மாற்றிப் போக வேண்டுமானால் செலவு அதிகமாயிருக்கும். ஆயிரம் டாலராவது இருந்தால் இந்த ஊரை விட்டே தொலைந்து விடுவேன்.. உங்களால் உதவ முடியாதா சார்? நான் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன் சார்.."

ஆன்சன் சட்டென அமைதியடைந்தான். சூழ்நிலை பற்றி யோசித்தான். இந்தக் கொள்ளைக்கார ஜோன்சைக் கொன்றுவிட்டால் என்ன என்ற எண்ணம் மறுபடியும் தலை தூக்கியது. அவன் உடலை யார் கண்ணிலும் படாமல் மறைப்பது தான் பிரச்சனையாக இருந்தது. ஏதாவது ஒரு வழி தென்படும் வரை, கொஞ்சம் இழுத்தடித்தால் என்ன என்று தோன்றியது.

"ஆயிரமா! அட கடவுளே! ஜோன்ஸ்! அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கே போவேன்! இருநூறு டாலர்தான் என்னால் அதிக பட்சம் சமாளிக்க முடியுமப்பா."

ஜோன்ஸ் முடியாது என்று தலையசைத்தான்!

அவன் முகம் சோகத்தைக் காட்டியது!

"உங்களுக்கு நான் உதவி செய்ய ஆசைப்படுகிறேன் சார். நான் பொய் சொல்லி, அதைப் போலீஸ் கண்டுபிடித்து

விட்டால் என்ன செய்வேன்? என்னையும் உள்ளே தள்ளிவிடுவார்கள். இருநூறு போதாது சார்!"

ஆன்சன் கோபத்தை அடக்கிக் கொண்டு அவனையே முறைத்துப் பார்த்தான்.

"எனக்குக் கொஞ்சம் டைம் வேணும் ஜோன்ஸ். இரண்டு மூன்று நாளில் எப்படியாவது ஒரு ஐநூறு சமாளித்து விடப் பார்க்கிறேன். அவ்வளவுதானப்பா என்னால் முடியும். யோசித்துப் பார்த்து முடிவு சொல். அவசரமில்லை," என்றான் ஆன்சன்.

"உங்களைப் போன்ற நல்ல மனிதரை நான் வற்புறுத்த விரும்பவில்லை சார். என் தேவை ஆயிரம். அதற்குக் குறைத்தால் சரிப்படாது. யோசித்து இரண்டு நாளில் முடிவு சொல்லுங்கள்," என்று கதவை நோக்கி நகர்ந்தான் ஜோன்ஸ்!

அவன் தன் பருத்த உடலுடன் நகர்ந்து செல்வதைப் பார்த்தபடியே நின்றான் ஆன்சன்.

ஜோன்ஸ் கதவைத் திறந்தான்; வெளியே போனான்; மறுபடியும் தலையை உள்ளே நீட்டி, "விஷயம் என் சம்சாரத்திற்கும் தெரியும் சார்! சொல்லி வைத்துவிட்டேன்! நான் எந்த இரகசியத்தையும் அவளிடம் மறைக்கமாட்டேன். அவளும் என்னைப் போலவே வாயைத் திறக்கமாட்டாள். குட் நைட் சார்!" என்றான்.

கதவை மூடிவிட்டுப் போய்விட்டான் அவன்.

தன் அறைக்குத் திரும்பும் வழியில் ஆன்சன், 'ஷெல் சர்வீஸ் ஸ்டேஷனில்' காரை நிறுத்தினான். டயர் மாற்றிக் கொடுத்தவர் வெளியில் வந்து கை குலுக்கினார்.

"டயர்கள் எப்படி இருக்கின்றன?" என்று கேட்டார்.

"நன்றாக இருக்கின்றன. பணம் கொடுத்துவிட்டுப் போக வந்தேன்," என்றான் ஆன்சன்.

"நன்றி, உள்ளே வாருங்கள். இரசீது எழுதித் தந்துவிடுகிறேன்."

ஆன்சன் அலுவலக அறைக்குள் போய் உட்கார்ந்தான். அவர் இரசீது எழுதிக் கொண்டிருக்கும் போது, "மிஸ்டர் ஆன்சன், போலீஸ் உங்கள் பழைய டயர்களைப் பற்றி விசாரித்தார்கள்," என்று சொன்னார்!

கிடுகலங்கிப் போனான் ஆன்சன்!

அவருடைய தகவல் ஓங்கி முகத்தில் அறைந்தது போலிருந்தது!

"போலீசா? எதற்கு?"

"என்னவோ, பர்லோவின் கொலை சம்பந்தமாக என்று நினைக்கிறேன். கொலைகாரனின் கார் தடயங்கள் கொலை நடந்த இடத்தில் பதிந்திருக்கும்போல் தோன்றுகிறது. சமீபத்தில் டயர் மாற்றப்பட்ட எல்லா கார் ஆட்களைப் பற்றியும் அவர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் டயர் மாற்றியதையும், பழைய டயர்களை எடுத்துக் கொண்டு போனதையும் பற்றிச் சொன்னேன்," என்றார் அவர், சாதாரணமாக!

முதல் அதிர்ச்சி கொஞ்சம் தணிய ஆரம்பித்தது.

"பரவாயில்லை. நான் இன்ஸ்பெக்டர் ஜென்சனை சந்தித்துப் பேசுகிறேன். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர்– எனக்கும் அந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் தெளிவு படுத்த வேண்டியது என் கடமை." என்று சொல்லி, வலியச் சிரித்தான்!

"எதற்கும் தெரிந்திருக்கட்டும் என்று சொன்னேன் அவ்வளவுதான்," என்று சொல்லி இரசீதைக் கொடுத்தார் அவர்.

"நன்றி– நான் போய் இன்ஸ்பெக்டரைப் பார்க்கிறேன்."

ஆன்சன் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்ட போது, தான் பொறியில் மாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

தொடர்ந்து தவறுகள் செய்து வருவதை உணர்ந்தான். பர்லோவின் துப்பாக்கியை உபயோகித்தது ஒரு தவறு! தெரிந்த காரேஜில் போய் டயர்கள் மாற்றியது இன்னொரு தவறு! பர்லோவின் ஆயுள் காப்பீட்டுக்கான விண்ணப்பப் பாரம் இல்லை என்று ஹெர்மாசிடம் சொன்னது ஒரு சிக்கல்! அன்று இரவு அறையில் இல்லை என்பது ஜோன்சுக்குத் தெரிந்துவிட்டது ஒரு பெரிய விவகாரம்!

அவனுடைய புத்திசாலித்தனமான திட்டம் ஒவ்வொன்றாகத் தகர்ந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். இருந்தாலும் மனம் தளர்ந்துவிடக்கூடாது. தைரியமாக இருக்க வேண்டும் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். ஜோன்சை எப்படி சமாளிப்பது? அதை நினைத்தபோது உள்ளங்கை வியர்த்தது! ஸ்டியரிங் வீல் வழுக்கியது. அதை இறுகப் பற்றிக் கொண்டான் அவன்.

ஜோன்சையும், அவன் மனைவியையும் கொன்றுவிட முடியுமா? எப்படியாவது அவர்கள் இருவரின் வாயையும் அடைத்துவிட வேண்டும். அவனுக்கு எப்படியாவது ஆயிரம் டாலர் சமாளித்துக் கொடுத்துவிட்டாலும் கூட, விவகாரம் அதோடு முடிந்துவிடாது. அவன் மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொண்டுதான் இருப்பான். பிளாக்மெயிலுக்கு முடிவே கிடையாது.

அடுத்ததாக இந்த டயர் விவகாரம்! பழைய டயர்களை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிடவேண்டும், அவை இருக்கும்வரை ஆபத்துதான் என்று முன் கூட்டியே, பழைய கார் சாமான்கள் போட்டிருக்கும் குப்பையில் கொண்டு போய் வீசிவிட்டு வந்தது நல்லதாய்ப் போயிற்று. அங்கே போய் மலை போலக் குவிந்து கிடக்கும் டயர்களில் கண்டுபிடிப்பது முடியாத காரியம், என்று நிம்மதியடைந்தான் ஆன்சன். அவன் கொண்டு போய்ப் போட்டதையும் யாரும் கவனிக்க வில்லை.

ஜோன்ஸ் காட்டிக் கொடுத்துவிட்டால்தான் ஆபத்து. என்ன செய்ய? அவன் சாட்சியத்தை வைத்து, தன் மேல் கொலைக் குற்றம் சுமத்த முடியுமா? மெக் தைரியமாக இருக்க

வேண்டும். அவள் தகர்ந்து விட்டால் எல்லாமே நாசம்தான். போலீஸ் அவளை சித்திரவதை செய்தால் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்றே அவனுக்குத் தோன்றியது.

மறுநாள் அவள் வீடு திரும்பி விடுவாள். அந்த அழுக்குப் பிடித்த வீட்டில் அவள் தனியாகத்தான் இருப்பாள். இரவு நேரத்தில் அவளை சந்தித்துப் பேச வேண்டும் என்று முடிவு செய்தான் ஆன்சன்.

மட்டாக்ஸ் சிகரட் சாம்பலை சுண்டி விட்டார்.

"எனக்கு ஆன்சனை எப்போதுமே பிடிக்காது. அவன் மேல் எனக்கு எப்போதுமே ஒரு சந்தேகம் தான். காமப் பசி பிடித்தவன் அவன் பார்வையே சரியில்லை," என்றார் அவர்.

இன்ஸ்பெக்டர் தம் நாற்காலியில் உட்கார்ந்தபடி மட்டாக்ஸ் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்து நாற்காலியில் ஹெர்மாஸ் இருந்தான். ஒரு மணி நேரமாக அவர்கள் விரிவாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆன்சனுக்கு பர்லோவின் கொலையில் சம்பந்தம் இருப்பதாகவே அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்கள் சுட்டிக் காட்டின.

"இன்னொரு முறை இதைத் தெளிவாகப் பார்ப்போம் இன்ஸ்பெக்டர்," என்று சொல்லிவிட்டு, சிகரட்டைக் கீழே போட்டுவிட்டு, இன்னொன்றைப் பற்ற வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார் மட்டாக்ஸ்.

"ஆன்சன் அவளுடைய படுக்கை அறை வரை போயிருக்கிறான் என்பதைக் கைரேகைகள் தெளிவு படுத்தி விட்டன. பர்லோவின் துப்பாக்கிப் பெட்டியிலும் அவனது கைரேகைகள் இருக்கின்றன. படுக்கை அறை-துப்பாக்கிப் பெட்டி, ஹெர்மாஸ் டேபிள் வெயிட்டில் அவனுடைய ரேகைகள் படும்படியாகத் தந்திரம் செய்து கொண்டு வந்ததால் இது தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஹெர்மாஸ்! நல்ல புத்திசாலித்தனமான காரியம் செய்தாய்."

"அந்தப் பெண், சொன்னாயே- லாலி... அவள் மூலமாகத் தெரிந்த விஷயங்கள் முக்கியமானவை. ஆன்சன் குதிரைப் பந்தயத்திலும், பெண்கள் விஷயத்திலும் ஏராளமாக இழந்திருக்கிறான். நிறையப் பணமுடை வருவாய்க்கு மீறிய செலவு. அப்புறம் அந்த பெட்ரோல் பங்க் கொள்ளை அதற்கடுத்த நாளே ஆன்சன் தன் பாங்கில் ஆயிரம் டாலர் கட்டியிருக்கிறான். போலீஸ் கான்ஸ்டபிளைக் கொன்ற துப்பாக்கி பர்லோவின் துப்பாக்கி என்பது உறுதியாகிவிட்டது. அதே துப்பாக்கியால்தான் பர்லோவும் கொல்லப் பட்டிருக்கிறார்-

பிறகு மட்டாக்ஸ் தன் சிகரட்டை நன்றாக ஒரு இழுப்பு இழுத்து, தன் மூக்கின் வழியாக குபுகுபு வென்று புகை விட்டார். பிறகு மேலும் தொடர்ந்தார்...

"அந்தப் பெண்தான், தன் கணவனின் துப்பாக்கியை எடுத்து ஆன்சனிடம் கொடுத்திருக்க வேண்டும். ஏதோ கடன் நெருக்கடியை சமாளிக்கத்தான் பெட்ரோல் பங்க் கொள்ளையை அவன் நடத்தியிருக்க வேண்டும். அப்புறம் கார் டயர்களையும் மாற்றியிருக்கிறான். அதுவும், ஹெர்மாஸ் கார் டயர் தடயங்கள் பற்றிப் பேசிய பிறகு அதைச் செய்திருக்கிறான்... அவன் வசமாக மாட்டிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது... ஆனால், ஹெர்மாஸ், நீ என்ன சொல்கிறாய்? ஆன்சன் அன்றிரவு தன் அலுவலக அறையில் இருந்ததாக... யார் அது? கட்டடக் காவல்காரனா? பர்லோ கொல்லப்பட்ட இரவு 11 மணி வரை அவன் தன் அறையில் இருந்ததாக காவல்காரன் சொன்னானா?" என்று கேட்டார்.

"அவன் என்ன ஆள்! மூன்று நிமிஷ விசாரணைக்குத் தாக்குப் பிடிக்க மாட்டான். அவன் பழைய கேடி. பத்து வருஷங்களுக்கு முன்னால், பிளாக்மெயில் செய்த குற்றத்திற்காக ஐந்து வருட சிறைத் தண்டனை அனுபவித்தவன் அவன். ஒரு டாலருக்கு அம்மாவையே விற்றுவிடும் அயோக்கியப் பயல் அவன்," என்றார் இன்ஸ்பெக்டர் ஜென்சன்.

மட்டாக்ஸ் தன் விரல்களால் தலையைக் கோதிக் கொண்டார். அவர் முகம் சிவந்து விட்டது. ஹெர்மாஸ் பக்கம் திரும்பினார்...

"அப்படியானால் எல்லாமே ஆன்சனின் வேலைதான் என்று உறுதியாகிறது. என்ன நினைக்கிறாய் ஹெர்மாஸ்? அவனை அமுக்கிவிடலாமா?"

"இப்போது அவசரப்படவேண்டாம் சார். இன்னும் சாட்சியங்கள் பூரணமாக கையில் அகப்படவில்லை. கோர்ட்டில் நம் ஆதாரங்கள் நிற்காது. மேலும் அவன் நம்முடைய ஆள். கவனமாக செயல்பட வேண்டும்."

"சரி. உன் இஷ்டம். இது உன் வேலை. இப்போது என்ன செய்யலாம்? சொல்லுங்கள்!"

ஹெர்மாஸ் முகத்தில் புன்முறுவல் தோன்றியது.

"நாம் கணக்கை சரி செய்து விடுவோம். திருமதி மெக் பர்லோவுக்கு ஐம்பதாயிரம் டாலர் இன்ஸ்யூர் பணம் கொடுத்துவிடுவோம்" என்றான் ஹெர்மாஸ்!

அதைக் கேட்டதும் மட்டாக்ஸின் முகம் இரத்தச் சிவப்பாய் மாறியது!

"என்ன சொன்னாய்? பணம் கொடுப்பதா? உனக்கென்ன பைத்தியமா? ஒரு சல்லிக்காசு தரமாட்டேன்" என்று உறுமினார் மட்டாக்ஸ்.

ஹெர்மாஸ், தன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு நாற்பது. அவனுக்குப் பசித்தது.

"உங்களிடம் பேசி பணத்தை வாங்கிக் கொடுப்பதாக ஆன்சனிடம் சொல்லிவிட்டு வந்தேன். அப்படிப் பேசினால்தான் பதட்டமில்லாத ஒரு சூழலை அவர்களுக்கிடையில் உருவாக்க முடியும்! இப்போது, அவளுடைய வக்கீலைக் கூப்பிட்டு, பணம் தர முடிவு செய்திருப்பதாகச் சொல்ல வேண்டும். இந்தத் தகவல் போனதும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக்

கண்காணிக்க வேண்டும். பணம் கைக்கு வரும் என்று உறுதியாகிவிட்டால், ஏதாவது விவகாரங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன்," என்றான் ஹெர்மாஸ்.

மட்டாக்சின் முகம் சட்டென மலர்ந்தது.

"சொல்லப்பா– சொல்லு! சொல்லு! அப்புறம்?" என்றார்.

"அவள் முன்பு விபசாரம் செய்து பிழைத்தவள். பேராசை கொண்ட மிருகம் அவள். தன் கொள்ளையில் ஒரு காசையும் இழக்க அவள் சம்மதிக்க மாட்டாள். நிச்சயமாக அவளுக்கும், ஆன்சனுக்கும் பணத்தகராறு வரும். நாளைக்கு அவள் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகப் போகிறாள்... ஒரு யோசனை சொல்கிறேன். உடனடியாக அவள் போனை 'டேப்' செய்துவிடலாம். சில சிறிய மைக்குகளை அங்கங்கே ஒளித்து வைத்து விடலாம். பேச்சை ஒலிப்பதிவு செய்ய டேப் ரிகார்டரையும் ஏற்பாடு செய்து விடலாம். பணம் கிடைக்கப் போகிறது என்பது தெரிந்தவுடனே ஆன்சன் நேராக அங்கே தான் போவான். சுவாரஸ்யமான ஒரு உரையாடலை நாம் கேட்டு ரசிக்கலாம்," என்றான் ஹெர்மாஸ்.

மட்டாக்ஸ் தன் பிடரியைத் தேய்த்தவாறு இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

"உங்க ஆள் ரொம்ப புத்திசாலி மட்டாக்ஸ். எனக்கு நல்ல யோசனைகளை ஹெர்மாஸ் தான் சொல்லி உதவினார். இவர் யோசனை நன்றாகவே இருக்கிறது," என்று சொன்ன இன்ஸ்பெக்டர், ஹெர்மாஸைப் பார்த்து,"சரி. உங்கள் யோசனைப்படியே செய்யலாம். உடனே அவளுடைய வக்கீலையும், ஆன்சனையும் கூப்பிட்டுப் பணம் கொடுக்க முடிவு செய்துவிட்டதாக நீங்கள் சொல்லிவிடுங்கள்," என்றார்.

ஆன்சன் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாகப் பொறுமையிழந்தவனாய் நடந்து கொண்டிருந்தான். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

ஒன்பதுக்கு ஐந்து நிமிடம் இருக்கும்போது, சட்டெனத் தொலைபேசி அலறியது.

ஒரு கணம் அவன் தயங்கினான். பிறகு சட்டென அதைக் கையில் எடுத்தான். பேசியது ஹெர்மாஸ்.

"ஆன்சன்! நல்ல செய்தி! மட்டாக்ஸை ஒப்புக் கொள்ள வைத்துவிட்டேன். அவர் சம்மதித்து விட்டார். அப்பா... படாத பாடு பட்டுவிட்டேன்... எப்படியோ பணம் கொடுத்துவிட ஒப்புக் கொண்டார். உங்களுக்க நல்ல பெயர் கிடைக்கும். இனித் தொழிலும் நல்லபடியாக நடக்கும்... நீங்கள் இந்த வட்டாரத்தில் நன்றாக வேலை செய்திருப்பதால்தான் மட்டாக்ஸ் ஒப்புக் கொண்டார். இதற்குமேல் பணம் கொடுக்க மறுத்தால் கம்பனி பெயர் கெட்டு விடுமல்லவா?" என்றான் ஹெர்மாஸ் வெகு சாமர்த்தியமாக!

"நிஜமாகவா?... இதில் சூது வாது எதுவும் இல்லையே..." என்று இழுத்தான் ஆன்சன். அவனுக்கு சந்தேகம் தீரவில்லை. மட்டாக்ஸ் ஒப்புக் கொண்டதை அவனால் நம்ப முடியவில்லை. அது மகா அதிசயம்!

"முழு மனதோடு மட்டாக்ஸ் சம்மதித்தார் என்று நினைத்துவிட வேண்டாம்," என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தான் ஹெர்மாஸ்! "நம் கம்பனித் தலைவரிடம் போனில் பேசினார். அவள்தான் தன் கணவனைக் கொலை செய்ய ஏற்பாடு செய்திருப்பாள் என்பதுதான் மட்டாக்ஸின் உறுதியான நம்பிக்கை. ஆனால் அதை நிருபிக்கப் போதிய ஆதாரம் அவரிடம் இல்லை அதனால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்... அவளுடைய வழக்கறிஞருக்கும் தகவலை கொடுத்துவிட்டேன். நாளைக்கே அவருக்கு 'செக்' அனுப்பப்படும்" என்றான் ஹெர்மாஸ் உற்சாகமாக!

"நல்லது. நன்றி எனக்கு சந்தோஷம்தான். கூப்பிட்டு சொன்னதற்கு நன்றி."

"அதனால் என்ன! உங்களுக்குத் தெரிய வேண்டிய நல்ல விஷயமாயிற்றே. பிறகு சந்திப்போம்."

ஆன்சன் மெதுவாக போனை வைத்தான்.

மெக், கணப்பு நெருப்பைக் கிளறி விட்டாள்.

அந்த அழுக்குப் பிடித்த, தூசு நிரம்பிய அறை அவளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வைத் தந்தது.

பக்கத்து சோபாவில் செய்லர் நீட்டி நிமிர்ந்து சாய்ந்து கொண்டிருந்தான்! அவன் ஒரு மாதிரியான மனநிலையில் இருந்தாலும், அவன் அருகில் இருப்பது அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

நேரம், இரவு மணி பதினொன்று. அன்று பிற்பகல்தான் அவள் மருத்துவ நிலையத்திலிருந்து திரும்பியிருந்தாள். உடனே செய்லருக்கு போன் செய்தாள். நீண்ட முயற்சிக்குப் பிறகே அவனுடன் தொடர்பு கொள்ள முடிந்தது.

உடனே அங்கே வரும்படி அவனை அழைத்தாள். அவன், இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வரமுடியும் என்று சொன்னான்.

ஆனால், அவன் வந்து சேர்ந்தது என்னவோ, பத்துமணிக்கு சில நிமிடங்கள் இருக்கும்போதுதான்.

வந்ததுடன் குடிக்க ஆரம்பித்தான். அவளுக்குப் பணம் கிடைக்குமா, எப்போது கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்வதிலேயே அவன் குறியாக இருந்தான்.

"எனக்குத் தெரியாது. அந்த ஆட்கள் லேசில் ஏமாறக் கூடியவர்கள் அல்ல. என் வக்கீல் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்குப் பிறகு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை," என்றாள் மெக்.

"நாளைக்கு அவனை நெருக்கிப் பிடி. இல்லாவிட்டால் அவனைத் துரத்து. எனக்கு இந்த வக்கீல்களைப் பற்றியெல்லாம் தெரியும். வற்புறுத்தாவிட்டால் அவர்கள் தம் நாற்காலியை

விட்டு அசையவே மாட்டார்கள். ஒன்றுமே செய்ய மாட்டார்கள்," என்றான் செய்லர்.

"நாளைக்கு விசாரிக்கிறேன். ஆன்சன் விஷயமாக என்ன செய்வது?"

"ஒன்றும் செய்ய வேண்டியதில்லை- அவனை விரட்டி விடு. அவனால் என்ன செய்துவிட முடியும்? பணம் கிடைத்ததும் அதை என்னிடம் கொடுத்துவிட்டு நீ சும்மா இரு. பாக்கியை நான் பார்த்துக் கொள்கிறேன். என்ன புரிந்ததா? அவனை விரட்டி விடு!"

மெக் அவனை வெறித்தாள்.

"நான் பணம் கொடுத்து விடுகிறேன். அந்த சமயம் ஆன்சனையும் நீதான் சமாளிக்க வேண்டும். என்னால் முடியாது. அவரிடம் என் புருஷனின் துப்பாக்கி இன்னும் இருக்கிறது."

செய்லர் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"என்ன சொல்கிறாய் நீ?"

"நான் அவரைப் பற்றி முன்கூட்டியே எச்சரித்திருக்கிறேன். அந்த ஆளை நினைத்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது. இரக்கமில்லாமல் எதையும் செய்யக்கூடிய ஆள். சும்மா விரட்டி விடு என்று சுலபமாக சொல்லிவிட்டாய். அது அவ்வளவு சுலபமல்ல. என் கதி என்ன? அந்த ஆள் எதையும் செய்யலாம். கொலைகூட செய்யலாம்."

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது," என்று சீறினான் செய்லர். அவனால் எதுவுமே செய்ய முடியாது. கொலையில் மாட்டிக் கொண்டிருக்கிறான். ஏதாவது செய்தால் மரண தண்டனைதான் கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்காக பயப்படாதே. பணம் கிடைத்ததும், 'நாயமாய்ப் போ' என்று அவனை விரட்டிவிடு. பணத்தை என்னிடம் கொடுத்துவிடு. அவ்வளவுதான்."

மெக் கைகளைப் பிசைந்தாள்.

"அவ்வளவு சுலபத்தில் எல்லாம் முடிந்துவிட்டால் நல்லதுதான். ஆனால், அப்படி சுலபமாக எல்லாம் முடிந்துவிடாது என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் முரட்டு ஆள். பணமே குறியாகத்தான் இந்தத் திட்டத்திற்கு அவர் சம்மதித்தார்; கொலையும் செய்தார். பணம் இல்லை என்றால், ஏதாவது விபரீதம் செய்துவிடுவார்."

செய்லர் நிமிர்ந்து உட்கார்ந்தான். தன் இடுப்பு பெல்டில் கை வைத்தான். பிறகு சட்டென அதைக் கழற்றினான்! உருவி வெளியில் எடுத்தான்! எழுந்து நின்றான்!

"ஓகே. பேபி. உனக்குக் கொடுப்பதைக் கொடுத்தால் நீ சொன்னபடி செய்வாய்," என்றான்.

அந்த சமயம் வெளியிலிருந்து அழைப்பு மணியோசை கேட்டது.

இருவரும் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டார்கள்! இந்த அர்த்த ராத்திரியில் யார் வந்திருப்பது? அவர்களுக்கு விளங்கவில்லை.

"யாரது?" என்றான் செய்லர்.

அவன் கையில் பெல்ட் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் கண்கள் அலை பாய்ந்தன.

"பேபி! போய் யாரென்று பார்! ம்— போகிறாயா அல்லது அடி வாங்கிக் கொண்டு போகிறாயா?" என்று உறுமினான் செய்லர்...

அழைப்பு மணி தொடர்ந்து அலறியது.

ஆன்சன் காரை விட்டிறங்கினான். இரண்டு பெரிய கேட்டுகளைத் தள்ளித் திறந்தான். பிறகு, திரும்பிச் சென்று காரில் ஏறி அமர்ந்து, அதை உள்ளே லுெத்தினான்.

காரின் விளக்குகளின் வெளிச்சம் பூந்தோட்டத்தின் மேல் வீசியது. அது, தன் பழைய அழகை இழந்திருப்பதை ஆன்சன் உணர்ந்தான். பாதுகாவலன் பர்லோவை இழந்த பரிதாபமான தோட்டம் அது.

மணி பதினொன்றரை. வீட்டில் விளக்கு எரிவது தெரிந்தது. அவள் இன்னும் உறங்கவில்லை. ஒரு கணம் அப்படியே அசையாமல் நின்றான். அவன் கை கோட்டுப் பைக்குள் சென்றது. விரல்களில் துப்பாக்கி பட்டது. பர்லோவின் துப்பாக்கி. பர்லோவைக் கொன்ற துப்பாக்கி.

ஆன்சன் படியேறிக் கதவருகில் வந்து நின்றான்.

அழைப்பு மணியை அழுத்தினான்.

பதில் இல்லை.

காத்திருந்தான். மறுபடியும் அழுத்தினான்.

பதில் இல்லை.

அவனுக்குக் கோபம் வந்தது. அவள் என்னசெய்து கொண்டிருக்கிறாள்?

அழைப்பு மணிப் பொத்தானிலிருந்து கையெடுக்காமல் அழுத்திக் கொண்டே இருந்தான்.

அழைப்பு மணி அலறிக் கொண்டே இருந்தது.

சற்று நேரம் கழிந்த பிறகு, படக் கென்று கதவு திறக்கப்பட்டது.

நிலர் வெளிச்சம் அவள் முகத்தின் மேல் விழுந்தது.

அவளை முதன் முதலாக சந்தித்ததை ஆன்சன் நினைத்துக் கொண்டான். அன்று நின்றது போலவே நிற்கிறாள் இப்போதும். முகத்தில் பட்டுள்ள காயம் மட்டுமே வேறுபாடு. தாடையில், கண்ணுக்கு மேல் காயம். என்றாலும் அவளுடைய உடல் கவர்ச்சி குறையவே இல்லை.

ஆன்சனைக் கண்டதும் அவள் திடுக்கிட்டது தெளிவாகத் தெரிந்தது. அவனை அவள் எதிர்பார்ககவில்லை. சட்டெனப் பின் வாங்கினாள்.

"என்ன வேண்டும்? இந்த நேரத்தில் எதற்காக வந்தீர்கள்?- போய்விடுங்கள்!" என்றாள் கடுகடுப்புடன்.

"மெக்! நாம் அவசரமாகப் பேச வேண்டியிருக்கிறது," என்றான் முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு

"இல்லை. நீங்கள் உள்ளே வர முடியாது. இப்போது பேசுவதற்கு எதுவும் இல்லை," என்று கதவை சட்டென சாத்தப் போனாள்.

ஆன்சன் சட்டென்று உள்ளே காலை வைத்தான். அவள் தோளில் கையை வைத்து உள்ளே தள்ளினான். அவள் தடுமாறிப் பின்னால் நகர்ந்தாள்.

அவன் ஹாலுக்குள் சென்றான்.

கணப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

மேசை மேல் இரண்டு கண்ணாடிக் குவளைகளில் விஸ்கி இருப்பதை அவன் கவனித்தான். முதல் சந்திப்பு அவனுக்கு மீண்டும் நினைவிற்கு வந்தது. எவ்வளவோ காலம் கழிந்து விட்டது போல் அவனுக்குத் தோன்றியது.

"என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று பின்னாலிருந்து கேட்டாள் மெக்.

ஆன்சன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவன் கண்கள், அந்த நேரத்திலும் கூட அவள் உடலில் மேய்ந்தன. அவள் அவ்வளவு கவர்ச்சியூட்டக் கூடியவளாக இருந்தாள். ஆனால் எல்லாம் இப்போது முடிந்துவிடும் போல் தோன்றியது- அவள் கவர்ச்சியும் குறைந்துவிட்டது போல் தோன்றியது-

"நீ என்னிடம் பொய் சொன்னாய்- உன்னைப் பற்றிச் சொன்னதெல்லாம் பொய்... ஏதோ பெரிய குடும்பத்துப் பெண்போல என்னிடம் நடித்தாய். நீ கேடு கெட்டவள். தெருத் தெருவாக அலைந்தவள்- திருடி- சிறைக்குப் போனவள்- நான் பைத்தியக்காரத்தனமாக உன் வலையில் சிக்கினேன்- உண்மை சொல்லும் தைரியம் இல்லாதவள் நீ- உன்னை நினைத்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. என் கால் பூட்சில் தைத்த ஆணியாய் உன்னைப் பிடுங்கி எறிவதுதான் எனக்கும் நல்லது."

அவள் முகம் இறுகி, இருண்டு போனது. கண்களில் கசப்பும், வெறுப்பும்.

இனி அவளைத் தொல்லைப் படுத்திப் பயனில்லை என்பதை ஆன்சன் உணர்ந்தான். அவளுடைய கடந்த காலமே அவளைச் சுற்றி அவளுக்குப் பாதுகாப்பாக இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

"போய் விடுங்கள்! நீங்கள் சொல்வதைப் பற்றி நான் கவலைப் படவில்லை," என்றாள் அவள்.

"அப்படியா! சரி. நான் சொல்வதைக் கேட்டுக் கொள்! மெக், நீ கேடு கெட்டவள் என்று தெரிந்திருந்தும் கூட, இன்ஸ்யூரன்ஸ் கம்பனி பணம் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. நாளைக்கு உனக்குப் பணம் கிடைக்கும்."

மெக் திகைத்தாள். முகம் சிவந்தது. பிறகு மெல்ல வெளுத்தது. நெஞ்சு படபடத்தது.

"பணம் உண்மையாகவே கிடைக்கப்போகிறதா! நீங்கள் தரப்போகிறீர்களா? முடிவு செய்துவிட்டீர்களா?" என்றாள் உற்சாகத்துடன்.

ஆன்சன் தொலைபேசியை சுட்டிக் காட்டினான்.

"உன் வழக்கறிஞருக்கு போன் செய்து கேட்டுப்பார். அவருக்குத் தகவல் கொடுத்துவிட்டார்கள். நானும் அவரிடம் பேசி விட்டுத்தான் இங்கே புறப்பட்டேன். நாளைக்கு அவர்,

ஐம்பதாயிரத்திற்கான கம்பெனி செக்குடன் இங்கே வருவார்," என்றான்.

மெக் நீண்ட பெருமூச்சு விட்டாள். ஆன்சன், அவளையே உற்றுப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுதான் இந்தக் காரியத்தில் இறங்கினோம். இல்லையா மெக்? நான் உன் கணவரை இன்ஸ்யூர் செய்து முடித்து விட்டுக் கொன்று விட வேண்டும். கிடைக்கும் பணத்தை இருவரும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும். இருவரும் ஒன்றாகவே இருப்பது அல்லது எங்காவது போய் சந்தோஷமாகச் செலவு செய்வது என்று பேசி முடிவெடுத்தோம். இல்லையா? ஆனால், நான் இப்போது என் மனதை மாற்றிக் கொண்டு விட்டேன். உன்னைப் போல எத்தனையோ கேடுகெட்ட வேசிகளை நான் பார்த்திருக்கிறேன். அதனால், பண விவகாரத்தை மட்டும் வைத்துக் கொள்வோம். ஆளுக்குப் பாதி. நாளைக்கு செக் கிடைக்கும். இப்போதே எனக்கு இருபத்தைந்தாயிரத்திற்கு ஒரு செக் எழுதிக் கொடுத்துவிடு. நாம் இந்த நிமிடமே பிரிந்து விடுவோம். நான் இனி உன்னை எப்போதும் சந்திக்க மாட்டேன்," என்றான் ஆன்சன்.

செய்லர் உள்ளே ஒளிந்தபடி இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதை மெக் நினைத்துக் கொண்டாள்.

அவன் உள்ளே இருக்கிறான் என்ற நினைப்பு அவளுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தது.

"உங்களுக்கு நான் ஒன்றும் தர மாட்டேன். என்னை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது. உடனே இங்கிருந்து போய் விடுங்கள்!" என்றாள் கண்டிப்பான குரலில்.

ஆன்சனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"முட்டாள்தனமாக உளறாதே! உன்னிடம் பணம் வாங்க என்னால் முடியும். ஞாபகம் வைத்துக் கொள்! தப்புக் கணக்குப் போட்டு விடாதே! நான் சொன்னபடி செய்! இல்லாவிட்டால்..."

சட்டெனப் பின் பக்கத்துக் கதவு திறந்தது!

ஆன்சன் உடனே திரும்பிப் பார்த்தான்.

செய்லர் நின்று கொண்டிருந்தான்!

"என்னப்பா- நீ பயமுறுத்துவது இவளை அல்ல- என்னை- எங்கிட்டப் பேசு!" என்றான் அவன்.

பிறகு அவன் உள்ளே வந்தான்.

மெக் மெல்லப் பின்னுக்கு நகர்ந்து கொண்டாள், பாதுகாப்பாக.

செய்லரை, அந்த இடத்தில் அந்த நேரத்தில் சற்றும் எதிர்பார்க்காத ஆன்சன் திகைத்துப்போய் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

செய்லர் ஏன் வந்தான் என்பது அவனுக்கு சட்டெனப் புரிந்துவிட்டது. எவ்வளவு பெரிய சதித்திட்டத்திற்குத் தான் இரையாகிவிட்டிருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். கண்மூடித்தனமாகத் தான் அவர்களின் மோசடி வலையில் கால் வைத்து அகப்பட்டு விட்டது தெளிவாகப் புரிந்துவிட்டது.

"ஓ- இதுதான் விஷயமா! நீயும் இவளுமா? ஜிலோவைக் கொலை செய்ததாகப் போலீஸ் நினைத்துக் கொண்டிருக்கும் பாய் பிரண்ட் நீதானா?" என்றான் ஆன்சன் மெதுவாக. பிறகு, 'இவளுக்கு லாஸ் ஏஞ்சலசில் மாமா வேலை பார்த்தவன் நீதானா?" என்றான்.

செய்லரின் முகத்தில் கோபம் கொந்தளித்தது.

"வாயை மூடு!" என்று சொல்லி சுவரின் மேல் அலட்சியமாக சாய்ந்து கொண்டு பேசினான் செய்லர்.

"எல்லாருமே அயோக்கியர்கள்தான், ஒவ்வொரு சமயம். நான்தான் இவள் கணவனைக் கொன்றதாக நினைத்துக் கொண்டிருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அது நானல்ல என்பதை அவர்களிடம் தெளிவு படுத்திவிட்டேன்- ஆதார பூர்வமாக- சாட்சிகளுடன் இப்போது அவர்கள்

மோப்பம் பிடித்துக் கொண்டிருப்பது உன்னைத்தான். நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்," என்றான்.

"அது எப்படியானாலும் சரி. எனக்குப் பாதிப்பணம் வந்துவிட வேண்டும். மற்றபாதியை நீயும், இந்த வேசியும் பங்கு போட்டுக் கொள்ளுங்கள். காரியத்தை செய்தவன், ஏற்பாடு செய்தவன், பணம் வாங்கிக் கொடுப்பவன் நான்தான்– பெரிய ஆபத்துகளை ஏற்றவன் நான்தான்– அதனால், பாதிப் பங்கு எனக்குத்தான் வந்துவிடவேண்டும்," என்றான் ஆன்சன்.

செய்லர் அதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தான். தன் தொண்டைகளைத் தட்டிக் கொண்டான்.

"ஒரு சல்லிக் காசு உனக்குக் கிடைக்காது. நீ பர்லோவைக் கொன்றாய். மெக்கிற்கு இப்படி ஒரு யோசனை தோன்றியபோது, நான்தான் உன்னைப் பற்றிச் சொல்லி இதில் இழுக்க வைத்தேன். நீ காசில்லாமல் அலைவதால் இதில் மாட்டுவாய் என்பது எனக்குத் தெரியும். எல்லாம் நாங்கள் இருவரும் போட்ட திட்டம்," என்று சொல்லி மெக்கைப் பார்த்துச் சிரித்தான் செய்லர்.

"உன் மாதிரி ஆளை எப்படி உள்ளே இழுத்து சிக்கவைப்பது என்பது இவளுக்குத் தெரியும். அதில் இவள் கைதேர்ந்தவள்– எப்படியோ மாட்டிக் கொண்டாய்– இப்போது பேசாமல் போய்விடு. ஒரு சல்லிக் காசு கூடத் தரமாட்டேன். உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. என்ன புரிகிறதா? போ! சீக்கிரம் போய்விடு! நாங்கள் கொஞ்சம் தனியாக இருக்க வேண்டும்– ஏதாவது வம்பு செய்தால் மாட்டிக் கொள்வாய்– மரணக்கொட்டடியில் நச்சுப் புகையில்தான் உயிர்விட வேண்டி வரும். போ! சீக்கிரம்!"

ஆன்சன் அசையவில்லை. கணப்பருகே நின்று எரியும் நெருப்பையே வெறித்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் சிறுத்தன–

"இந்த சிக்கலில் மாட்டி வைத்து, பர்லோவைக் கொலை செய்ய வைத்தது உன் திட்டம் என்றா சொல்கிறாய்?" என்று கேட்டான்.

செய்லர் சிரித்தான்.

"முழுக்க என்னுடைய திட்டமல்ல. இவள் கனவு அது. இவள் எவ்வளவு புத்திசாலி என்பது இப்போது உனக்குப் புரிந்திருக்கும். நான் வழி வகுத்துக் கொடுத்தேன். கண்டுபிடித்தது என்னவோ இவள்தான்", என்றான் செய்லர்.

இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மெக்கி "செய்லர் சும்மா பேசிக் கொண்டிருக்க வேண்டாம். நீ அதிகம் பேசுகிறாய். வாயை மூடிக் கொள்! போதும்!" என்றாள்.

"தெரிந்து கொள்ளட்டுமே! அதனால் என்ன? நமக்கு ஐம்பதாயிரம் சம்பாதித்துக் கொடுத்துள்ள ஆளல்லவா? இவருக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். சரியப்பா. நீ புறப்படு! அடுத்த தடவை உன்னை சந்திக்கும்போது ஒரு சுருட்டு வாங்கிக் கொள்கிறேன்," என்றான் செய்லர்!

ஆன்சன் கொஞ்சம் கூட அசையாமல் அப்படியே நின்று கொண்டுதான் இருந்தான்.

"போலீசார், உன்னிடம் ஏன் விசாரித்தார்கள் செய்லர்? உன் மேல் ஏன் அவர்களுக்கு சந்தேகம் வந்தது?"

"இங்கே இவள் படுக்கை அறையில் என் கைரேகையைக் கண்டு பிடித்தார்களாம். அதனால்தான் சந்தேகம். ஏன், உன்னுடைய கைரேகையைக்கூட இங்கே பார்த்திருப்பார்கள். நான், கொலை நடந்த நேரத்தில் எங்கே இருந்தேன் என்பதற்கு அசைக்க முடியாத சாட்சியம் கொடுத்துவிட்டேன். உன்னால் அப்படி முடியுமா ஆன்சன்?"

ஆன்சனின் இரத்தம் கொதித்தது.

"படுக்கை அறையிலா கைரேகையைக் கண்டு பிடித்தார்கள்?"

"ஆமாம். அப்படித்தான் இன்ஸ்பெக்டர் சொன்னார்."

ஆன்சன் சட்டெனத் தகர்ந்து போனான். ஹெர்மாஸ் பேப்பர் வெயிட்டைக் கொடுத்தது நினைவிற்கு வந்தது. ஹெர்மாஸ் சட்டெனச் செய்த அந்தக் காரியம் தன் கைரேகை எடுக்கத்தான் என்பது தெளிவாகிவிட்டது.

அவன் இதயம் படபடக்க ஆரம்பித்தது. போலீசின் தந்திரத்தில் அவன் மாட்டிக் கொண்டது புரிந்தது. படுக்கை அறையில் இன்னும் நிறையத் தன் கை விரல் ரேகைகள் இருந்திருக்குமே! அவளோடு படுத்திருந்தது எவ்வளவு தவறு!... அப்புறம் வங்கி மேலாளரின் சாட்சியம் வேறு தனக்கு எதிராக இருக்கிறது. அப்புறம் டயர் விவகாரம்... ஓ! மட்டாக்ஸ் தனக்கு எதிராக வேகமாகச் செயல்படப் போகிறார்.

மட்டாக்ஸ்!

அசையாமல் நின்றுகொண்டே சிந்தித்தான் ஆன்சன்.

ஆனால், பணம் கொடுக்க மட்டாக்ஸ் சம்மதித்துவிட்டதாக ஹெர்மாஸ் சொன்னாரே! அது எப்படி? தன்னுடைய பங்கைக் கேட்க அவளிடம் விரைந்து செல்வதைக் கண்காணிக்கவா? பொய்! எவ்வளவு பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டோம்!

தான் பொறியில் வசமாக சிக்கிக் கொண்டதை ஆன்சன் உணர்ந்தான். மட்டாக்ஸ் லேசுப்பட்ட ஆளல்ல என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

ஆன்சனின் முகத்தில் சட்டெனத் தோன்றிய சோகமும், தளர்ச்சியும் செய்லருக்கே ஆச்சரியமாக இருந்தது.

"பாரப்பா..." என்று செய்லர் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். ஆன்சன் தன் கையை உயர்த்தி அவனைப் பேசாமலிருக்கும்படித் தடுத்தான்!

இருவரும் ஆன்சனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆன்சன் மெல்ல நகர்ந்தான். ஓசைப்படாமல், அந்த ஹாலின் ஒவ்வொரு பகுதியையும் சோதிக்க ஆரம்பித்தான். அவன் செயலனின் அர்த்தம் விளங்காமல், செய்லரும், மெக்கும் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில், ஆன்சன், ஒரு சிறிய 'மைக்' கைக் கண்டுபிடித்தான்! ரேடியேட்டருக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்தது அது! அதிலிருந்து ஒரு கம்பி, ஜன்னல் வழியாக வெளியே சென்றது!

ஆன்சன் தன் கையிலுள்ள சிறிய மைக்கையே பார்த்தான். தான் முற்றிலும் அகப்பட்டுவிட்டதை அவன் உணர்ந்து கொண்டான். எல்லாவற்றையும் பேசித் தொலைத்தாயிற்று எல்லாம் ஒலிப்பதிவு ஆகியிருக்கும்.

"என்ன அது?" என்றான் செய்லர்.

ஆன்சன், மறுபடியும் கையை உயர்த்தி, பேச வேண்டாம் என்று சைகை செய்தான். கையிலிருந்த மைக்கை விரலால் சுட்டிக் காட்டினான்.

செய்லர் திகைப்புடன் அதைப் பார்த்தான்.

அவனுக்கு குப்பென்று வியர்த்தது.

மெக் முன்னால் வந்தாள். எட்டிப் பார்த்தாள்.

அவள் கண்ணில் மைக் தென்பட்டதும் 'ஐல்' என்று அலறினாள்.

செய்லர் சட்டெனத் திரும்பி அவளை ஓங்கி அறைந்தான்.

"நாயே! வாயை மூடு! பார் அதை!" என்று கத்தினான்.

"நிறுத்து!" என்று கத்தினான் ஆன்சன்.

பிறகு அவன் கணப்பருகில் சென்றான். குனிந்தான். நெருப்பில் கைகளை விட்டான்! கைரேகைகளை எரிக்க!

"ரேகை மறையுமா தெரியவில்லை. இவள் பேச்சைக் கேட்டிருக்கக் கூடாது. இவள் பூர்விகம் பற்றித் தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால் இதில் சம்பந்தப்பட்டிருக்கவே மாட்டேன். இப்போது எல்லாவற்றையும் உளறித் தொலைத்துவிட்டோம். எல்லாமே பதிவாகி இருக்கும். நமக்கு மரணம் தான் காத்திருக்கிறது," என்றான்.

"எனக்கல்ல," என்று சீறினான் செய்லர். " எனக்கு ஒன்றும் இல்லை. நான் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் என்னை ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் இரண்டு பேரும் நாசமாய்ப் போங்கள்!" என்றான்.

மெக், அவன் பக்கம் திரும்பினாள். அவள் முகம் பயத்தால் வெளுத்துவிட்டது.

"செய்லர்! உனக்காகத்தான் நான் இதைச் செய்தேன்! உனக்குத்தானே பணம் கிடைக்கும். நீ ஒப்புக் கொண்டாயே. நீ இப்படி நடுவழியில் கைவிட்டுவிட்டுப் போவது நியாயமல்ல. நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன். நாம் இருவரும் சேர்ந்துதான் இதை எதிர் கொள்ள வேண்டும்," என்றாள்.

செய்லரின் முகமும் இருண்டுவிட்டது. அவனையும் பயம் பிடித்துக்கொண்டது.

"நேசிக்கிறாயா? நீயா? நான் எந்தக் காலத்திலும் அதை நம்பியதில்லை. தெரிந்துகொள், கேடுகெட்ட வேசியே! பணம் கிடைத்ததும் உன்னைக் கை கழுவி விடத்தான் முடிவு செய்திருந்தேன். உன்னை மாதிரிப் பெண்களைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன? போ, நீயும் இவனும் எங்காவது போய்த் தொலையுங்கள்!" என்று கத்தினான் செய்லர்!

"பேசிக் கொண்டே இருங்கள்! முட்டாள்களே- எல்லாம் பதிவாகிக் கொண்டே இருக்கிறது-" என்றான் ஆன்சன்.

ஆனால், அவர்கள் இருவரும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை!

மெக் ஓடிப்போய் செய்லரைப் பிடித்தாள். அவன் அவளை உதறித் தள்ளினான்.

"போய்த் தொலை!" என்று சொல்லிவிட்டு, அவன் வெளிக் கதவை நோக்கி நகர்ந்தான்.

ஆன்சனின் கை, கோட்டுப் பைக்குள் சென்றது. அவன் கைவிரல்களில் பர்லோவின் துப்பாக்கி பட்டது. சட்டென அவன் அதை வெளியில் எடுத்தான்! அதை உடனே மெக்கிடம் கொடுத்தான்!

"சுட்டுக் கொல்லு அவனை!" என்று கத்தினான் ஆன்சன்!

செய்லர் சட்டெனத் திரும்பினான்.

மெக் துப்பாக்கியை அவனுக்கு நேராக நீட்டினாள்!

செய்லர் அதைப் பார்த்தான்.

"வேண்டாம் மெக்! வேண்டாம்! சுட்டுவிடாதே!" என்ற அலறினான் செய்லர்.

ஆன்சன் நகர்ந்து, மெக்கின் நடுங்கும் கைகளிலிருந்து துப்பாக்கியை வாங்கிக் கொண்டான்.

இப்போது செய்லர், மேலும் மிரண்டு போய், ஆன்சன் கையிலுள்ள துப்பாக்கியை வெறித்துப் பார்த்தான். அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

அதே சமயம், அழைப்பு மணி அலறியது!

"வந்துவிட்டார்கள்... இன்ஸ்பெக்டர், ஹெர்மாஸ், எல்லாரும் வந்துவிட்டார்கள்," என்றான் ஆன்சன் அமைதியாக.

செய்லர் உள்ளே நகர்ந்து, என்ன செய்வது என்று விளங்காமல் சுற்று முற்றும் பார்த்தான்.

"போ! போய்க் கதவைத் திற!" என்றான் ஆன்சன். அவன் முகத்தில் இப்போது அமைதியும், புன் முறுவலும் தோன்றியது! "இனி நீங்கள் பேச வேண்டியது எதுவுமே இல்லை.

எல்லாவற்றையும் பேசித்தான் தீர்த்துவிட்டீர்களே. பாக்கி என்ன இருக்கிறது... உங்கள் இருவரையும், நச்சுப்புகை அறையில் அடைத்து மரண தண்டனை வழங்கப் போதுமான அளவு பேசி முடித்துவிட்டீர்கள்! போய்க் கதவைத் திறந்துவிடுங்கள்!"

அழைப்பு மணி தொடர்ந்து அலறியது.

செய்லரும், மெக்கும் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள்!

ஆன்சன், அவர்கள் திகைத்து நிற்பதைப் பார்த்து இரசித்தபடி, சிரித்தபடி, தன் கைத்துப்பாக்கியைத் தன் வாய்க்குள் செலுத்திக் கொண்டு துப்பாக்கியின் குதிரையை அழுத்தினான்!

அந்தப் பறவைகளிடம் சொல்லுங்கள்...

- கணவனைக் கொன்று பெரும் இன்ஸ்யூரன்ஸ் தொகையைக் கொள்ளையடிக்க ஒருத்தி போடும் சாமர்த்தியமான சதித்திட்டம் -

- அவள் வலையில் சிக்கிக்கொள்ளும் இன்ஸ்யூரன்ஸ் ஏஜென்ட்...

- அடுக்கடுக்காய் திடுக்கிட வைக்கும் சம்பவங்கள்...

- திகைப்பூட்டும் முடிவு...